
கோட்டயம் புஷ்பநாத்

தமிழில் : சிவன்



# நிழல் இல்லாத மனிதன்

# நிழல் இல்லாத மனிதன்

கோட்டயம் புஷ்பநாத்

தமிழில் : சிவன்

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

**திருமகள் நிலையம்**

புதிய எண்: 16, பழைய எண்: 55,
வெங்கட் நாராயணா ரோடு,
தி.நகர், சென்னை-600 017.
☎: 24342899, 24327696
Fax: 91 - 44 - 24341559
email: thirumagalnilyam@yahoo.com

# நிழல் இல்லாத மனிதன்

## 1

இன்றைக்குதான் டாக்டர் லூயிஸ் திரும்பி வருகிறார். அவரை வரவேற்பதற்காக 'சிட்டி ஹாஸ்பிடல்' தயாராக இருந்தது.

முன்புறம் கம்பீரமான ஒரு பந்தல்.

உள்ளேயும் வெளியிலும் பல்வேறு வகையான வண்ணக் காகிதத் தோரணங்கள். அவர் மாலை நேரம் தாண்டி வருவதால், வண்ண வண்ண மின்விளக்குகளால் பந்தலை அலங்கரித்திருந்தனர்.

ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கிப் பெட்டிகளின் வழியாக இசை அலையடித்துக் கொண்டிருந்தது.

பந்தல் முழுக்க வட்ட மேஜைகள். ஒவ்வொன்றைச் சுற்றிலும் நான்கு நாற்காலிகள் வீதம் போடப்பட்டிருந்தன.

அது டின்னருக்கான ஏற்பாடு.

சுவையான உணவுப் பொருள்களும் விதவிதமான பானங்களும் தயாராக வைக்கப்பட்டிருந்தன.

டாக்டர் வர வேண்டியதுதான்.

வரவேற்புக்குப் பிறகு, ஒரு சிற்றுரை. பிறகு விருந்து.

சிட்டி ஹாஸ்பிடலின் உரிமையாளர் கோடீஸ்வரரான சேவியர். மைசூரில் காபித்தோட்டமும், திராட்சைத் தோட்டமும், மது வகைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும், மூன்று பெரிய ஓட்டல்களும் அவருக்கு உள்ளன. சேவியர் ஹாஸ்பிடல் நடத்துவது பணத்துக்காக அல்ல. பெயருக்காகத்தான்.

அது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான்.

சேவியருக்கு, எல்லா உடைமைகளுக்கும் வாரிசாக ஒரேயொரு மகள்தான். பெயர் நான்சி. அழகி. பி.எஸ்ஸி. படித்தவள்.

தற்சமயம் அரண்மனை மாதிரியான பங்களாவில் பல்வேறு வகையான பூச்செடிகளைச் சேகரித்துப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுகிறாள்.

டாக்டர் லூயிஸ், சேவியருக்கு எந்த வகையிலும் உறவினர் இல்லை. அவர் பாலக்காட்டைச் சேர்ந்தவர். பழைய பாரம்பரியத்தின் பிரதிநிதி.

பாலப்பிள்ளி குடும்பம், ஒரு காலத்தில் எல்லா வகையிலும் கொடிகட்டிப் பறந்த ஒன்று.

அவரது குடும்பத்தில் பழங்காலத்தில் பல்வேறுவகையான அற்புத ஸித்திகள் வாய்ந்த பிரமுகர்கள் பலர் இருந்தனர்.

ஏராளமான கிறிஸ்தவப் பாதிரியார்களுக்குப் பிறப்பு அளித்த பாரம்பரியம் அவர்களுடையது. மட்டுமின்றி வைதீக கர்மங்கள் செய்பவர்களும், மாந்திரீகர்களும்கூட அந்தக் குடும்பத்தில் இருந்தனர். இப்போதுகூட அந்தக் குடும்பத்தில் மாந்திரீக வித்தைகள் தெரிந்தவர்கள் இருப்பதாகவே சொல்லப்படுகிறது.

அப்படி மாந்திரீக வித்தைகளில் தேர்ந்த ஒரு புரோகிதர் தான் ஃபாதர் லூயிஸ். அவர் மீது ஊரார் பெருமதிப்பு

வைத்திருந்தனர். அவர் எவ்வளவோ அற்புதங்களை நிகழ்த்தியிருப்பதாகப் பெரியவர்கள் சொல்வதை, இன்றைய தலைமுறையும் நம்புகிறது.

கூடுவிட்டுக் கூடு பாயவும், மிகத் தொலைவில் வசிப்ப வர்களின் மனத்தைக்கூடக் கட்டுப்படுத்தி, தனது கட்டளைப்படி வரவழைத்து, அவர்களைத் தனது விருப்பப் படி செயல்பட வைக்கவும் அவரால் முடிந்ததாம்!

அவர் ஒரு தடவை வீட்டிலிருந்து வெளியேறினார். அதன் பிறகு அவரை எவரும் பார்த்ததில்லை.

அன்றைய லூயிஸ் ஃபாதரின் முகச்சாயல்தான் பிற்பாடு அந்தக் குடும்பத்தில் பிறந்த டாக்டர் லூயிஸுக்கும் இருப்ப தாக நூற்றிரண்டு வயதான, அந்த வீட்டின் பாட்டியம்மா சொல்கிறார்.

லூயிஸை, ஒரு பாதிரியாராக்க வேண்டும் என்று அந்தக் குடும்பத்தினர் விரும்பினர். ஆனால், இளம் பருவத்தி லிருந்தே லூயிஸுக்கு விஞ்ஞானத்தில்தான் ஆர்வம் அதிகமாக இருந்தது.

அப்படியாக அவர் ஒரு டாக்டரானார். முதல் ரேங்க் எடுத்தார். எனவே, சர்ஜரியில் மாஸ்டர் பட்டம் பெற்றார்.

எப்படிப்பட்டவரும் சற்று நேரம் நின்று பார்க்கக் கூடிய உடல்வாகு கொண்டவர் டாக்டர் லூயிஸ். அவர் நூறு பேருக்கு நடுவில் நின்றிருந்தாலும் மற்றவர்களின் கண் சட்டென்று படிவது டாக்டர் லூயிஸ் மீதுதான்.

ஆறடி, மூன்றங்குல உயரம்.

விசாலமான நெற்றி.

பின்னோக்கி வாரப்பட்ட சுருளாத தலைமுடி.

நீண்டு வளைந்த மூக்கு.

தங்க ஃபிரேம் போட்ட மூக்கு கண்ணாடி.

கண்ணாடியினூடாகப் பாய்ந்து வரும் தீட்சண்ய மான பார்வை.

அந்தப் பார்வையில், நோய் ஓர் உயிராக இருந்தால் ஓடி ஒளியும்.

மீசை இல்லை.

எப்படிப்பட்டவரையும் கவரும் நடவடிக்கையும், இறுகிய முகத்தில் தட்டுப்படும் சிறு புன்னகையும் டாக்டர் ஹூயிஸின் சிறப்புகள்.

சுமார் இருபது டாக்டர்கள் பணிபுரியும் அந்த ஹாஸ் பிடலில் பதினைந்து பேர் பெண் டாக்டர்கள்தான். அதுவும் முப்பது வயதுக்கு உட்பட்டவர்கள். எல்லோருமே அழகான வர்களும்கூட.

அறுபது பேருக்கும் அதிகமான நர்ஸுகள். இருநூறுக்கு மேற்பட்ட நர்ஸிங் மாணவிகள்.

இவர்களைத் தேர்வு செய்வதற்கு சேவியர் கைக் கொள்ளும் ஒரே அளவுகோல் அழகு மட்டும்தான்.

அதில் தீயநோக்கம் எதுவுமில்லை.

நோயாளிகள், நர்ஸுகளைப் பார்க்கும்போது தேவ தைகள் அவர்களுக்கு ஆறுதல் அளிக்க வந்திருப்பவர் களாகக் கருத வேண்டும். அதை அவர் வெளிப்படை யாகவே சொல்லவும் செய்வார்.

டாக்டர்கள் வசிப்பதற்குப் பக்கத்திலேயே தனி குவார்ட் டர்ஸுகள் இருந்தன. நர்ஸுகளுக்கு தனி ஹாஸ்டல். அதே மாதிரி நர்ஸிங் மாணவிகளுக்கும் தனி ஹாஸ்டல்.

பெண் டாக்டர் திருமணமாகாதவர்களாக இருக்க வேண்டும் என்பதில் சேவியர் பிடிவாதமானவராக இருந்தார். குடும்ப உறவுகள், அவர்களது வேலையுடனான ஆத்மார்த்தத் தன்மையைக் குறைத்துவிடும் என்று அவர் நம்பினார்.

சேவியரின் மனத்தில் ஆசை ஒன்று மறைந்து கிடப்பது எல்லோருக்கும் தெரியும்.

அது டாக்டர் லூயிஸ் தொடர்பானது.

தன் ஒரே மகளும் இந்த எல்லாச் சொத்துகளின் ஒரே வாரிசுமான நான்சியை டாக்டர் லூயிஸுக்குத் திருமணம் செய்து வைப்பதுதான் அது.

ஆனால், நான்சிக்கு அப்படி எந்த ஓர் ஆசையும் இருப்பதாகத் தெரியவில்லை.

சதா 'வேலை... வேலை' என்று பரபரப்பாக இயங்கும் ஒரு மனிதரின் மனைவியாக அவள் தயாராக இல்லை.

எனவே, டாக்டர் லூயிஸின் வரவேற்பு விழாவில் கலந்து கொள்ள அவர் ஆஸ்பத்திரிக்கும் வரவில்லை.

சேவியர் வற்புறுத்தியபோது, உடம்பு சரியில்லை என்று சொல்லிவிட்டு ஒதுங்கிக்கொண்டாள்.

மணி ஏழு முப்பது.

விளக்குகள் எல்லாம் ஒளிர்ந்து கொண்டிருந்தன.

அவர்கள் எதிர்பார்க்கும் நபர் இன்னும் வந்து சேர்ந்தபாடில்லை.

ஆபீஸ் அறைக்குள் இருந்த தொலைபேசி, இடைவிடாமல் குரல் கொடுத்துக் கொண்டிருந்தது.

டாக்டர் ஸ்டீஃபனும் டாக்டர் மோளி வர்க்கீஸும் தான் ஆபீஸ் அறைக்குள் இருந்தனர். அவர்கள்தான் மாறி மாறி தொலைபேசியை எடுத்து பதில் அளித்தனர்.

"டாக்டர் இங்கிருந்து போய் அஞ்சு வருஷம் ஆச்சு இல்லையா?" மோளி வர்க்கீஸ் வியப்புடன் நினைவு கூர்ந்தாள்.

''ஆமாம்... அவர் நேற்றுதான் கிளம்பிப் போனதுபோல் எனக்குத் தோன்றுகிறது.'' டாக்டர் ஸ்டீஃபன் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தபடி சொன்னார்.

''கிட்னி, இதயம் ஆகியவற்றின் மாற்று அறுவை சிகிச்சையும் தொடங்கிவிட்டால், ஆஸ்பத்திரியில் கூட்டம் இன்னும் அதிகமாகி விடும்.'' மோளி, ஜன்னல் பக்கமாகப் பார்த்தபடி பேசினாள்.

''அப்படியானால், இந்த சிட்டி ஹாஸ்பிடல், மெடிக்கல் காலேஜ் ஆஸ்பத்திரியைவிட பெரிசா டெவலப் ஆகும்னு தோணுது. அது பெருமிதத்துக்கு உரிய ஒரு விஷயம்தான்.''

''உண்மைதான். ஆனால், டாக்டரை யாராவது கடத்திக் கொண்டு போய்விடக் கூடாது... அவ்வளவுதான்!'' மோளி கூறினாள்.

''அப்படியெல்லாம் எதுவும் நடக்காது. எல்லாச் செலவு களும் சேவியர் முதலாளியோடதுதான். இது வரைக்குமே சுமார் ஐம்பது லட்ச ரூபாய் செலவு செஞ்சிருக்கார்.''

''அந்தப் பணத்தையெல்லாம் வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுக்க வேற ஆஸ்பத்திரிக்காரங்க தயாராக இருப்பாங்க.''

''அப்படியெல்லாம் அவர் போக மாட்டார். அது எனக்குத் தெரியும்.''

''அதோ வீடியோகாரரங்க வந்திருக்காங்க. பிரஸ் பீப்பிளும் வந்திருக்காங்க. நல்ல பப்ளிசிட்டி கொடுத் திருக்கார்னு தோணுது!'' என்ற மோளி, ஆஃப்டோரை திறந்து கொண்டு அங்கிருந்து வெளியேறினாள்.

அவள் முகத்தில் திடுமென்று விடியோ கேமராவின் ஃப்ளாஸ் வெளிச்சம் பதிந்தது.

கேமரா வேலை செய்யத் தொடங்கி இருக்கிறது.

திடுமென்று யாரேரா உரத்த குரலில் பேசும் சத்தம் கேட்டது.

"அதோ... அவர் வந்துட்டார்."

"டாக்டர் லூயிஸ் வந்திருக்கிறார்."

"டாக்டர் வந்துவிட்டார்."

எவருடையதெல்லாமோ குரல்கள் அங்கு உயர்ந்தன.

அத்துடன் அங்கு உயர்ந்த இசைக் கருவிகளின் இனிமை ஓய்ந்தது.

இரண்டு கார்கள் முன்புறத்தில் வந்து நின்றன. ஒன்று, பென்ஸ். மற்றொன்று, டயோட்டா.

அதற்குப் பின்னால் கார்களின் ஓர் அணிவகுப்பே தொடர்ந்து வந்தது.

டயோட்டாவின் டிரைவர் காரிலிருந்து இறங்கினார்.

அது சேவியர் முதலாளி வழக்கமாகப் பயன்படுத்தும் கார்.

டிரைவர் பின்புறக் கதவைத் திறந்தார்.

வீடியோ மற்றும் ஏராளமான கேமராக்களின் ஃபிளாஷ் லைட்டுகள் சட்சட்டென்று பளிச்சிட்டன.

அந்த காரிலிருந்து இறங்கியவர் டாக்டர் லூயிஸ்.

ஆஜானுபாகுவான டாக்டர் லூயிஸ்.

தங்க ஃபிரேமிட்ட அவரது மூக்குக் கண்ணாடி பளபளத்தது.

கறுத்த கோட்டு.

கையில் வெள்ளை நிற கிளவுஸ்.

அவரைத் தொடர்ந்து காரிலிருந்து இறங்கியவர் சேவியர்.

பெருமிதம் நிறைந்தவராக அவர் சுற்று முற்றும் பார்த்தார்.

மாலை அணிவித்தல் தொடர்ந்தது.

விரைவிலேயே அவர்கள் மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஒரு சிற்றுரை.

வரவேற்புப் பேச்சு. கலெக்டர் வரவேற்றார்.

அதன் பிறகு விருந்து ஆரம்பமானது.

நூற்றுக்கணக்கான மனிதர்கள்.

அங்கிருந்து எல்லோரும் கலையத் தொடங்கியபோது இரவு மணி பத்து ஆகிவிட்டது.

மறுநாள் காலைப் பத்திரிகைகளில் அந்த வரவேற்பு விழா தலைப்புச் செய்தியாக இடம்பெற்றிருந்தது. ஆனால், எந்தப் பத்திரிகையிலும் புகைப்படங்கள் இடம்பெற வில்லை.

புகைப்படம் இல்லை என்பதுதான் உண்மை.

சேவியரும், நண்பர்களும் சேர்ந்து விடியோப் படத்தை டி.வி.-யில் போட்டுப் பார்த்தனர்.

முந்தைய நாள் நடைபெற்ற வரவேற்பு விழா நிகழ்ச்சி களை, கேமரா துல்லியமாகப் பதிவு செய்திருந்தது.

ஆனால், டாக்டர் லூயிஸின் படம் மட்டும் அதில் தெளி வடையவில்லை. அவரது உடைகள் எல்லாம் தெளிவாக இருந்தன.

அவரின் உருவம் மட்டும் இல்லை.

அங்கிருந்த எல்லோரும் வியப்புடன் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

'என்னதான் நடந்திருக்கிறது?'

யாருக்கும் எதுவும் விளங்கவில்லை.

அன்று இரவில் டாக்டர் மோளி வர்கீஸ் டியூட்டியில் இருந்தாள். ரவுண்ட்ஸ் முடித்துவிட்டு அவள் தனது அறைக் குத் திரும்பி வந்தபோது மணி பன்னிரண்டு அடிக்கும் சத்தம் கேட்டது.

நிலைக் கண்ணாடியைப் பார்த்து அவள் தலைமுடியைப் பின்புறமாக ஒதுக்கி விட்டாள். அப்போது பின்புறத்தி லிருந்து ஒரு குரல் கேட்டது.

''மோளி வர்கீஸ்!''

கண்ணாடியில் யாரோ நிற்பது தெளிவற்றுத் தென் பட்டது.

முகம் தெளிவாக இல்லை!

முகத்தைத் திருப்பிப் பார்த்தாள்.

டாக்டர் லூயிஸ்.

சுவரில் முன்புறமாகச் சற்றுச் சாய்ந்து விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

டாக்டர் லூயிஸின் நிழல் சுவரில்...

டாக்டர் மோளி அதைப் பார்த்துத் திடுக்கிட்டுப் பின்வாங்கினாள்.

## 2

'**தா**ன் காண்பது என்ன?' டாக்டர் மோளி வர்கீஸின் உடல் நடுங்கத் தொடங்கியது.

பயம்...

மறு விநாடியில் அவளின் கால் கட்டைவிரலிலிருந்து மேற்புறமாக ரோமங்கள் எழுந்து குத்திட்டு நின்றன.

சுவரில் விழுந்த டாக்டர் லூயிஸின் நிழலில் தலைப்பகுதி இருப்பதற்கான தடயமே இல்லை!

சற்று நேரத்துக்கு முன்னால் கண்ணாடியில் தென்பட்ட உருவமும் அவளின் மூளைக்குள் மின்னி மறைந்தது.

'ஒருவேளை தனக்கு மட்டும் அப்படித் தோன்றியதா என்ன!'

''என்ன மிஸ் மோளி, என்னமோ போல பார்க்குறீங்க?'' டாக்டர் லூயிஸ் கேட்டார்.

''ஒ... ஒண்ணுமில்லை... டா... டாக்டரைப் பா.... பார்த்ததும்....'' அவள் வார்த்தையை முழுமைப்படுத்து வதற்குள், அவர் அவளின் தோள்கள் இரண்டையும் பிடித்துத் தன் பக்கமாக நெருக்கி இழுத்தார்.

''எனக்கு நிழல் இல்லையோன்னு தோணிடுச்சு... இல்லையா?'' அவர் சிரித்தார்.

என்னமோ மாதிரியான ஒரு சிரிப்பு.

அந்தச் சிரிப்பு பித்தளைக்குடம் ஒன்றுக்குள்ளிருந்து உயர்ந்து வருவதாகத் தோன்றியது. ஏதோ ஒரு விபரீதம் அந்தச் சிரிப்பில் இருப்பதாக மோளி வர்கீஸுக்குத் தோன்றியது.

அசாதாரணமான ஏதோ ஒன்று.

திடுமென்று லூயிஸ் அவளைக் கைகளால் தூக்கி உயர்த் தினார். அவரின் இடக்கை அவளின் புட்டப் பகுதியில் படிந்திருந்தது.

டியூட்டி அறையின் பின்புறம் உள்ள ஓய்வு அறைக்கு அவளைச் சுமந்து சென்றார்.

அங்கு அவள் கட்டிலில் மல்லாக்கக் கிடத்தப்பட்டாள்.

அவளது புடவையை ஒரே இழுப்பில் உருவினார். அதனால் அவள் ஒரு தடவை புரண்டு பழைய நிலைக்கு வந்தாள்.

உடைகள் எல்லாம் அகன்ற பிறகு அவள் ஒரு பளிங்குச் சிலை மாதிரி லூயிஸின் முன்னால் கிடந்தாள்.

ஆனால், டாக்டர் மோளியால் அதை நம்பமுடிய வில்லை.

காரணம், டாக்டர் லூயிஸ் அப்படிப்பட்டவராக இருக்க வில்லை.

இளைஞராக இருந்தாலும் பக்குவம் நிறைந்த மனிதர் அவர்.

இதுவரை தனது அதிகாரத்தை, எந்த ஊழியரிடமும் பிரயோகித்தது இல்லை.

ஆனால், இப்போது?

அவள் அதை நினைத்துக் கொண்டிருக்கும்போதே, லூயிஸின் கை கூச்சம் ஏற்படுத்தும் அவளின் உடற்பகுதி களில் ஒரு பாம்பு மாதிரி ஊர்ந்தது.

விளக்கு அணைந்தது.

அவரின் ஸ்பரிசம் அவளுக்குள் ஓர் உணர்ச்சிப் பிரவாகத்தையே ஏற்படுத்தியது.

உடலின் நரம்புகளுக்குள் கவர்ச்சிகரமான ஏதோ ஒன்று ஊடுருவிப் பாய்வது போலிருந்தது.

அவளுக்குத் துள்ளிக் குதிக்க வேண்டும் போலிருந்தது.

அவளின் இதயம் சிறகு முளைத்து விலா எலும்புகளின் ஊடாக நுழைந்து உடலிலிருந்து வெளியேறி, விண்வெளி யில் பறக்கத் தொடங்கியது.

அவளின் எடை குறைவதாகத் தோன்றியது.

டாக்டர் லூயிஸின் வெப்பமான மூச்சுக்காற்று அவளின் வலக் கன்னத்திலும் கழுத்திலும் குறிப்பிட்ட இடைவெளி களுடன் பாய்ந்து கொண்டிருந்தது.

முல்லைக் கொடியின் வேர்கள் மாதிரி, டாக்டர் லூயிஸின் சக்தி அவளின் எலும்புகளைத் துளைத்துக் கொண்டு மஜ்ஜைகளுக்குள் இறங்கின.

படிப்படியாக அவள் எல்லாவற்றையும் மறந்தாள்.

அந்த அறைக்குள் ஒலியெழுப்பிக் கொண்டிருந்த கடிகாரத்தின் 'டிக்... டிக்' சத்தம்கூட அவளது கவனத்தி லிருந்து மறைந்துவிட்டது.

மீண்டும் விளக்கு எரியத் தொடங்கியபோது அந்த அறைக்குள் டாக்டர் லூயிஸ் இல்லை.

டாக்டர் மோளி வர்கீஸ் நிர்வாணமாகக் கட்டிலில் கிடப்பதைத்தான் நர்ஸ் ஷைனி கண்டாள்.

''ஐயோ! என்ன இது?'' அவள் தன்னையும் மீறிக் கூவினாள்.

ஷைனிக்கு எதுவும் விளங்கவில்லை.

அப்படியொரு காட்சியை அவள் முதல் தடவையாகப் பார்க்கிறாள். பெண்மணி ஒருத்தி உடம்பில் எந்த விதமான உடையுமின்றி முழு நிர்வாணமாகப் படுத்திருக்கிறாள்.

தரையில் கிடந்த புடவையை எடுத்து டாக்டர் மீது போட்ட பிறகு ஷைனி அழைத்தாள். ''டாக்டர்... டாக்டர்!''

ஆனால், எந்த ஓர் அசைவும் தென்படவில்லை. அவள் திரும்பவும் அழைத்தாள்.

டாக்டர் மோளி வர்கீஸ் விழிக்கவில்லை.

ஷைனி உடனேயே அந்த அறையிலிருந்து வெளியேறினாள். வார்டுக்கு வந்தாள். அங்கு விமலா நர்ஸ், நோயாளி ஒருவருக்கு டிரிப்ஸ் ஏற்றிக் கொண்டிருந்தாள்.

தான் பார்த்த தகவலை அவள் விமலாவிடம் சொன்னாள்.

''டாக்டர் தூங்குறாங்களா? நீ இன்னும் ஒரு தடவை போய்ப் பார்த்துட்டு வா!'' விமலா சந்தேகம் கிளப்பினாள்.

''இல்லை. நான் சொன்னது உண்மைதான். சீக்கிரமா வந்து பாரு.'' ஷைனி வற்புறுத்தினாள்.

விமலாவும், ஷைனியும் ஓய்வுஅறைக்கு வந்தனர். இப்போதும் டாக்டர் மோளி அதே நிலையிலேயே கிடந்தாள்.

''இதோ... இங்க பார்த்தியா... ரத்தம்!''

விமலா, மோளியின் உடல் மீது கிடந்த புடவையைத் தொட்டுக் காட்டினாள்.

மார்பின் வலப்பகுதியில்தான் ரத்தத்துளியைப் பார்த்தனர்.

''இரு... அது என்னன்னு பார்க்கலாம்!'' விமலா, புடவையைச் சற்று நகர்த்தினாள்.

''ஐயோ... என்ன இது?'' விமலா பயந்து போனாள்.

டாக்டர் மோளியின் வலப்புற மார்பகத்தின் மையத்திலிருந்து ரத்தம் வடிவதை அவள் பார்த்தாள்.

''கடவுளே... எனக்கு பயமா இருக்கு.'' ஷைனி, கண்ணை மூடிக்கொண்டு வெளியே ஓடினாள்.

அதைக் கண்டதும் விமலாவுக்கும் பயம் தோன்றியது.

அவர்கள் இருவருமாக வாட்ச்மேனிடம் ஓடி வந்தனர்.

அப்போது, அந்த ஆஸ்பத்திரி ஊழியர்களில் ஆணாகப் பணிபுரிந்த நபர், அவர் ஒருவர்தான்.

''ஏங்க, வாசு...'' அவரைக் கூப்பிட்ட ஷைனி, சற்று நேரம் மௌனமாக நின்றாள்.

அவளது திகைப்பை கவனித்த வாட்ச்மேனுக்கு ஏதோ விபரீதம் நிகழ்த்திருப்பதாகத் தோன்றியது.

வாசுவை, வாசுவுக்குத் தெரியாமல் குறிப்பிடுவது மிலிட்டரி வாசு என்றுதான். அவர் மிலிட்டரியில் வேலை பார்த்து ரிட்டயரானவர். அதன் பிறகு ஆஸ்பத்திரியில் நைட் வாட்ச்மேனாக வேலை பார்க்கிறார்.

அறுபது வயதானாலும் திடமான ஆரோக்கியசாலி அவர். ஓரளவுக்கு நரைத்த மீசையும், பின்னோக்கி வாரப் பட்ட தலைமுடியும், நெற்றியில் சந்தனப்பொட்டும் அதற்குள் குங்குமம் வைத்திருக்கும் ஒரு பக்திமானும் கூட.

அவருக்கு இன்னும் கல்யாணம் ஆகியிருக்கவில்லை.

சகோதரியுடன் வசிக்கிறார். சகோதரிக்கு ஒரேயொரு மகள் மட்டும்தான். அவளும் அந்த ஆஸ்பத்திரியில்தான் வேலை செய்கிறாள். லேபரெட்டரி டெக்னீஷியன்.

''என்ன... யாருக்காவது?'' அவர் கேட்டார்.

அந்த ஆஸ்பத்திரியில் மரணம் என்பது எப்போதாவது ஒருமுறை நிகழும் அபூர்வமான விஷயம். அப்படிப்பட்ட நோயாளிகளை உடனுக்குடன் அரசாங்க மெடிக்கல் காலேஜ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைப்பார்கள்.

முதலாளி சேவியர் அந்த விஷயத்தில் மிகவும் கறாராக இருந்தார்.

தனது நிர்வாகத்தின் கீழுள்ள ஆஸ்பத்திரியில் ஊழியர் களின் கவனக்குறைவால் யாருக்கும் எந்த விதமான ஆபத்தும் ஏற்படக் கூடாது.

''நோயாளிகளுக்கு இல்லை... நம்ம டாக்டர் மோளி யைப் பார்த்தா பயமா இருக்கு...'' ஷைனி தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

''ஐயோ... டாக்டருக்கா? ஒண்ணு பண்ணுங்க. நம்ம டாக்டரய்யா இப்பத்தான் கிளம்பிப் போனாரு. இன்னும் படுத்திருக்க மாட்டார். அவரைக் கூப்பிட்டுத் தகவல் சொல்லுங்க!'' வாசு, டாக்டர் லூயிஸை மனத்தில் வைத்துக் கொண்டுதான் பேசினார்.

''சரி... அதுதான் நல்லது!'' விமலா அதற்கு ஒப்புக் கொண்டாள்.

மட்டுமின்றி, நிலைமை பிரத்தியேகமான ஒரு சூழ்நிலை யாக இருப்பதால் தாங்கள் இங்கே கிடந்து வீணாகக் கலவரப்படுவதில் அர்த்தம் இல்லை என்றும் அவளுக்குத் தோன்றியது.

''இருந்தாலும் நீங்களும் எங்ககூட வாங்க... டியூட்டி ரூமிலதான் போன் இருக்கு... அந்தப் பக்கம் போறதுக்கே எங்களுக்குப் பயமா இருக்கு.'' ஷைனி, வாசுவை உடன் வருமாறு அழைத்தாள்.

அவர் எழுந்து போய், கேட்டை நன்றாக மூடியிருக் கிறோமா என்று ஒரு தடவை சோதித்துப் பார்த்து, சந் தேகத்தைத் தீர்த்துக் கொண்டு, அந்தப் பெண்மணிகளுடன் நடக்கத் தொடங்கினார்.

டியூட்டி ரூமிலிருந்து ஒய்வுஅறையில் கிடக்கும் டாக்டர் மோளியின் உடலை வாசுவால் பார்க்க முடிந்தது.

''அசைவே இல்லையே... என்ன... ஆபத்து ஏதாவதா?'' வாசு கேட்டார்.

''அப்படித்தான் வாசு... நெஞ்சுல ரத்தம் வடியுது!'' விமலா சொன்னாள்.

''அப்படின்னா, சீக்கிரமா டாக்டரைக் கூப்பிடுங்க குழந்தைகளா!'' வாசு வற்புறுத்தினார்.

விமலாதான் டயல் செய்தாள்.

மறுபுறத்தில் ரிசீவரை எடுத்தது முதலாளி சேவியரின் மகள் நான்சிதான்.

"அவர் இப்பதான் படுத்தார். எழுப்ப வேண்டாம்னு சொல்லியிருக்கார்!" மறுமுனையிலிருந்து வந்த பதில் அவ்வளவுதான்.

விமலா, டெலிபோனின் பேசும்பகுதியைக் கையால் பொத்திக்கொண்டு, கிடைத்த பதிலைத் தெரிவித்தாள்.

"நீ முதல்ல விஷயத்தைச் சொல்லும்மா குழந்தை..." வாசு வற்புறுத்தினார்.

உடனே விமலா, மோளி வர்கீஸின் நிலையை நான்சியிடம் தெரிவித்தாள்.

ஆனால், அதனால் எந்தவிதமான பயனும் ஏற்பட வில்லை.

முதலில் சொன்ன பதிலையே திரும்பவும் சொன்ன பிறகு நான்சி போனை வைத்து விட்டாள்.

"இனி என்ன செய்யுறது?" தவிப்புடன் நின்றாள் விமலா.

"ஒண்ணு பண்ணலாம். ஸ்டீஃபன் டாக்டர் கிட்ட தகவல் சொல்லுங்க." வாசு, யோசனை தெரிவித்தார்.

"அவரைக் கூப்பிட்டா, இப்போதைய நிலையில், 'லூயிஸ் டாக்டர் கிட்ட சொல்லுங்க'னுதான் சொல்வார்." ஷைனி சொன்னாள்.

"நான்சிக் குழந்தை போனை எடுத்ததுதான் தப்பாப் போச்சு. அந்தக் குழந்தைக்கு, டாக்டரைக் கல்யாணம் பண்ண விருப்பமில்லை. சேவியர் முதலாளியோட விருப்பத்துக்காகத்தான் டாக்டர் லூயிஸை அங்கே தங்க வெச்சிருக்கிறாங்க." வாசு சொன்னார்.

"உண்மைதான். இல்லேன்னா, வரவேற்பு விழாவுக்கு வந்திருப்பாங்க. எப்படி இருந்தாலும் முதலாளி வீட்டுக்கு போன் செய்யவும் முடியாது." விமலா கவலைப்பட்டாள்.

"இருக்கட்டும்... நான் சொன்னபடி செஞ்சு பாருங்க!" டாக்டர் ஸ்டீஃபனின் விஷயத்தை நினைவூட்டினார் வாசு.

கடைசியில் அப்படியே செய்யலாம் என்று தீர்மானித் தாள் விமலா.

அவள் டைரக்டரியின் அட்டையில் குறித்திருந்த போன் நம்பரைத் தேடிப்பிடித்து, டாக்டர் ஸ்டீஃபனுக்கு டயல் செய்தாள்.

தகவல் கூறியதும் உடனே வந்து சேர்வதாக அவர் ஒப்புக்கொண்டார்.

டாக்டர் ஸ்டீஃபன் வசிப்பது குவார்ட்டர்ஸில். நாற்பது வயது தாண்டிய அவர் மிகவும் கெட்டிக்காரர். லூயிஸ் மேற்படிப்புக்காக வெளிநாடு போயிருந்த வேளையில் ஆஸ்பத்திரியின் மெடிக்கல் ஆபீஸராகப் பணியாற்றியவர் அவர்தான்.

திருமணம் செய்து கொள்ளாமல் இருந்த அவருக்கு டாக்டர் மோளி வர்கீஸை மிகவும் பிடிக்கும்.

அவளைத் திருமணம் செய்ய ஸ்டீஃபன் விரும்பினார். ஆனால், திருமணம் செய்து கொண்ட லேடி டாக்டர்களை வேலையில் வைத்துக் கொள்வதில்லை என்ற முதலாளியின் தீர்மானமும், மாதந்தோறும் சம்பளமாகக் கிடைக்கும் பெரும் தொகையும் அவரை அதிகமாக யோசிக்க வைத்தது.

இருப்பினும் ஒரு சில சந்தர்ப்பங்களில் பகல் வேளை களில் டாக்டர் ஸ்டீஃபன் அவளது குவார்ட்டர்ஸுக்குச் செல்வதுண்டு.

இரவு நேரத்தில் வந்தால், ஆட்களுக்குச் சந்தேகம் ஏற்படும் என்பதால், அவர் பகல் நேரத்தில் வந்து சற்று நேரம் உட்கார்ந்து பேசிவிட்டுப் போவார்.

இந்தத் தகவல்கள் எல்லாம் முதலாளி சேவியருக்கும் தெரியும். எனினும், திருமணம் என்பது தொழிலினுடனான ஆத்மார்த்தமான ஈடுபாட்டைக் குறைக்கும் என்ற நம்பிக்கையில் அவர் பிடிவாதமாகவே இருந்தார்.

பதினைந்து நிமிடங்களுக்குள் டாக்டர் ஸ்டீஃபன் அங்கு வந்து சேர்ந்தார்.

''எங்கே மிஸ் மோளி? எங்கே?'' அவர் மிகவும் பரபரப்புடன் தென்பட்டார்.

விமலாவும், ஷைனியும் அவருடன் சென்றனர்.

டாக்டர் மோளியின் உடலை, அவர் கவனித்தார். அவளது உடலில் போர்த்தியிருந்த புடவையை அவர் நீக்கினார். அப்போதும் அவளது மார்பகத்திலிருந்து ரத்தம் துளிர்த்துக் கொண்டிருந்தது.

அவர், அவளது நாடியைப் பிடித்துப் பார்த்தார்.

''ஐயோ!'' அவரின் உதடுகள் மந்திரித்தன.

மோளி வர்கீஸ் உயிருக்குப் போராடிக் கொண்டிருந் தாள்.

'இந்த ஆபத்தான நிலைக்கு என்ன காரணம்?' அவர் யோசனையில் ஆழ்ந்தார்.

டாக்டர் ஸ்டீஃபனின் கண்கள் மார்பிலிருந்து கீழ்ப் புறமாக நகர்ந்தன.

''சீக்கிரமாக இவரை ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு வாங்க!'' டாக்டர் ஸ்டீஃபன் பரபரத்தார்.

# 3

உடனடியாக டாக்டர் மோளி வர்கீஸின் உடல் ஆபரேஷன் தியேட்டருக்கு வந்து சேர்ந்தது.

டாக்டர் ஸ்டீஃபன், தன்னால் செய்ய முடிந்ததை எல்லாம் செய்து பார்த்தார். அப்படியும், அந்த உடலில் மிச்சமிருந்த உயிரும் போனதுதான் மிச்சம்.

இருப்ப்பினும் அவர் அந்த உடலை எவருக்கும் தெரி யாமல் பரிசோதனை செய்யத் தீர்மானித்தார்.

அவளை மிகவும் மோசமான முறையில் பலர் சேர்ந்து பலாத்காரம் செய்தது போல் தோன்றியது. மார்பகத்தி லிருந்து மிகவும் சன்னமாகவே ரத்தம் துளிர்த்தது.

ஆனால், அவள் உடம்பில் ஒரு பொட்டுகூட ரத்தம் இல்லை. யாரோ அவள் உடம்பின் ரத்தம் மொத்தத்தையும் உறிஞ்சிக் குடித்தது மாதிரி உடல் வெளிறிவிட்டிருந்தது.

'இதற்கு என்ன காரணம்?' டாக்டர் ஸ்டீஃபன் யோசனையில் ஆழ்ந்தார். எப்படி யோசித்தாலும் விடை கிடைக்கவில்லை.

சட்டென்று ஒரு யோசனை அவர் மூளைக்குள் கடந்து வந்தது. 'எத்தனை பேர் அவளது மரணத்துக்குக் காரணமாக இருந்திருப்பார்கள்?'

அதற்காக அவர் மற்றொரு பரிசோதனை செய்து பார்த்தார். ஆனால், ஒருவருக்கு மேல் பலாத்காரம் செய்த தாகத் தெரியவில்லை.

பின் உடலை மார்ச்சுவரியில் பத்திரப்படுத்திய பிறகு பொழுது விடிவதற்காக அவர்கள் காத்திருந்தனர்.

மறுநாள் காலையில் அவளின் உறவினர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

முதலாளி சேவியர் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தார். அவருடன் டாக்டர் லூயிஸும் இருந்தார்.

"இந்த அளவுக்கு நிலைமை சீரியஸ் என்று எனக்குத் தெரியாது. சரி... நீங்கள் ஏன் என்னைக் கூப்பிடவில்லை?" லூயிஸ், ஸ்டீஃபனிடம் கேட்டார்.

"இவர்கள் உங்களது வீட்டுக்கு போன் செய்தார்கள். டாக்டர் படுத்துவிட்டதாகச் சொன்னார்கள்."

"யார்?"

"நான்சிதான் சொன்னாங்க!" நர்ஸ் ஷைனி பதிலளித்தாள்.

"சேச்சே! அது சரியா? ஒரு டாக்டர் இருபத்துநாலு மணி நேரமும் டியூட்டியில் இருப்பதாகத்தான் கருதணும். அதை மறந்துட்டீங்களா?" லூயிஸ் கோபத்துடன் கேட்டார்.

நர்ஸுகள் என்ன சொல்வது என்று தெரியாமல் குழம்பினர்.

"சரி... போகட்டும். மோளி எப்படி இறந்தாங்க?" லூயிஸ், ஸ்டீஃபனிடம் கேட்டார்.

"அவர் உடம்பிலிருந்த ரத்தம் மொத்தமும் வெளியேறியிருக்கிறது. மட்டுமின்றி யாரோ அவரை பலாத்காரம் செய்திருக்கிறார்கள்."

"நான்சென்ஸ்! இதெல்லாம் இந்த இடத்தில் சொல்லக் கூடியவையா?" லூயிஸ் கோபத்துடன் ஸ்டீஃபனைப் பார்த்துவிட்டுத் தனது அறைக்குள் நுழைந்தார்.

முதலாளி சேவியரும் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்.

“மேற்கொண்டு நாம் என்ன செய்யுறது?” சேவியர் கேட்டார்.

“ஆஸ்பத்திரியோட நல்ல பேருக்குக் குந்தகம் வராதபடி நாம அதையெல்லாம் கையாளணும்.”

“அது எப்படி?”

“முதலாளி அதை நினைச்சுக் கவலைப்பட வேண்டாம். நான் பார்த்துக்கிறேன். டாக்டர் ஸ்டீஃபனைக் கூப்பிடு வோம்.” அவர் அழைப்பு மணியை அழுத்தினார்.

நர்ஸ் விமலா ஓடிவந்தாள்.

“டாக்டர் ஸ்டீஃபனைக் கூப்பிடுங்க!” லூயிஸ் கூறினார்.

விமலா போய் டாக்டர் ஸ்டீஃபனை அழைத்து வந்தாள்.

“உக்காருங்க, டாக்டர் ஸ்டீஃபன்!” லூயிஸ் சொன்னார்.

அதன் பிறகு சற்று நேரத்துக்கு டாக்டர் லூயிஸ் எதுவும் பேசவில்லை. அவரை வெறித்துப் பார்த்தபடி மௌனமாக அமர்ந்திருந்தார்.

பிறகு பேசத் தொடங்கினார். “அந்த மரணம் நடந்தது எப்படி வேணும்னாலும் இருந்துட்டுப் போகட்டும். ஆனால், அது நம்ம ஆஸ்பத்திரிக்கு எந்த விதமான கெட்ட பேரும் வராம அதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரணும். டாக்டரின் மூளையில் திடீர் என்று ஏற்பட்ட தாக்குதல் தான் காரணம்னு குறிப்பிட்டால் போதும்!” லூயிஸ், முதலாளியைப் பார்த்தார்.

“சரி... அதுவும் நல்ல யோசனைதான். இதுக்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டாங்க. அப்படியே செஞ்சுடு வோம்.”

அதையொட்டியே எல்லா விஷயங்களும் நகர்ந்தன.

ஷைனியும், விமலாவும் தனியாகக் கூப்பிட்டு எச்சரிக்கப் பட்டனர்.

நடந்த சம்பவத்தை வெளியே சொன்னால், அதில் முதல் குற்றவாளிகள் ஆவது அவர்களாகத்தான் இருப்பார்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டதால், அவர்கள் ஒருபோதும், வாயே திறக்கமாட்டோம் என்று உறுதியளித்தனர்.

டாக்டர் மோனி வர்கீஸின் உறவினர்கள் வந்து சேர்ந்தனர்.

எந்த விதமான குறைவுமின்றி, வழக்கமான ஆர்ப்பாட்டத்துடனேயே அந்த உடல் புதைக்கப்பட்டது.

மோனி வர்கீஸ் இறந்துபோய் நான்கு அல்லது ஐந்து நாட்கள் ஆகியும். அவள் இறந்துவிட்டதாக எவராலும் நினைக்க முடியவில்லை. விடுமுறையில் ஊருக்குச் சென்றிருப்பதாகவே தோன்றியது.

ஒரு வார காலம் கடந்தது.

நர்ஸ் விமலா அவளது ஷிஃப்டு டியூட்டியை முடித்து விட்டு குடியிருப்பை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள்.

நேரம் இரவு ஒன்பது மணி கடந்து விட்டிருந்தது. ஆஸ்பத்திரியின் பின்புறம் சற்றுத்தூரத்திலேயே இருந்தது நர்ஸுகளின் குவார்ட்டர்ஸ்.

இரண்டு அறைகள், ஒரு சமையலறை, அத்துடன் இணைந்த குளியலறை மற்றும் லெட்ரீன் ஆகியவை கொண்டதுதான் நர்ஸிங் குவார்ட்டர்ஸ் ஒவ்வொன்றும்.

ஒவ்வொன்றிலும் இரண்டு பேர் வீதம் தங்கியிருந்தனர்.

ஆஸ்பத்திரியிலிருந்து குவார்ட்டர்ஸுக்குச் செல்ல, பாதை யொன்று இருந்தது. அது சிமெண்ட் தளமிடப்பட்ட பாதை. மழை மற்றும் வெயிலுக்குப் பாதுகாப்பாக இருக்க அதன் மீது ஆஸ்பெஸ்டாஸ் கூரை போடப்பட்டிருந்தது.

ஏறத்தாழ எண்பதடி தொலைவுள்ள குவார்ட்டர்ஸின் பாதையில் டியூப் லைட்டுகளும் போடப்பட்டிருந்தன.

அதனால் அங்கு எப்போதும் பகல் மாதிரி வெளிச்சமாகவே இருக்கும்.

அன்று ஷைனிக்கு வார விடுமுறை நாள். அவள் குவார்ட்டர்ஸில் இருக்கிறாள். ஷைனியும் விமலாவும் ஒரே குவார்ட்டர்ஸில்தான் தங்கியிருந்தனர்.

விமலா, நடைபாதையின் பாதி தூரத்துக்கு வந்து விட்டிருந்தாள். திடுமென்று லைட்டுகள் அணைந்தன. வழக்கமாக இப்படி நடப்பதில்லை. 'பவர்கட்' நேரமாக இருந்ததால், ஒரு சில சந்தர்ப்பங்களில் இவ்வாறு நிகழ்ந்து விடுகிறது. ஆனால், ஆஸ்பத்திரிக்குள் இந்தப் பிரச்சினை கிடையாது. அங்கு தனியாக ஜெனரேட்டர் வசதி உள்ளது.

அந்த நடைபாதைக்குச் சற்றுத் தொலைவில் கார் ஒன்று நிற்பதை விமலா கவனித்தாள். அதன் 'பார்க்' லைட் எரிந்து கொண்டிருந்தது.

''விமலாதானே அது?'' காரிலிருந்து யாரோ கேட்பதாக அவளுக்குத் தோன்றியது. யோசித்தபோது மிகவும் பழக்க மான குரலாகத் தோன்றியது.

''ஆமாம்!'' அவள் பணிவுடன் பதில் அளித்தாள்.

''இப்படி வாம்மா...'' காரிலிருந்து அந்தக் குரல் அழைத்தது.

அவள் காரை நோக்கி நடந்தாள். பயப்படுவதற்கு என்ன இருக்கிறது. அவள் இருப்பது ஆஸ்பத்திரி வளாகத்துக்குள் தானே?

காரின் அருகே வந்த போது, கதவைத் திறந்து கொண்டு அதற்குள் உட்கார்ந்திருந்தவர் சொன்னார். ''வாங்க... அவசரமா ஒரு இடம் வரைக்கும் போக வேண்டியிருக்கு.''

''யாரது?'' விமலா கேட்டாள்.

''நான்தான் டாக்டர் லூயிஸ்.''

அதன் பிறகு அவள் தயங்கவில்லை.

மெடிக்கல் ஆபீஸர் அழைக்கிறார். மட்டுமல்ல, அந்த ஆஸ்பத்திரிக்கு உரிமையாளர் ஆகப் போகிறவரும் கூட.

இப்படியாமலிருக்க அவளால் முடியாது.

அவள் காரில் ஏறி உட்கார்ந்தாள்.

எங்கே போகிறோம் என்று கேட்கவும் முடியாது.

அப்படியொரு தர்மசங்கடத்தில் ஆழ்ந்து, காருக்குள் அவள் கூனிக் குறுகி உட்கார்ந்திருந்தாள்.

"ஒரு பேஷண்டைப் பார்க்க வேண்டியிருக்கு. தனியாப் போகணும்னுதான் நெனைச்சேன். எதிர்பாராம விமலா வைப் பார்த்தேன். நாம பார்க்க வேண்டிய நோயாளி ஒரு பெண்மணி."

அந்த வார்த்தைகள் அவளுக்கு ஆறுதல் அளித்தன. பெண் நோயாளி ஒருவரைப் பார்க்கப் போகிறோம். அதற்காகத் தன்னைத் துணையாக அழைத்துச் செல்கிறார். அவள் நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

கார் மிகவும் விரைவாகச் சென்று கொண்டிருந்தது. அதனால் கார் எந்த வழியாகச் செல்கிறது என்றுகூட அவளால் கவனிக்க முடியவில்லை.

கடைசியில் கேட் ஒன்றைக் கடந்து கார் நின்றது. அதற்கு முன்பாகத் தென்பட்டது ஒரு பழைய கட்டடம். அதன் உட்புறம் விளக்கு எதுவும் எரியவில்லை. சுற்றுப்புறமே இருளடைந்து கிடந்தது.

டாக்டர் லூயிஸ் காரிலிருந்து இறங்கினார்.

"வாங்க..." அவர் அவளை அழைத்தார்.

விமலா காரிலிருந்து இறங்கினாள்.

அந்த வீட்டின் வாசற்படியை அடைந்தபோது, டாக்டர் லூயிஸ் தனது பாக்கெட்டிலிருந்து சாவி ஒன்றை எடுத்து துவாரத்தில் போட்டுத் திருகினார்.

அந்த இருட்டில் அதையெல்லாம் மிகவும் பழக்கம் வாய்ந்தவரைப் போலவே அவர் செய்தார்.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்ததும் விளக்கு எரியத் தொடங்கியது.

விமலா ஓரளவுக்கு ஆறுதல் அடைந்தாள். இருப்பினும் கதவை வெளியிலிருந்து திறந்தபோது அவளுக்குச் சந்தேகம் ஏற்படாமல் இல்லை. அது ஒரு வரவேற்பு அறை.

நீண்ட நாட்களாக அதை எவரும் பயன்படுத்தாதது மாதிரி அது தூசி படிந்து கிடந்தது. டீப்பாயில் கிடந்த பத்திரிகைகள் மற்றும் மாத இதழ்கள் மிகவும் பழங்காலத்தைச் சேர்ந்தவையாக இருந்தன. அங்கிருந்த சோபாவில் சமீபகாலத்தில் எவரும் உட்கார்ந்ததாகத் தெரியவில்லை.

''நோயாளி உள்ளே இருக்கிறார்.'' டாக்டர் லூயிஸ் சொன்னார். அவர் மற்றோர் அறையின் கதவைத் தள்ளித் திறந்தார். உட்புறம் விளக்கு எரியத் தொடங்கியது.

அவள், அவரைப் பின்தொடர்ந்தாள்.

அந்த அறைக்குள் கட்டில் ஒன்றும், அலமாரி ஒன்றும், மேஜை மற்றும் இரண்டு நாற்காலிகளும் இருந்தன.

அந்த அறையைப் பயன்படுத்தியிருப்பதற்கான அடையாளங்கள் தென்பட்டன. 'எங்கே நோயாளி?' என்று விமலா கேட்பதற்கு முன்பாக, டாக்டர் லூயிஸ் கதவை மூடித் தாழிட்டபடி சொன்னார். ''நான்தான் அந்த நோயாளி.''

அவள் திடுக்கிட்டாள்.

அவர் அலமாரியைத் திறந்து கொண்டு அதற்குள்ளிருந்து ஒரு பாட்டில் மதுவை எடுத்தார். மேஜை மீதிருந்த கிளாஸில் அதை ஊற்றினார்.

''இந்தாங்க... இதைக் குடிங்க!'' அவர் கிளாஸை அவளிடம் நீட்டினார்.

அவள் தயங்கினாள்.

''இங்கே நாம மட்டும்தான் இருக்கிறோம். பரவா யில்லை... குடிங்க!'' சற்று கோபத்துடன் அவர் சொன்னார்.

அதற்குக் கீழ்ப்படிவதைத் தவிர அவளுக்கு வேறு வழியில்லை.

அவள் அந்த கிளாஸை வாங்கிக் குடித்தாள். சக்தி வாய்ந்த அந்த மஞ்சள் நிறத் திரவம் அவளின் தொண்டை வழியாக ஸ்க்ரூ இறங்குவது போல் தாழ்ந்து இறங்கியது.

அவளின் கண்களில் ஒரு மயக்கம்.

திடுமென்று டாக்டர் லூயிஸ் அவளது உடைகளை ஒவ்வொன்றாக அவிழ்த்தார். அவள் ஒரு பொம்மை மாதிரி அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

விமலா அழகான இளம் பெண்.

இருபத்திரண்டு வயதான அவள் உடம்பு. எவரையும் கவரக்கூடிய அளவில் கவர்ச்சி மிக்கதாக இருந்தது.

பருமனாக துருத்திக் கொண்டு நிற்கும் மார்பகங்கள். முன்புறமாகச் சரிந்து கிடந்த வயிற்றில் இருள் ஒளிந்திருந்த தொப்பூழ்க்கொடி.

டாக்டர் லூயிஸின் நிழலை அவள் அந்தச் சுவரில் பார்த்தாள்.

'என்ன... அவரின் தலைப் பகுதி...' அவள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அவர் ஷர்ட்டை அவிழ்த்து நாற்காலியில் போட்டார்.

அப்போது அவருக்கு இடுப்பு முதல் கீழ்ப்பகுதிக்கு மட்டுமே நிழலிருந்தது.

மதுவின் போதை தன்னுள் பரவிவிட்டதை அவள் உணர்ந்தாள். அவர் உடை மொத்தத்தையும் களைந்த போது அவருக்கு நிழலே இல்லை என்று அவளுக்குத் தோன்றியது.

அவர், அவளை நெருங்கினார். அவளின் உடல் முழுவதும் அவரின் கை விரல்கள் ஊர்ந்து நகர்ந்தன.

அவளின் உடல் சிலிர்ந்தெழுந்தது.

## 4

அந்தக் கைகள் ஒரே மாதிரி அவளின் உடம்பில் செயல்பட்டுக் கொண்டிருந்தன.

அவளின் அடிவயிற்றில் மென்மையாகக் கிளுகிளுப்பை ஏற்படுத்திக் கொண்டு லூயிஸின் இடக்கைவிரல்கள் ஊர்ந்து நகர்ந்தன. அவளின் ரத்தக் குழாய்களின் ஊடாக உடல் முழுவதையும் புளகாங்கிதம் ஏற்படுத்திக் கொண்டு, கவர்ச்சிகரமான சக்தி ஒன்று ஊடுருவிப் பாய்ந்தபோது, படுத்த நிலையிலேயே அவள், அவளையும் அறியாமல் மேற்புறமாக உயர்ந்தாள்.

அத்துடன் அவளின் மனமும் உயர்ந்தது.

ஒரு பஞ்சுத் துகள் மாதிரி அவள் உயர்ந்தாள். அந்தரத்தில்... மேகங்களில்... நட்சத்திர உலகங்களில்...

கடைசியில் அவள் ஆகாயகங்கையின் கரையில்...

அவள் உடலில் ஈரம் தட்டுப்பட்டது.

கால்களில்...

சற்று நேரத்துக்குப் பிறகு அவள் கண்களைத் திறந்தாள்.

டாக்டர் லூயிஸ் நாற்காலி ஒன்றில் உட்கார்ந்திருப்ப தைத்தான் அவள் பார்த்தாள்.

அவருக்கு முன்பாக மது நிறைந்த இரண்டு கண்ணாடி தம்ளர்கள் இருந்தன.

ஒன்று பாதியளவு காலியாகியிருந்தது.

மற்றொன்று நிறைந்திருந்தது.

"விமலா மாதிரியான பெண்ணை நான் இப்போதுதான் முதல் தடவையாகப் பார்க்கிறேன். இது எனது வாழ்க்கை யில் நடந்துள்ள முதல் சம்பவம்." டாக்டர் லூயிஸ் பேசினார்.

ஆனால், அவளால் அதை நம்ப முடியவில்லை.

அவளின் மனத்தில் அப்போது நிறைந்திருந்தவள் மோளி வர்கீஸ்தான்.

நிர்வாணமாக டியூட்டி ரூமின் பின்புறமிருந்த ஓய்வு அறையில் இறந்துகிடந்த மோளி வர்கீஸ்.

திடுமென்று அவள் உடல் அவளையும் அறியாமல் நடுங்கத் தொடங்கியது.

அந்த அறையில் டாக்டர் லூயிஸ் உட்கார்ந்திருக்கும் இடத்துக்கு அருகில் நிலைக்கண்ணாடி ஒன்று இருந்தது. அப்போதுதான் விமலா அதைக் கவனித்தாள்.

அதன் மீதுதான் அவளது புடவை தொங்கிக்கிடந்தது. புடவை கிடந்த மூலையுடன் மூலை மட்டுமே, பார்வையி லிருந்து மறைக்கப்பட்டிருந்தது.

அந்தப் பகுதியில் அவள் உருவம் தென்பட்டது.

அவளின் இடுப்புக்கு மேற்பட்ட பகுதி மட்டுமே அதில் தெரிந்தது.

எழும்பி நிற்கும் மார்பகங்கள்...

முகம்...

'டாக்டர் மோளி வர்கீஸின் மார்பில் தென்பட்ட ரத்தம்!' அவள் யோசித்துக் கொண்டிருக்கும்போதே, டாக்டர் லூயிஸ் மது நிறைந்த தம்ளருடன் அவளை நெருங்கினார்.

அவர் கட்டிலில் உட்கார்ந்தார்.

"இந்தா... இதைச் சாப்பிடு! களைப்பு பறந்துடும்!" டாக்டர் லூயிஸ் கூறினார்.

"எனக்கு வேணாம்!" அவள் மறுத்தாள்.

"அது முடியாது. நீ இதைக் குடிக்கத்தான் வேணும்." அவர் வற்புறுத்தினார்.

தன் மேலதிகாரி வற்புறுத்தும்போது, அதை எப்படி அதன் பிறகும் மறுக்க முடியும்?

அவளுக்கு வேறு வழியில்லை.

அவள் எழுந்து உட்கார்ந்தாள்.

அப்போது அவளுக்குப் பிரத்தியேகமான உற்சாகம் ஒன்று தோன்றியது.

அவள், அவரது கையிலிருந்து மதுவை வாங்கி, குடிக்க முற்பட்டபோது அவளையும் அறியாமல் அவள் கண்கள் நிலைக்கண்ணாடியில் பதிந்தன.

'என்ன!' அவள் கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள்.

லூயிஸ் அணிந்திருந்த லுங்கிக்கு மேற்புறம் வெற்றிடமாக இருந்தது.

சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக அவள் மறுபடியும் ஊன்றிப் பார்த்தாள். அதற்குள் அவர் கட்டிலிலிருந்து எழுந்துவிட்டிருந்தார்.

அவள் தன் கையிலிருந்த கிளாஸைக் கீழே வைக்க முயன்றபோது, அவர் அதை வாங்கி மேஜை மீது வைத்தார்.

அவர் மீண்டும் அவளை நெருங்கினார்.

மது, அவளை முற்றிலுமாக அடிமைப்படுத்தியிருந்தது.

மயக்கம், அவளின் கண்ணிமைகளின் கனத்தை அதிகரிக்கச் செய்தது. அப்போதும் மதுவின் வாசனை குறிப்பிட்ட இடைவெளியில் அவள் கன்னங்களில் பதிந்து கொண்டிருந்தது.

அவரின் உதடுகள், அவளின் அதரங்களில் சற்று நேரம் தங்கியிருந்து, அங்கிருந்து கீழ்ப்புறமாக உரசியவாறே நகர்ந்தன.

அதற்குள் அவள் இன்பத்தின் உச்சியை எட்டி விட்டிருந்தாள். அவளின் கரங்கள் அவரின் முதுகுத் தசையை ஊடுருவிக் கொண்டு உள்ளிறங்கத் துடித்தன.

"ஆஹா!" அவள் தன்னையும் மீறிக் கூவினாள்.

டாக்டர் லூயிஸின் உதடுகள் கீழ்ப்புறமாக இறங்கின.

தொண்டையின் கீழ்ப் பகுதியில் எதையோ தேடியலைந்தன.

'ஆ...' அவள் இன்பலயிப்பில் இருப்பது போல் திடுக்கிட்டு விழித்தாள்.

அலறினாள்; ஆனால், அந்தச் சத்தம் வெளியில் வரவில்லை.

படிப்படியாக அவள் சோர்வு அடைந்தாள். அவள் கண்களில் இருள் பரவியது.

கடைசியில் அவள் அந்தக் கட்டிலில் அசைவற்றுக் கிடந்தாள்.

டாக்டர் லூயிஸ் எழுந்து தன் உதடுகளைத் துடைத்துக் கொண்டார்.

கண்ணாடியில் விழுந்து கிடந்த அவளது புடவையை எடுத்து அவர் சந்தேக நிவர்த்திக்காக கையையும் முகத்தையும் ஒற்றியெடுத்தார். உடையை மாற்றிக்கொண்டார். அதன் பிறகு அந்தத் துணியில் உடலை மூடி எடுத்துக் கொண்டு, லைட்டை அணைத்தார்.

ஒரு கைக்குழந்தை மாதிரி விமலாவை அவர் தோளில் போட்டுக் கொண்டு அந்த அறையிலிருந்து வெளியே வந்தார்.

கட்டடத்துக்கு வெளியே வந்த பிறகு கதவைப் பூட்டினார். வெளியே கடுமையான இருட்டு பரவியிருந்தது.

எங்கும் எந்த விதமான அசைவும் தென்படவில்லை.

அமைதி உறைந்துவிட்டிருந்த அந்தச் சூழ்நிலையில் அவர், அந்த உடலை காரின் டிக்கியைத் திறந்து அதற்குள் போட்டார்.

கார் ஸ்டார்ட் ஆனது.

சற்றுத் தொலைவு சென்றபோது வலப்புறத்தில் குளம் ஒன்று தென்பட்டது. காரை நிறுத்தினார். டிக்கியிலிருந்து விமலாவின் உடலை எடுத்துக் குளத்துக்குள் மெதுவாகப் போட்டார்.

குளத்தின் ஆழத்தை நோக்கி வெண்மை நிறம் அமிழ்வதைச் சற்று நேரம் வேடிக்கை பார்த்தவாறு நின்றார். பிறகு தனது காரில் ஏறினார்.

முதலாளி சேவியரது பங்களாவை அடைந்த கார் நின்றது.

அப்போதும் அங்கிருந்த எவரும் உறங்கியதாகத் தெரியவில்லை.

சேவியர், நான்சியுடன் மூன்றாவது நபர் ஒருவரும் அங்கு இருந்தார்.

சுமார் அறுபது வயது மனிதர்.

மிடுக்குடன் தோற்றமளித்த அவர், வெள்ளை நிற வேட்டி- சட்டையில் இருந்தார்.

முழுக்கைச் சட்டையின் முனைப்பகுதியில் கஃப் பட்டன்கள் போட்டிருந்தார்.

''இவர், டாக்டர் லூயிஸ்!'' சேவியர், அந்த மனிதரிடம் டாக்டரை அறிமுகப்படுத்தினார்.

''இவர் ஃபாதர் ஆண்ட்டனி... இவளின் (அம்மா) தாத்தா!''

ஃபாதர் ஆண்ட்டனி என்று சொன்னபோதே டாக்டர் லூயிஸின் முகத்தில் சட்டென்று ஒரு மாற்றம் ஏற்பட்டது. இருப்பினும் அதை மறைத்துக் கொண்டு ஃபாதரிடம் கைகுலுக்க முற்பட்டார். பிறகு சட்டென்று அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு வணக்கம் சொன்னார்.

''லூயிஸ் சமீபத்துலதான் வெளிநாட்டுலேர்ந்து வந்தீங்க... இல்லையா?'' ஃபாதர் ஆண்ட்டனி கேட்டார்.

''ஆமாம்.''

''அமெரிக்காவுல எங்கே இருந்தீங்க?''

''டெக்சாஸ்.''

''படிப்பு முடிஞ்சதா?''

''முடிஞ்சிடுச்சு.''

''ஆஸ்பத்திரியில் இருந்து வர்றீங்களா?'' ஃபாதர் கேட்டார்.

''ஆமாம்.''

''போய்... கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுங்க!''

அதற்காகவே காத்திருந்தவர் மாதிரி லூயிஸ் உடனே அங்கிருந்து கிளம்பினார்.

ஃபாதர் ஆண்ட்டனி, அவ்வப்போது நான்சியின் முகத்தை கவனித்தார்.

'அவளுக்குப் பொருத்தமானவர்தான் டாக்டர்' என்று ஃபாதர் நினைக்கவும் செய்தார்.

மறுநாள் மதியத்தில்தான் விமலா காணாமல் போன தகவல் தெரியவந்தது.

ஒருவேளை அவள் தனது வீட்டுக்குப் போயிருக்கலாம் என்று ஷைனி முதலில் நினைத்தாள். ஆனால், மதியம் இரண்டு மணிக்கு டியூட்டிக்கு வராமல் போகவே, ஷைனிக்குச் சந்தேகமானது.

அவளுக்கு ஏதாவது நிகழ்ந்திருக்குமோ என்ற பயம் எழுந்தது ஷைனியிடம்.

டாக்டர் லூயிஸ்தான் மெடிக்கல் ஆபீஸர் என்றாலும், அவரிடம் செல்வதற்கு என்ன காரணத்தாலோ பயந்தாள் ஷைனி. எனவே, அவள் டாக்டர் ஸ்டீஃபனிடம் சென்றாள்.

''என்ன ஷைனி என்னமோ போல இருக்குறீங்க?'' டாக்டர் கேட்டார்.

''விமலாவைக் காணோம்.''

''எப்போதிலிருந்து?''

''காலையிலேருந்து.''

''ஒருவேளை வீட்டுக்குப் போயிருக்கலாம்.''

''சொல்லாமப் போகமாட்டாள்!''

''சரிதான்... சொல்லாமல் போறதுக்கும் வழியில்லை!'' டாக்டரும் அதையே கூறிவிட்டார்.

இருப்பினும் அதை அந்த அளவுக்கு மோசமான காரியமாக அவர்கள் நினைக்கவில்லை.

எனினும் 'விமலாவைக் காணவில்லை' என்ற தகவல் ஆஸ்பத்திரி முழுக்கப் பரவியது.

ஒருசிலர், 'அவள் யாருடனாவது ஓடிப்போயிருக்கலாம்!' என்றனர்.

'காதல்ல மாட்டியிருக்கலாம்!' இப்படியும் சிலர் சொன்னார்கள்.

ஐந்து மணியான போது டாக்டர் லூயிஸ் வந்தார்.

சீரியஸான கேஸுகளைப் பற்றி விசாரிப்பதற்காகத்தான் அவர் வருவார்.

நான்கு அல்லது ஐந்து நோயாளிகளைப் பார்த்திருப்பார்.

மருந்துகள் சொன்னார்.

டாக்டர் லூயிஸ் வந்து சேர்ந்ததற்குப் பிறகு எவரும் நம்ப முடியாத சம்பவங்கள் சில ஆஸ்பத்திரியில் நடந்தன.

ஒரு வார காலத்துக்குள் சிட்டி ஹாஸ்பிடலின் புகழ் நாடெங்கும் பரவியது.

ரத்தப் புற்றுநோய் பிடித்த இளம்பெண் ஒருத்தி, எந்த விநாடியிலும் மரணம் ஏற்படலாம் என்ற நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தாள்.

மெடிக்கல் காலேஜ் ஆஸ்பிடலில் இருந்து, டிரான்ஸ்ஃபியூஷனுக்காக சிட்டி ஆஸ்பிடலுக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டிருந்த நோயாளி அவள்.

பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவளாதலால், தனியறை ஒன்றை அமர்த்திக் கொண்டு ரத்தத்தை மாற்றிக் கொண்டே தங்கியிருந்தாள் அவள்.

இருபத்தோரு வயதான அழகான அந்த நோயாளி கல்லூரியில் படிக்கும் ஒரு மாணவியும்கூட.

நோய் அவளை அரித்துவிட்டிருந்தது. கைகால்கள் இளைத்து, கண்களில் குழி விழுந்து, முகம் ஏறத்தாழ ஒரு மண்டையோடு போல் ஆகிவிட்டிருந்தது.

அவள் படுத்துக்கொண்டிருந்தாள்.

டாக்டர் லூயிஸ், அவளைக் கவனித்தார்.

அவளின் ரத்தத்தை அவர் பரிசோதித்தார். பின்னர் தன் ரத்தத்தை அவளுக்கு வழங்குவதென்று தீர்மானித்தார். மற்றவர்களுக்குத் தெரியாமல் பாதுகாப்பான முறையில் தனது ரத்தத்தை ஒரு பாட்டில் அளவுக்கு எடுத்து, அதை அவளின் உடலில் செலுத்தவும் செய்தார்.

விரைவிலேயே அதற்கான பலன் தெரிந்தது.

மறுநாளிலிருந்தே அந்தப் பெண்ணிடம் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

மற்ற டாக்டர்கள் அவளைப் பரிசோதிப்பதைத் தடுத்தார். லூயிஸே அவளுக்குச் சிகிச்சைகள் அளித்தார்.

ஐந்து நாட்களுக்குள் அந்தப் பெண்ணிடம் அற்புதமான மாற்றம் ஏற்பட்டது. அந்தத் தகவலைப் பலரும் அறிந்தனர். பத்திரிகைகளில்கூட அந்தச் செய்தி முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்பட்டது.

அத்துடன் சிட்டி ஆஸ்பிடலின் புகழ் எல்லா இடங்களிலும் பரவியது.

ரவுண்ட்ஸை முடித்துக்கொண்டு டாக்டர் அறைக்குள் நுழைந்தபோது நர்ஸ் ஷைனி அங்கு வந்து சேர்ந்தாள்.

''என்ன ஷைனி?'' டாக்டர் லூயிஸ் அவளை மேலும் கீழும் பார்த்தவாறு கேட்டார்.

அந்தப் பார்வை, அவளைக் குன்றிப் போகச் செய்தது.

உடையின் நூலிழைகளை ஊடுருவிக் கொண்டு அந்தப் பார்வை தன்னைத் துளைப்பதாக அவள் உணர்ந்தாள். அந்தப் பார்வை அந்த அளவுக்கு சக்திவாய்ந்ததாக இருந்தது.

''ஷைனியைப் பார்த்ததும் சட்டென்று எனக்கு ஒரு யோசனை தோன்றியது!'' டாக்டர் லூயிஸ் கூறினார்.

''என்ன யோசனை டாக்டர்?'' அவள் விசாரித்தாள்.

''இங்கு இன்னும் சில விஷயங்களை மேம்படுத்த வேண்டும்!'' அவர், அவளின் மார்பகங்களையே ஊன்றிப் பார்த்தார்.

என்ன சொல்லப் போகிறார் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் அவள், அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''லேடி டாக்டர்கள் அணிவது மாதிரியே, நர்ஸுகளும் இனிமேல் புடவை உடுக்கலாம். வெள்ளை நிற வாயல் புடவை. என்ன சொல்கிறீர்கள்? உடலை முழுக்க மூடும் இந்த யூனிஃபாரம் வேண்டாம்.''

அதைக் கேட்ட ஷைனி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

''சரி... ஷைனி வந்த விஷயம் என்ன?'' டாக்டர் கேட்டார்.

''விமலாவைக் காணோம்!'' அவள் சொன்னாள்.

''அவ்வளவுதானே விஷயம்? ஒருவேளை வீட்டுக்குப் போயிருக்கலாம்.'' லூயிஸ் மிகவும் சாதாரணமாகப் பேசினார்.

''இல்லை சார்! அவள் கார் ஒன்றில் ஏறிப்போனதாக, வாட்ச்மேன் வாசு சொல்கிறார்.

''ஓகோ...'' டாக்டர் லூயிஸின் நெற்றி சுளிவடைந்தது.

அவர் மேஜை மீதிருந்த காலிங் பெல்லில் விரலை வைத்து அழுத்தினார். அது, மேஜையின் பலகைக்குள் அமிழ்ந்து போனது.

# 5

அட்டெண்டர் அறைக்கு வந்தார்.

''வாட்ச்மேன் வாசுவோட டியூட்டி நேரம் எது?'' டாக்டர் லூயிஸ் கேட்டார்.

''ராத்திரி எட்டு மணியிலேருந்து காலையில் ஆறு மணி வரை!''

''சரி... நீ போகலாம்.''

அவர் கிளம்பினார்.

''விமலா தங்கியிருப்பது ஷைனியுடன்தானே?'' டாக்டர் விசாரித்தார்.

''ஆமாம் சார்!''

''விமலா வந்தவுடன் என்னைப் பார்க்கச் சொல்லுங்கள்.''

''சரி, சார்! அவள் ஒரு அப்பாவி. யாராவது ஒருத்தர் கோபப்பட்டால் அப்புறம் அவளுக்குச் சாப்பாடும் தூக்கமும் கிடையாது.''

''அதெல்லாம் அவங்கவங்களோட சொந்த விஷயம். இருந்தாலும் இங்குள்ள யாரிடமும் சொல்லாமல் விமலா காரில் ஏறிப் போனது சரியில்லை.'' டாக்டர் சற்று கோபத்துடன் கூறினார்.

அதைக் கேட்டதும் ஷைனி சற்றுத் துணுக்குற்றாள்.

''சரி... நீங்க கிளம்புங்க. தேவைப்பட்டா நான் கூப்பிடுகிறேன்!'' டாக்டர் லூயிஸ் சொன்னார்.

ஷைனி அங்கிருந்து வெளியேறியதும் டாக்டர் ரத்தப் புற்று நோயாளி தங்கியிருந்த அறைக்குச் சென்றார்.

''என்ன ஸ்மிதா, இப்போ எப்படி இருக்கு?'' டாக்டர் கேட்டார்.

டாக்டர் வரும்போது ஸ்மிதா பால் குடித்துக் கொண்டிருந்தாள்.

''இப்ப ரொம்பவும் சௌக்கியமா இருக்கேன் சார்!'' அவள் சொன்னாள்.

''எப்படி சௌக்கியம் இல்லாம இருக்கும்? நான்தானே ரத்தம் கொடுத்தவன். வாழ்க்கையில் நான் முதல் தடவையா ரத்தம் கொடுத்திருக்கிறது ஸ்மிதாவுக்குதான். இது வேற யாருக்கும் தெரியாது. யார்கிட்டயும் சொல்லவும் வேண்டாம்.'' டாக்டர் சொன்னார்.

''மாட்டேன். யார்கிட்டயும் சொல்லமாட்டேன்; சொன்னது மில்லை!''

''நல்லது. மருந்தால் குணமடைஞ்சதா சொன்னால் போதும்.''

''அப்படியே சொல்றேன்!''

''இன்னொரு விஷயம். நான் இதையெல்லாம் செய்ததுக்கு எனக்கு என்ன ஃபீஸ் தருவே?'' டாக்டர் லூயிஸ் கேட்டார்.

''நீங்க எவ்வளவு கேட்டாலும் டாடி தருவார். நான் அவருக்கு ஒரேயொரு பொண்ணுதான். கிட்டத்தட்ட அரைக்கோடி ரூபா சொத்து என் அப்பாகிட்ட இருக்கு.''

''பணம் எனக்குத் தேவையில்லை.''

அதைக் கேட்டதும் அவள் கண்களில் வெட்கத்தின் சிவப்பு பரவியது.

''சரி... நான் வரட்டுமா?'' அவர், அவளின் கன்னத்தில் தட்டிவிட்டுத் தொடர்ந்தார்.

ஸ்மிதாவுக்கு டாக்டரின் பேச்சு, மிகவும் பிடித்துப் போனது. புகழ்பெற்ற டாக்டர் ஒருவர் அவளை விரும்பு கிறார்.

**ம**றுநாள் விமலாவின் உடல் சற்றுத் தொலைவிலுள்ள குளத்தில் கிடப்பதாக ஆஸ்பத்திரிக்குத் தகவல் கிடைத்தது.

அது எல்லோரையும் துயரத்தில் ஆழ்த்தியது. உடனேயே டாக்டர் ஸ்டீஃபனும் நான்கு அல்லது ஐந்து மனிதர்களும் அந்தக் குளத்தை நோக்கி விரைந்தனர்.

போலீஸ்காரர்களும், ஊராரும் அங்கு குழுமியிருந்தனர்.

பிண உடலை வெளியே எடுத்தனர். நிர்வாணமான அந்தப் பிணவுடலின், யாரோ கொடுத்த ஒரு துண்டின் உதவியால் மார்பையும், இடுப்பையும் ஓரளவுக்கு மறைத்திருந்தனர்.

டாக்டர் ஸ்டீஃபனைப் பார்த்ததும் இன்ஸ்பெக்டர் தகவல் தெரிவித்தார். ஆஸ்பத்திரியில் டியூட்டியில் இருந்த வர்களின் பெயர்கள் மற்றும் விவரங்களை உடனடியாக போலீஸ் ஸ்டேஷனுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

டாக்டர் ஸ்டீஃபன் அதற்கு ஒப்புக் கொண்டார். விமலாவின் உடலை போஸ்ட்மார்ட்டத்துக்கு அனுப் பினர். மெடிக்கல் காலேஜ் ஆஸ்பிடலுக்குக் கொண்டு சென்றனர்.

மறுநாள் போலீஸார் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தனர்.

டாக்டர் லூயிஸ், இன்ஸ்பெக்டரை மிகவும் உற்சாகத் துடன் வரவேற்றார். மட்டுமின்றி, விசாரணைக்குத் தேவை யான எல்லா ஒத்துழைப்பையும் வழங்குவதாகத் தெரிவித்தார்.

முதலில் வாட்ச்மேன் வாசு விசாரணைக்காக அழைக்கப் பட்டார். அவர்தான் ஷைனியிடம் அந்தத் தகவலைச் சொன்னவர். அவள் சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் சொன்னதை ஒட்டித்தான் அவர் வாசுவை வரவழைத்தார்.

"நீங்கதான் வாசுவா?" இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"ஆமாம் சார்!"

"முன்னாள் ராணுவ வீரரா?"

"ஆமாம் சார்!"

"எந்த கார்ல அவள் ஏறிப்போனாள்?"

"வெள்ளை நிற அம்பாஸடர் கார்."

"இங்க யார் கிட்டயாவது வெள்ளை அம்பாஸ்டர் கார் இருக்கா?"

"இல்லை சார்."

டாக்டர் லூயிஸ் பயன்படுத்துவது ஃபியட் கார். அவர் வாசுவிடம் எச்சரிக்கை செய்ததை ஒட்டியே, வாசு அப்படிச் சொன்னார். இல்லாவிட்டால் வாசுவின் வேலை பறிக்கப் படும் என்று மிரட்டப்பட்டிருந்தார் அவர். எனவே, வாசு அப்படியொரு பதிலைச் சொல்ல நேர்ந்தது.

வாசுவின் ஸ்டேட்மெண்ட்டுடன் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த எவரும் விமலாவின் மரணத்துக்குக் காரணமில்லை என்ற முடிவுக்கு வந்தது போலீஸ்.

இருப்பினும் அங்கிருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அப்படியும் பிர யோஜனமான தடயம் எதுவும் போலீஸுக்குக் கிடைக்க வில்லை. இருப்பினும் விசாரணை தொடருமென்று உறுதியளித்துவிட்டுக் கிளம்பினார் அவர்.

விமலாவின் மரணம் நிகழ்ந்தது குரூரமான பலாத்காரத் தால்தான் என்றும் உடம்பிலிருந்து ரத்தம் முற்றிலுமாக

வடிந்து போயிருப்பதாகவும் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

டாக்டர் மோளி வர்கீஸின் மரணத்துடன் இதற்குத் தொடர்பு இருப்பதாக டாக்டர் ஸ்டீஃபன் கருத்துத் தெரிவித்தார்.

ஆனால், யாரைச் சந்தேகிப்பது?

ஒரு வார காலம் கடந்தது. ஆஸ்பத்திரியுடன் தொடர் புள்ள இரண்டு மரணங்களுக்கும் எந்தவொரு தடயமும் அகப்படவில்லை. எனினும், விசாரணை தொடர்ந்தது.

ரத்தப் புற்று நோயாளியான ஸ்மிதா, வீட்டுக்குப் போகலாம் என்ற அளவுக்கு நிலைமை முன்னேறியது.

டாக்டர் லூயிஸ் அவளது அறைக்குச் சென்று பார்த்தார்.

விரைவிலேயே அவள், பிரத்தியேகப் பரிசோதனை களுக்காக, மெடிக்கல் ஆபீஸரின் அலுவலக அறையை ஒட்டியுள்ள அறைக்கு, மாற்றப்பட்டாள்.

அன்று இரவு பத்து மணி.

டாக்டர் லூயிஸ் ஆஸ்பத்திரியிலிருந்து கிளம்பியிருக்க வில்லை. அவர் ஸ்மிதா படுத்திருக்கும் அறைக்குள் வந்தார். அவள் முழுமையாகக் குணமடைந்துவிட்டதால் அன்று காலையில் தன் அம்மாவைப் பார்த்துவிட்டு வந்திருந்தாள்.

மறுநாள் காலையில் அவளை வீட்டுக்கு அனுப்பி வைப்பதாக டாக்டர் லூயிஸ் கூறினார். அவளின் பெற்றோ ருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

டாக்டர் அந்த அறைக்குள் நுழைந்தபோது, ஸ்மிதா பத்திரிகை ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தாள்.

"என்ன தூக்கம் வரலையா?" டாக்டர் கேட்டார்.

''வரலை. நாளைக்கு இங்கேருந்து கிளம்பப் போறேனே... அதுவும் உயிரோட!'' ஸ்மிதா சிரித்தவாறே பதிலளித்தாள்.

''அப்படியானால் என் கூட வாங்க.'' டாக்டர் கூறினார்.

பத்திரிகையை டீபாயில் போட்டுவிட்டு அவள் எழுந் தாள். டாக்டர் லூயிஸை பின்தொடர்ந்தாள். அந்தப் பகுதி யில் அப்போது பிற மனிதர்கள் எவருமே தென்படவில்லை.

அவரது ஓய்வுஅறைக்குள் இருவரும் நுழைந்தவுடன், டாக்டர் லூயிஸ் கதவை மூடித் தாழிட்டார்.

மிகவும் மெலிதான இரவு உடை ஒன்றை அணிந் திருந்தாள் ஸ்மிதா. அந்த அறைக்குள் விளக்குக்கு நேராக அவள் நின்றபோது, அவளின் உடல் பகுதிகளை நிழல் போல் லூயிஸ் கவனித்தார்.

அவர், அவளின் கண்களைப் பார்த்தவாறே இரவு உடையின் முடிச்சுகளை அவிழ்க்கத் தொடங்கினார்.

ஸ்மிதா ஆடாமல், அசையாமல் அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

அவளைப் பொறுத்தவரை டாக்டர் லூயிஸுக்கு அவள் மிகவும் கடமைப்பட்டிருந்தாள். மரணத்திலிருந்து அவளைக் காப்பாற்றியவர் அவர்தான். எனவே, அவரது தேவை எதுவாக இருந்தாலும், அதை நிறைவேற்ற ஸ்மிதா தயாராக இருந்தாள்.

டாக்டர் லூயிஸ் அவளின் உடலையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''உடம்பு நான் எதிர்பார்த்ததைவிடவும் நன்றாகவே தேறியிருக்கிறது!'' என்றவாறே அவர், அவளைக் கட்டிலில் படுக்க வைத்தார்.

அவர் தனது உடைகளைக் கழற்றி அந்த அறையிலிருந்த ஸ்கிரீனில் போட்டபோது அவளுக்குச் சந்தேகம் ஏற்படுத்தும் காட்சி ஒன்று தட்டுப்பட்டது.

உடைகள் அணிந்த லூயிஸின் நிழலை அவள் சுவரில் கவனித்திருந்தாள். உடைகளைக் களையும்போதும் அவள் பார்த்தாள்.

ஆனால், கடைசியில் அந்த உருவத்துக்கு நிழலே இல்லை!

இது தன் மனதுக்கு மட்டுமே தோன்றிய வேடிக்கை யான கற்பனையாக இருக்கும் என்று அவள் தனக்குத் தானே காரணம் சொல்லிக் கொண்டாள்.

டாக்டர் லூயிஸின் கைகளுக்குப் பிரத்தியேகமான சக்தி இருந்தது.

அந்தக் கை விரல்கள் ஊரும்போதுதான் இன்பநிலைக் குள் ஆழ்ந்து இறங்குவதாக அவளுக்குத் தோன்றியது. இதுவரை உணர்ந்து அறியாத ஒருவிதப் பரவசநிலைக்கு அவள் உள்ளானாள்.

அவரின் கைவிரல்களில் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி, புளகாங்கிதம் கொள்ளச் செய்யும் ஏதோ ஒரு தன்மை கலந்துள்ளதாகவும் அவளுக்குத் தோன்றியது.

அந்தக் கைகளுக்கு என்ன ஒரு வலு?

கருங்கல்லைக்கூட அழுத்தி நசுக்கித் தூளாக்கும் சக்தி.

தனது தேவை முடிந்ததும் டாக்டர் லூயிஸ் எழுந்தார்.

ஸ்மிதா, சிலித்தவாறே கட்டிலில் படுத்துக் கிடந்தாள்.

அதுவே டாக்டர் லூயிஸை ஆச்சரியப்படுத்தியது. டாக்டர் பீரோவைத் திறந்து ஒரு பாட்டில் மதுவை வெளியே எடுத்தார்.

இரண்டு கிளாஸுகளில் அதை ஊற்றினார்.

ஒரு கிளாஸை ஸ்மிதாவுக்குக் கொடுத்தார்.

எந்த வித ஆட்சேபனையும் தெரிவிக்காமல் அவள் அதை வாங்கிக் குடித்தாள்.

''இதுக்கு முன்னால குடிச்சிருக்கீங்களா?'' டாக்டர் அவளிடம் கேட்டார்.

''எப்போதாவது சில சந்தர்ப்பங்களில் வீட்டில் குடிப்பதுண்டு. டாடி எதுவும் சொல்லமாட்டார். குடிச்சு கண்மண் தெரியாம விழுந்துடக்கூடாது... அவ்வளவுதான்.''

''அப்படின்னா, இன்னும் கொஞ்சம் தரட்டுமா?''

''வேணும்னா, அப்புறமா வாங்கிக்கிறேன்!''

டாக்டர் இரண்டாவது முறையாக அவளை நெருங்கிக் கட்டிப்பிடித்தார்.

அவரது முரட்டுத்தனமான மூச்சுக்காற்று அவளின் கழுத்திலும், கன்னப்பகுதிகளிலும், விசையுடன் பாய்ந்தன. அவளின் கைகள் அவரின் முதுகில் பதிந்தன.

அந்த விரல்கள் தோலைத் துளைத்துக் கொண்டு ஆழ்ந்து இறங்குவதாக அவருக்குத் தோன்றியது.

'இவளுக்கு மட்டும் எங்கிருந்து கிடைத்தது இப்படியொரு சக்தி?' அவர் யோசனையில் ஆழ்ந்தார்.

சற்று நேரத்துக்குப் பிறகு அவளின் உதடுகள் கீழ்ப் புறமாக இறங்கி வந்தன.

அவளின் மார்பகத்தில்...

ஏதோ ஒரு விபரீதம் தட்டுப்பட்டது டாக்டருக்கு. 'இவளுக்கு ஆச்சரியப்படத்தக்க வகையில் ஏதோ ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளது' என்று அவருக்கு விளங்கியது.

தன் ரத்தம் அவளின் உடலுக்குள் பாய்ந்துள்ளதால், இந்த மாற்றம் அவளிடம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் முடிவு செய்தார்.

டாக்டர் லூயிஸ் எழுந்து உடைகளை அணிந்து கொண்டார்.

அவர், ஸ்மிதாவை அவளது அறையில் கொண்டு போய் விட்ட பிறகு திரும்பி வந்தார்.

ஸ்மிதா மறுநாள் காலையில் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டாள்.

மருத்துவமனைக்கு ஸ்மிதாவின் குடும்பத்தினர் ஐம்பதா யிரம் ரூபாய் நன்கொடை வழங்கவும் செய்தனர்.

ஸ்மிதா, புதுமணப் பெண் மாதிரி அவளின் வீட்டார் வரவேற்றனர்.

மறுபிறவி எடுத்தது போல் மருத்துவமனையிலிருந்து திரும்பி வந்திருந்த அவளை வரவேற்க, ஸ்மிதாவின் சிநேகிதிகள் சிலரும் காத்திருந்தனர்.

ஆஸ்பத்திரியில் டாக்டர் ஸ்டீஃபனும் ஷைனியும் அங்கு நடந்த சம்பவங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

மணி பதினொன்று தாண்டியது.

அன்று நைட் டியூட்டிக்கு அந்த இருவரும்தான்.

''டாக்டர் லூயிஸ் பற்றி உங்கள் கருத்து என்ன ஷைனி?'' ஸ்டீஃபன் கேட்டார்.

''என்னத்தைச் சொல்றது! முற்போக்குவாதியா இருக்கார். இல்லேன்னா எங்க யூனிஃபார்மை மாத்தி யிருப்பாரா?''

''அதோட அர்த்தம் வேற! பெண்கள் உடம்பு முழுக்க மூடிட்டு நடந்தா, எதைப் பார்க்க முடியும்?''

''ச்சே...சே! எனக்கு என்னமோ அப்படித் தோணலை, சார்!''

''நீங்க நெனைக்கிறபடியெல்லாம் கிடையாது. டாக்டர் லூயிஸ் நல்லவராத் தோணலை.''

"என்ன திடீர்னு இப்படி?"

"டாக்டருக்கு அமானுஷ்யமான சக்திகள் ஏதோ இருக்கிறதாத் தோணுது."

அப்போது மேற்புறச் சுவரில் பெரிய பல்லி ஒன்று டாக்டர் ஸ்டீஃபனையே கவனித்துக் கொண்டிருந்தது.

அது நிதானமாகக் கீழ் நோக்கி ஊர்ந்தது.

## 6

யதேச்சையாக டாக்டர் ஸ்டீஃபனின் கண்கள் சுவரில் ஊர்ந்த பல்லி மீது பதிந்தன.

ஏறத்தாழ முக்கால் அடி நீளமுள்ள அந்த உயிரின் முதுகுப் பகுதி கறுப்பாக இருந்தது. அதன் மீது சற்று வெளிறிய புள்ளிகள் மணலை ஒட்டவைத்தது போல் எழும்பி நின்றிருந்தன.

அதன் கண்கள் சிவந்த இரண்டு வைரக்கற்களைப் போல் பளபளத்தன.

பேசியவாறே டாக்டர் அதைக் கவனித்துக் கொண்டிருந்தார். அப்போது மிகவும் சிறிய பட்டாம்பூச்சியொன்று அதற்கு எதிரில் வந்து அமர்ந்தது. அப்படியும் அந்த பல்லி, பட்டாம்பூச்சியைப் பொருட்படுத்தவில்லை.

"பரவாயில்லையே..." என்ற ஸ்டீஃபன் எழுந்து அதன் அருகில் போய் நின்றார். உடனே அந்த பல்லி சட்டென்று பின்வாங்கி மிகவும் விரைவாக ஊர்ந்து நிழலில் மறைந்து கொண்டது.

"என்ன டாக்டர்?" ஷைனி கேட்டாள்.

"பல்லி ஒண்ணு... அசாதாரணமான அளவுக்குப் பெரிசா இருந்தது அது. ஆச்சரியமா இருக்கு!" என்ற ஸ்டீஃபன் தனது நாற்காலியில் போய் அமர்ந்தார்.

"டாக்டர் மீது உங்களுக்குச் சந்தேகம் ஏற்படக் காரணம் என்ன?" ஷைனி கேட்டாள்.

அந்தக் கேள்விக்கு பதில் சொல்லாமல் ஸ்டீஃபன் நாற்காலியிலிருந்து எழுந்து ஜன்னலை நெருங்கினார். ஜன்னலிலிருந்து சற்றுத் தொலைவிலிருந்த சவுக்கு மரத்தின் கிளையொன்று, ஜன்னலை நெருங்கித் தாழ்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. அதனது நிழல் வெளிப்புற நியான் விளக்கு வெளிச்சத்தில், ஜன்னல் கண்ணாடியில் விழுந்து கொண் டிருந்தது.

அந்த நிழல், சட்டென்று யாரோ பிடித்துக் குலுக்குவது போல் அசைவதை ஸ்டீஃபன் கவனித்தார். அப்போது வெளியே காற்று சன்னமாகக்கூட வீசவில்லை. அப்படி யானால் அந்தக் கிளை எப்படி இவ்வளவு விசையுடன் குலுங்குகிறது?

"மொத்தத்தில் எல்லாமே விசித்திரமாக இருக்கிறது!" டாக்டர் உதடுகள் முணுமுணுத்தன.

'ஒருவேளை இந்தச் சம்பவங்கள் எல்லாம் யதேச்சை யாக நடந்ததாகவும் இருக்கலாம்.' அவர் மனமே அதற்கு ஒரு சமாதானம் சொல்லிக்கொண்டது.

ஸ்டீஃபன் திரும்பி வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

கடிகாரத்தில் மணி ஒன்பது தடவை அடித்தது.

"நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் சொல்ல வில்லையே டாக்டர்?" ஷைனி நினைவூட்டினாள்.

''அதைப் பற்றிப் பேசத் தொடங்கியபோதுதான், அங்கே அந்தக் கிளை அசைவதைப் பார்த்தேன்!'' டாக்டர் ஸ்டீஃபன் திரும்பவும் அந்தப் பகுதியையே பார்த்தார்.

ஏதோ ஒன்று அங்கு இருப்பது போல்... அது அசையவும் செய்கிறது.

அது அந்தப் பல்லிதான். அது சட்டென்று ஜன்னல் வழியாக வெளியே குதித்து மறையவும் செய்தது.

''இப்படிப்பட்ட விஷயங்களைப் பேசும்போது, நமக்கே சந்தேகங்கள் ஏற்படுவது வழக்கம்தான். அப்புறம் பார்ப்பதையெல்லாம் நம் மனம் அத்துடன் கனெக்ட் செய்துவிடும். அது போகட்டும் சார். நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் சொல்லலையே!'' ஷைனி வற்புறுத்தினாள்.

தைரியசாலியான டாக்டர் ஸ்டீஃபன் நாற்காலியை ஷைனிக்குப் பக்கத்தில் இழுத்துப் போட்டுக் கொண்டார்.

வேறு யாராவது தங்களது பேச்சுகளை கவனிக்கிறார்களா என்று ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு டாக்டர் ஸ்டீஃபன் பேசத் தொடங்கினார்.

''டாக்டர் லூயிஸ் வந்த பிறகுதான் இங்கே இந்தச் சம்பவங்கள் நடந்திருக்கு.''

''அதுக்கு என்ன ஆதாரம்?''

''டாக்டர் மோளி வர்கீஸோட முடிவு, விமலாவோட மரணம், இந்த ரெண்டுமே யதேச்சையாக நடந்தது அல்ல. அப்புறம் என்னை ரொம்பவும் ஆச்சரியப்படுத்தினது அந்தச் சம்பவம்தான்.''

''எந்தச் சம்பவம்?'' ஷைனி, தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் ஸ்டீஃபனை ஊன்றிப் பார்த்தாள்.

''பிளட் கேன்சர் நோய் பிடித்த ஸ்மிதா விஷயம்தான்.''

36903

"ஆமாம்... அதுவும் சரிதான். ஆனால், நான் அதைப் பத்தி யோசிக்கிறது வேறொரு முறையில்தான். அமெரிக்கா விலேர்ந்து வரும்போது, நமக்குத் தெரியாம, நிறைய மருந்துகளை டாக்டர் கொண்டு வந்திருக்கலாம். 'தொழில் உத்தி'ங்கிற முறையில் அதை நம்ம கிட்டேயிருந்து மறைச் சிருக்கலாம்."

Assistance
RRRLF No. 152133........

"ச்சே... இது ரொம்பவும் [illegible] கேன்சருக்கு மருந்து கண்டுபிடிச்சிருந்தா, இந்நேரம் உலகம் பூராவும் தெரிஞ்சிருக்காதா? அதெல்லாம் இல்லை... ஏதோ ஒரு அற்புதம் நடந்திருக்கு."

12133814

ஷைனியால் அதை நம்பமுடியவில்லை. இருப்பினும் அவளுக்குத் தெரியாத ஏதோ ஒன்று நடந்திருப்பதாக அவள் நம்பினாள்.

"என்னவா இருந்தாலும் நான் அதைக் கண்டுபிடிப் பேன்!" ஸ்டீஃபன் ஒரு சபதம் மாதிரி அதைச் சொன்னார்.

தொலைபேசி மணியடிக்கத் தொடங்கியது.

"இந்த நேரத்தில் யாராக இருப்பார்கள்?" என்ற யோசனையுடன் எழுந்த ஷைனி, போய் ரிசீவரை எடுத்தாள்.

"டாக்டர் உங்களுக்குத்தான்!" அவள் கூறினாள்.

ஸ்டீஃபன் எழுந்து போய், ஷைனியிடமிருந்து ரிசீவரை வாங்கினார்.

மறுமுனையின் பேச்சு, ஸ்டீஃபனின் முகத்தில் பல்வேறு உணர்வுகளை எழுப்பின. [illegible]டென்று ரிசீவரை [illegible]வைத்த பிறகு, அவர் மேஜை மீதிருந்து [illegible]யைக் கையில் எடுத்தார்.

"என்ன டாக்டர்?" ஷைனி கேட்டாள்.

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. பக்கத்துல இருக்குற ஒரு ஆஸ்பத்திரியில் இருந்துதான்." அவர் பரபரப்புடன் பேசினார்.

அப்போது மணி ஒன்பதரை.

"இங்கேருந்து அம்பது கிலோ மீட்டருக்கு மேல தூர மில்லையா?" அவள் கேட்டாள்.

"பரவாயில்லை... நான் கிளம்புறேன். ஷைனி தூங்கிடக் கூடாது. நாற்பத்தொன்றாம் நம்பர் பெட்டில இருக்குற நோயாளிக்கு பன்னிரண்டு மணிக்கு ஒரு இன்ஜெக்ஷன் போடணும்."

"போட்டுடறேன் சார்!"

"ஒரு வேலை செய்யுங்க. அந்த வாட்ச்மேனை இங்கேயே வந்து இருக்கச் சொல்லுங்க!"

"ஒரு விஷயம் சார்... ஏதாவது அத்தியாவசியம்னா..."

"அதுவும் நல்லதுதான். நான் அதைப் பற்றி யோசிக்கலை. ஒண்ணு பண்றேன். குவார்ட்டர்ஸுக்குப் போய் டாக்டர் ராஜனைப் பார்த்துட்டு, அவரை அனுப்பிவைக்கிறேன். இதை போன்ல சொன்னா சரியாகாது."

டாக்டர் ஸ்டீஃபன் காரில் ஏறிப் புறப்பட்டார். அவர் டாக்டர் ராஜனின் குவார்ட்டர்ஸை அடைந்து, அவரிடம் தகவல் சொன்னார். மேற்கொண்டு தான் பார்த்துக் கொள்வதாகவும், ஸ்டீஃபனை உடனே கிளம்புமாறும் அவர் சொன்னார்.

நன்றி தெரிவித்துவிட்டு டாக்டர் ஸ்டீஃபன் அங்கிருந்து காரை கிளம்பினார்.

ஆஸ்பத்திரி குவார்ட்டர்ஸிலிருந்து கிளம்பிய கார், கிழக்குத் திசையில் விரைந்தது.

நகர எல்லை கடந்தபோது பாதை ஆள் நடமாட்டம் அற்றிருந்தது. எப்போதாவது மட்டும் ஒன்று அல்லது இரண்டு வாகனங்கள் கடந்து சென்றன.

முன்புறக் கண்ணாடியில் மழைத்துளிகள் விழுந்தபோது தான் ஸ்டீஃபன் வலப்புறக் கண்ணாடியைத் தாழ்த்தினார். தன் வலக்கை நனைந்ததையே அவர் உணரவில்லை.

அம்மாவின் உடல்நிலை அவரை அந்த அளவுக்கு பாதித்திருந்தது. கார் ஓடிக்கொண்டிருந்தாலும் அப்போதும் அவர் மனத்தில் ஆஸ்பத்திரியில் நடந்த சம்பவங்கள்தான் இடம்பிடித்திருந்தன.

மரணங்கள் முற்றிலும் யதேச்சையானவையல்ல.

அதற்குப் பிறகு நிகழ்ந்த சின்னச் சின்னச் சம்பவங்கள் கூட சாதாரணமானவையல்ல. ஷைனியுடன் பேசிக் கொண்டிருந்தபோது, நிகழ்ந்தவை எல்லாமும் டாக்டர் ஸ்டீஃபனின் மனத்தில் மறுபடி மறுபடி வலம் வந்தன. குறிப்பாக அந்த பல்லியின் உருவம் மிகவும் தெளிவாக நினைவில் எழுந்தது.

எத்தனையோ பயங்கரக் கதைகளை வாசித்திருந்த ஸ்டீஃபன், அந்த பல்லிக்கு ஏனோ பயந்தார். பைசாசிக சக்தி உள்ளவர்களால் இப்படிப்பட்ட உயிர்களைக் கட்டுப்படுத்த முடியும் என்று அவர் கேள்விப்பட்டிருந்தார்.

பாதை ஓரிடத்தில் இரண்டாகப் பிரிந்தது. இடப் புறமாகத் திரும்பிய பாதையில் கார் போய்க் கொண் டிருந்தது. அந்தப் பாதை சற்று மோசமாக இருந்ததால் அவர் காரின் வேகத்தைக் குறைத்தார்.

சுமார் பதினைந்து கிலோ மீட்டர் தூரம் வரை மாறி மாறி இருபுறங்களிலும் பெரிய பெரிய பள்ளங்கள் இருந்தன.

எங்காவது சற்று வழுக்கினால், சுமார் இருநூறு அடி வரையில் தாழ்வான பள்ளத்துக்குள் விழவேண்டியிருக்கும். எனவே, ஸ்டீஃபன் டிரைவிங்கில் கூடுதல் கவனம் செலுத்தினார்.

அப்போது எதிர்ப்புறத்தில் லாரி ஒன்று பாய்ந்து வந்தது. அதன் ஹெட்லைட் வெளிச்சம் நேராக ஸ்டீஃபனின் முகத்தில் பதிந்தது.

ஸ்டீஃபன், தனது வண்டியின் முன்புற விளக்குகளைச் சற்று மங்கலாக்கினார். பின்பு காரை இடப்புற ஓரமாக ஒதுக்கி நிறுத்தினார். லாரி கடந்து போனது.

''அப்பாடா!'' தப்பித்துவிட்ட ஆறுதல் குரலாக அவரிடமிருந்து வெளிப்பட்டது.

டாக்டர் ராஜன் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தார். அவர் ஷைனியிடம் பேசியபோது அவள், தாங்கள் பேசிய பல்லி மற்றும் நிழலைக் குறித்துக் கூறினாள்.

ராஜன், அந்த விஷயங்களையெல்லாம் பொருட்படுத்தவில்லை. அது அவரது இயல்பு.

''டாக்டர், நாங்க பார்த்தோம்!'' ஷைனியின் குரல் உறுதியாக ஒலித்தது.

''இந்த இருபத்தோராம் நூற்றாண்டுல இதென்ன... குழந்தைத்தனமான பேச்சு, நேரம் கிடைக்கும்போது நான் இப்படிப்பட்ட மூடத்தனமான நம்பிக்கைகளுக்கான காரணகாரியங்களை விளக்குகிறேன்.''

''சார், உங்களுக்கு இன்னொரு விஷயம் தெரியுமா? நம்ம பெரிய டாக்டர் வந்து சேர்ந்த பிறகுதான் இந்த மாதிரியான சம்பவங்கள் நடக்கிறதா டாக்டர் ஸ்டீஃபன் சொல்றார்!'' எதையும் மனத்துள் ஒளித்து வைக்க முடியாத ஷைனி வெளிப்படையாகப் பேசினாள்.

அதைக் கேட்டதும் டாக்டர் ஒரு தடவை புன்னகைத் தார்.

"டாக்டர் லூயிஸ்தான் இதுக்கெல்லாம் காரணம்னு, ஸ்டீஃபன் சொல்றாரா... என்ன!" டாக்டர் ராஜன் தனது வியப்பை வெளிக்காட்டினார்.

"அது அவரோட கருத்து."

"நான் ஒரு விஷயம் சொல்லட்டுமா? மனுஷங்க பல மாதிரியானவங்க. அதனால் ஒருத்தர், இன்னொருத்தரை விட பெரிய ஆளாகும்போது பொறுத்துக்கணும்- சகிக் கணும். டாக்டர் லூயிஸ் சட்டுன்னு பெரிய நிலைக்கு உயர்ந்துட்டார். குறிப்பாகச் சொல்லணும்னா, மருத்துவத் துறையில் அதிகமான விஷயங்களைக் கற்று வெச்சிருக்கிற ஒருத்தரா அறியப்படுறவர்."

ஷைனி கேட்டுக் கொண்டிருநதாள்.

என்ன இருந்தாலும் அவளைப் பொறுத்தவரையில் டாக்டர் ஸ்டீஃபன் மிகவும் நல்ல மனிதர். அவளுக்குத் தெரிந்து அவர் எவரையும் தவறாகப் பேசியதே இல்லை.

சமீபத்தில்தான் அவர் இப்படிப் பேசத் தொடங்கியிருக் கிறார். ஸ்டீஃபன் நிச்சயமாக ஒரு நல்ல மனிதர்தான். நிறைய வாசிப்பவர். அவருக்குத் தெரியாத விஷயங்களே இல்லையென்று சொல்லலாம். இதில் எல்லாம் ஷைனிக்கு இதுவரை மாற்றுக் கருத்தே கிடையாது.

அப்போது ஸ்டீஃபன் கிழக்குப்புறமுள்ள பெரும் பள்ளம் ஒன்றின் பக்கவாட்டில் மேற்புறமாக காரைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

டாஷ் போர்டில் பளபளத்த எலெக்ட்ரானிக்ஸ் வாட்ச், மணி பதினொன்று இருபத்தைந்து என்று காட்டியது.

மழை சுத்தமாக நின்றுவிட்டிருந்தது.

எனினும், பட்டு நூலிழைகள் மாதிரி மழைத்துளிகள் அங்கொன்றும், இங்கொன்றுமாக விழுந்து கொண்டிருந்தன. ஹெட்லைட் வெளிச்சத்தில் அந்த மழைத்துளிகள் நேர் கோடுகளாகச் சாய்ந்து விழுந்தன. இருந்தாலும் ஆகாயத்தில் நிலா வெளிச்சம் தெரிந்தது. சுற்றுப்புறம் தெளிவாகத் தெரிந்தது.

திடுமென்று காரின் முன்புறக் கண்ணாடியில் எதுவோ ஒன்று விழும் சத்தம் கேட்டது.

பெரிய ஒரு பல்லி!

வெளிப்புறக் கண்ணாடியில் அது சாணி எறிந்தது போல் ஒட்டியிருந்தது.

மழை நீரைத் துடைத்து அகற்றும் வைப்பர் அந்த பல்லியின் உடம்பைத் தாண்டி நகர முடியாமல் அசைவற்றுப் போனது.

## 7

டாக்டர் ஸ்டீஃபனின் வலக்கால் ஆக்ஸிலேட்டரிலிருந்து இடம் பெயர்ந்து பிரேக்கில் பதிந்து அழுத்தியது.

ஆனால், அது பிடிமானம் இல்லாதது போல் அப்படியே கீழ்ப்புறமாக இறங்கியது. அதே நேரம் காரின் வேகம் தானாகவே அதிகரிப்பதாகவும் ஸ்டீஃபனுக்குத் தோன்றியது.

"கடவுளே!" ஸ்டீஃபன் தன்னையும் மீறி அலறினார்.

முன்னால் எதுவோ உடைபடும் சத்தம் கேட்டது. நிமிர்ந்தார் ஸ்டீஃபன், காரின் முன்புறக் கண்ணாடி மின்னல் மாதிரி விரிசல் விடுவதை கவனித்தார். யாரோ

வெட்டியெடுத்து உள்ளே வீசியெறிந்தாற்போல் கண்ணாடித் துண்:டு வந்து விழுந்தது.

அந்த இடைவெளி வழியாக பல்லி உட்புறத்துக்கு வந்தது.

கார் அப்போதும் விரைவாகச் சென்று கொண்டிருந்தது. காரின் மொத்தக் கட்டுப்பாடுகளும் கையை விட்டுப் போனாற்போலிருந்தன. டிரைவிங்கில் தேர்ந்தவரான டாக்டர் ஸ்டீஃபன் தன் கை-கால்களை மிகவும் விரை வாகச் செயல்படுத்தினார்.

எவ்வளவுதான் முயன்றபோதிலும் கியரை இறக்கி மாற்ற முடியவில்லை.

அதுதான் சிக்கல்.

கார், டாப் கியரில் இயங்கிக்கொண்டிருந்தது. மூன்றாவது கியருக்கு மாற்ற முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! என்று நினைத்தார். அது மட்டும் முடியவில்லை. கியர் வழுக்கிக் கொண்டே போகிறது.

ஒரு சமவெளியோ, சரிவான ஏற்றமோ அங்கு இருந்தால் கூட பரவாயில்லை என்று தோன்றியது. டாக்டர் ஸ்டீஃபன் பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

ஆனால், சுமார் ஐந்து கிலோ மீட்டர் தூரத்துக்குள் அப்படிப் பாதுகாப்பான பகுதி எதுவும் இல்லை என்பது, சுற்றுப்புறச் சூழ்நிலையை வைத்து அவரால் நிதானிக்க முடிந்தது.

ஒரேயொரு விஷயம் அவருக்கு ஆறுதல் அளித்தது. நல்ல வேளையாக இது வரை வாகனங்கள் எதுவும் எதிரில் வரவில்லை.

வலப்புறத்தில் பெரிய பள்ளம்.

அதன் ஆழம் இருளை மேலும் கெட்டியாக்கி விட்டிருந் தது.

மறு விநாடி.

அசாதாரணமான பருமனுள்ள அந்தப் பல்லி துள்ளிக் குதித்தது.

இப்போது அது ஸ்டீயரிங்கில் பதிந்து கிடந்தது.

டாக்டர் ஸ்டீஃபன் தன்னையும் மீறி ஸ்டீயரிங்கிலிருந்து கைகளை விலக்கினார்.

அதன் பிறகு கேட்டது பயங்கரமான ஒரு சத்தத்துடன் கார் அந்தப் பள்ளத்துக்குள் விழுந்து உருண்டதுதான்.

இரண்டு அல்லது மூன்று பீப்பாய்கள் உருண்டு போவது மாதிரியான சத்தம்.

டாக்டர் ஸ்டீஃபனின் கண்களில் இருட்டு படர்ந்தது.

சுயநினைவை இழந்தார்.

அவர் கண் விழித்தபோது ஆஸ்பத்திரியின் பெட்டில் கிடந்தார்.

அம்மா அருகில் அமர்ந்திருந்தார். உடன் சகோதரி மற்றும் உறவினர்கள்.

''நான் எப்படித் தப்பிச்சேன்?'' அவர் கேட்டார்.

''கடவுள்தான் உன்னைக் காப்பாத்தினார்!'' அம்மா சொன்னார்.

உடம்பை அசைத்துப் பார்த்தபோது வலப்புற முழங் காலுக்குக் கீழே வலிக்கிறது. வேறெங்கும் வலிப்பதாக அவருக்குத் தெரியவில்லை.

ஆனால், ஒட்டுமொத்தமாக உடலே சன்னமாக வலிப்பதாகத் தோன்றியது.

பக்கத்தில் நின்றிருந்த முன்பின் தெரியாத இளைஞன் சொன்னான். ''டாக்டரது கார் கீழே விழும் சத்தத்தை நாங்கள் கீழ்ப்புற வளைவில் வரும்போது கேட்டோம்.''

அந்த இளைஞன் ஒரு லாரி டிரைவர்.

தமிழ்நாட்டில் காலி சாக்குகளை இறக்கிவிட்டு, காய்கறி ஏற்றி வந்து கொண்டிருந்தாராம். உதவிக்கு கிளீனரும் இருந்தான்.

கார் ஒன்று பள்ளத்தில் விழுந்துவிட்டது என்பதை அறிந்ததும், லாரியை ரோட்டின் ஓரமாக ஒதுக்கி நிறுத்தி விட்டு லாரியின் கேபினுக்கு மேல் போட்டிருந்த கயிற்றை மரம் ஒன்றில் கட்டிவிட்டு இருவரும் பள்ளத்தில் இறங் கினார்கள்.

அவர்களின் கையில் ஐந்து செல் டார்ச்லைட் இருந்தது.

அவர்கள் கீழே வந்தபோது கார் குப்புறக் கிடந்தது. சக்கரங்கள் நான்கும் மேல்நோக்கி இருந்தன.

குவிந்து கிடந்த இலைச் சருகுகளின் மீது மனிதர் ஒருவர் அலங்கோலமாகக் கிடந்தார்.

தேடிப் பார்த்தபோது அக்கம்பக்கத்தில் வேறு எவரும் இருப்பதாகத் தெரியவில்லை.

அவரை உடனடியாக மேற்புறம் கொண்டு வந்தனர்.

ஒருவர் மட்டும்தான் விபத்தில் சிக்கியவர் என்பது தெரிந்ததும் உடனடியாக அவரை ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து சேர்த்தனர்.

இலைச்சருகுகள் மீது விழுந்ததால் பெரிய அளவுக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லை. காலில் மட்டும் அடிபட் டிருந்தது.

தகவல்களை எல்லாம் கேட்டபோது கடவுள்தான் தன்னைக் காப்பாற்றியதாக ஸ்டீபனுக்குத் தோன்றியது.

காரில் பல்லியைப் பார்த்ததையும், அது, ஸ்டீயரிங்கில் வந்து விழுந்ததையும் ஸ்டீஃபன் எவரிடமும் சொல்ல வில்லை.

தன்னைப் போன்ற ஒருவர் அப்படிச் சொன்னால், மற்றவர்கள் தன்னைக் கேலி செய்வார்கள் என்பது டாக்டருக்குத் தெரியும். மட்டுமின்றி, அதற்காக டாக்டர் ஹூயிஸைக் குறித்தும் பேச வேண்டியிருக்கும். அதை, ஒரு போதும் யாரும் நம்பமாட்டார்கள்!

எல்லாவற்றுக்கும் மேலாக இதையெல்லாம் வெளிப் படுத்தினால் குழப்பங்கள் அதிகமாகும். எனவே, தனக்கு நேர்ந்த விபத்துக்குக் காரணம் காரின் பிரேக் பழுது அடைந்ததுதான் என்று கூறினார்.

டாக்டர் ஸ்டீஃபனுக்கு நேர்ந்த விபத்து குறித்து சிட்டி ஆஸ்பிடலில் உள்ளவர்களுக்கும் தெரியவந்தது. அவர் உயிர்தப்பித்ததில் எல்லோரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்தத் தகவலைக் கேட்டதும் முதலில் பயப்பட்டவள் நர்ஸ் ஷைனிதான். அதனால், அவளையும் மீறி அவள் மனத்துள் பீதியின் நிழல் படர்ந்தது.

டாக்டர் ஸ்டீஃபனுக்கு நேர்ந்த விபத்து எதிர்பாராத ஒன்று அல்ல என்று அவள் மனம் திரும்பத் திரும்ப வலியுறுத்தியது. அந்த வாரம் முழுவதும் நைட் டியூட்டி பார்க்க வேண்டியது டாக்டர் ஸ்டீஃபனும், ஷைனியும் தான். இப்போது ஸ்டீஃபனுக்கு பதிலாக டாக்டர் ராஜன் வந்து கொண்டிருந்தார்.

இந்தப் பரபரப்புக்குப் பிறகு இரண்டு நாள் கழித்துதான் ஷைனி, டாக்டர் ராஜனுடன் உட்கார்ந்து பேசுவதற்கு நேரம் கிடைத்தது.

"என்ன... ஷைனி, என்னமோ மாதிரி இருக்குறீங்க? டாக்டர் ஸ்டீஃபனுக்கு ஆக்ஸிடெண்ட் ஆனதிலேருந்து அப்செட் ஆயிட்டீங்களா என்ன?'' ராஜன் கேட்டார்.

டாக்டர் ஸ்டீஃபனுக்கும் ஷைனிக்கும் இடையே சற்று நெருக்கம் இருப்பது ஓரளவு ராஜனுக்குத் தெரியும்.

ஆனால், டாக்டர் ஸ்டீஃபனுக்கு ஆஸ்பத்திரியில் இருந்த மரியாதையின் காரணமாக யாரும் அதை வெளிப்படையாகப் பேசுவதில்லை. அவர்கள் காதலர்கள் என்றும் சிலர் நினைத்தனர். ஸ்டீஃபன், ஷைனியைத் திருமணம் செய்யக் கூடும் என்றும் ஒரு சாரார் நினைத்தனர்.

ஆனால், அந்த ஆஸ்பத்திரியைப் பொறுத்தவரை, இப்படிப்பட்ட நெருக்கங்களுக்கு யாரும் உரிய மதிப்பு அளிப்பதில்லை.

எது எப்படியிருந்தாலும் ஷைனிக்கு அது ஒரு 'ஷாக்' ஆகவே இருந்தது.

''அன்னிக்கு டாக்டர் கிட்ட நான் ஒரு விஷயம் சொன்னேன்... ஞாபகம் இருக்கா உங்களுக்கு?'' ஷைனி கேட்டாள்.

''ஆமாம்... ஞாபகம் இருக்கு. நம்ம மெடிக்கல் ஆபீஸரோட விஷயம்தானே? நான் அதை அவ்வளவா பொருட்படுத்தலை.'' ராஜன் சொன்னார்.

''இருக்கலாம். ஆனா, நான் சொன்னதுல உண்மை இருக்கு.'' ஷைனி கூறினாள்.

''எந்த விஷயத்துல?''

''அவரோட கார் பள்ளத்துல விழுந்ததுல, ஏதோ ஒரு பயங்கரம் ஒளிஞ்சிருக்கு!'' அவள் அதைச் சொல்லும்போது அவள் முகத்தில் பீதி நிறைந்திருந்தது.

டாக்டர் ராஜனுக்கு உண்மையில் அது ஒரு வேடிக்கையாக இருந்தது. அவர் சிரித்துக் கொண்டார்.

''இந்த நூற்றாண்டுலேயும் இந்த அளவுக்கு மூட நம்பிக்கைகளா?'' டாக்டர் ராஜன் கேட்டார்.

''சார், விஞ்ஞானத்தைப் பத்தியெல்லாம் எனக்குத் தெரியாது. அதுல எல்லாம் நீங்கதான் கெட்டிக்காரங்க.''

''சரி... இதய மாற்று அறுவைசிகிச்சை நடக்குறது இல்லையா? அதே மாதிரிதான் மற்ற உறுப்புகளும்...'' டாக்டர் சொன்னார்.

''அப்படின்னா, ஒருத்தரோட பர்சனாலிட்டியை, மற்றொருத்தருக்கு மாற்ற முடியுமா? உயிரை அப்படி மாற்ற முடியுமா? இதெல்லாமே நமக்குத் தெரியாத விஷயங்கள் இல்லையா?'' ஷைனி கேட்டாள்.

நர்ஸ் ஷைனி எம்.எஸ்ஸி. படித்தவள் என்பது தெரியுமாதலால், அவளது பேச்சைக் கேட்டு டாக்டர் ராஜன் சிரிக்கவில்லை. அதை அலட்சியமாக ஒதுக்கவுமில்லை.

''இது மூலமா ஷைனி என்ன சொல்ல வர்றீங்க?'' டாக்டர் ராஜன் கேட்டார்.

''ரொம்ப சிம்பிள் சார். என்னோட சந்தேகம் என்னன்னா, இந்தச் சம்பவங்கள் எல்லாத்துக்கும் பின்னால டாக்டர் லூயிஸ் இருக்கார்ங்கிறதுதான்.'' ஷைனி இதைச் சொல்லி முடித்ததும், மேற்புறமாக அதுவரை அசைவற்றிருந்த ஃபேன் ஒரு தடவை சன்னமாக அசைந்தது.

அதன் இறக்கை ஒன்றில் எதுவோ ஒன்று 'சொத்'தென்று விழுந்த சத்தம் கேட்டது. அதைக் கவனித்த ஷைனி திடுக்கிட்டாள்.

டாக்டர் ராஜனும் அதைக் கவனித்தார்.

''என்ன ஷைனி... எதுக்காகத் திடுக்கிட்டீங்க?'' ராஜன் கேட்டார்.

''ஒ... ஒண்ணுமில்லை!'' அவள் அப்படிச் சொன்னாலும் அவள் உடலின் மயிர்க்கால்கள் ஒவ்வொன்றும் குத்திட்டு நின்றன.

அவள் உடம்பு ஒரு தடவை அதிர்ந்தாற்போல் தோன்றியது.

"இதெல்லாம் மனத்தின் தாளங்கள்தான். தேவை இல்லாததையெல்லாம் யோசித்தால் இப்படியெல்லாம் தோன்றும்." டாக்டர் அவளுக்கு ஆறுதல் கூறினார்.

பிறகு வாட்சைப் பார்த்துவிட்டு, அவர் நேராக வார்டை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

மணி எட்டு ஆகியிருந்தது.

ஒரு ரவுண்ட்ஸ் போய்விட்டு வந்தால் அதன் பிறகு டாக்டர் ராஜன் அங்கிருந்து கிளம்பி விடுவார் என்று ஷைனிக்குத் தெரியும்.

மிகச் சமீபகாலத்தில் திருமணம் செய்து கொண்டவர் டாக்டர் ராஜன். அவரின் மனைவியோ அழகும், ஆரோக் கியமும் நிறைந்தவள். அப்படிப்பட்ட ஒரு பெண்மணியை திருமணம் முடிந்த ஆரம்ப நாட்களிலேயே தனியாகப் படுக்கவிடுவதை பாவம் என்று நினைப்பவர் டாக்டர் ராஜன்.

எனவே, வார்டை ஒரு தடவை சுற்றிப் பார்த்துவிட்டு வந்தால் அதன் பிறகு அவர் அங்கு நிற்பதில்லை. மனைவியை வீணாகக் காக்க வைப்பது அவருக்குப் பிடிப்ப தில்லை.

கடிகாரத்தில் நொடி முள் சுற்றி வருவதையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் ஷைனி.

மணி எட்டு முப்பது.

டாக்டர் உடனேயே திரும்பி வந்தார்.

"ஏதாவது அவசியம் ஏற்பட்டால் உடனே போன்ல கூப்பிடுங்க. நான் உடனே வந்துடுறேன். குறிப்பிட்டுச் சொல்ற மாதிரி எந்த நோயாளிக்கும் ஆபத்தான நிலைமை எதுவும் இல்லை" என்ற டாக்டர், தனது மேல் கோட்டை அருகிலிருந்த ஸ்க்ரீனில் போட்டுவிட்டு அங்கிருந்து வெளியேறினார்.

வாசலில் வாட்ச்மேன் வாசு நின்றுகொண்டிருந்தார்.

"வாசு, நீங்க ஷைனி பக்கத்துலயே இருங்க. அவங்க இப்ப அளவுக்கு அதிகமா பயப்படுறாங்க." டாக்டர் ராஜன் கூறினார்.

உடனே வாசு, கேட்டைப் பூட்டிவிட்டு உட்புறத்தை நோக்கி நடந்தார்.

குறைந்தபட்சம் பேச்சுத்துணைக்காவது ஒருத்தர் இருக்கிறாரே. வாசலில் தன்னந்தனியாக உட்கார்ந்திருப்பது என்பது அவரைப் பொறுத்தவரை மிகவும் சிரமமான காரியமாக இருந்தது.

"நீங்க பயப்படுறதா டாக்டர் சொன்னார்..." வாசு பேச்சைத் தொடங்கினார்.

"அப்படியெல்லாம் சொல்ல முடியாது. அப்புறம் தனியா உட்கார்ந்திருந்தா அலுப்பா இருக்குமே!"

"அப்படித்தான் இருக்கணும்... நீங்கள்லாம் பயப்பட லாமா என்ன?" வாசு பீடி ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார்.

"பீடி பத்தவைக்கும் போது ரொம்பவும் ஜாக்கிரதையா இருக்கணும். சில நேரம் பெரிய டாக்டர் ரவுண்ட்ஸ் வருவார்." ஷைனி கூறினார்.

"ராத்திரியிலயெல்லாம் வர மாட்டார்."

மணி பத்து.

"நீங்க வேணும்னா கொஞ்ச நேரம் படுத்துக்கங்க. நான் பட்டாளத்துல கண் விழிச்சுப் பழக்கமிருக்கு." வாசு சொன்னார்.

ஷைனி, கட்டிலில் தலையணையைச் சாய்த்து வைத்துச் சற்று நேரம் ஓய்வெடுத்தாள்.

அன்றைய ஒரு நாளை எப்படியோ தள்ளிக் கடத்தினார்கள். விடிந்தால் அவளுக்கு வாராந்திர விடுமுறை நாள். அதன் பிறகு ஷைனிக்கு பகல் டியூட்டி, அதுதான் அந்த ஆஸ்பத்திரியின் நடைமுறை.

மறுநாள் ஷைனி ஷாப்பிங்குக்குப் போனாள். திரும்பி வந்தபோது,

அன்று அவள் தனது வீட்டில் தனியாக இருந்தாள்.

பக்கத்து அறையில் வசிக்கும் இருவரில் ஒருத்தி ஊருக்குப் போயிருந்தாள். மற்றொருத்தியான ஜூலிக்கு அன்று நைட் டியூட்டி, இது போன்ற சந்தர்ப்பங்கள் இதற்கு முன்பும் நிகழ்ந்துள்ளன.

சுவர்க்கடிகாரம் பத்து முறை அடித்து ஓய்ந்தது.

வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தில், குறிப்பிட்ட பக்கத்தின் மூலையை மடக்கி, ஜன்னல் கட்டையில் வைத்தாள்.

வெளியே நல்ல நிலா வெளிச்சம் இருந்தது.

"டப்!"

ஏதோ ஒரு சத்தம் கேட்டு அவள் திரும்பிப் பார்த்தாள்.

ஜன்னல் கண்ணாடியில்... கண்ணாடியின் மறுபுறத்தில்...

பல்லி... அசாதாரணமான அளவிலான பல்லி.

'டிக்...டிக்...டிக்!' கடிகாரத்தின் சத்தம், இரவின் அமைதியைக் கிழித்தது. சட்டென்று கடிகாரத்தின் ஸ்பிரிங் ஒன்று அவிழ்ந்தது மாதிரியான சத்தம்.

அவள் கடிகாரத்தைப் பார்த்தாள்.

நிமிட முள் இடப்புறமாகச் சுழலத்தொடங்கியிருந்தது.

'டிக்...டிக்...டிக்!'

தனது சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக அவள் மீண்டும் ஒரு தடவை கடிகாரத்தைப் பார்த்தாள்.

முள் வழக்கத்துக்கு மாறாகத் திரும்பிச் சுற்றுகிறது.

'டிக்...டிக்...டிக்!'

அவளையும் மீறி ஒருவிதமான பீதி அவளைச் சூழ்ந்து கொண்டது.

# 8

எதிர்பாராமல் பீதிக்கு அடிமையாகிவிட்டிருந்த ஷைனி தன் கண்களை நிதானமாக அங்கிருந்து மீட்டு எடுத்தாள்.

அவளின் பார்வை ஜன்னல் சட்டங்களின் மீது பதிந்தது.

அப்போது அவள் பார்த்தது, அந்த பல்லி, தனது முன்னங் கால்களை உயர்த்தி கண்ணாடியில் தட்டுவதைத்தான்.

''ஐயோ... கர்த்தரே...என்ன இது!'' அவள் தான் உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்திருக்க முயன்றாள்.

ஆனால், அவளால் முடியவில்லை.

அவளின் புட்டப்பகுதி பசை போட்டு ஒட்டியது போலாகிவிட்டிருந்தது.

அதற்குக் காரணம் தன்னைக் கீழ்ப் படுத்தியிருக்கும் பயத்தின் அலைகள்தான் என்பதை அவள் எப்படிப் புரிந்து கொள்ள முடியும். அதைப் பற்றியெல்லாம் அப்போது யோசிக்கும் மன நிலையில்கூட இல்லை அவள்.

அப்போது, 'கிர்...கிர்...கிர்....கி...ர்!' என்றொரு சத்தம் கேட்டது.

ஜன்னல் கதவின் கண்ணாடி ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலையை நோக்கி விரிசல் விட்டது.

கண்மூடித் திறப்பதற்குள் அந்தக் கண்ணாடி, அங்கிருந்து பெயர்ந்து கீழே விழுந்தது. பயம் தளம் தட்டிய கண் களுடன் அவள் பார்த்துக் கொண்டிருந்தபோது அதோ... அந்த பல்லி கண்ணாடியின் இடைவெளி வழியாக அறைக்குள் நுழைய முயன்று கொண்டிருந்தது.

திடுமென்று எங்கிருந்தோ கிடைத்த தைரியத்தைக் கையில் சேகரித்துக் கொண்டு அவள் ஜன்னலின் மரச் சட்டத்தில் இருந்த ஒரு காலி பாட்டிலை எடுத்தாள். அதை விசையுடன் அந்த பல்லியின் மீது வீசி எறிந்தாள்.

அப்போது -

அந்த அறைக்குள் விளக்கு எதிர்பாராமல் அணைந்தது.

ஷைனி, பயந்து நடுங்கினாள்.

மறுபடியும் விளக்கு எரியத் தொடங்கியபோது, பல்லி இருந்த இடத்தில் அதைக் காணவில்லை.

''என்ன ஷைனி, தனியா உட்கார்ந்து என்னமோ வெல்லாம் செய்யுற போலிருக்கே!''

அவள் திரும்பிப் பார்த்தாள்.

டாக்டர் லூயிஸ் நின்றுகொண்டிருந்தார்.

மூடிக் கிடந்த கதவைத் திறந்து கொண்டு அவர் எப்படி அங்கு வந்து சேர்ந்தார் என்பது அவளுக்கு விளங்கவில்லை. அவர் அங்கிருந்தவாறே அவளை ஊன்றிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஏன் உன் முகம் என்னமோ போல இருக்கு. சரி, எதுக்காக பாட்டிலை எடுத்து ஜன்னல்ல எறிஞ்சே?'' டாக்டர் கேட்டார்.

''நான்... நான்...'' அவளால் மேற்கொண்டு பேச முடிய வில்லை.

"நான் கார் ஓட்டிக்கொண்டு போகும்போது, காரின் கண்ணாடியில் எதுவோ வந்து விழுந்தது, கண்ணாடி உடைந்தது!"

'என்ன! நான் எறிந்தது காரில் போய் விழுந்ததா! ஷைனியால் நம்ப முடியவில்லை.

ஆனால், சற்று நேரத்துக்கு முன்னால் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை நினைத்துப் பார்த்தாள்.

மிகவும் விசையுடன்தான் அவள் காலிபாட்டிலை எறிந்தாள். அது ஒருவேளை குவார்ட்டர்ஸின் முன் பகுதியைக் கடந்து ரோட்டை அடைய வாய்ப்பு உள்ளது.

அதனால்தான் டாக்டர் அறைக்குள் வந்திருக்க வேண்டும். ஆமாம்...

அவர் எப்படி உள்ளே வந்தார்.

அவளுக்குச் சந்தேகம் தோன்றியது.

கதவை மூடி உட்புறமாகத் தாழ்ப்பாள் போட்டிருக்கிறோம். அதையும் தாண்டி அவரால் எப்படி உள்ளே வர முடிந்தது?

மொத்தத்தில் அவள் குழம்பினாள்.

டாக்டர் லூயிஸ் அவளை நெருங்கினார். அவரின் கண்கள், அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன.

அந்தக் கண்களுக்கு என்னவொரு சக்தி?

அவள் அணிந்திருந்த நைட்டியின் நூலிழைகளை ஊடுருவிக் கொண்டு, அந்தப் பார்வை அவளின் அவயவங்களைத் தொடுவதாக அவளுக்குத் தோன்றியது.

அவள் உடல் குன்றியவளாக அப்படியே இரண்டு கால்களையும் இணைத்து வைத்து நடுங்கினாள்.

அறைக்குள் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

டாக்டர் தனது ஷர்ட்டு பட்டன்களை அவிழ்த்துவிட்டு, ஹேங்கரை நோக்கி ஷர்ட்டை எறிந்தார். அது போய் சரியாகப் பொருந்திக் கொண்டது.

அப்போது அவள் ஒரு காட்சியைக் கண்டாள்.

விளக்கு பொருத்தப்பட்டிருக்கும் அவரின் எதிர்ப் புறத்தில் அது தென்பட்டது.

இடுப்பின் கீழ்ப்பகுதி மட்டுமே உள்ள ஒரு மனிதனின் நிழல்! பேண்ட் அணிந்துள்ள நிழல். அதன் மேற்பகுதியில் நிழல் கிடையாது.

ஒருவேளை அது தனது பிரமையாக இருக்குமோ என்று நினைத்தவள், மறுபடியும் அந்த நிழலைப் பார்க்க முயன்றாள்.

அதற்குள் லூயிஸ் அவளை நெருங்கி விட்டிருந்தார்.

"என்ன ஷைனி, ஒண்ணும் தெரி[illegible] சின்னப் பொண்ணு மாதிரி முகத்துல ஒரு உணர்ச்சி. இதெல்லாம் சாதாரணம்தானே?" அவர், அவளின் தோளைப் பிடித்து உயர்த்தினார்.

[illegible] டியும்?

[illegible]ளவு பெரிய மருத்துவமனையின் உயர் அதிகாரி. ஏறத்தாழ முதலாளி தன்னைப் பிடித்திருக்கிறார். தனக்கும் டாக்டர் ஸ்டீஃபனுக்கும் இடையே காதல் இருப்பதையும் அவர் தெரிந்து கொண்டிருக்கலாம்.

மெடிக்கல் ஆபீஸர் டாக்டர் லூயிஸ்....

அவள், அப்படியே அசைவற்று நின்று போனாள்.

டாக்டர் லூயிஸின் கைகள் மிகவும் நிதானமாகவே செயல்பட்டன. அவரிடம் எந்தவிதமான பரபரப்பும் தென்படவில்லை.

அவரின் கை விரல்கள், அவளின் தோளிலிருந்து கீழ்ப்புறமாக ஊர்ந்தன.

கழுத்தில்...

மாரில்...

அங்கிருந்து கீழே...

தொப்பூழ்க் கொடியில்...

''ம்...ம்...'' அவள் உடல் சிலிர்த்தது.

டாக்டர் லூயிஸின் இடக்கை, அவளது நைட்டியின் பட்டன்களை அவிழ்ந்தது.

மறு விநாடி -

அது முற்றிலுமாகப் பிடிமானமின்றிக் கீழே விழுந்தது.

அவர், அவளைக் கட்டிலை நோக்கி அழைத்துச் சென்றார்.

அவரது நெருக்கம் அப்போது அவளுக்குள் ஒரு போதை போல் பரவியது.

புதுமையான ஒரு போதை.

அந்த போதை, வீரியம் அதிகமான ஒரு மதுவைப் போல் அவளின் ரத்தக் குழாய்களுக்குள் விர்ரென்று பரவியது.

அவள் தன்னை மறந்தாள்.

வேறேதோ உலகம் ஒன்றில் மிதந்து பறப்பதாகத் தோன்றியது.

நிமிடங்கள் சில கடந்தன.

கடிகாரத்தில், 'டிக்...டிக்...டிக்...' சத்தம் மட்டுமே இரவின் அமைதியைத் துளைத்துக் கொண்டிருந்தது.

கடிகாரம் ஒன்பது முறை ஒலித்தது.

என்ன... மணி ஒன்பதா!

ஒரு மணி நேரம் பின்னோக்கி நகர்ந்திருக்கிறதா?

என்ன ஆகிவிட்டிருக்கிறது

அறைக்குள் அப்போதும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அவள் கடிகாரத்தைத் திரும்பவும் பார்த்தாள்.

மணி ஒன்பதுதான்.

விநாடி முள் அப்போதும் பின்னோக்கி விரைந்து கொண்டிருந்தது.

அப்போதும் அவர் கைகள் அவளைத் தழுவிக் கொண்டிருந்தன.

அவளுக்கு அங்கிருந்து எழுந்திருக்க வேண்டும் போல் தோன்றியது.

தாகம்...

நாக்கு வறண்டது!

ஆனால், மலைப்பாம்பு ஒன்று உடலைச் சுற்றி வளைத்திருப்பது போல் லூயிஸ் அவளை இறுக்கிப் பிடித்திருந்தார்.

அவள் தனது மொத்தச் சக்திகளையும் ஒன்றுதிரட்டிக் கட்டிலிலிருந்து எழுந்திருக்க முயன்றாள்.

ஆனால், முடியவில்லை.

அவர் கைகள் அவளை வலுவாக அழுத்திப் பிடித்திருந்தன.

ஷைனி ஆரோக்கியமான உடல் கொண்டவள்தான்.

உறுதியான தசைப்பிடிப்பான உடல்வாகு. கல்லூரியில் படிக்கும்போது ஸ்போர்ட்ஸ்களில் கெட்டிக்காரியும்கூட.

டாக்டர் ஸ்டீஃபனுடன் அவள் இரண்டு அல்லது மூன்று முறை உறவு கொண்டிருக்கிறாள். திடகாத்திரசாலியான ஸ்டீஃபன்கூட இவ்வளவு வலுவானவர் அல்ல.

ஆனால், தோற்றத்தில் ஸ்டீஃபனது அளவுக்கு வலுவற்ற வராக காட்சியளிக்கும் டாக்டர் லூயிஸ், மிகவும் அமானுஷ்யமான வல்லமையுடன் விளங்குவதாகத் தோன்றியது.

உடலின் மொத்தத் தசைப்பகுதிகளும் இறுகி, முறுக்கேறுவது போலவும், எலும்புகள் மொத்தமும் நொறுங்குவதாகவும் அவள் உணர்ந்தாள்.

'இந்த மனிதர் என்னைக் கொன்றுவிடுவார்!' என்று அவள் தீர்மானித்தாள்.

"என்னை விடுங்க... ஒரே தாகமா இருக்கு!" அவள் சொன்னாள்.

"எனக்கும்தான்!" அவர், அவளின் காதில் மந்திரித்தார்.

தனது மொத்த பலத்தையும் ஒன்றுதிரட்டி அவள் ஒருவாறு அவரைத் தள்ளி விட்டாள்.

அந்த நேரத்தில் அவள், அவர் முகத்தை கவனித்தாள்.

"ஐயோ... பிசாசு!" ஷைனி அலறினாள்.

டாக்டர் லூயிஸின் முகம் அப்போது வர்ணிக்க முடியாத ஒன்றாக விளங்கியது.

கூர்மையான, நீண்ட பற்கள்.

உதடுகளின் இரு கடைக்கோடிகளிலும் நீண்டு வளைந்த கூர்மையான பற்கள்.

கூர்மையடைந்த மூக்கு...

இருபுறமும் காய்ந்து மேல் நோக்கி நிற்கும் கண்கள்...

சிவப்பு நிறக் கண்கள்!

தலையில்... ஆயிரம் குண்டூசிகள் நிமிர்ந்து நிற்பது மாதிரியான தலைமுடி.

அவற்றுக்கு நடுவே தலையின் இருபுறமும் எழும்பி நிற்கும் இரண்டு கொம்புகள்.

அதன்பிறகு ஷைனி சுயநினைவை இழந்தாள்.

அவளது அலறல் ஜன்னலைத் தாண்டி வெளியே கேட்டிருக்க வேண்டும்.

மூன்றாவதாக இருந்த குவார்ட்டர்ஸில் வசித்த அட்டெண்டர் ராமன்குட்டியும், அவர் மனைவியும் உறங்கியிருக்கவில்லை.

டியூட்டியை முடித்துவிட்டு வந்த ராமன்குட்டி, குளித்துச் சாப்பிட்டுவிட்டுக் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தார். அவர் மனைவி நந்தினி சாப்பாட்டை முடித்துவிட்டுப் பத்துப் பாத்திரம் தேய்த்துவிட்டுக் கட்டிலில் வந்து உட்கார்ந்தாள்.

அப்போதுதான் அலறல் கேட்டது.

அலறல் கேட்ட மறுவிநாடியிலேயே அதையொட்டியுள்ள குவார்ட்டர்ஸின் கதவு திறக்கும் சத்தம் அவர்களுக்குக் கேட்டது.

''என்னன்னு சொன்னது அந்த அலறல்? பிசாசுன்னா? எங்கே அது?'' காது மிகவும் கூர்மையான நந்தினி கேட்டாள்.

''அதுக்கு அடுத்த குவார்ட்டர்ஸில இருந்துதான். இன்னிக்கு ஷைனிக்கு பகல் டியூட்டினு தோணுது. கனவு ஏதாவது கண்டிருக்கும்!'' ராமன்குட்டி, மனைவியைத் தன் பக்கமாக நெருக்கி இழுத்தபடி கூறினார்.

''கொஞ்சம் எழுந்திருங்க... என்னமோ நடந்திருக்குன்னு தோணுது. நானும் வர்றேன்...'' நந்தினி எழுந்தாள்.

''சரி...'' வேண்டாவெறுப்புடன் ராமன்குட்டி ஒப்புக் கொண்டார்.

அவர்கள் குவார்ட்டர்ஸிலிருந்து வெளியேறும்போது, பக்கத்து குவார்ட்டர்ஸில் வசிக்கும் தாமஸும் எழுந்தார்.

தாமஸ் லேபரெட்டரி அசிஸ்டெண்ட்.

அவர் தனியாகத்தான் தங்கியிருக்கிறார். மனைவி கோபித்துக் கொண்டு தாய் வீட்டுக்குப் போயிருந்தாள்.

மூவருமாக ஷைனியின் குவார்ட்டர்ஸை அடைந்தனர்.

கதவைத் தட்டினர்.

''ஷைனி... ஷைனி!'' அவர்கள் ஒரே குரலில் அழைத்தனர்.

ஆனால், உள்ளிருந்து யாரும் பதில் குரல் கொடுக்கவில்லை.

''அதோ... அந்தப் பக்கம் ஜன்னல் திறந்து கிடக்கு... அங்க போய் நின்று கூப்பிடுங்க.'' நந்தினி கூறினாள்.

உடனே ராமன்குட்டி அந்தப் பக்கமாகப் போனார்.

ஜன்னல் வழியாக உள்ளே பார்த்தார்.

ஒரு தடவை பார்ப்பதற்குள் சட்டென்று தலையைத் திருப்பிக் கொண்டார்.

ஷைனி, நிர்வாணமாகக் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தாள்.

உடனே, ராமன்குட்டி கிளம்பிய இடத்துக்கே ஓடி வந்தார்.

அவர் கதவை விசையுடன் தள்ளிப்பார்த்தார். ம்ஹூம்... கதவு திறக்கவில்லை.

''உள்ளே என்னமோ விபரீதமா நடந்திருக்கு... நான் போய் இன்னும் ஆளுங்களைக் கூட்டிட்டு வர்றேன்.'' ராமன் குட்டி சொன்னார்.

சற்று நேரத்துக்குள் அக்கம் பக்கத்தில் உள்ள வீட்டார் அங்கு வந்து குழுமினர். ஆனால், கதவு உட்புறமாகத் தாழிடப்பட்டிருந்ததால் என்ன செய்வது என்று தெரியாமல் அவர்கள் தயங்கினர்.

ஒரு கட்டத்தில் ஷைனி இறந்துவிட்டாள் என்பது அவர்களுக்கு விளங்கியது.

'அவள் எப்படி இறந்திருக்க முடியும்?'

''ஒரு காரியம் செய்யலாம். நாம் உடனடியாக பெரிய டாக்டரிடம் தகவல் சொல்வோம்... அவர் வரட்டும். அதுதான் நல்லது.''

எல்லோரும் அதற்கு ஒப்புக் கொண்டனர்.

ராமன்குட்டி போன் செய்வதற்காக ஓடினார்.

அப்போது கார் ஒன்று அங்கு வந்து நின்றது.

''பெரிய டாக்டர்... பெரிய டாக்டர்!'' எல்லோரும் அவருக்கு வழிவிட்டு ஒதுங்கினர்.

# 9

**டா**க்டர் லூயிஸ், ஷைனியின் குவார்ட்டர்ஸுக்குள் நுழைந்தபோது மற்றவர்கள் அவருக்கு வழிவிட்டு ஒதுங்கினர்.

எல்லோரின் கண்களிலும் எதிர்பார்ப்பு நிறைந்திருந்தது.

அவர் என்ன செய்யப் போகிறாரோ?

நிர்வாணமான உடலுடன், கால்வழியாக ரத்தம் வடிந்து கிடக்கும் ஷைனியின் உடலைப் பார்க்கும்போது டாக்டரது நடவடிக்கைகள் எப்படி இருக்குமோ?

யாரையாவது சந்தேகிப்பாரா?

திருமணமாகாத நிறையப் பெண்கள் அந்த ஆஸ்பத்திரியில் வேலை செய்கிறார்கள். மனைவி, ஊரில் இல்லாத ஊழியர்களும் இருந்தனர். அப்படிப்பட்டவர்களில் தாமஸும் ஒருவர். அதனால் தாமஸ் பயந்தார்.

டாக்டர் லூயிஸ், ஷைனியினது உடலைப் பரிசோதித்தார்.

''முதல்ல பார்த்தது யார்?'' டாக்டர் அவர்களிடம் கேட்டார்.

ராமன்குட்டியும், தாமஸும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''நாங்க ரெண்டு பேரும்தான்!'' தாமஸ் சொன்னார்.

''இது அசாதாரணமான ஒரு மரணம். அதனால நாம முறைப்படி இதை போலீஸில சொல்றதுதான் சரி. அவங்க நடவடிக்கை எடுக்கட்டும்.'' டாக்டர் லூயிஸ் அவர்களின் முகங்களை மாறி மாறிப் பார்த்தார்.

அப்போதே அவர்களின் முகங்களில் பயத்தின் நிழல் அலையடிக்கத் தொடங்கியது.

டாக்டர் லூயிஸ் தொடர்ந்தார்: ''அப்படித் தெரிவித்தால், போலீஸார் வருவார்கள். இது ஒரு கொலை என்று முடிவானால், அக்கம் பக்கத்திலுள்ள உங்களுக்கெல்லாம் அது ஒரு தொல்லைதான்!'' டாக்டர், ஷைனியின் உடலுக்கு அருகில் போய் நின்றுகொண்டு சொன்னார்.

''அதனால் என்ன பண்ணலாம்னு நீங்களே சொல்லுங்க!''

டாக்டரின் வார்த்தையைக் கேட்டதும் ராமன்குட்டியின் மனைவி, கண்ணைச் சிமிட்டி தன் கணவரை அழைத்துக் கொண்டு வெளியே போனாள்.

அவளைத் தொடர்ந்து சென்ற ராமன்குட்டி கேட்டார். ''என்ன?''

''தேவையில்லாத ஏடாகூடத்துக்கெல்லாம் போகாதீங்க. நான் சொல்றபடி கேளுங்க. டாக்டரோட விருப்பப்படியே செய்யட்டும். விட்டுடுங்க!'' அவள் சொன்னாள்.

"சரிதான்... நானும் அதைப்பத்தித்தான் யோசிச்சேன்!" ராமன்குட்டி தன் மனைவியின் யோசனைக்கு ஒப்புக் கொண்டார்.

"அப்படின்னா டாக்டர் கிட்டச் சொல்லுங்க, அவரோட இஷ்டப்படி செஞ்சுக்கலாம்னு. அக்கம் பக்கத்துல இருக்கிற வங்களுக்குத் தொல்லை இல்லாம இருந்தால் போதும்."

ராமன்குட்டி, டாக்டர் லூயிஸை நெருங்கினார்.

"என்ன... ராமன்குட்டி?" டாக்டர் கேட்டார்.

"எங்களுக்குத் தொல்லை வராம நீங்க உங்க இஷ்டப்படி செஞ்சுக்கங்க." அவர் கூறினார்.

"அப்படின்னா ஒண்ணு பண்ணலாம். இப்படியொரு மரணம் நடந்ததா வெளியில தெரிஞ்சா, ஆஸ்பத்திரிக்கும் கெட்ட பேர் ஏற்படும். அதனால, இதை இயற்கையான ஒரு மரணமா மாத்திடுவோம்!" டாக்டர் சொன்னார்.

எல்லோரும் அதை ஏற்றுக் கொண்டனர்.

இப்படியாக ஷைனியின் உடல் அந்த ஆஸ்பத்திரியின் மார்ச்சுவரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மறுநாள் அவளது வீட்டாரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் வந்து சேர்ந்தனர்.

டாக்டர் லூயிஸ், ஷைனியின் அப்பாவிடம் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தார். மட்டுமின்றி, ஷைனியின் தங்கை எமிலிக்கு நர்ஸ் வேலை கொடுப்பதாகவும் தெரிவித்தார்.

இப்படியொரு சூழ்நிலையில் டாக்டர் இவ்வளவெல் லாம் செய்ததும் ஷைனியின் குடும்பத்தினர் ஓரளவுக்கு ஆறுதல் அடைந்தனர். எனவே, அவர்கள் மேற்கொண்டு எதையும் கேட்கவில்லை.

ஒரு வார காலத்துக்குப் பிறகு ஷைனியின் தங்கை எமிலி அங்கு வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டாள்.

பி.எஸ்ஸி. படித்த எமிலிக்கு நர்ஸிங் பயிற்சி அளிக்கத் தொடங்கினர்.

இரண்டு வார காலத்துக்குப் பிறகு டாக்டர் ஸ்டீஃபன் திரும்பிவந்தார்.

அதுவரை அங்கு நடந்த சம்பவங்கள் எதுவும் அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. வந்த பிறகே எல்லாவற்றையும் கேள்விப்பட்டார்.

ஷைனியின் மரணம் அவரை, மிகுந்த துயரத்துக்கு உள்ளாக்கியது.

அவர் வேலைக்கு வந்த முதல் நாளே நைட்டியூட்டி செய்ய நேர்ந்தது.

சுமார் எட்டு மணிக்கு அவர் ஆஸ்பத்திரிக்கு வந்தபோது, ஷைனி மாதிரியே தென்பட்ட இளம்பெண்ணைப் பார்த்த அவர் வியப்பு அடைந்தார்.

அவள் எமிலி!

ஷைனியின் அதே முகம். எனவே, இயல்பாகவே அவளிடம் ஓர் ஆர்வம் ஏற்பட்டது அவருக்கு.

அவளிடம் பேச்சுக் கொடுத்து விவரங்களைக் கேட்டுக் கொண்டார்.

ஷைனியின் மரணம், விளக்கமுடியாத வகையில் அவள் மரணம் அடைந்ததும் ஸ்டீஃபனின், சந்தேகத்தை அதிகரிக்கச் செய்தது.

ஷைனியின் மரணத்துக்குக் காரணம், டாக்டர் லூயிஸ்தான் என்பது அவருக்குச் சந்தேகமின்றி விளங்கியது. எனினும், இந்த ரகசியத்தை இப்போது வெளியிடாமல் இருப்பதுதான் நல்லதென்று தோன்றியது.

காரணம், டாக்டர் லூயிஸிடம் அற்புதமான ஏதோ ஒரு சக்தி இருக்கிறது என்பதில் ஸ்டீஃபனுக்கு அசைக்க முடியாத

நம்பிக்கை இருந்தது. அதிலும் அவருக்கு மற்றொரு வகையான குழப்பம் இருந்தது. அந்தச் சக்தியை அவர் சுயமாகப் பயன்படுத்துகிறாரா அல்லது மற்றவர்கள் மூலமாகச் செயல்படுத்துகிறாரா என்று தெளிவாகத் தெரியவில்லை.

இந்தச் சூழ்நிலையில் மிகவும் எச்சரிக்கையாக, கெட்டிக் காரத்தனமாக இந்த விஷயத்தைக் கையாள வேண்டும் என்று ஸ்டீஃபன் தீர்மானித்தார். எனவே, வேறு எவரிடமும் அவர் இது குறித்துப் பேசவில்லை.

அன்றைய டியூட்டி முடிந்ததும் ஸ்டீஃபன் கிளம்பினார்.

மறுநாள் அவர் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போது மிகவும் தாமதமாகியிருந்தது. காலையில் பத்து மணிக்கு தான் கண்விழித்தார்.

வேலைக்காரர் உடனே டீ போட்டுக் கொடுத்தார்.

டீயைக் குடித்தவாறே அதுவரை நடந்த சம்பவங்களை யெல்லாம் அசை போட்டபடி படுத்திருந்தார் ஸ்டீஃபன்.

அப்போதுதான் தனக்கு நன்கு பழக்கமான கிறிஸ்தவப் பாதிரியார் ஒருவரின் ஞாபகம் வந்தது.

ஃபாதர் இம்மானுவேல்.

கடந்த இரண்டு வருட காலமாக அவரை டாக்டர் ஸ்டீஃபனுக்குப் பழக்கம். சில காலம் ஏதோ ஒரு வெளி நாட்டில் தங்கியிருந்த ஃபாதர் இம்மானுவேல், ஓரளவுக்கு மாந்திரீக வித்தைகள் கற்று வைத்திருப்பவர் என்பதும் டாக்டர் ஸ்டீஃபனுக்குத் தெரியும்.

மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு டாக்டர் சற்று நேரம் கட்டிலில் படுத்துக் கண்ணை மூடினார். மாலை நேரத்தில் ஃபாதர் இம்மானுவேலைச் சந்திப்பது என்று முடிவு செய்தார். மதியம் தாண்டுவது வரை ஃபாதரை பிடிப்பது என்பது மிகவும் சிரமம்.

மதியத் தூக்கம் என்பது ஃபாதரின் கட்டாயமான விஷயம். அப்போது அவரை எழுப்புவது அவருக்குத் தொல்லையாக இருக்கும்.

எனவே, ஐந்து மணியான போது, குளித்து, காபி குடித்துவிட்டு, காரை ஸ்டார்ட் செய்து கிளம்பினார்.

டாக்டர் ஸ்டீஃபனுக்கு அன்று விடுமுறைநாள். அதனால் ஃபாதர் இம்மானுவேலை சந்தித்துவிட்டுப் பரபரப்புடன் திரும்ப வேண்டிய அவசியமில்லை.

அங்கிருந்து சுமார் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவி லிருந்தது இம்மானுவேலின் சர்ச்.

அது நடுத்தரமான ஒரு சர்ச்.

டாக்டர் ஸ்டீஃபன் சர்ச்சுக்குள் நுழைந்தபோது, ஃபாதர் யாரோ ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தார்.

டாக்டரைப் பார்த்ததும், ஃபாதர் சிரித்தவாறே வரவேற்றார். "டாக்டர், உங்களுக்கு நூறு வயசு. நாங்கள் இப்போதுதான் உங்களைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்தோம்."

"அப்படியா!" டாக்டர் கேட்டார்.

"வாங்க. இவர்தான் நாம பேசிட்டிருந்த டாக்டர் ஸ்டீஃபன். டாக்டர், இவர் மிஸ்டர் ஆபிரகாம். பக்கத்துல தான் வசிக்கிறார். சொந்தமா ரப்பர் தோட்டம் இருக்கு."

இருவரும் பரஸ்பரம் அறிமுகமாகினர்.

"சரி ஃபாதர், நீங்கள் டாக்டருடன் பேசிக்கொண் டிருங்கள். எனக்கு முக்கியமான ஒரு வேலையிருக்கிறது. கிளம்புகிறேன்."

"ஆகட்டும்... அப்புறம் பார்ப்போம்." ஃபாதர் ஆபிர காமுக்கு விடை கொடுத்தார்.

டாக்டர் ஸ்டீஃபனுக்கு அதுவும் நல்லதற்கே என்று தோன்றியது. 'தான் வந்திருப்பது ரகசியமான சில விஷயங்களைக் குறித்துப் பேசுவதற்குத்தான். எனவே, மூன்றாவது மனிதர் ஒருவர் இல்லாமல் இருப்பது நல்லதற்குத்தான்.' டாக்டர் ஆறுதல் அடைந்தார்.

''என்ன டாக்டர் சௌக்கியமா? பார்த்து ரொம்ப நாளாச்சு! இந்தப் பக்கம் உங்களைப் பார்க்கவே முடியலையே?'' ஃபாதர் குசலம் விசாரிக்கத் தொடங்கினார்.

''எப்பவும் வேலை தலைக்குமேல கிடக்குது ஃபாதர். அந்தப் பக்கம், இந்தப் பக்கம் திரும்புறதுக்குக்கூட நேரமில்லை. அப்புறம் என்னதான் பரபரப்புன்னாலும் அத்தியாவசியம்னா வராமலும் இருக்க முடியாதே!''

ஃபாதர், சமையற்காரனை உட்புறமாகத் திரும்பி அழைத்தார்.

''ஃபாதர், டீயெல்லாம் அப்புறமா சாப்பிடலாம். நான் இன்னிக்கு உடனடியாக கிளம்பப் போறதில்லை.''

இது ஃபாதருக்கு மகிழ்ச்சியளித்தது.

சமையற்காரர் வந்ததும், டாக்டருக்கும் அங்கேயே சாப்பாடு தயாராகட்டும் என்றார் ஃபாதர்.

''சரி... விசேஷமான தகவல் என்ன?'' டாக்டரை நோக்கித் திரும்பினார் ஃபாதர்.

''கொஞ்சம் சீரியஸான விஷயம் பற்றிப் பேசணும் ஃபாதர்.''

''எதுவா இருந்தாலும் சொல்லுங்க. நான் இப்ப ஃப்ரீதான்!''

ஆஸ்பத்திரியில் நடந்த எல்லாச் சம்பவங்களையும் டாக்டர் ஸ்டீஃபன் விவரித்தார். ஆனால், அந்தப் பேச்சுகள் எதிலும் மறந்தும்கூட அவர் டாக்டர் லூயிஸின் பெயரைக் குறிப்பிடவே இல்லை.

ஃபாதர் எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அவரின் நெற்றியில் அவ்வப்போது சுளிவுகள் தோன்றி ஏறி, இறங்கிக் கொண்டிருந்தன.

"டாக்டர் இதையெல்லாம் நானும் ஓரளவுக்குக் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால், இவ்வளவு விவரமாக யாரும் சொல்லவில்லை. டாக்டர், இந்தச் செய்திகளுக் கெல்லாம் ஏதாவது அடிப்படை இருப்பதாக உங்களுக்குத் தட்டுப்படுகிறதா?"

டாக்டர் ஸ்டீஃபன் யோசனையில் ஆழ்ந்தார். ஃபாத ரிடம் என்னத்தைச் சொல்வது? சொன்னால் அவர் நம்புவாரா?

"சூப்பர் நேச்சுரல் சக்தி உள்ள மனுஷங்க இருக்காங் களா ஃபாதர்?" டாக்டர் கேட்டார்.

ஃபாதர் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

"இல்லேன்னு சொல்ல முடியாது. தெய்வீகமான சக்தி வாய்ந்தவங்க எவ்வளவோ பேர் இருக்காங்க. அவங்களை யெல்லாம் நாம புனிதமானவங்கன்னு சொல்றதில்லையா?" ஃபாதர் கேட்டார்.

"அதே மாதிரி பைசாசிகமான சக்தி உள்ளவங்களும் இருப்பாங்க இல்லையா?" டாக்டரின் கேள்வி, ஃபாதர் எதிர்பார்க்காத ஒன்றாக இருந்தது.

"டாக்டர் இப்போ சொன்ன தகவல் புது விஷயம். இதுக்கு ஒரு விளக்கம் தேவைப்படுது. அப்படி யார் மேலயாவது உங்களுக்குச் சந்தேகம் இருக்கா?"

"இருக்கு. டாக்டர் லூயிஸ் மேல. அவர், அங்க வந்து சேர்ந்த பிறகுதான் நான் சொன்ன சிக்கல்கள் எல்லாம் ஆரம்பமாச்சு."

"அப்படியா சொல்றீங்க?"

"ஆமாம்."

"டாக்டர் லூயிஸ் அமெரிக்காவுல எங்கே தங்கியிருந் தார்? எங்கே படிச்சார்? அதைப் பத்தி எனக்கு விவரமான தகவல்கள் தேவை" ஃபாதர் கேட்டுக்கொண்டார்.

"அதையெல்லாம் நான் எடுத்து வந்திருக்கிறேன்" என்ற டாக்டர் ஸ்டீஃபன் காரின் பின்ஸீட்டில் வைத்திருந்த பிரீஃப்கேஸை எடுத்துவந்தார். பிறகு அதைத் திறந்து, அதிலிருந்து ஃபைல் ஒன்றை எடுத்து, ஃபாதரின் கையில் கொடுத்தார் டாக்டர்.

ஃபாதர் இம்மானுவேல் அதைத் திறந்து பார்க்காமல் அப்படியே மேஜை மீது வைத்தார்.

"முதல்ல இதையெல்லாம் நான் ஒரு தடவை முழுசா வாசிக்கிறேன். என் நண்பர்கள் கொஞ்சம் பேர் அமெரிக் காவுல இருக்காங்க. தேவைப்பட்டா நான் அவங்களோட தொடர்பு கொண்டு பேசுறேன்!" ஃபாதர் கூறினார்.

வெளியே பொழுது இருட்டத் தொடங்கியது.

"இன்னொரு விஷயம் ஃபாதர்... அன்னிக்கு கார் ஆக்ஸிடெண்ட் நடந்தபோது நான் மறைச்சு வெச்சிருந்த ஒரு விஷயம் இருக்கு..." என்ற ஸ்டீஃபன், பல்லியின் விஷயத்தைக் குறிப்பிட்டார்.

"ஓகோ... அப்படியொரு சம்பவம் நடந்திருக்கிறதா" ஃபாதரின் முகத்தில் வியப்பு தென்பட்டது.

"உண்மைதான் ஃபாதர்."

"சரி..."

கடிகாரத்தில் மணி எட்டு அடித்தது.

சமையற்காரர் சாப்பாடு தயார் என்று தெரிவித்து விட்டுப் போனார்.

இருவரும் சாப்பிட்டனர்.

டாக்டர் ஸ்டீஃபன் அங்கிருந்து கிளம்ப முற்பட்டபோது ஃபாதர் இம்மானுவேல், "கொஞ்சம் இருங்க!" என்று சொல்லிவிட்டு அறையொன்றுக்குள் நுழைந்தார்.

"இந்தாங்க... இந்த ஜெபமாலையை காரோட டேஷ் போர்டுல பாதுகாப்பா வையுங்க. அந்த பல்லியோட சம்ப வத்தைக் குறிப்பிட்டபோதுதான் எனக்கு இப்படியொரு யோசனை தோணுச்சு." ஃபாதர் கூறினார்.

டாக்டர் ஸ்டீஃபன் அந்த ஜெபமாலையை டேஷ் போர்டின் மீது வைத்தார்.

காரை ஸ்டார்ட் செய்தார்.

ஏறத்தாழ இரண்டு கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்திருப்பார். அப்போது காற்று கடுமையாக வீசத் தொடங்கியது. காரின் பிரேக்கைச் சட்டென்று அழுத் தினார். வண்டி நின்றது. ஜெபமாலை சட்டென்று கீழே விழுந்தது. டாக்டர் ஸ்டீஃபன் காரை நிறுத்தினார். டேஷ் போர்டைத் திறந்து அதற்குள் ஜெபமாலையை எடுத்து வைத்தார்.

ரோட்டில் தூசிப்படலம் எழுந்தது.

காரின் ஹெட்லைட் வெளிச்சம் முன்புறமாக நீண்டு, தூசிப் படலத்தில் மோதி நின்றது.

அந்தத் தூசிப்படலம் ஒரு தூண் மாதிரி மேற்புறமாக உயர்ந்தது சுழன்றது. அதற்குள் டாக்டர் ஸ்டீஃபன் காட்சி ஒன்றைக் கண்டார்.

# 10

ஒரு மனித நிழல் போல் அது தோன்றியது.

ஊன்றிப் பார்த்தபோது அது ஒரு நிழல் அல்ல, மனிதன் போல் தோற்றமளிக்கும் கரும்புகைதான் என்று விளங்கியது.

அடிக்கடி அந்த உருவம் மாறி, மாறி மீண்டும் அந்த உருவத்துக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தது.

கார் முன்னோக்கிச் செல்லுந்தோறும் அந்த உருவமும் முன்னால் விரைந்து கொண்டிருந்தது. எனவே, காரை அவரால் விரைவாகச் செலுத்த முடியவில்லை.

அத்துடன் சன்னமான பயம் அவரைச் சூழ்ந்து கொண்டது. அன்றைய கார் விபத்துதான் அதற்குக் காரணம்.

அந்தச் சூழ்நிலையில் காரை ஓட்டிச் செல்வது சரியல்லவென்று அவருக்குத் தோன்றியது. எனவே, ரோட்டின் இடப்புற ஓரத்தில் காரை நிறுத்தினார்.

தைரியத்துடன்தான் ஸ்டீஃபன் காரை நிறுத்தினார். இந்தத் தடவை வீட்டிலிருந்து கிளம்பும்போது, சகோதரி கணவர் ஸ்டீஃபனிடம் ரிவால்வர் ஒன்றை வழங்கியிருந்தார். துப்பாக்கிக்கு முன்னால் பிசாசுகள்கூட நெருங்காது என்று மாமா உறுதியளிக்கவும் செய்தார்.

அதன் துணையுடன்தான் ஸ்டீபன், ஃபாதர் இம்மானுவேலைச் சந்திக்கப் புறப்பட்டார். திரும்பி வரும்போது நன்றாக இருட்டிவிடும் என்றும் அவருக்குத் தெரியும்.

வலப்புற டோரின் உட்புறமுள்ள பாக்கெட்டில்தான் கைத்துப்பாக்கியை வைத்திருந்தார். எந்த விநாடியிலும் எடுப்பதற்கு வசதியாகத்தான் அது அங்கு வைக்கப்பட்டிருந்தது.

காரை நிறுத்தியதும் இன்ஜினை ஆஃப் செய்தார். ஹெட் லைட்டை அணைத்துவிட்டு, பார்க்லைட்டை மட்டும் போட்டார்.

அப்போது எதிர்த்திசையிலிருந்து லாரி ஒன்று சீறிப் பாய்ந்து வந்தது.

லாரியின் சக்தி வாய்ந்த ஹெட்லைட் வெளிச்சத்தில் அந்தப் புகைப்படலத்தை ஸ்டீஃபன் கவனித்தார். லாரி கடந்து சென்ற பிறகு, அந்தப் புகைப்படலம் போய் மறையவும் செய்தது.

'பயப்படத் தேவையில்லை...' என்று தனக்குத்தானே ஆறுதல் கூறிக்கொண்ட ஸ்டீஃபன், கைத்துப்பாக்கி அதற்குரிய இடத்தில் இருக்கிறதா என்று பார்த்துவிட்டு, காரை ஸ்டார்ட் செய்தார்.

பட்டு நூலிழைகள் ஆகாயத்திலிருந்து தொங்குவது போல் மழைத்துளிகள் விழத்தொடங்கின. அதைப் பார்த்தபோது டாக்டர் ஸ்டீஃபனுக்குள் சந்தேகம் எட்டிப் பார்த்தது.

ஏறத்தாழ இதே போன்ற ஒரு சூழ்நிலையில்தான் அன்று விபத்து நிகழ்ந்தது. எனினும், ரோட்டில் எவ்வளவு நேரம் தான் காத்திருப்பது என்ற யோசனைக்குப் பிறகு அவர் காரைச் செலுத்தத் தொடங்கினார்.

மணி பத்து.

டேஷ் போர்டிலிருந்த எலெக்ட்ரானிக்ஸ் கடிகாரம் நேரம் காட்டியது.

கார் முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தது.

திடுமென்று 'பொத்தென்று' சத்தத்துடன் எதுவோ ஒன்று காரின் முன்புறக் கண்ணாடியில் வந்து விழுந்தது.

அதேதான்...

அதே பல்லி!

அது கண்ணாடியில் ஒட்டிப் பிடித்திருக்கிறது.

டாக்டர் ஸ்டீஃபன் திடுக்கிட்டார். அந்த விநாடியிலேயே அவரது சப்தநாடிகளும் ஒடுங்கிவிட்டன.

அன்றைக்கு காரின் கண்ணாடியை உடைத்துக் கொண்டு தான் பல்லி, காருக்குள் நுழைந்தது. ஒருவேளை இன்றும் அப்படித்தான் ஏதாவது நடக்கப் போகிறதா?

இந்தத் தடவை அப்படியொரு பரிசோதனைக்கு ஆளாகக் கூடாது என்று தீர்மானித்தவராக ஸ்டீஃபன் காரை நிறுத்தினார். டேஷ்போர்டைத் திறந்தார்.

இடக்கையால் சிலுவை அடையாளம் பதிக்கப்பட்ட ஜெபமாலையை எடுத்து ஸீட்டில் வைத்தார்.

மீண்டும் காரை ஸ்டார்ட் செய்தார்.

கார் நகர்ந்தபோதும், பல்லி அதே இடத்திலேயே இருப்பதை அவர் கவனித்தார். மட்டுமின்றி, அது மெதுவாகத் தன் வலப்புற முன்னங்காலைப் பயன்படுத்திக் கண்ணாடியைத் தட்டத் தொடங்கியது.

அதன் பிறகு ஸ்டீஃபன் விநாடி நேரத்தைக்கூட வீணாக்கவில்லை.

இடக்கையால் ஜெபமாலையை எடுத்து, பல்லி உட்கார்ந்திருப்பதற்கு நேர்கீழாக டேஷ்போர்டின் மேற்புறம் வைத்தார்.

மறுவிநாடி-

பல்லி சட்டென்று பின்வாங்கி, அந்தரத்தில் முன்னோக்கிப் பாய்ந்து செல்வதை கவனித்தார்.

அந்த விநாடியில் ஃபாதர் இம்மானுவேலுக்கு அவர் மனதார நன்றி தெரிவித்தார். அவர் மட்டும் இந்த

மாலையைத் தந்திருக்காவிட்டால், ஸ்டீஃபன் இன்றும் கா... விபத்தில் சிக்கியிருப்பார். அதில் சந்தேகமே இல்லை.

இரவில் தனது குடியிருப்புக்கு வந்த பிறகும் அவர் மன... அந்த விஷயத்துக்குள்ளேயே உழன்று கொண்டிருந்தது. அன்று நைட் டியூட்டி இல்லாவிட்டாலும், டாக்டர் ஸ்டீஃபன் ஆஸ்பத்திரிக்குச் செல்வது என்று தீர்மானித்தார்.

எமிலிக்கு அன்று டியூட்டி இருப்பது அவருக்குத் தெரியும். ஷைனியின் மரணம் ஏற்கெனவே ஸ்டீஃபனை மனதளவில் அதிகமாகச் சோர்வடைய வைத்திருந்தது. அந்தப் பிரிவு வேதனைக்கு எமிலியால் ஓரளவுக்கு ஆறுதல் கிடைத்தது.

ஷைனியின் மரணத்துக்குக் காரணமானவனை பழிக்குப் பழி வாங்குவது என்று ஸ்டீஃபன் தீர்மானித்திருந்தார்.

வாட்ச்மேன் வாசு, கேட்டின் அருகிலேயே நின்றிருந்தார்.

டாக்டர் ஸ்டீஃபனைப் பார்த்ததும் அவர் எழுந்து நின்று சல்யூட் அடித்தார்.

''பெரிய டாக்டர் வந்திருக்கிறார் சார்!'' வாசு சொன்னார்.

''அப்படியா... இன்னிக்கு என்ன வழக்கத்துக்கு விரோதமா வந்திருக்கார் டாக்டர்?'' டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

''அவருக்கு இன்ன நேரத்துலதான் வரணும்; போகணும்னெல்லாம் இருக்கா சார்?'' வேறு எவராவது தன்னைக் கவனிக்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ரகசியக் குரலில் பேசினார் வாசு.

''டாக்டர் போன பிறகு வாசு என்னை வந்து பாருங்க!'' சொல்லிவிட்டு டாக்டர் ஸ்டீஃபன் உள்ளே போனார்.

டியூட்டி ரூமுக்குச் சென்றபோது, எமிலி நாற்காலியில் உட்கார்ந்து மேஜை மீது தலைசாய்த்துப் படுத்திருந்தாள்.

''எமிலி...'' ஸ்டீஃபன் அழைத்தார்.

''ஆர்.எம்.ஓ. வந்திருக்கிறார். தகவல் தெரியாதா?'' ஸ்டீஃபன் கேட்டார்.

''தெரியாது சார். கட—வுளே... அவர் என்னைப் பார்த்திருப்பாரோ?'' அவள் பயத்துடன் கேட்டார்.

''பயப்படாதீங்க... அவர் கவனிக்கலை. பார்த்திருந்தா இந்நேரம் உங்களைக் கூப்பிட்டிருப்பார்.''

''அதுவும் சரிதான் சார்!'' அவள் சுற்றுமுற்றும் பார்வையை ஓடவிட்டாள்.

சற்று நேரத்துக்குள் டாக்டர் லூயிஸ் அந்த வழியாக வந்தவர், டியூட்டி ரூமில் நுழைந்தார்.

''ஹலோ, டாக்டர் ஸ்டீஃபன் எங்க போயிருந்தீங்க?'' டாக்டர் லூயிஸ் கேட்டார்.

''இங்கதான் இருந்தேன். இன்னிக்கு எனக்கு ஆஃப்தானே சார்.''

''அப்புறம் எதுக்கு வந்தீங்க?'' இதைக் கேட்கும்போது லூயிஸின் கண்கள் எமிலியைக் கவனித்துக்கொண்டிருந்தன.

அந்தப் பார்வை அவ்வளவு நல்லதாக இல்லையென்று எமிலிக்குத் தோன்றியது.

''நான் சும்மா பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். உக்காருங்க!'' லூயிஸ், ஸ்டீஃபனிடம் சொன்னார்.

அவர்கள் இருவரும் உட்கார்ந்தபோது, எமிலி அங்கிருந்து கிளம்பினாள். இரவு நேரமானாலும் வார்டுகளில் லைட் எரிந்து கொண்டிருந்தது. எனவே, விழித்துக் கிடந்த ஒரு நோயாளியின் அருகில் போய் அமர்ந்தாள் எமிலி.

டாக்டர் லூயிஸ் தனது பாக்கெட்டிலிருந்து சிகரெட்டை எடுத்து நீட்டினார்.

அவர் சிகரெட்டை எடுத்து நீட்டியதால், அதிலிருந்து சிகரெட்டை எடுக்காவிட்டால் அது மரியாதைக் குறைவு என்று தோன்றியதால் ஸ்டீஃபன் அதிலிருந்து சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார்.

லூயிஸும் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டார்.

அப்போது முற்றிலும் ஆச்சரியத்துக்கு உரிய ஒரு காட்சியை டாக்டர் ஸ்டீஃபன் கவனித்தார். டாக்டர் லூயிஸ் உட்கார்ந்திருப்பதற்குப் பின்புறம் தெரிந்த அவரது நிழல்.

அந்த நிழல் பிரத்தியேகமான வடிவில் இருந்தது.

அவர் அணிந்திருந்த உடைகளின் நிழல் மட்டுமே அங்கு தெரிந்தது. அவர் உடலின் பகுதி எதுவும் அந்த நிழலில் தென்படவில்லை.

அதை கவனித்த ஸ்டீஃபனின் திகைப்பு அதிகரித்தது.

'தனக்கு முன்பாக அமர்ந்திருக்கும் டாக்டர் லூயிஸ், உண்மையிலேயே ஒரு மனிதன்தானா? கடவுளே... என்ன இது!' ஸ்டீஃபனின் நிலை விளக்க முடியாததாக இருந்தது.

டியூட்டி ரூமில் அப்போது அவர்கள் இருவர் மட்டுமே இருந்தனர். 'இப்போதுகூட அவர் விரும்பினால் தனக்கு ஆபத்தை ஏற்படுத்த முடியும்.' டாக்டர் ஸ்டீஃபன் அப்படியொரு சூழ்நிலை ஏற்பட்டால் என்ன செய்வது என்று புரியாமல் குழம்பினார். நல்லவேளையாக அந்த நேரம் பார்த்து வாட்ச்மேன் வாசு அங்கு வந்து சேர்ந்தார்.

"சார், அவசரச் சிகிச்சைப் பிரிவில் நோயாளி ஒருத்தரைக் கொண்டு வந்திருக்கிறார்கள்!" வாசு சொன்னார்.

''ஆக்ஸிடெண்ட் கேஸ் ஏதாவதா?'' டாக்டர் லூயிஸ் கேட்டார்.

''இல்லை சார்... வேற ஏதோ கேஸ்!'' வாசு பதிலளித்தார்.

''அப்படின்னா, நான் போய்ப் பார்த்துட்டு வர்றேன்!'' டாக்டர் லூயிஸ் எழுந்தார்.

அப்போதும் ஆச்சரியகரமான அந்த நிழலை டாக்டர் ஸ்டீஃபன் கவனித்தார்.

'கடவுளே... நான் காண்பது என்ன!' ஸ்டீஃபன் தன் நெஞ்சில் சிலுவை போட்டுப் பிரார்த்தித்தார்.

டாக்டர் லூயிஸ் வெளியேறினார்.

ஸ்டீஃபனும் அவரைப் பின்தொடர்ந்தார்.

அவசரச் சிகிச்சைப் பிரிவுக்கு நோயாளி ஒருவரைக் கொண்டு வந்திருக்கும்போது, தான் டியூட்டியில் இல்லையென்றாலும் அங்கு போகாமல் இருப்பது சரியல்ல என்று நினைத்தார் ஸ்டீஃபன்.

அவசரச் சிகிச்சைப் பிரிவில் கொண்டு வரப்பட்டிருந்த நோயாளி, ஒரு இளம்பெண். மனநிலை சரியில்லாத அவள் என்னவெல்லாமோ பேசிக் கத்திக் கொண்டிருந்தாள்.

டாக்டர் லூயிஸைப் பார்த்ததும் சுற்றிலுமிருந்தவர்கள் மரியாதைக்கு அடையாளமாக எழுந்து நின்றனர்.

அந்தப் பெண்ணுக்கு சுமார் பதினெட்டு வயதிருக்கும். அழகாக இருந்தாள். சிவந்தநிறம் உள்ள இரட்டை நாடி உடம்பு.

தலைமுடி அவிழ்ந்து கலைந்து கிடந்தது.

''என்ன நடந்துச்சு?'' டாக்டர் லூயிஸ் கேட்டார்.

''கொஞ்ச நேரத்துக்கு முன்னால இவள், தம்பியோட சேர்ந்து வீட்டுக்கு வெளியே வந்தாள். முற்றத்துல எதையோ பார்த்து, பயந்துட்டாள்.'' அவளின் அப்பா பதிலளித்தார்.

''பெண்ணோட பேரு?'' - டாக்டர்.

''ராணி.''

''ராணி, உனக்கு என்ன ஆச்சு?'' டாக்டர் லூயிஸ் கேட்டார்.

''நான் ராணியில்லை... அம்மிணிக்குட்டி!'' அந்தப் பெண் பதிலளித்தாள்.

''யார் அந்த அம்மிணிக்குட்டி?'' டாக்டர் விசாரித்தார்.

''அது... அது...'' ராணியின் அப்பா சுற்றுமுற்றும் பார்த்தவாறு தயங்கினார்.

''என்ன? அம்மிணிக்குட்டி ரொம்பவும் ரகசியமான நபரா என்ன?'' -டாக்டர் லூயிஸ்.

''அதெல்லாமில்லை சார்!'' அவர் மறுபடியும் சுற்று முற்றும் பார்த்தார்.

''சரி... மத்தவங்கள்லாம் கொஞ்ச நேரம் வெளியில் இருங்க.'' டாக்டர் உத்தரவிட்டார்.

நோயாளியுடன் வந்த மற்றவர்கள் உடனே அங்கிருந்து நகர்ந்தனர்.

இப்போது அறைக்குள் டாக்டர் லூயிஸும், டாக்டர் ஸ்டீஃபனும், நோயாளியும், நோயாளியின் அப்பாவும் மட்டுமே இருந்தனர்.

''இப்பச் சொல்லுங்க!'' டாக்டர் லூயிஸ் கேட்டார்.

''ஒரு வாரத்துக்கு முன்னால, இவளோட பாட்டி வீட்டுக்குப் பக்கத்து வீட்டுல ஒருத்தி இறந்துட்டாள்.''

''எந்த இடம் அது?''

''குன்னம் குளத்துல!'' நோயாளிப் பெண்தான் அதற்கு பதிலளித்தவள்.

"உன்கிட்ட கேட்கலை..." என்ற லூயிஸ், அவள் அப்பாவின் பக்கமாகத் திரும்பினார். "அப்புறம்?"

"அந்த வீட்டுல இறந்துபோனவதான் அம்மிணிக்குட்டி."

"ஓகோ... அந்த மாதிரியான கேஸா?" என்ற லூயிஸ், அந்தப் பெண்ணின் வலக்கையைப் பிடித்தார். பிறகு அவளின் சுட்டுவிரலுக்கும் நகத்துக்கும் இடையிலுள்ள தசைப்பகுதியை அழுத்தினார்.

"ஐயோ... என்னை விடு. நான் போயிடுறேன். இனிமே வரவே மாட்டேன்!" அந்தப் பெண் அலறினாள்.

"அதுக்கு என்ன உத்தரவாதம்?" டாக்டர் கேட்டார்.

"நீங்க சொல்றபடியே செய்யுறேன்."

"நம்பலாமா?"

"நம்பு!"

டாக்டர் லூயிஸ், அவளைப் பிடித்திருந்த பிடியை விட்டார். பிறகு அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

அப்போதும் அவருக்குப் பின்னால் மேற்புறமாக எரிந்து கொண்டிருந்த விளக்கின் வெளிச்சம் அவரது நிழலைப் பின் பக்கமாகப் படரவிட்டது. டாக்டர் லூயிஸின் உடைகளின் நிழல் மட்டும்தான் அப்போதும் அங்கு விழுந்தது.

ஸ்டீஃபன் விளக்கின் மேற்புறத்தைப் பார்த்தார்.

அங்கு சிறிய பல்லி ஒன்று, விளக்கின் ஒளியை நாடிவரும் சிறிய பூச்சிகளைப் பிடித்துத் தின்ன முயற்சி செய்து கொண்டிருந்தது.

டாக்டர் லூயிஸ் அந்தப் பல்லியையே சற்று நேரம் பார்த்தார். அது கீழ்ப்புறமாக இறங்கி வந்தபோது அவர் தன் கையை அதற்கு நேராக நீட்டினார்.

டாக்டர் ஸ்டீபன், அப்போது நிகழ்ந்த சம்பவத்தைப் பார்த்து அப்படியே மலைத்துப் போனார்!

# 11

டாக்டர் லூயிஸ் அந்தப் பல்லியை நோக்கிக் கையை நீட்டியபோது, அது ஆச்சரியம் ஏற்படுத்தும் வகையில், அவரின் கையில் தாவி விழுந்து ஊரத் தொடங்கியது.

அவரின் சொல்லுக்குக் கட்டுப்படுவது போல் அது நடந்து கொண்டது.

அதைப் பார்த்ததும் டாக்டர் ஸ்டீஃபனுக்கு ஒரு விஷயம் தெளிவாக விளங்கியது. அதாவது டாக்டர் லூயிஸுக்கு இப்படிப்பட்ட உயிர்களுக்குக் கட்டளையிட முடியும், அவற்றை அவரால் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

இல்லாவிட்டால் இப்படி நிகழாது.

அந்தப் பல்லி தானாக வந்து அவர் கையில் விழவில்லை. அவரது அழைப்பை ஒட்டியே வந்திருக்கிறது!

சற்றுத் தூரம் ஊர்ந்த பல்லி, பிறகு அப்படியே அசை வற்று நின்றுவிட்டது.

டாக்டர் லூயிஸ் அந்தப் பல்லியுடன் உட்புறம் போனார்.

யாருக்கும் எதுவும் விளங்கவில்லை.

சற்றுநேரத்துக்குப் பிறகு அவர் திரும்பி வந்தார்.

அப்போதும் அவரின் வலக்கையில் அந்தப் பல்லி இருந்தது.

டாக்டர் ஸ்டீஃபன் ஊன்றி கவனித்தபோது, பல்லி அசைவற்றிருப்பதை உணர்ந்தார்.

டாக்டர் லூயிஸ் அந்தப் பல்லியை ராணி என்ற நோயாளியின் மார் மீது போட்டார். அப்போது அது ஒரு பிளாஸ்டிக் பல்லி போல் அவள் உடலில் படிந்து கிடந்தது.

லூயிஸ், ராணியின் நாடி பார்ப்பது போல் சற்று நேரம் அவளின் கையைப் பிடித்திருந்தார். பிறகு சொன்னார்; "அம்மிணிக்குட்டிக்கு நான் ஒரு பரிசு கொண்டு வந்திருக்கிறேன்."

அவர் சொன்னது அங்கிருந்த எவருக்கும் விளங்கவில்லை.

டாக்டர் லூயிஸ் என்னமோ வேடிக்கை காட்டுகிறார் என்ற எண்ணத்தில்தான் மற்றவர்கள் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

டாக்டர் லூயிஸின் வலக்கை, ராணியின் கையை அழுத்தத் தொடங்கியது.

"நான் போயிடுறேன்... நான் போயிடுறேன்!" ராணி அலறத் தொடங்கினாள்.

"நான் சொன்னது அம்மிணிக்குட்டிக்கு விளங்கிடுச்சா?" லூயிஸ் கேட்டார்.

"நல்லா விளங்கிடுச்சு!" ராணியின் குரல் உரத்து ஒலித்தது.

"சரி..."

அப்போது ராணியின் மார்பில் கிடந்த பல்லி அசையத் தொடங்கியது.

அது மெதுவாக ஊர்ந்து அவளின் கழுத்து மற்றும் தாடையைக் கடந்து, உதடுகளை அடைந்தது.

மறுபடியும் அந்தப் பல்லியைக் கையில் எடுத்த லூயிஸ் உட்புறம் போனார்.

சற்று நேரத்தில் ராணி மெதுவாகக் கண்ணைத் திறந்தாள்.

"தண்ணி... தண்ணி!" அவள் கேட்டாள்.

வாட்ச்மேன் வாசு அவளுக்குத் தண்ணீர் எடுத்து வந்து கொடுத்தார்.

அவள் வயிறு முட்டத் தண்ணீர் குடித்தாள். உடனேயே அவள் உடல் குப்பென்று வியர்த்தது.

லூயிஸ் திரும்பிவந்தார்.

"ஒண்ணுமில்லை... நீங்க, உங்க பொண்ணைக் கூட்டிட்டுப் போங்க. பாவம் பல்லியைப் பார்த்து பயந்திருக்கிறாள்!" அவர், அவர்களிடம் சொன்னார்.

ராணியின் அப்பா, டாக்டரிடம் பணத்தை எடுத்து நீட்டினார்.

"வேண்டாம்... இது ஒரு சாதாரணமான சிகிச்சைதான். ஃபீஸ் வேண்டாம்!" லூயிஸ் மறுத்தார்.

அவர்கள் திருப்தி அடைந்தனர். பெரிய டாக்டர் இந்த அளவுக்குப் பெருந்தன்மையாக நடந்து கொள்வார் என்று அவர்கள் எவருமே எதிர்பார்க்கவில்லை.

ஒரு நோயாளியாக ஆஸ்பத்திரிக்கு வந்த ராணி, மிகவும் குறைந்த நேரத்தில் நோய் நீங்கி வீடு திரும்பினாள்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு டாக்டர் லூயிஸின் புகழ் அதிகரித்தது. அவருக்கு அலோபதி மருத்துவத்துடன் மாந்திரீகமும் தெரியும் என்று எல்லோருமே நம்பினர். அதே நேரம் அவரைக் காணும்போது உள்ளுக்குள் பயம் ஏற்படவும் செய்தது.

அன்று நடந்த இந்தச் சம்பவம் குறித்து டாக்டர் ஸ்டீஃபன் மண்டை புகையுமளவுக்கு யோசித்தார். 'உண்மையில் அன்று நடந்தது என்ன?' என்ற கேள்விக்கு அவரால் விடை கண்டுபிடிக்க முடியவில்லை.

எந்த வகையிலும் அதை ஒரு சிகிச்சையாகவும் கருத முடியவில்லை.

மன உளைச்சல் தாங்காமலானபோது அவர், ஃபாதர் இம்மானுவேலைச் சந்திப்பது என்ற முடிவுக்கு வந்தார்.

இது மாதிரியான விடை கிடைக்காத கேள்விகளுக்கான பரிகாரத்தை அவரால் சொல்ல முடியுமென்று ஸ்டீஃபன் கருதினார்.

**அ**ன்று வெள்ளிக்கிழமை.

டாக்டர் ஸ்டீஃபனுக்கு மதியம் இரண்டு மணியுடன் டியூட்டி முடிந்துவிட்டது. குவார்ட்டர்ஸுக்கு வந்தவர், சாப்பிட்ட பின் சற்று நேரம் ஓய்வெடுத்தார்.

சுமார் நான்கு மணி வாக்கில் ஃபாதர் இம்மானுவேலைச் சந்திப்பதற்காக காரில் ஏறிக் கிளம்பினார்.

ஸ்டீஃபன் வந்து சேர்ந்தபோதுதான், எங்கேயோ வெளியே போயிருந்த ஃபாதரும் சரியாக அங்கு வந்து சேர்ந்தார்.

டாக்டரை, ஃபாதர் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

'நிச்சயமாக ஏதோ ஒரு புதிய செய்தியுடன்தான் டாக்டர் வந்திருப்பார்' என்று ஃபாதர் நினைத்தார்.

"நான் நேத்துக்கூட உங்களை நெனைச்சுக்கிட்டேன்!" ஃபாதர் தனது மேலங்கியின் பட்டன்களை அவிழ்த்தவாறு கேட்டார்.

"எல்லாத்தையும் பேசுறதுக்குத்தான் வந்திருக்கேன் டாக்டர். நீங்க போய் நிதானமா உடையை மாத்திட்டு வாங்க!" என்ற ஸ்டீஃபன் அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தார்.

'அப்படியானால் விஷயம் மிகவும் சீரியஸாகத்தான் இருக்கும்' என்று ஃபாதர் தீர்மானித்தார்.

அவர் உடை மாற்றிக்கொண்டு திரும்பி வந்தார்.

"சூடாக டீ சாப்பிட்டுவிட்டுப் பேசலாமே!" என்ற ஃபாதர், தன் சமையற்காரனை அழைத்து, டீ போடச் சொன்னார்.

டாக்டர் ஸ்டீஃபன் கடந்த முறை தான் வந்துவிட்டுத் திரும்பிச் செல்லும்போது நிகழ்ந்தவற்றை அப்படியே விவரித்தார்.

"ஓகோ... இப்படியும் நடந்திருக்கிறதா?" ஃபாதர், யோசனையில் ஆழ்ந்தவாறு கேட்டார்.

"அதைவிட ஆச்சரியமான சம்பவங்கள், அதுக்குப் பிறகு நடந்திருக்கு ஃபாதர்."

"சொல்லுங்க!"

இப்போது ஸ்டீஃபன், ராணி என்ற நோயாளியின் விஷயத்தை விளக்கினார்.

அதை முற்றிலுமாகச் செவிமடுத்த ஃபாதர், சந்தேகம் நிறைந்த விழிகளுடன் டாக்டரை ஏறிட்டார்.

அதற்குள் டீ மற்றும் பலகாரங்கள் டீப்பாய்க்கு வந்து சேர்ந்தன.

டீ குடிக்கும்போதும் ஃபாதர் ஏதோ தீவிர யோசனையில் ஆழ்ந்திருப்பதாகத் தோன்றியது.

பிறகு ஃபாதர், அந்தச் சம்பவத்தைத் திரும்பவும் சொல்லுமாறு டாக்டரிடம் கேட்டுக் கொண்டார்.

ஸ்டீஃபன் திரும்பவும் விவரித்தார்.

எல்லாவற்றையும் கேட்ட பிறகு ஃபாதர் இம்மானுவேல் பேசத் தொடங்கினார். "அவரிடம் அபாரமான சக்திகள் உள்ளன. நிலைமையை வெச்சுப் பார்த்தால், ரொம்பவும் பைசாசிகமான ஒரு சக்தி அவருக்குக் கிடைச்சிருக்குதுன்னு சொல்லலாம். அது பெரிய அளவிலான ஒரு சக்தியும் கூட."

"அதில சந்தேகமில்லை ஃபாதர்!"

"அந்தச் சக்தியோட வல்லமைக்கு மனுஷங்க அல்லாத உயிர்களும் கட்டுப்படுது!"

"அதிலயும் சந்தேகமில்லை. பல்லி, அவர் சொற்படி நடந்ததை நான் என் கண்ணாலேயே பார்த்திருக்கேன்!"

"அந்தப் பல்லியை அவர் உள்ளே எடுத்துப் போனது கொல்றதுக்காகத்தான்."

"கொல்றதுககா?" ஸ்டீஃபன் கேட்டார்.

"ஆமாம்.... அந்தப் பல்லியைக் கொன்ன பிறகு, செத்துப்போன அந்த உடம்புல அம்மிணிக்குட்டியோட ஆவியை நுழைச்சு விட்டிருக்கார்."

டாக்டர் ஸ்டீஃபனுக்கு இந்தத் தகவல் புதிதாக இருந்தது. "கடவுளே... அப்படின்னா அவரைப் பார்த்து ரொம்பவும் பயப்படணும் போல இருக்கே." நெஞ்சில் கை வைத்தபடி பேசினார் அவர்.

"பயப்பட்டுத்தான் ஆகணும். இப்படிப்பட்ட பைசாசிக சக்தி உள்ளவங்களால நமக்குத் தொல்லை கொடுக்க முடியும். ஒரு சில சந்தர்ப்பங்கள்ல நம்ம உயிரே கூட பாதிப்பு அடையலாம். அதனால, எச்சரிக்கையா இருக்கிறது நல்லது."

இது டாக்டர் ஸ்டீஃபனை ஓரளவுக்குப் பயப்படுத்தவே செய்தது.

"இதுக்கு நாம எப்படி தற்காப்பு பண்ணிக்கிறது ஃபாதர்?" டாக்டர் கேட்டார்.

"தெய்வீகச் சக்திகளுக்கு முன்னால, எப்படிப்பட்ட பைசாசிகமான சக்தியாலயும் எதிர்த்து நிற்க முடியாது. அதனால, நாம தெய்வீக சக்தியைத்தான் துணைக்கு அழைக்கணும்." ஃபாதர், டாக்டருக்கு ஆறுதல் கூறினார்.

"டாக்டர் லூயிஸுக்கு இந்த மாதிரியான சக்தி எங்கேருந்து கிடைச்சிருக்கும் ஃபாதர்?"

''அது கொஞ்சம் சிக்கலான விஷயம். உண்மையைச் சொன்னா, அதைப்பத்தி நாம தெளிவா தெரிஞ்சுக்கிட்டா தான் அவருக்கு எதிரா நம்மால காய் நகர்த்த முடியும்.''

''அதை எப்படித் தெரிஞ்சுக்கிறது?''

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது வெளியே அம்பாஸடர் கார் ஒன்று வந்து நின்றது.

அதிலிருந்து இருவர் இறங்கினர்.

ஒருவர் ஆண், மற்றொருவர் பெண்.

வரும் ஆணை ஃபாதருக்குத் தெரியும். ஒரு வகையில் ஃபாதருக்கு தூரத்து உறவினரும்கூட. அவர் ஒரு இன்ஜினீயர். பெயர் சிரில் ஜோன்ஸ்.

''இவங்க யாரு சிரில்?'' ஃபாதர், இளம்பெண்ணைப் பார்த்தபடி கேட்டார்.

''ஃபாதர் என்னை மன்னிச்சுடுங்க. சிலதெல்லாம் தவிர்க்க முடியாம நடந்துடுச்சு.'' சிரில் சிரித்தவாறும், மன்னிப்புக் கோரும் குரலிலும் பேசினார்.

''இப்போ விளங்கிடுச்சு. ஆமாம். என்னோட விலாசம் மறந்து போச்சா என்ன?''

''இல்லை ஃபாதர், எல்லாம் போபால்ல நடந்தது. அதனால இங்கே வந்த பிறகு சொல்லலாம்னு நெனைச்சேன்.''

''சரி... எப்படியிருந்தாலும் நடந்திருக்கிறது ஒரு நல்ல விஷயம்தான். அதெல்லாம் போகட்டும். மிசஸ் சிரிலோட வீடு எங்கே இருக்கு? முதல்ல ரெண்டு பேரும் உக்காருங்க'' என்ற ஃபாதர் மேலும் இரண்டு விருந்தாளிகள் வந்திருப்பதைச் சமையல்காரரிடம் தெரிவிக்கச் சென்றார்.

அந்த இடைவெளியில் விருந்தாளிகள் இருவரும், டாக்டரிடம் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

ஃபாதர் திரும்பி வந்தார்.

''நீங்க எப்போ ஊருக்கு வந்தீங்க?'' அவர் கேட்டார்.

''ஒரு வாரம் ஆச்சு ஃபாதர்!'' சிரில் பதிலளித்தார்.

''திருமதியோட பேரைச் சொல்லலையே?'' ஃபாதர் கேட்டார்.

''தீனாம்மா!'' அவன் பதிலளித்தாள்.

''உங்க ஊரு?''

''சாவக்காடு. கொஞ்ச நாளா போபால்ல குடியிருந் தோம். இனிமேல் அநேகமா இங்கேயே செட்டிலா வோம்னு தோணுது.''

''அப்ப சிரில் இங்கேயே வந்தாச்சா?''

''ஆமாம் ஃபாதர். இங்கே புதுசா பேங்க் ஒண்ணு தொடங்கலாம்னு இருக்கேன்.''

சமையல்காரர் டீ எடுத்து வந்தார்.

''நாங்க சிட்டி ஆஸ்பத்திரி வரைக்கும் வந்தோம். அப்ப டியே ஃபாதரையும் பார்த்துடுவோம்னு வந்துட்டோம்.''

''சிட்டி ஆஸ்பத்திரிக்கா? ஏன்?'' ஃபாதர், டாக்டர் ஸ்டீஃபனைப் பார்த்தார்.

''அங்கே இருக்கும் டாக்டர் லூயிஸைப் பார்க்கத்தான்!'' சிரில் சொன்னார்.

''இவரும் சிட்டி ஆஸ்பத்திரியில டாக்டர்தான். பேரு ஸ்டீஃபன்.''

''அப்படியா... உங்களைச் சந்திக்க முடிஞ்சதுல ரொம்ப சந்தோஷம்!'' சிரில், தன் மனைவியைப் பார்த்தார்.

''என்ன விஷயம்?'' டாக்டர் கேட்டார்.

''எங்களுக்குக் கல்யாணமாகி மூணு மாசம் ஆகிடுச்சு. ஆனா, இன்னும்...'' சிரில் வார்த்தையை முடிக்காமல்,

மனைவியைப் பார்த்தார். அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

''விஷயம் விளங்கிடுச்சு. ஆனால் டாக்டர் லூயிஸ், மகப்பேறு டாக்டர் இல்லையே?'' ஃபாதர் கேட்டார்.

''உண்மைதான். ஆனா, அவருக்கு அற்புதமான சக்திகள் இருக்குன்னு கேள்விப்பட்டிருக்கேன்.''

சிரில் சொன்னபோது, ஃபாதரின் முகத்தில் சந்தேகத்தின் நிழல் பரவியது.

## 12

''ஓகோ... அப்படியா?'' ஃபாதர், தன் பார்வையை மேற்புறமாகத் திருப்பினார்.

'டாக்டர் லூயிஸின் 'அற்புத வல்லமைகள்' நாளுக்கு நாள் பரவுவது அபாயகரமானது!' என்று டாக்டர் ஸ்டீபனுக்குத் தோன்றியது.

'இந்த நம்பிக்கை ஏராளமானவர்களை ஆபத்துக்கு உள்ளாக்கும்.

அந்தப் பிசாசின் நிழல் இல்லாத கைகள் எல்லாத் திசைகளிலும் நீளும். அது நிரபராதிகளை பூமியிலிருந்து அழிக்கும். எனவே, டாக்டர் லூயிஸின் சக்தியின் ஊற்றை முதலில் கண்டுபிடிக்க வேண்டும்.'

இன்னதென்று அறியமுடியாமல் தாக்குதல் நடத்தும் பிசாசின் நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ளத் திணறும் போது மேலும் இரண்டு பேர் டாக்டர் லூயிஸுக்கு புகழ் மாலையுடன் வந்திருக்கிறார்கள்.

''சரி... அவர் கிட்ட உங்க அனுபவம் எப்படி இருந்துச்சு?'' ஃபாதர் இம்மானுவேல் கேட்டார்.

''தீனாம்மா சொல்லட்டும்!'' சிறில் மனைவியைப் பார்த்தார்.

''சொல்லுங்க தீனாம்மா!'' ஃபாதர் உற்சாகப்படுத்தினார்.

''அது ஆச்சரியகரமான ஒரு சம்பவம் ஃபாதர்!'' தீனாம்மா கூறினாள்.

''அது என்னன்னு சொல்லுங்க!'' டாக்டர் ஸ்டீஃபன் அவளை நோக்கித் திரும்பி உட்கார்ந்தார்.

''எங்க வீட்டுக்குப் பக்கத்துலதான் ஸ்மிதாவோட வீடு.''

''ஸ்மிதாவா?'' டாக்டர் ஸ்டீஃபன் அந்தப் பழைய சம்பவத்தை நினைவுகூர்ந்தார்.

முழுக்க முழுக்க ஆச்சரியமான முறையில் ரத்தப்புற்று நோயிலிருந்து ஸ்மிதா குணமடைந்த அந்தச் சம்பவம், அப்போது பெரிய பரபரப்பையே ஏற்படுத்தியது. பத்திரிகைகளில்கூட அந்தச் செய்தி பரவலாக இடம்பெற்றது.

ஆனால், அது குறித்து விசாரித்தவர்களிடமோ பதிலளிக்கவோ, பத்திரிகை மற்றும் பிற ஊடகங்களில் பேட்டிக்கோ டாக்டர் லூயிஸ் ஒப்புக்கொள்ளவில்லை.

ஒரு புகைப்படம் எடுக்கக்கூட அவர் ஒப்புக்கொள்ளவில்லை. தனக்கு அப்படிப்பட்ட விளம்பரமோ, பெருமையோ தேவையில்லை என்று கூறினார் டாக்டர் லூயிஸ். டாக்டர் ஸ்டீஃபனுக்கு அப்போது அந்தச் செய்தியில் எந்த விதமான சந்தேகமும் ஏற்படவில்லை.

அந்தக் கதைக்கு ஒரு புது வியாக்கியானமா?

''ம்... சொல்லுங்க!'' ஃபாதர் இம்மானுவேல் கேட்டார்.

''அந்த ஸ்மிதாவோட பிளட் கேன்சர் குணமானது அவராலதான். அதுக்குப் பிறகு ஸ்மிதாவுக்கு என்னென்னமோ புதிய வல்லமை எல்லாம் ஏற்பட்டிருக்கு!'' தீனாம்மா மிகுந்த மகிழ்ச்சியுடன் பேசினார்.

''என்ன 'வல்லமை'களா?'' ஃபாதர் குறுக்கிட்டுக் கேட்டார்.

''ஆமாம் ஃபாதர், மத்தவங்களால கற்பனைகூடச் செய்ய முடியாத வல்லமைகள்!''

''சொல்லுங்க!'' - ஃபாதர்.

தீனாம்மா, கணவரைப் பார்த்தாள்.

''இவளோட கர்ப்பப்பையில் ஏதோ சிக்கல் இருக்குதுன்னு அந்த ஸ்மிதாதான் சொன்னாங்க!'' சிரில், ஃபாதரின் முகத்தைப் பார்க்காமல் பேசினார்.

'விஞ்ஞானத்தின் துணையின்றி ஸ்மிதா வெறுங் கண்ணால் பார்த்து இப்படியொரு தகவலைச் சொல்லியிருக்கிறாள்! இது சாத்தியமா?' டாக்டர் ஸ்டீஃபன் சந்தேகப் பட்டார்.

''வெறும் யூகத்துல சொன்னார்களா?''

''இல்லை! டாக்டருங்க டெஸ்ட் பண்ற மாதிரியே, எந்தக் கருவியும் இல்லாம டெஸ்ட் பண்ணிச் சொன் னாங்க.''

''வேற என்ன சொன்னாங்க?''

''அதனால கர்ப்பம் தரிக்கிறது சிரமம்னும் உடனடியா போய் டாக்டர் லூயிஸைப் பாருங்கன்னும் சொன்னாங்க!''

''சரி... டாக்டர் லூயிஸைப் பார்த்தபோது அவர் என்ன சொன்னார்?''

''சிகிச்சையால் சரிப்படுத்திடலாம்னு சொன்னார்.''

அதன் பிறகு டாக்டர் ஸ்டீஃபன் வேறு எதையும் கேட்கவில்லை. அதற்குள் அவர் மூளை டாக்டர் லூயிஸைக் குறித்து யோசிக்கத் தொடங்கியது.

'ஸ்மிதா என்ற கல்லூரி மாணவி ஒருத்திக்கு, வல்லுந ரான ஒரு டாக்டரின் திறமை எங்கிருந்து கிடைத்தது?

எல்லாமே குழப்பும் கேள்விகள்!'

விளக்கு வைப்பதற்கு முன்பாகவே சிரிலும், தீனாம்மா வும் விடைபெற்றுக் கிளம்பினர்.

டாக்டர் ஸ்டீஃபன் அப்போதும் தீவிரச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

''நாம் நினைச்சதைவிட எல்லாமே வேகமா ஓடிட் டிருக்கு. அதுவும் எதிர்மாறா ஓடிட்டிருக்கு. அதனால நாம அதைவிட வேகமா ஓடவேண்டியிருக்கு. இல்லேன்னா, நம்மளால ஜெயிக்க முடியாது டாக்டர் ஸ்டீஃபன்!'' ஃபாதர் கூறினார்.

''அவங்க சொன்னதை எப்படி நம்புறது ஃபாதர்?''

''சிரமம்தான். அதுக்கான மாற்றுவழிகளை நாம உடனே கண்டறியணும்.'' ஃபாதர் சொல்லிவிட்டு அங்கிருந்து எழுந்தார்.

ஃபாதர் தனது படுக்கையறையில் அமர்ந்து தீவிர யோசனையில் ஈடுபட்டார்.

''டாக்டர் லூயிஸிடம் செயல்படும் பைசாசிகமான சக்தியை வெளியுலகுக்கு அடையாளம் காட்டுவது எப்படி?

அதற்கான ஆதாரங்கள் எங்கே?

இதையெல்லாம் ஆதாரமில்லாமல் மற்றவர்களிடம் சொல்ல முடியுமா?

மட்டுமின்றி, இதையெல்லாம் ரகசியமாகச் செயல் பட்டுக் கண்டுபிடிக்கவும் வேண்டும். என்ன செய்வது?

ஃபாதரின் மனத்தில் சட்டென்று ஒரு யோசனை புலப் பட்டது. உடனே அவர் அந்த அறையிலிருந்து கிளம்பினார்.

"ஃபாதர், நீங்க ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்துட்ட மாதிரி இருக்கே!" அவரைப் பார்த்த டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

"உண்மைதான்! ஆனால், அதைச் செயல்படுத்துறது அவ்வளவு சுலபமில்லை."

"இந்த விஷயத்தில் என் உயிரே போறதா இருந்தாலும் நான் பின்வாங்கமாட்டேன்!" டாக்டர் ஸ்டீஃபன் உறுதி யளித்தார்.

"அதுக்கெல்லாம் அவசியம் இருக்காது. கடவுளோட அருள் இருக்கும்போது அதெல்லாம் எதுக்கு? எல்லாத் துக்கும் கடவுள் ஒரு வழி காட்டுவார். அதனால் ஸ்டீஃபன் தைரியமா இருங்க!" ஃபாதர் இம்மானுவேல் தைரிய மூட்டினார்.

"அது எனக்கும் தெரியும். ஃபாதர் நான் அதுக்காகச் சொல்லலை. என்னை அவர் ஏற்கெனவே கொல்ல முயற்சி செஞ்சார். கடவுளோட கருணையாலதான் நான் தப்பிச் சேன்."

"அதனாலதான் சொன்னேன். இந்த விஷயத்துல உங்களுக்குக் கடவுளோட கருணை எப்பவும் இருக்கும்."

"இப்ப நான் என்ன செய்யணும்?" டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

"நான், என்னோட திட்டத்தைச் சொல்லிடுறேன். நான் முதல்லே ஸ்மிதாவைப் பத்தித் தெரிஞ்சுக்கணும்."

"அது முடியுமா?"

"அதுக்கான வழி இப்பத் திறந்து கிடக்கு."

"இப்ப விளங்கிடுச்சு!" டாக்டர் ஸ்டீஃபன் சொன்னார்.

"சொல்லுங்க பார்க்கலாம்!"

"உங்க உறவுக்காரரான சிரிலின் மனைவி மூலமா, நாங்க ஸ்மிதாவை நெருங்கலாம். அப்ப, அது சுலபம்."

"கரெக்ட். அதுதான் என் திட்டம்."

"அப்படியானால், நாம ஒண்ணாவே அங்க போகலாம். என்னை அறிமுகப்படுத்திட்டு நீங்க வந்துடுங்க!"

"செஞ்சுட்டாப் போகுது."

நேரம் கடந்து கொண்டிருந்தது.

மெதுவாக இருள் பரவியது.

இருட்டத் தொடங்கியபோது சன்னமான பயம் ஸ்டீஃபனுக்குள் மெதுவாக உயரத் தொடங்கியது.

இப்படியெல்லாம் பயந்தால் தங்களது நோக்கம் நிறைவேறாது. எது வந்தாலும் தைரியத்துடன் எதிர்கொள்ள வேண்டியதுதான் என்று ஸ்டீஃபன் தீர்மானித்தார்.

மணி, ஏழு முப்பது.

சமையற்காரர் தலையைச் சொறிந்தபடி அங்கு வந்து சேர்ந்தான்.

"என்ன கிருஷ்ணன்குட்டி?" அவனது நிழலைப் பார்த்த ஃபாதர் கேட்டார்.

"இன்னிக்கு வீட்டுக்குப் போய் வரலாம்னு நெனைக்கிறேன்." அவன் தெரிவித்தான்.

கிருஷ்ணன்குட்டிக்கு இருபத்தைந்து வயதிருக்கும். இளமை வாய்ந்த கட்டுடல். ஆரோக்கியமான உடம்பு.

எந்த நேரத்தில் வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் அனுப்பலாம். எந்த விதமான தயக்கமும் இருக்காது. எந்தக் கல்லறைக்குப் போய்விட்டு வருவதற்கும் பயம் கிடையாது. சுருங்கச்சொன்னால் எதற்கும் தயாரான ஓர் இளைஞன்.

அதனாலேயே ஃபாதர் இம்மானுவேலுக்கு, அவனை மிகவும் பிடிக்கும்.

"அப்படின்னா, சாப்பாடு பரிமாறு. நாங்க சீக்கிரமாகவே சாப்பாட்டை முடிச்சுக்கிறோம்" ஃபாதர் சொன்னார்.

உடனே அவன் சமையலறையை நோக்கி விரைந்தான்.

"கிருஷ்ணன் குட்டி சமீபத்துல கல்யாணம் செஞ்ச புதுமாப்பிள்ளை." ஃபாதர் புன்னகையுடன் கூறினார்.

"ஓகோ... அதுதான் இவ்வளவு பரபரப்பு."

"இருந்தாலும் பொழுது விடியறதுக்குள்ள வந்து சேர்ந்துடுவான். வேலையிலயும் நல்ல சுறுசுறுப்புதான்."

சாப்பாட்டை முடித்துக்கொண்டு அவர்கள் மறுபடியும் தாங்கள் உட்கார்ந்திருந்த பழைய அறைக்கே திரும்பி வந்தனர்.

இருவரும் பழையபடி தங்களது பேச்சைத் தொடர்ந்தனர்.

கிருஷ்ணன்குட்டி விடைபெற்றுக் கிளம்பினான்.

மணி ஒன்பது ஆனது.

கடிகாரத்தில் மணி அடிக்கத் தொடங்கியபோது டாக்டர் ஸ்டீஃபன், தலையைத் திருப்பிப் பார்த்தார்.

அப்போது அங்கு தென்பட்ட காட்சி அவரைச் சற்றுத் துணுக்குறச் செய்தது.

மச்சிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த எலெக்ட்ரிக் பல்பின் வெளிச்சம் கடிகாரக் கண்ணாடியிலும் பிரதிபலித்தது.

கடிகாரத்தின் வட்டவடிவமான கண்ணாடிப் பரப்பில் பல்லி ஒன்று ஒட்டிக்கொண்டிருந்தது.

சமீபகாலமாக என்ன காரணத்தாலோ, பல்லியைப் பார்த்தாலே டாக்டர் ஸ்டீஃபனுக்கு பயம் தோன்றுகிறது.

அவருக்கு நிகழ்ந்த கார் விபத்துக்குக் காரணமே பல்லி தானே? இரண்டாவது முறை கார் விபத்திலிருந்து தான் தப்பித்ததற்குக் காரணம் ஃபாதர் இம்மானுவேல் வழங்கிய ஜெபமாலைதான்.

அந்தப் பல்லியைத் துப்பாக்கியால் சுட்டால்கூட அதன் உடம்பில் குண்டு பாயாது என்று தோன்றியது.

இப்போது அது கடிகாரத்தில் வந்து உட்கார்ந்திருக்கிறது.

டாக்டர் ஸ்டீஃபனின் பார்வை பதியும் இடத்தை ஃபாதரும் கவனித்தார்.

அவர் முகத்தில் சன்னமான புன்னகை ஒன்று மலர்ந்தது.

டாக்டருக்கும் விஷயம் விளங்கியது. அதனால் அவருக்கு வெட்கம் தோன்றியது.

''இனிமேல் டாக்டர் எனக்குச் செய்துதர வேண்டிய வேலையையும் சொல்லிடுறேன்.'' ஃபாதர் தொடர்ந்தார்.

''சொல்லுங்க ஃபாதர்!''

''டாக்டர் லூயிஸ் அமெரிக்காவுக்கு மேல்படிப்புக்குப் போன பிறகுதானே இப்படியெல்லாம் மாறினார்?''

''ஆமாம்... ஃபாதர்!''

''நல்லது. அப்படியானால் வெளிநாடு போன டாக்டர் லூயிஸ் எந்த நாட்டுக்கெல்லாம் போனார், எந்தெந்தக் காலத்தில் போனார்னு எனக்குத் தெளிவான தகவல்கள் வேணும்.''

''முயற்சி பண்றேன்!''

மறுபடியும் கடிகாரத்திலிருந்து சத்தம் கேட்டது.

''டாங்...''

இருவரும் அந்தப் பக்கமாகத் திரும்பினர்.

# 13

கடிகாரம், எட்டு முப்பது என்றது.

''என்ன இது!'' ஃபாதர் இம்மானுவேல், டாக்டர் ஸ்டீஃபனின் முகத்தைப் பார்த்தார்.

இருவரின் முகங்களிலும் வியப்பு படர்ந்தது.

சற்று நேரத்துக்கு முன்னால் ஒன்பது மணி அடித்ததை இருவருமே கேட்டனர்.

டாக்டர் ஸ்டீஃபனுக்கு அந்த விஷயத்தில் எந்த விதமான சந்தேகமும் கிடையாது.

சந்தேக நிவர்த்திக்காக அவர், தன் கைக்கடியாரத்தைப் பார்த்தார்.

'ஙே!' அது நின்றுவிட்டிருந்தது.

அது புத்தம் புதிய எலெக்ட்ரானிக்ஸ் கடியாரம். அதிக பட்சமாக ஆறு மாதம்தான் ஆகிறது. விலை உயர்ந்த கடிகாரமும்கூட.

அதன் பேட்டரி அவ்வளவு விரைவில் தீர்ந்துவிட்டிருக்காது. ஒருவேளை எலெக்ட்ரானிக்ஸ் பொருட்களுக்கு அவ்வளவாக உத்தரவாதம் இருக்காதோ என்னவோ!

சுவர்க்கடிகாரத்துக்கும், கைக்கடியாரத்துக்கும் நிகழ்ந்த மாற்றங்களுக்கு ஒருவேளை வேறு ஏதாவது தொடர்பு இருக்குமோ?

அதையும் தாண்டி அவரால் யோசிக்க முடியவில்லை.

இருப்பினும் சமீபகாலமாகப் பல விஷயங்களில் பொதுவாகவே நம்பிக்கை குறைந்து வருகிறது. இது, அடிப்படை இல்லாத சந்தேகமாகக்கூட இருக்கலாம். எனினும், ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள சந்தேகங்கள்.

எனவே, தனது கைக்கடியாரத்தைக் குறித்து அவர் அதிகமாக யோசிக்கவில்லை.

அப்படியானால் சுவர்க்கடிகாரம்?

அதில் எப்படி இந்த மாதிரியான மாற்றம் நிகழ்ந்துள்ளது?

ஃபாதர் இன்னும் அந்தச் சுவர்க்கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"டாக்டர் ஸ்டீஃபன்..." ஃபாதர் அழைத்தார்.

"சொல்லுங்க ஃபாதர்!" ஸ்டீபன் திரும்பிப் பார்த்துக் கேட்டார்.

"அங்க பாருங்க... அந்தப் பல்லி விநாடி முள்ளுக்கு நேரா உட்கார்ந்து பின்னோக்கி நகருது. அதுக்கு ஏற்ற மாதிரி விநாடி முள் பின்னோக்கி நகருது."

டாக்டர் ஸ்டீஃபன் எழுந்து போய்ச் சுவர்க்கடிகாரத்தை நெருங்கினார்.

கீழிருந்து பார்த்தபோது ஃபாதர் சொன்னது உண்மை தான் என்று விளங்கியது.

விநாடி முள் பின்னோக்கிச் சுழல்கிறது.

தான் கனவு காணவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக டாக்டர், தன் இடக்கையைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டார். வலித்தது.

கனவு காணவில்லை.

அப்படியானால் என்னதான் நடக்கிறது?

டாக்டர் ஸ்டீஃபன் கவலையடைந்தார்.

"இதெல்லாம் அவரது விளையாட்டுகள்தான்..." ஸ்டீஃபன் மந்திரிப்பது போல் பேசிக்கொண்டார்.

ஃபாதர் இம்மானுவேலின் மூளையில் சட்டென்று ஒரு யோசனை மின்னலடித்தது.

ஏதாவது ஒரு பொருளை எடுத்து எறிந்தால், கடிகாரத்தின் கண்ணாடி உடையும். ஒருவேளை, ஊசிகள்கூடத் தங்கள் அசைவை நிறுத்திக் கொள்ளலாம். அதனால் உடனடியாக ஏதாவது செய்தே தீரவேண்டும்.

சிலுவையில் தொங்கும் இயேசுவின் வடிவம் தாங்கிய ஜெபமாலை மேஜைமீது கிடந்தது. அதை எடுத்து அதன் மீது எறியக்கூடாது. அது பாவகாரியம்.

கழுத்தில் கிடக்கும் ஜெபமாலையைத் தொடவே கூடாது.

ஒரு விநாடி நேரம் யோசித்த ஃபாதர் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்து வந்தார். பிரார்த்தனை மேடைமீது ஏறினார். அங்கு பெரிய சிலுவை ஒன்றில் இயேசுவின் வடிவம் வடிக்கப்பட்டிருந்தது.

கையிலிருந்த தண்ணீருடன் அதற்கு முன்னால் நின்று பிரார்த்தித்தார்.

அத்துடன் தனது அறைக்கு வந்தவர், அப்போதும் கண்ணாடி மீது ஒட்டிக்கொண்டு முள்ளைத் திருப்ப வைத்துக் கொண்டிருந்த பல்லி மீது அந்தத் தண்ணீரை விசையுடன் ஊற்றினார்.

என்ன ஆச்சரியம்... அந்தப் பல்லி கடிகாரத்திலிருந்து ஒரே தாவாகத் தாவிக் குதித்தது.

மச்சுப் பகுதியை நோக்கி விரைந்த அது, மச்சுப் பலகைகளின் இடைவெளி வழியாக நுழைந்து சட்டென்று மறைந்தது.

அந்த விநாடியில் கடிகாரமும் பழையபடி முன்னோக்கி ஓடத் தொடங்கியது.

அப்படியானால் சற்று முன்பாகத் தான் கண்டது என்ன?

இருவராலும், எந்த ஒன்றையும் உறுதியாகப் பேசமுடியவில்லை.

சற்று நேரம் இருவருமே மௌனமாக இருந்தனர்.

பிறகு, ஃபாதர் சுவர்க்கடிகாரத்தில் நேரத்தைச் சரிசெய்தார்.

"நாம் கணித்ததைவிடவும் அவரது சக்தி அதிக வல்லமை கொண்டதுதான்." ஃபாதர் கூறினார்.

"உண்மைதான்!" டாக்டர் ஸ்டீஃபன் ஒப்புக் கொண்டார்.

"இருந்தாலும் கடவுளின் சக்தியை மீறி அதனால் செயல் பட முடியவில்லை என்பதும் நிதர்சனமாகத் தெரிகிறது."

"அதிலும் சந்தேகமில்லை. அதனால்தான் நாம் தப்பித்தோம்."

"எனவே, இனிமேல் ஒவ்வொரு அடியையும் ஜாக்கிரதையாக எடுத்து வைக்க வேண்டும்.

"இனிமேல் நீங்கள் செய்ய வேண்டியது அவனை-ஆமாம் இனி அவனுக்கு மரியாதை வேண்டியதில்லை. அப்படியே அழைத்தால் போதும்!" ஃபாதர் உணர்ச்சி வசப்பட்டவராகக் கூறினார்.

"அதுதான் சரி. நான் என்னால முடிஞ்ச விரைவில நீங்க கேட்ட தகவல்களையெல்லாம் சேகரிச்சுத் தர்றேன்."

"அந்த இடங்கள் என்னவெல்லாம்னு தெரிந்தால், அந்த இடத்துல யார் மூலமாக இந்தச் சக்திகள்லாம் கிடைச்ச துன்னு சுலபமா கண்டுபிடிக்கலாம். அதுக்குப் பிறகு அங்குள்ள நபர், எவரையாவது நாம தொடர்பு கொள்ள லாம். அது அவ்வளவு சிரமமான விஷயமில்லை." ஃபாதர் உறுதியான குரலில் பேசினார்.

"அப்படின்னா சாவக்காடு வரைக்கும் போறது?"

"அதையும் விட்டுடக்கூடாது. அதுக்காக இன்னொரு நாள் போகலாம். என்னோட யோசனை என்னன்னா, இந்த

மாதிரி விஷயங்களுக்காக விடுமுறை எடுக்க வேணாம்கிறது தான்."

ஃபாதர் அப்படிச் சொன்னதற்கு ஒரு பிரத்தியேகக் காரணம் இருந்தது.

இப்படிப்பட்ட பைசாசிக சக்தி உள்ளவர்களுக்கு, சாதாரணமானவர்களைவிட கெட்டிக்காரத்தனம் அதிகமாக இருக்கும். அவர்கள் எப்போதும் தங்களைக் காப்பாற்றிக்கொள்வதிலேயே குறியாக இருப்பார்கள். தாங்கள் எப்படியாவது பிடிக்கப்பட்டால், அதன் பிறகு அவர்களுக்கு விமோசனம் கிடையாது என்று அவர்களுக்கே தெரியும். அதனால் அவர்களது சந்தேகத்துக்கு உரியவர்களை, அவர்கள் தீவிரமாக கண்காணிப்பார்கள்.

எதிராளிகளின் ஒவ்வோர் அசைவையும் ஊன்றிப் பார்த்து, அவர்களுடன் நெருங்கிப் பழகவும் முற்படுவார்கள்.

தங்கள் எதிராளிகள் கூர்மையான புத்திசாலிகள் என்பது தெரிந்துவிட்டால். அதற்கு அடுத்தபடியாக, அவர்களுக்கு நெருக்கமான நபர்களிடம் நட்புக்கொண்டு வசப்படுத்தப் பார்ப்பார்கள். அதன் மூலம் தங்கள் எதிராளிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் முடிந்தால் கட்டுப் படுத்தவும் பார்ப்பார்கள்.

இப்போதைய சூழ்நிலையில் டாக்டர் ஸ்டீஃபன் மீது அவனுக்குச் சந்தேகம் உள்ளது.

எப்படியாவது ஸ்டீஃபனை அபாயத்துக்கு உள்ளாக்குவது தான் அவனது நோக்கம்.

அவனது அடுத்த இரை ஒருவேளை டாக்டர் ஸ்டீஃபனாக இருக்கலாம்.

"நாளைய ஒரு நாள் கடந்துட்டா எனக்கு நைட் டியூட்டிதான்!" டாக்டர் ஸ்டீஃபன் சொன்னார்.

''அப்படின்னா பகல் நேரத்துல நீங்க அங்கபோய், ஸ்மிதாவைப் பத்தி விசாரிக்கலாம்.'' ஃபாதர் கூறினார்.

''அப்படியே செய்கிறேன்!'' என்ற ஸ்டீஃபன் தன்னையும் அறியாமல் தனது கைக்கடியாரத்தைப் பார்த்தார்.

கடிகாரம் ஓடிக்கொண்டிருந்தது!

''என்ன இது!'' அவர் தன்னையும் மீறிக் கூவினார்.

''ஏன்... என்ன ஆச்சு?'' ஃபாதர் விசாரித்தார்.

''கடிகாரம் ஓடுது... நின்னுபோயிருந்த கடியாரமாச்சே. இப்ப இதுல மணி ஒன்பது.''

''அப்ப பத்து மணியாகிடுச்சுன்னு அர்த்தம். இன்னிக்கு இனிமேல் கிளம்பணுமா?'' ஃபாதர் கேட்டார்.

''போயாகணும் ஃபாதர்! இப்ப எனக்கு அந்த அளவுக்கு பயமெல்லாம் கிடையாது. அன்னிக்கு நடந்த விபத்து, என் பயத்தைச் சுத்தமா விலக்கிடுச்சு. போதாக்குறைக்கு நீங்க கொடுத்த ஜெபமாலையும் என்கிட்ட இருக்கு. அதனால அவன் என்கிட்ட நெருங்க மாட்டான்னு நினைக்கிறேன்.'' டாக்டர் ஸ்டீஃபன் எழுந்தார்.

காரை ஸ்டார்ட் செய்தார்.

ஃபாதர் குட் நைட் சொன்னார்.

கார் முன்னோக்கி விரைந்தது.

பாதையில் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை.

அவர் நேராக ஆஸ்பத்திரிக்குச் சென்றார்.

காரை, போர்ச்சில் நிறுத்திவிட்டு வார்டை நோக்கி நடந்தார்.

எமிலி டியூட்டி அறையில் இருந்தாள்.

அவள் தூங்கவில்லை. வாரப்பத்திரிகை ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தாள்.

"இன்னிக்கு டாக்டர்கள் யாரும் வரலையா?" ஸ்டீஃபன் கேட்டார்.

"டாக்டர் மெர்லின் வந்துட்டுப் போயிட்டாங்க!"

மோளி வர்கீஸுக்கு பதிலாக கைனகாலஜிஸ்ட் பிரிவில் நியமிக்கப்பட்டிருந்தார், டாக்டர் மெர்லின்.

"ஏன் போயிட்டாங்க?"

"தெரியாது."

"டாக்டர் லூயிஸ் வந்திருந்தாரா?"

"இல்லை. இன்னிக்கு அவர் வரலை."

'அவன் எங்கே போயிருப்பான்?' டாக்டர் ஸ்டீஃபன் யோசனையில் ஆழ்ந்தார்.

சற்று நேரத்துக்குப் பிறகு ஸ்டீஃபன் குவார்ட்டர்ஸுக்குக் கிளம்பினார்.

ஸ்மிதாவைச் சந்திப்பது குறித்து யோசித்தவாறே ஸ்டீஃபன் கட்டிலில் போய்ப் படுத்தார். என்னை ஒருவேளை அவள் மறந்துவிட்டிருக்கலாம். இருந்தாலும் முயற்சி செய்வோம்.

அன்றைய தினம் குறிப்பாக எதுவும் நடக்கவில்லை.

ஸ்மிதாவைச் சந்திக்கத் தீர்மானித்த அன்று, முதலில் ஃபாதரைப் போய்ப் பார்த்தார். அவரது ஆலோசனை மற்றும் ஆசீர்வாதத்துடன் ஸ்டீஃபன், ஸ்மிதாவின் வீட்டை நோக்கிக் கிளம்பினார்.

பஸ்ஸில்தான் பயணம் செய்தார். யாரும் தன்னை அடையாளம் தெரிந்துகொள்ளக்கூடாது என்பதற்காகத் தான் இப்படிப் பயணம் செய்தார்.

பஸ்ஸிலிருந்து இறங்கி விலாசம் விசாரித்தார்.

பெயரைச் சொன்னதும், முதல் நபரே தெளிவாக வழி சொல்லிக் கொடுத்தார். அதன் பிறகு அவர் அங்கிருந்து டாக்ஸியில் பயணம் செய்தார்.

ஸ்மிதாவின் வீட்டு முன்பாக டாக்ஸி நின்றது. அங்கு அப்போது ஒரு பெரிய ஆள் கூட்டம் குவிந்திருந்தது.

## 14

ஸ்மிதாவின் வீட்டுக்கு முன்பாகக் குவிந்திருந்த ஆட்கூட்டத்தைப் பார்த்த டாக்டர் ஸ்டீஃபனுக்குள் சந்தேகத்தின் நிழல் உயர்ந்தது.

ஸ்மிதாவுக்கு ஏதேனும் நிகழ்ந்திருக்குமோ? டாக்டர் லூயிஸை அங்கு காணவுமில்லை.

ஒருவேளை அவன் முன்கூட்டியே இங்கு வந்து எதை யாவது செய்துவிட்டுப் போய்விட்டானோ?

'எதுவாக இருந்தாலும் சரி... பார்த்துக் கொள்ளலாம்!' என்று தீர்மானித்த டாக்டர் ஸ்டீஃபன், கேட்டை கடந்து முன்னேறினார். ஸ்டீஃபனின் தோற்றம் மற்றும் உடையை கவனித்த கூட்டத்தார், அவருக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றனர்.

நல்லவேளையாக உள்ளே நாற்காலி ஒன்றில் அமர்ந்திருந்தாள் ஸ்மிதா.

அவளை உயிருடன் பார்த்தபோது, ஸ்டீஃபனுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது.

டாக்டர் ஸ்டீஃபன், அவள் அமர்ந்திருக்கும் அறையில், காலியாகக் கிடந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தார்.

ஸ்மிதா, அவரைத் திரும்பிப் பார்த்தாள்.

"உட்காருங்க. நான் இவரைப் பார்த்துட்டு வர்றேன்..." அவள் அவளுக்கு அருகில் அமர்ந்திருந்த, வயதான பெரியவர் ஒருவரின் கையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவரின் வலது உள்ளங்கையை ஊன்றிப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஸ்மிதா. தோரணையைப் பார்த்தால் ரேகை பார்த்து அவள் நோயைத் தீர்மானிப்பதாக டாக்டர் ஸ்டீஃபனுக்குத் தோன்றியது.

அவள் சொல்வதெல்லாம் சரிதான் என்று அந்த மனிதர் தலையாட்டியபடி ஒப்புக்கொண்டவாறு இருந்தார்.

இந்த வல்லமை அவளுக்கு எங்கிருந்து கிடைத்தது?

டாக்டர் ஸ்டீஃபனுக்கு அந்தச் சூழ்நிலையே வியப்பு அளிப்பதாக இருந்தது.

அந்த மனிதர் அங்கிருந்து கிளம்பியதும் அவள் டாக்டர் ஸ்டீஃபனின் பக்கமாகத் திரும்பினாள்.

"நீங்க என்ன தெரிஞ்சுக்க விரும்புறீங்க சார்?" அவள் கேட்டாள்.

"நாம கொஞ்ச நேரம் உட்கார்ந்து பேசணும். நோயாளிங்களையெல்லாம் அனுப்பிட்ட பிறகு போதும்!" ஸ்டீஃபன் கூறினார்.

அதை ஒப்புக்கொண்டவள் மாதிரி அவள், அங்கிருந்த பிற நோயாளிகளை கவனிக்கத் தொடங்கினாள்.

டாக்டர் ஸ்டீஃபன் அவளது நடவடிக்கைகளையே கவனித்துக் கொண்டிருந்தார்.

சுமார் இரண்டு மணி நேரத்துக்குள் அங்கிருந்த நோயாளிகள் எல்லோரும் கிளம்பிவிட்டனர்.

'அவளிடம் எப்படிப் பேச்சைத் தொடங்குவது?' என்று ஸ்டீபன் யோசனையில் ஆழ்ந்தார்.

''எங்கேருந்து வர்றீங்க?'' அவளாகவே பேச்சைத் தொடங்கினாள்.

முற்றிலும் எதிர்பாராத ஒரு கேள்வி. தன்னை அடையாளம் தெரிந்துகொள்வாள் என்றுதான் நினைத்திருந்தார். ஆனால், அப்படி நடக்கவில்லை. 'ஒருவேளை இவள் தெரியாதவளாக நடிக்கிறாளோ?' என்று ஸ்டீஃபன் சந்தேகித்தார்.

''வடக்குத் திசையில், ரொம்ப தூரத்துலேர்ந்து வர்றேன்!'' ஸ்டீஃபன் பதிலளித்தார்.

அவள், அவரை ஊன்றிப் பார்த்தாள். 'ஸ்டீஃபன் பொய் சொல்கிறார்!' என்ற சூசகம் அவளின் கண்களில் தெரிந்தது.

அவள் சன்னமாகப் புன்னகைத்துக் கொண்டாள்.

''என்னைச் சோதிச்சுப் பார்க்குறதுக்காக ஒரு பொய் சொல்லிப் பார்த்தீங்க... அப்படித்தானே?''

''என்ன இப்படிச் சொல்றீங்க?''

''நீங்க கிழக்குத்திசையிலேருந்து வர்றீங்க. வடக்கிலிருந்து வர்றதா மாத்திச் சொல்றீங்க!''

அவளுக்குத் தன்னை அடையாளம் தெரிந்துவிட்டிருக்கிறது என்று டாக்டர் ஸ்டீஃபனுக்கு விளங்கியது.

எனவே, அவளிடம் மிகுந்த எச்சரிக்கையுடன் பேசுவது என்று தீர்மானித்தார் டாக்டர்.

''ஸ்மிதாவுக்கு நான் யார்னு தெரிஞ்சிருக்கே... அப்புறம் எதுக்கு இப்படியொரு கண்ணாமூச்சி விளையாட்டு?'' ஸ்டீஃபன் கேட்டார்.

அதைக் கேட்டதும் அவள், அவரை ஆச்சரியத்துடன் ஏறிட்டாள்.

''நீங்க சொன்னது பொய். உங்களை எனக்குத் தெரியாது.''

'ஆகாயப்பூவாக இருக்கிறதே!' என்று நினைத்த ஸ்டீஃபன், முன்பின் அறிமுகம் இல்லாத ஒருத்தியிடம் பேசும் தோரணையிலேயே அவளிடம் பேசுவது என்று தீர்மானித்தார்.

''சரி... நாம் பரஸ்பரம் முன்பின் தெரியாதவங்களாகவே பேசலாம்!'' என்ற ஸ்டீஃபன், இப்போதுதான் அவளது தோற்றத்தை கவனித்தார்.

முன்னைக் காட்டிலும் இப்போது அவள் அழகியாக இருந்தாள்.

ஆஸ்பத்திரியில் நோயுடன் மல்லடித்த நோஞ்சானான ஸ்மிதா அல்ல அவள். இப்போது முழுமையான ஆரோக்கிய சாலியாகத் திகழ்ந்தாள்.

ஆனால், அவளது நடவடிக்கைகளை கவனிக்கும்போது, ஒரு டாக்டர் மாதிரியும், ஜோசியக்காரி போலவும் நடந்து கொண்டது குழப்பமான விஷயமாகத் தெரிந்தது.

எத்தனையோ பேரின் இறந்தகாலம் மற்றும் எதிர்காலங்களை அவள் ஜோசியம் போல் சொல்வதை அவரே காதாரக் கேட்டார்.

'உண்மையிலேயே இது ஒரு வல்லமைதானா?' டாக்டர் ஸ்டீஃபன் குழம்பினார். அவரால் ஒரு தீர்மானத்துக்கு வரமுடியவில்லை.

''நீங்க எதுக்காக வந்திருக்கீங்க?'' அவள் கேட்டாள்.

''நான் சில விஷயங்களைத் தெரிஞ்சுக்கிறதுக்காக வந்திருக்கிறேன்!'' என்ற ஸ்டீஃபன் அவளுக்கு நேராகத் தன் வலக்கையை நீட்டினார்.

அவள் அந்தக் கையை உற்றுப் பார்த்தாள். பிறகு சொன்னாள். ''நீங்க ஒரு டாக்டர். என்னைப் பரிசோதிக்கிறதுக்காக வந்திருக்கிறீங்களா?'' இம்முறை அவளது கேள்வியில் கோபம் தெரிந்தது.

''நான் ஒரு டாக்டர்தான். இருந்தாலும் உங்களைப் பத்திக் கேள்விப்பட்டதால், உங்களைச் சந்திக்கணும்னு நெனைச்சேன். நீங்க ஒரு டாக்டரா இல்லேன்னாக்கூட டாக்டர் மாதிரியே நடந்துக்கிறது எனக்கு ஆச்சரியமா இருக்கு.''

''அது உண்மைதான். நான் உண்மையில் ஒரு டாக்டர் இல்லைதான். ஆனால், டாக்டர் மாதிரி என்னால நடந்துக்க முடியுது.''

''உண்மையிலேயே இது ஆச்சரியகரமான ஒரு சம்பவம் தான். ரத்தப் புற்றுநோயாளியான ஒரு பெண், இந்த அளவுக்கு மாறுவது, ஆச்சரியத்தோட உச்சம்தான்!''

''என்ன... உங்களுக்கு என்னோட கடந்த காலமும் தெரியுமா?''

''தெரியும். தெரிஞ்சதாலதான், இந்த வல்லமை உங் களுக்கு எப்படிக் கிடைச்சதுன்னு தெரிஞ்சுக்க விரும்பு கிறேன்!''

ஸ்மிதா சற்று நேரம் மௌனமாக இருந்தாள்.

அவள் யோசனையில் ஆழ்ந்திருக்கிறாள் என்பது விளங்கியது.

டாக்டர் ஸ்டீஃபன் அவளையே பார்த்துக் கொண்டிருந் தார்.

'என் வல்லமையின் உறைவிடத்தை எதற்காக நான் இவரிடம் சொல்ல வேண்டும்?

இவர் ஏன் அதைத் தெரிந்துகொள்ள வேண்டும்?

என்னைக் குறித்துத் தெரிந்துகொள்வதில் இவருக்கு இவ்வளவு ஆர்வம் ஏன்?

இதன் நோக்கம் என்னவாக இருக்கும்?'

''சொல்றது உங்களுக்குக் கஷ்டமா இருக்கா?'' டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

''என்கிட்ட இப்படியொரு கேள்வி கேட்ட முதல் மனுஷன் நீங்கதான். உண்மையில் உங்க நோக்கம் என்ன?''

''தெரிஞ்சுக்கிறது மட்டும்தான்.''

''நான் அதைச் சொல்ல விரும்பலேன்னா?''

''அப்படியானால்....'' ஸ்டீஃபன் வார்த்தையை முடிக்காமல் அவளைப் பார்த்தார்.

''சொல்லுங்க!'' அவள் வற்புறுத்தினாள்.

''மருத்துவம் படிக்காத, பட்டம் வாங்காத ஒருத்தர் சிகிச்சை செய்யுறது...''

''தண்டனைக்கு உரிய குற்றம்னு எனக்குத் தெரியும். ஆனால், நான் அதுக்காகப் பணம் வாங்குறதில்லை. சிகிச்சை செய்யுறதில்லை. வெறும் ஆலோசனை மட்டும் தான்!'' அவள் சொன்னாள்.

''அந்த ஆலோசனைகள் மனுஷங்களை தவறா வழி நடத்தாதா?''

''இதுவரைக்கும் அப்படி எந்த ஒரு புகாரும் வரலை.''

''அது உண்மையா இருக்கலாம். நான் தெரிஞ்சுக்க விரும்புறது உங்க வல்லமையோட ஊற்றுக்கண் எதுங்குறது தான்!''

''அதை உங்களுக்குச் சொல்றதால எனக்கு என்ன பிரயோஜனம்?'' அவள் கேட்டாள்.

அதற்கு டாக்டர் ஸ்டீஃபனால், உடனடியாக பதில் அளிக்க முடியவில்லை. அவர் சற்றுநேரம் அசைவற்றுப் போனார். பிறகு உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்தார்.

''நான் இன்னொரு நாள் வர்றேன்...'' ஸ்டீஃபன் சொன்னார்.

"நான் காத்திருப்பேன்!"

அவள், வாசல்வரை டாக்டரைப் பின்தொடர்ந்தாள்.

அங்கிருந்து கிளம்பிய ஸ்டீஃபன் நேராக ஃபாதர் இம்மானுவேலிடம் வந்தார்.

"நோக்கம் நிறைவேறிடுச்சா?" ஃபாதர் கேட்டார்.

டாக்டர் ஸ்டீஃபன், ஸ்மிதாவின் வீட்டில் நடந்ததை எல்லாம் விவரித்தார். அவளது கடைசிக் கேள்வியையும் மறக்காமல் குறிப்பிட்டார்.

"அதைப்பத்தி நாம யோசிக்க வேண்டியிருக்கு!" ஃபாதர் கூறினார்.

"நான் நாளைக்கு வர்றேன்!" டாக்டர் ஸ்டீஃபன் விடை பெற்றார்.

மறுநாள் டாக்டர் ஸ்டீஃபனுக்கு நைட் டியூட்டி. அவர் ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது, எமிலி தனது இருக்கையில் அமர்ந்திருந்தாள்.

சட்டென்று ஷைனிதான் அங்கு உட்காருந்திருப்பதாக டாக்டருக்குத் தோன்றியது.

ஸ்டீஃபனைப் பார்த்த அவளும் மகிழ்ச்சியடைந்தாள்.

அவள் முகம் மலர்ந்தது.

"என்ன ஷைனி... ஸாரி எமிலி, என்ன விசேஷம்" ஸ்டீஃபன் தன் நாக்கைக் கடித்துக்கொண்டு கேட்டார்.

"டாக்டர் என்னை எப்படி வேணும்னாலும் கூப்பிட் டுக்கங்க. பேர் மாத்திச் சொல்றதுல என்ன தப்பு இருக்கு?"

"மன்னிக்கணும். தவறுதலா வந்துருச்சு. சரி... நான் போன பிறகு ஏதாவது புதிய தகவல் உண்டா?"

"நான் உங்களுக்குக்காகத்தான் காத்திருக்கிறேன்..."

"என்ன விஷயம்?"

''எனக்கு இங்கேருந்து கிளம்பணும்னு தோணுது.''

''ஏன்?''

''குறிப்பா ஒண்ணுமில்லை...'' அவள் எதையோ சொல்லத் தயங்கினாள்.

''இங்கே தங்கியிருக்கிறதுல ஏதாவது அசௌகரியம் இருக்கா என்ன?''

''தப்பா நெனைக்கலேன்னா சொல்றேன்!''

''பரவாயில்லை... சொல்லுங்க!''

''பெரிய டாக்டர் கல்யாணமானவரா?''

''இல்லை... ஏன் கேட்கறீங்க?''

''அவர், இந்த ஆஸ்பத்திரி முதலாளியோட மகளைக் கல்யாணம் பண்ணிட்டதா சொல்றாங்க!''

''கல்யாணம் ஆகலை. ஆகப் போகுது!''

''அவர் எதுக்காக மத்தவங்களைத் தொல்லைப் படுத்துணும்?''

''அப்படி ஏதாவது நடந்ததா?''

''தேவையில்லாம அடிக்கடி என்னைக் கூப்பிடுறார். அடிக்கடி போன் பண்றார். வார்டுக்குப் போகும்போதெல் லாம் நான் அவர் கூடவே போகணும்கிறார்.''

''இதுல தப்பா நினைக்க என்ன இருக்கு? பரபரப்பான ஆஸ்பத்திரி வாழ்க்கையில இதெல்லாம் சகஜம்தானே?''

''உண்மைதான். ஆனால், இது எல்லை கடந்த செயலா எனக்குத் தோணுது!''

''நீங்க அப்படி நெனைச்சா கொஞ்சம் ஜாக்கிரதையா இருங்க. அதையும் மீறி ஏதாவது நடந்தால் என்கிட்ட

சொல்லுங்க. பிரச்சினைகளைத் தவிர்க்கிறது எல்லாருக்கும் நல்லதுதானே?''

''முயற்சி பண்றேன் டாக்டர்!''

இரவு மணி பத்து.

டாக்டர் ஸ்டீஃபன், ஃபாதர் சொன்ன விஷயத்தை நினைவுகூர்ந்தார்.

''டாக்டர் லூயிஸ் எந்தெந்த வெளிநாடுகளுக்குப் போனார்? எங்கெல்லாம் மேற்படிப்பு படித்தார்?'' என்பதையெல்லாம் எப்படித் தெரிந்து கொள்வது?

தனது பயணம் தொடர்பான விஷயங்களை டைரியில் குறித்து வைத்திருப்பாரோ?

இருந்தால், அதை எப்படிக் கைப்பற்றுவது?

சிட்டி ஆஸ்பத்திரியில் டாக்டர் லூயிஸுக்குத் தனியறை ஒன்று உள்ளது. ஒருவேளை அதற்குள் இருக்கலாமோ?

அந்த அறை பெரிய ஆபரேஷன் தியேட்டரை ஒட்டி இருக்கிறது. ஆபரேஷன் தியேட்டர் வழியாகத்தான் அதற்குள் செல்ல வேண்டும்.

வேறுவழியாக யாரும் அதற்குள் நுழையாமல் இருப்பதற்காகத்தான் அப்படியோர் ஏற்பாடு.

ஆபரேஷன் தியேட்டரின் சாவி ஒன்று டாக்டர் லூயிஸிடம் உள்ளது. மற்றொரு சாவி, ஆபரேஷன் தியேட்டரைப் பராமரிக்கும் நபரிடம் உள்ளது.

டாக்டர் ஸ்டீஃபன் அந்த நபரிடமிருந்து சாவியைக் கேட்டு வாங்கினார்.

ஆபரேஷன் தியேட்டரைத் திறந்து நேராக லூயிஸின் அறையை நோக்கி நடந்தார்.

# 15

ஆபரேஷன் தியேட்டருக்குப் பல முறை சென்றுள்ள டாக்டர் ஸ்டீஃபனுக்கு, டாக்டர் லூயிஸின் தனியறை எதுவென்று தெரியும். ஆஸ்பத்திரியின் ஆரம்ப காலத்தில், அதன் மெடிக்கல் ஆபீஸராக இருந்தவர் வெள்ளைக்காரர் ஒருவர். டாக்டர் மேக்மில்லர்.

அவருக்காகத்தான் அப்படியோர் அறை கட்டப்பட்டது. ஆபரேஷன் செய்வதற்கு முன்னும் பின்னும் அவர் அந்த அறைக்குள் சென்று ஓய்வெடுப்பது வழக்கம். ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட அந்த அறைக்குள் எல்லாவிதமான நவீன உபகரணங்களும் இருந்தன.

வயர்லெஸ், வெளிநாடு மற்றும் வெளியூர் தொலைபேசி இணைப்புகள். டெலிவிஷன், குளோஸ் சர்க்யூட் போன்ற எல்லாவித வசதிகளும் இருந்தன. அதற்குள் இருக்கும்போது உலகின் எந்த மூலையுடனும் தொடர்பு கொள்ளவும் வெளியில் நடப்பதைத் தெரிந்துகொள்ளவும் முடியும்.

டாக்டர் மேக்மில்லர்தான் டாக்டர் லூயிஸை வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்றவர். வெளிநாட்டுப் பயணங்களில் மிகுந்த ஆர்வமும் அனுபவமும் வாய்ந்தவர் அவர்.

ஆனால், டாக்டர் மேக்மில்லர் குறித்து டாக்டர் ஸ்டீஃபனுக்கு அதிகமாக எதுவும் தெரியாது.

டாக்டர் மேக்மில்லர் ரிசர்வ்டு டைப் மனிதர். தேவைக்கு ஒன்று அல்லது இரண்டு வார்த்தைகளுக்கு மேல் பேச மாட்டார்.

டாக்டர் ஸ்டீஃபன் வரும்போது மேக்மில்லர்தான் ஆர்.எம்.ஓ. பெரிய பெரிய கேஸுகள் பெரிய ஆபரேஷன்கள் போன்றவற்றை மட்டுமே அட்டெண்ட் செய்வார்.

இதயம், நுரையீரல், கிட்னி போன்ற உறுப்புகளை, சாதாரணமான ஒரு காயத்துக்குக் கட்டுப் போடுவது மாதிரி மிகவும் லாகவமாக ஆபரேஷன் செய்வார்.

உடன் பணிபுரியும் டாக்டர்கள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

அவருடன் ஒரேயொரு தடவைதான் ஸ்டீஃபன் ஆபரேஷன் தியேட்டரில் பணிபுரிந்தார். அது ஒரு மூளை ஆபரேஷன். டாக்டர் மெக்மில்லரின் வேகமும், லாகவமும், மேதைமைத் திறனும் அசாத்தியமாக இருந்தன. அதை இப்போது நினைத்தாலும் ஆச்சரியமாக இருக்கும்.

அவரைப் போல் ஆக வேண்டுமானால், ஜன்மங்கள் பல தேவைப்படும்.

எனினும், அவரிடம் நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைக்கவில்லை.

டாக்டர் மேக்மில்லர் இப்போது எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. அவரது விலாசம் தெரிந்தால், லூயிஸின் பயணத்திட்டத்தைத் தெரிந்து கொள்வது சுலபம்.

அப்போது ஸ்டீஃபனை இப்படியெல்லாம் நினைவுகூர வைத்தது சூழ்நிலைதான். அதுவும் அந்த அறைக்குள் வந்ததும்கூட மற்றொரு காரணமாக இருக்கலாம்.

லூயிஸின் அறைக்கதவை நெருங்கியபோதுதான் மற்றோர் உண்மை விளங்கியது. அந்த அறையின் சாவி. அது டாக்டர் லூயிஸின் அறையானதால் அதன் சாவி அவரிடம் மட்டும்தான் உள்ளது. அதை எப்படித் திறப்பது?

இந்த யோசனையுடன் எதிர்பாராமல் தாழ்ப்பாளைப் பார்த்த ஸ்டீஃபன் வியப்பு அடைந்தார்.

‘கடவுளே... அது திறந்தே கிடந்தது.’

அவரது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

தாழ்ப்பாளைத் தள்ளி நீக்கினார்.

கதவை மெதுவாக உட்பக்கமாகத் தள்ளினார். உட்புறம் எந்தவொரு சத்தமும் கேட்கவில்லை.

உள்ளே நுழைந்ததும் ஸ்விட்சைப் போட்டார்.

அவர் கேள்விப்பட்டிருந்த மாதிரியே இருந்தது அந்த அறை.

மேஜை மீது ஸ்டாண்டில் போட்டோ ஒன்று இருந்தது.

டாக்டர் மேக்மில்லர்.

அதைப் பார்த்ததும் டாக்டர் ஸ்டீஃபனுக்குள் இருந்த சந்தேகம் மேலும் சற்று வலுவடைந்தது.

மேக்மில்லரை, இப்போதும் டாக்டர் லூயிஸ் நினைவு வைத்து மரியாதை அளிக்கிறார். அப்படியானால், டாக்டர் லூயிஸியைப் போல் மேக்மில்லருக்கும் பைசாசிகமான சக்திகள் இருந்திருக்குமோ?

துப்பறியும் நிபுணர் மாதிரி டாக்டர் ஸ்டீஃபன் அந்த அறையைச் சோதனையிடத் தொடங்கினார். அதே நேரம் தான் வந்து போனதற்கு எந்த விதமான தடயமும் இருக்கக்கூடாது என்பதிலும் கவனமாக இருந்தார்.

அந்தக் குறிப்புகள் எங்கே இருக்கும்?

உண்மையில் அப்படிப்பட்ட குறிப்புகள் ஏதேனும் உள்ளனவா?

டாக்டர் ஸ்டீஃபன் அந்த போட்டோவைக் கையில் எடுத்தார்.

அதைத் திருப்பிப் பார்த்தார். அந்த ஃபிரேமின் பின் புறத்தில் சுலபமாகத் திறக்கக்கூடிய வசதி இருந்தது. திறந்து பார்த்தார்.

இரண்டாக மடக்கப்பட்ட காகிதம் ஒன்றில் மேக்மில்லரின் விலாசம் இருந்தது.

ருமேனிய நாட்டு விலாசம்.

சட்டென்று அந்த விலாசத்தை மற்றொரு காகிதத்தில் குறித்துக் கொண்டார். பின்பு விலாசம் எழுதப்பட்டிருந்த பழைய காகிதத்தை அதன் இடத்திலேயே வைத்தார். கிடைக்கும் எந்த ஒரு வாய்ப்பையும் நழுவவிட்டுடக் கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருந்தார் ஸ்டீஃபன். அங்கு வேறு ஏதாவது பொருட்கள் உள்ளனவா என்று பார்த்தார். மிகச் சிறிய வெள்ளிச் சாவி ஒன்று இருந்தது.

அது அழகானதாகவும், சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தாகவும் இருந்தது. அதை ஒரு லாக்கெட் மாதிரி கழுத்துச் சங்கிலியில் கோத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு இருந்தது.

அது நிச்சயமாக ரகசியச் சிற்றறை அல்லது பெட்டி ஒன்றின் சாவியாக இருக்கும் என்று நினைத்தார் ஸ்டீஃபன்.

எனவே, அப்படியொன்று அங்கு ஏதாவது இருக்கிறதா என்று தேடினார்.

ஸ்டீஃபன் ஒவ்வோர் இண்டு இடுக்கையும் கண்களால் துழாவினார்.

அந்த அறைச்சுவரில் காலண்டர் ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு மருந்து கம்பெனிக்காரர்களின் காலண்டர். எலும்புக்கூடு ஒன்றில் தெளிவற்ற தசை அமைப்புடன் கூடிய மனித வடிவம் ஒன்று அதில் இடம் பெற்றிருந்தது.

அவரை அந்த காலண்டர் கவர்ந்தது.

பன்னிரண்டு மாதங்களும் முன்புறத்திலேயே தெளிவாக அச்சிடப்பட்டிருந்தன. அதை ஒரு தடவை உற்றுப் பார்த்தார்.

டிசம்பர் மாதத் தேதியைப் பார்த்தார். தேதியும் கிழமையும் தவறாக இருந்தது உடனே வருடத்தைப் பார்த்தார். எட்டு வருடங்களுக்கு முந்தைய காலண்டர் வருடம் 1981.

இந்த காலண்டரை மாற்றாமலேயே போட்டிருப்பதால் அதில் ஏதோ ரகசியம் இருக்கவேண்டும் என்று அவருக்குத் தட்டுப்பட்டது.

அவர் காலண்டரை உயர்த்திப் பார்த்தார். காலண்டர் மாட்டி வைக்கப்பட்டிருந்த ஆணி இடம்பெயர்ந்து ஆணியும், காலண்டரும் சுவரிலிருந்து நழுவின.

ஆணி இருந்த இடத்தை கவனித்தபோது, அந்தப் பகுதி உள்ளீடற்றது போல் தோன்றியது. விரலால் தட்டிப் பார்த்தார். உண்மைதான். அந்த இடத்தில் சுவரின் சத்தமே வித்தியாசமாக இருந்தது.

ஏறத்தாழ இரண்டடி உயரம், மூன்றடி அகலத்துக்கு அந்த உள்ளீடற்ற பகுதி பரவியிருந்தது. சற்று நேரம் விரலால் தட்டுவதற்குள் அந்தச் செவ்வகப் பரப்பிலிருந்த காரையும், சுண்ணாம்பும் சட்டென்று பெயர்ந்து விழுந்தன.

அப்போதுதான் திடுமென்று அது நிகழ்ந்தது.

டாக்டர் ஸ்டீஃபன் திடுக்கிட்டு இரண்டு அடி பின்வாங்கினார்.

அந்தப் பகுதியில் எலும்புக்கூடு ஒன்று இருந்தது. அது கடைசியாக இருந்த காரையைப் பெயர்த்துத் தள்ளிக் கொண்டு கீழே குப்புற விழுந்தது.

டாக்டர் ஸ்டீஃபன் திகைத்தார்.

இருப்பினும் பதற்றமில்லாமல் அவர் சுற்று முற்றும் பார்த்தார்.

அறைக் கதவு திறந்து கிடப்பதை அப்போதுதான் அவர் கவனித்தார். அறையை உட்புறத்திலிருந்து தாழிடாமல்தான் இவ்வளவு நேரமும் சோதனையிட்டிருக்கிறோம் என்பது அப்போதுதான் அவருக்கு ஞாபகம் வந்தது. இதுவரை எவரும் அங்கு வராமல் இருந்தது தனது நல்ல காலம்தான் என்று நினைத்துக் கொண்டார்.

அந்த எலும்புக்கூட்டை அவர் பரிசோதித்தார்.

ஆஜானுபாகுவான ஒரு மனிதனது எலும்புக்கூடு அது.

பெரிய மண்டையோடு.

நீண்ட தொடை எலும்புகள்.

அதே போன்ற கை எலும்புகள்.

அதில் ஏதோ ஒன்று பளபளத்தது. டாக்டர் ஸ்டீஃபன் அதன் கைப்பகுதியில் மோதிரம் ஒன்று கிடந்தது.

டாக்டர் ஸ்டீஃபன் அந்த மோதிரத்தைக் கழற்றி எடுத்தார்.

அவரின் கட்டைவிரலில் போட்டுப் பார்த்தபோது அதைக் காட்டிலும் அந்த மோதிரம் பெரிதாக இருந்தது. அப்படியானால் அந்த மோதிரத்தின் உரிமையாளர் எப்படிப்பட்டவராக இருப்பார் என்பது ஓரளவுக்கு விளங்கியது.

அந்த மோதிரத்தில் பெயர் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தார்.

'மேக்மில்லர்!' என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.

'மேக்மில்லர்! மேக்மில்லர்! மேக்மில்லர்!'

டாக்டர் ஸ்டீஃபனின் தொண்டை வறண்டது.

ஒருபோதும் நிகழக்கூடாத சம்பவம்!

அதுதான் அங்கே நடந்திருக்கிறது.

எந்த ஒரு மனிதர் மூலமாக லூயிஸ் தொடர்பான விவரங்களைத் தெரிந்துகொள்ள விரும்பினோமோ, அந்த மனிதரின் எலும்புக்கூடுதான் தனக்கு முன்னால் கிடக்கிறது!

இதன் மூலம் ஒரு விஷயம் தெளிவானது.

டாக்டர் மேக்மில்லரைக் கொலை செய்தவர் டாக்டர் லூயிஸ்தான். அதன் பிறகு டாக்டர் மேக்மில்லரிடமிருந்த

ஏதோ ஒரு ரகசியத்துடன், டாக்டர் லூயிஸ் வெளிநாடு போயிருக்க வேண்டும்.

வெளிநாட்டிலிருந்து பைசாசிக சக்திகளுடன் திரும்பி வந்திருக்கிறார்.

இந்த ஒரு காரியத்துக்காக இப்போதுகூட டாக்டர் லூயிஸைச் சிறையில் தள்ள முடியும்.

ஆனால், அப்படிச் செய்வது முட்டாள்தனமாகிவிடும்.

டாக்டர் மேக்மில்லரைக் காணவில்லை என்ற புகார் இதுவரை எழவில்லை. மட்டுமின்றி, ஆஸ்பத்திரி என்றால் அங்கு என்னென்ன காரணங்களுக்காகவோ, வெவ்வேறு இடங்களில் எலும்புக்கூடுகள் பத்திரப்படுத்தப்பட்டிருக்கலாம்.

நர்ஸிங் பயிற்சியும் நடைபெறுவதால், இதெல்லாம் இங்கு சகஜம்தான்.

இந்த விஷயங்களை நாம் வெளியே கொண்டுவந்தால், முதலாளி சேவியர் இதையெல்லாம் வெகு சுலபமாகவே சமாளித்து விடுவார்.

பிறகு வழக்கே திசைமாறிவிடும்.

அவர்கள் நினைத்தால் என்னதான் செய்ய முடியாது?

எனவே, அந்தப் பாதையில் நீங்குவது சரியாக இருக்காது என்று டாக்டர் ஸ்டீஃபனுக்கு விளங்கியது.

அதெல்லாம் ஆபத்தை வலிய வரவழைக்கும் விஷயமும் கூட. மட்டுமன்றி, தனது நோக்கமும் அடிபட்டுப் போகும்.

எனவே, நிதானமாக யோசித்து அதைப் பற்றித் தீர்மானிக்கலாம்.

இப்போது உடனடியாகச் செய்ய வேண்டியது, எலும்புக் கூட்டை பழைய இடத்தில் பழையபடியே வைக்க வேண்டியதுதான்.

எலும்புத் துண்டுகளை பழையபடி அந்தச் சுவர்ப்பகுதியில் அடுக்கி வைத்தார். காரைகள் உதிர்ந்துவிட்டதால், அதை மறைப்பதற்கு என்ன செய்வது என்று யோசித்தார்.

அருகிலேயே பீரோ ஒன்று இருந்தது.

டாக்டர் ஸ்டீஃபன் தனது மொத்தச் சக்தியையும் பயன்படுத்தி அந்த பீரோவை நகர்த்திக் கொண்டு வந்து அந்தப் பகுதியை மறைத்தார். அப்போதுதான் அதை கவனித்தார்.

அது ஒரு…

## 16

**டை**ரி.

வெளிநாட்டில் தயாரான அந்த டைரியில், தங்க நிறத்தில் வருடம் பளபளத்தது.

*1983.*

ஆறு வருடங்களுக்கு முந்தைய டைரி. இதுவரை அது தன் கண்களுக்குத் தட்டுப்படவில்லை. அப்படியானால் இப்போது மட்டும் அது எப்படி வந்தது?

டாக்டர் ஸ்டீஃபன் அதுவரை பீரோ கிடந்த இடத்தைப் பார்த்தார்.

அங்கு ஓரடி நீளம், ஆறங்குல கனத்தில் செருகி வைக்கப்பட்டிருந்த பலகை இற்றுப் போயிருந்தது. அதன் வழியாக டைரி வெளியே வந்து விழுந்திருக்க வேண்டும்.

அப்படியானால், பீரோவுக்குள் மேற்கொண்டும் தனக்குத் தேவையான பொருட்கள் ஏதேனும் இருக்கலாம்.

தனது முயற்சி இதுவரை நல்ல பலனளித்திருக்கிறது.

மேற்கொண்டும் அதிக நேரத்தை அங்கு செலவிடுவது ஆபத்து. எந்த விநாடியிலும் டாக்டர் லூயிஸ் அங்கு வரலாம்.

இந்த மாதிரியான சூழ்நிலையில் டாக்டர் லூயிஸ் தன்னைச் சந்திக்க நேர்ந்தால், மேக்மில்லருக்கு நேர்ந்த கதிதான் தனக்கும் நிகழும்.

எனவே, தற்காலிகமாகத் தனது ஆராய்ச்சிகளை முடித்துக் கொண்டு இங்கிருந்து வெளியேறுவதுதான் நல்லது.

பீரோவை வைத்து சுவரின் ரகசிய அறையை மூடினார்.

பிறகு காலண்டரை பீரோ இருந்த இடத்தில் தொங்கவிட்டார்.

சட்டென்று பார்த்தால் வித்தியாசம் தெரியாத அளவுக்கு எல்லாம் கச்சிதமாக அமைந்தன. டயரியுடன் அந்த அறையிலிருந்து வெளியேறினார்.

ஆபரேஷன் தியேட்டரை அடைந்ததும் 'தப்பித்துவிட்ட நிம்மதி' ஏற்பட்டது. டாக்டர் ஸ்டீஃபனுக்கு ஒரு முறை தான் நுழைந்த அறையைத் திரும்பிப் பார்த்தார். எல்லாம் பழையபடி கச்சிதமாக மூடப்பட்டிருந்தது.

ஆபரேஷன் தியேட்டரிலிருந்து வெளிவந்த டாக்டர், அதன் கதவைப் பூட்டி, சாவியை, அதன் பராமரிப்பாள ரிடம் கொடுத்தார்.

அதன்பிறகு அவர் அங்கு நிற்கவில்லை.

வெளியே வந்த பிறகுதான் அவரால் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது.

நேராக குவார்ட்டர்ஸை நோக்கி விரைந்தார்.

கதவைத் திறந்து உள்ளே நுழைந்ததும் உட்புறமாகத் தாழிட்டார்.

ஃபாதர் கொடுத்த ஜெபமாலையை மேஜை மீது எடுத்து வைத்தார். ஆபத்து ஏதும் ஏற்படாமல் இருப்பதற்கான முன்னேற்பாடு அது.

ஜன்னல்களைப் பார்த்தார். எல்லாம் மூடித் தாழிடப் பட்டிருந்தன.

பயப்படுவதற்கு எதுவுமில்லை.

நாற்காலியில் சௌகரியமாக உட்கார்ந்து அந்த டைரியைத் திறந்தார்.

ஆனால், உண்மையில் அது ஒரு டைரி அல்ல. டைரியின் அட்டைக்குள் வைத்து மூடப்பட்ட ஒரு புத்தகம். அந்த டைரியின் அட்டையில் **1983** என்று பொறிக்கப்பட் டிருந்தது.

அது லத்தீன் மொழிப் புத்தகம்.

டாக்டர் ஸ்டீஃபனுக்கு அதிலிருந்த எழுத்துகள் எதுவும் புரியவில்லை. ஃபாதர் இம்மானுவேலால் இந்த விஷயத்தில் தனக்கு உதவ முடியும் என்ற நினைவு ஆறுதல் அளித்தது.

இருப்பினும் அதன் பக்கங்களைப் புரட்டிப் பார்க்க அவர் தீர்மானித்தார்.

தெரியாத மொழியின் பக்கங்களைப் புரட்டியபோது ஒரு சில படங்கள் கண்ணில் தட்டுப்பட்டன.

முதல் படம் ஒரு பல்லியினுடையது.

அதன் பிறகு வௌவால்...

தொடர்ந்து எலி... ஓநாய்....

'இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?' ஸ்டீஃபன், விடை கண்டுபிடிக்க முயன்றார்.

புரியவில்லை. ஃபாதரிடம் போனால் மட்டும்தான் விடை கிடைக்கும் என்று விளங்கியது.

மறுநாள் வழக்கம் போல் ஸ்டீஃபன் ஆஸ்பத்திரியின் டியூட்டிக்குச் சென்றார்.

இரண்டு தடவை டாக்டர் லூயிஸைச் சந்திக்க நேர்ந்தது. அவரிடம் பேசவும் செய்தார் ஸ்டீஃபன். டாக்டர் லூயிஸிடம் அப்போதெல்லாம் எந்தவிதமான உணர்ச்சி மாற்றமும் தென்படவில்லை. எனவே, தான் லூயிஸின் அறைக்குள் புகுந்ததை அவர் இன்னமும் தெரிந்து கொள்ள வில்லை என்பது விளங்கியது.

எனவே, தனது பாதையில் தொடர்ந்து முன்னேற வேண்டியதுதான் என்று தீர்மானித்தார் ஸ்டீஃபன்.

டியூட்டி முடிந்ததும் மாலை நேரத்தில் அந்தப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு ஃபாதரிடம் சென்றார் டாக்டர் ஸ்டீஃபன்.

டாக்டரைத் தொலைவில் பார்த்தபோதே ஏதோ புதிய தகவல் கிடைத்திருக்கிறது என்பது ஃபாதருக்குப் புரிந்தது.

"குட் ஈவ்னிங்.... பாதர்!" டாக்டர் ஸ்டீஃபனின் குரலில் மகிழ்ச்சி தென்பட்டது.

தான் யூகித்தது சரிதான் என்று ஃபாதர் முடிவு கட்டினார்.

தான் காகிதத்தில் பொதிந்து வந்த புத்தகத்தை வெளியே எடுத்து, அதன் டைரி உறையை அவிழ்த்து அந்தப் புத்தகத்தை ஃபாதருக்கு முன்னால் வைத்தார் டாக்டர் ஸ்டீஃபன்.

ஃபாதரின் முகம் சட்டென்று மாறியது.

"திறந்து பாருங்கள் ஃபாதர்!"

ஃபாதர் அதன் தாள்களை ஒவ்வொன்றாகப் புரட்டினார். விநாடிக்கு விநாடி அவர் முகம் இறுகிக் கொண்டே வந்தது.

படங்கள் வந்தபோது ஊன்றி கவனித்தார்.

"இதிலிருந்து உங்களுக்கு ஏதாவது புரிந்ததா?" ஃபாதர், டாக்டர் ஸ்டீஃபனை முகத்தைப் பார்த்தார்.

"எனக்கு எதுவும் புரியவில்லை ஃபாதர்!"

"அதாவது பைசாசிக சக்திகளைக் குறித்து விவாதிக்கும் அபூர்வமான ஒரு புத்தகம் இது. ஐரோப்பாவில் ஏதோ ஒரு நாட்டில் உள்ள சாத்தான் வழிபாடு மற்றும் மந்திரங்கள் அடங்கிய புத்தகம்.

"என்ன சாத்தான் வழிபாடா!" டாக்டர் ஸ்டீஃபன் வியப்புடன் கேட்டார்.

"ஆமாம். சாத்தானின் தேவாலயம்" என்றுதான் அதைக் கூறுவார்கள். அதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? சாத்தானை வழிபடுபவர்கள் நமது நாட்டில் மட்டும் இல்லையா என்ன?"

"உண்மைதான்!" என்று டாக்டர் ஸ்டீஃபனுக்கு விளங்கியது.

சாத்தானை நம்புவதுடன், சாத்தானுக்குத் தன் சொந்தக் குழந்தைகளையே நரபலி கொடுப்பவர்களைக் குறித்தும் அவ்வப்போது பத்திரிகைகளில் செய்தி வெளிவருவ தில்லையா? அப்படிப்பட்டவர்களும் இந்தச் சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

"இந்த மாதிரி மந்திரங்களால் பெறும் வல்லமைகள் நிரந்தரமாகப் பயன் அளிக்குமா என்ன?" டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

"நிரந்தரம் எல்லாம் சொல்ல முடியாது. இதுல நம்பிக்கை உள்ளவங்க சமூகத்தால தண்டிக்கப்படும்போது தற்காலி கமா அடங்கும். அப்புறம் அதே மாதிரியான சக்தி வேண்டு றவங்க அதை ரகசியமா வளர்ப்பாங்க. சக மனுஷங்களைத் தொல்லைப்படுத்தறதுக்கு இதெல்லாம் உதவும். இந்த

மாதிரியான சக்திகள் எவ்வளவுதான் பலம் பொருந்தியதா இருந்தாலும், தெய்வீகச் சக்திக்கு முன்னால எதிர்த்து நிற்க முடியாதுங்கிறதும் உண்மை.''

''அது நிதர்சனமான உண்மைதான்!'' டாக்டர் ஸ்டீஃபன் அதை ஒப்புக்கொண்டார்.

''சாத்தானை சேவிப்பவர்களால் எந்தெந்த உயிரினங்களிடம் ஆதிக்கம் செலுத்த முடியும் என்பதையும் அதற்கான மந்திரங்களையும்தான் இதில் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.'' ஃபாதர் சொன்னார்.

''உண்மையில் அதெல்லாம் சாத்தியம்தானா ஃபாதர்?'' ஸ்டீஃபன் கேட்டார்.

''சாத்தியம்தான். நமது நாட்டிலேயே அப்படிப்பட்ட எத்தனையோ பேர் இருந்திருக்கிறார்கள். கூடுவிட்டுக் கூடு பாய்தல், வாழையிலையில் படகு மாதிரிப் பயணம் செய்தவர்கள் என்று எவ்வளவோ பேர் இருந்துள்ளனர். நமது நாட்டில் செயல்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் அவற்றை நல்ல காரியங்களுக்காக பயன்படுத்தினார்கள். அதனால் அவர்களை நாம் மகான்கள் என்கிறோம். அப்படிப்பட்ட மந்திர சக்திகளைக் கெட்ட நோக்கத்துக்கு பயன்படுத்துபவர்கள் துர்மந்திரவாதிகள் ஆகிறார்கள்.

அப்படியானால் டாக்டர் லூயிஸ் இப்போது ஏறத்தாழ ஒரு துர்மந்திரவாதிதான். அவர் பல்லியை நோக்கிக் கட்டளை இட்டதும், அது அவர் கைமீது வந்து விழுந்ததும் சட்டென்று ஞாபகம் வந்தது.

''இப்படிப்பட்டவர்கள் ஆபத்தான பேர்வழிகள். தாங்கள் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதற்காக, தங்கள் விரோதிகளை ஈவு இரக்கமில்லாமல் கொலை செய்யக் கூடத் தயங்க மாட்டார்கள். மிரட்டுவார்கள்.''

அது இயல்புதான் என்று டாக்டர் ஸ்டீஃபனுக்கு விளங்கியது. அதை நேரடியாகவும் அவர் அனுபவித்திருக்கிறார்.

"அப்படியானால், நாம் அவருடன் போராட வேண்டியிருக்கும் என்கிறீர்கள்?"

"அதில் சந்தேகமே வேண்டாம். தங்களது கொள்கையில் பிடிவாதமாக இருப்பவர்கள், பிறரையும் தங்கள் பாதைக்கு இழுக்கப் பார்ப்பார்கள். முடியாத பட்சத்தில் தங்களது ரகசியங்கள் வெளியாகிவிடக்கூடாது என்பதற்காகத் தீர்த்துக்கட்டவும் தயங்கமாட்டார்கள்."

"டாக்டர் மேக்மில்லருக்கும் இப்படிப்பட்ட தன்மைகள் இருந்திருக்குமோ?"

"இருந்திருக்கலாம் என்றுதான் இப்போது தோன்றுகிறது" என்ற ஃபாதர் இம்மானுவேல் தொடர்ந்தார். "எனது கோணத்தில் டாக்டர் மேக்மில்லரும் ஒரு சாத்தான் விசுவாசியாக இருந்திருக்க வேண்டும். அவரிடமிருந்து இந்தப் புத்தகம் டாக்டர் லூயிஸுக்குக் கிடைத்திருக்க வேண்டும். அது ஓர் அறிமுகமாக இருந்திருக்கலாம். அதைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்வதற்கு அவர் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டிருக்கலாம்."

"நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால், மேக்மில்லர் ஏன் கொல்லப்பட வேண்டும்?"

"பொறாமையும், பயமும்தான் காரணங்களாக இருக்க வேண்டும். டாக்டர் மேக்மில்லர், என்றாவது ஒரு நாள் தன்னைத் தீர்த்துக்கட்டலாம் என்று டாக்டர் லூயிஸ் பயந்திருக்கலாம்."

"உங்கள் கருத்துப்படி டாக்டர் லூயிஸின் இன்றைய நிலைக்கு டாக்டர் மேக்மில்லரும் ஒரு காரணம்தான்... இல்லையா?"

''அதில் எனக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.'' ஃபாதர் ஒப்புக் கொண்டார்.

''அப்படிப் பார்த்தால், ஸ்மிதா என்ற பெண்ணுக்கும், டாக்டர் லூயிஸிடமிருந்து சாத்தானின் சக்தி கிடைத்திருக் கலாம்.''

''அப்படி நினைக்கவும் வாய்ப்பு உள்ளது.''

''அவளை இப்படியே விட்டு விடலாமா? அவள் எதிர் காலத்தில் யாரையாவது திருமணம் செய்து கொண்டால் என்னாவது?''

ஃபாதர் இம்மானுவேல் அப்போதுதான் அதைக் குறித்து யோசித்தார்.

''அது மோசமான ஒரு நிலைமைதான்!'' ஃபாதர் கூறினார்.

''அதையும் வேண்டுமானால் சோதித்துப் பார்ப்போம்!'' ஃபாதர் ஒரு முடிவுக்கு வந்தார்.

''சொல்லுங்கள் ஃபாதர்!''

''நான் ஜெபம் செய்த மாலை ஒன்றை மீண்டும் மந்திரித் துத் தருகிறேன். முடிந்தால் அதை அந்தப் பெண்ணின் கழுத்தில் போட்டு விடுங்கள். அவள் உடம்பில் அப்படி ஏதாவது பைசாசிக சக்தி புகுந்திருந்தால் அது வெளியேறி விடும். அவள் அதிலிருந்து நிரந்தரமாக விடுபடுவாள்.''

''இது ஒரு நல்ல யோசனைதான்!''

''எதற்கும் நீங்கள் நாளைக்கு வாருங்கள். அதற்குள் இந்தப் புத்தகத்தை மறுபடியும் ஒரு புரட்டுப் புரட்டு கிறேன். நான் சொன்னது போல் மாலையையும் சரிசெய்து வைக்கிறேன்.''

''கண்டிப்பா வர்றேன் ஃபாதர். சரி, நான் கிளம்பலா மில்லையா?'' டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

"குட் நைட்!" ஃபாதர் விடை கொடுத்தார்.

அன்று டாக்டர் ஸ்டீஃபனுக்கு நைட் டியூட்டி. இரவு பத்து மணி முதல் காலை ஐந்து மணி வரை ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டும். இருப்பினும் தேவைப்பட்டால் டாக்டர் ஸ்டீஃபன் நடுவே தனது குவார்ட்டர்ஸுக்குப் போய்விட்டு வருவதுண்டு.

டாக்டர் ஸ்டீஃபன் வந்தபோது, எமிலி டியூட்டி அறையில் உட்கார்ந்திருந்தாள்.

"என்ன போரடிக்கிறதா எமிலி?" டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

"இல்லை சார். ஆரம்பத்தில்தான் எனக்கு அப்படியெல்லாம் இருந்தது. இப்ப எல்லாம் பழகிடுச்சு."

கடிகாரம் மணி 'பத்து' என்றது.

டாக்டர் லூயிஸின் கார் வெளியே வந்து நின்றது.

அது வழக்கமில்லாத ஒரு வருகை போல் தோன்றியது.

டாக்டர் ஸ்டீஃபனின் முகத்தில் சந்தேகத்தின் நிழல் பரவியது.

## 17

எதற்காக டாக்டர் லூயிஸ் இப்போது வந்திருக்கிறார்? அவர் வரவேண்டிய அளவுக்கு எதுவும் இல்லையே? அவர் சாதாரணமாக இப்போதெல்லாம் நோயாளிகளை கவனிப்பதே இல்லை.

அன்றைக்கு ஒரு நாள் ஆவி பிடித்த பெண்ணைக் குணப்படுத்தி அனுப்பிய பிறகு டாக்டர் ஸ்டீஃபனின் மனத்துக்குள் ஒவ்வொரு சம்பவமாகச் சட்டென்று கடந்து சென்ற

எண்ணங்கள் மிக விரைவில் கேள்விக்குறிகளாக மீதமாயின.

கதவை மூடும் சத்தம்.

தொடர்ந்து அவரது பூட்ஸுகள் தரையில் பதியும் சத்தம். தரையில் கால்களை அழுந்தப் பதித்துக் கொண்டு நெருங்கி வந்து கொண்டிருந்தார் டாக்டர் லூயிஸ்.

''ஹலோ டாக்டர் ஸ்டீஃபன்!'' மிகுந்த மகிழ்ச்சியுடன் அவர் கை நீட்டினார்.

டாக்டர் ஸ்டீஃபன் தன் வலக்கையை நீட்டினார். இரண்டு கைகளும் இணைந்து பிரிந்தன.

''ஆ!'' டாக்டர் ஸ்டீஃபன் தன்னையும் மீறிக் கூவினார். குளிர்... தாங்க முடியாத குளிர்!

நத்தையின் உடலிலுள்ள சில்லிப்பு. வழவழவென்ற சில்லிப்பு.

கைவிரல்களில் பாம்பு ஊர்வது போலிருந்தது. டாக்டர் ஸ்டீஃபன் சட்டென்று கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டார்.

''வாங்க... உட்காருங்க!'' டாக்டர் லூயிஸ் நாற்காலி ஒன்றில் அமர்ந்தபடி கூறினார்.

மேஜையின் எதிர்ப்புறம் இருந்த நாற்காலியில் ஸ்டீஃபன் அமர்ந்தார்.

டாக்டர்கள் இருவரும் உட்கார்ந்ததும் எமிலி பக்கத்து அறைக்குச் சென்றாள்.

''சும்மாதான் வந்திருக்கிறேன்!'' என்ற டாக்டர், தனது பாக்கெட்டிலிருந்து சிகரெட் பாக்கெட்டையும், லைட்டரையும் எடுத்து மேஜை மீது வைத்தார்.

டாக்டர் ஸ்டீஃபன் எப்போதாவதுதான் சிகரெட் புகைப்பார். ஆஸ்பத்திரிக்குள் அவர் சுத்தமாகவே புகைப்ப

தில்லை. ஆனால், டாக்டர் லூயிஸ் புகைக்கும்போது ஒரு சில சந்தர்ப்பங்களில் கம்பெனி கொடுக்க நேர்ந்திருக்கிறது.

இன்றைக்கு ஸ்டீஃபனுக்கு ஏதோ ஒரு சந்தேகம் தோன்றியது. டாக்டர் லூயிஸ் தன்னை இல்லாமலாக்க வேண்டும் என்பதில் தீவிரமாக இருப்பவர். எனவே, அவரிடம் சற்று எச்சரிக்கையாகத்தான் நடந்துகொள்ள வேண்டும்.

இருப்பினும், டாக்டர் ஸ்டீஃபன் அந்த பாக்கெட்டி லிருந்து சிகரெட் ஒன்றை எடுத்து அதன் பெயரைப் பார்த்தார்.

உலகின் முதல்தரமான சிகரெட். விலையுயர்ந்ததும்கூட.

''நல்ல சிகரெட்தான்! பத்த வையுங்க!'' டாக்டர் லூயிஸ் கூறினார்.

''வர வர சிகரெட்கூட எனக்கு அலர்ஜியாகுது!'' டாக்டர் ஸ்டீஃபன் கூறினார்.

''என்னமோ... எனக்கு இன்னிக்கு இங்கே வரணும்னு தோணிச்சு. உடனே கிளம்பிட்டேன்!'' டாக்டர் லூயிஸ் சொல்லிக்கொண்டிருக்கும்போதே வெளியில் கார் ஒன்று வந்து நின்றது.

அதிலிருந்து நான்கு பேர் நோயாளி ஒருவரைத் தாங்கிப் பிடித்து அழைத்து வந்தனர்.

டாக்டர் லூயிஸ் அந்த நோயாளியை நெருங்கினார்.

''என்ன... இன்னுமா அவள் கண் திறக்கலை?''

அதைக் கேட்டதும் நோயாளியின் உடன் வந்தவர்கள் ஆச்சரியத்துடன் டாக்டர் லூயிஸைப் பார்த்தனர்.

''இல்லை டாக்டர். கிட்டத்தட்ட ஒரு மணி நேரமாகுது. எந்தவிதமான சத்தமோ அசைவோ கிடையாது.''

டாக்டர் லூயிஸ் வெறும் கையால் அவளின் நாடித் துடிப்பை கவனித்தார்.

''இவளை உடனே ஆபரேஷன் தியேட்டருக்குக் கூட்டிட்டு வாங்க! சீக்கிரம் சீக்கிரம்!'' டாக்டர் லூயிஸ் அவசரப்படுத்தினார்.

அடுத்த விநாடி, தாங்கி வந்தவர்களின் உதவியுடன் அவள் ஆபரேஷன் தியேட்டருக்குத் தூக்கிச் செல்லப் பட்டாள்.

தியேட்டர் வாசல் தயாராகத் திறந்து வைக்கப்பட் டிருந்தது.

நோயாளியை ஆபரேஷன் கட்டிலில் படுக்க வைக்கும் போது உடைகள் மொத்தமும் களையப்பட்டன.

நோயாளியைத் தவிர மற்றவர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறினர்.

இப்போது அறைக்குள் டாக்டர் லூயிஸ் மட்டுமே.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அதுவும் ஏறத்தாழ மரணத்துடன் மல்லிட்டுக் கொண்டிருக்கும் ஒரு நோயாளி வந்தபோது எதனால் டாக்டர் லூயிஸ் தன்னை உடன் அழைக்கவில்லை?

இப்போது நோயாளி மயக்கமடைந்த நிலையில் வேறு கிடக்கிறாள்.

'உதவியாளர் என்ற நிலையிலாவது டாக்டர் லூயிஸ் என்னை உடன் கொண்டு போயிருக்கலாம்' டாக்டர் ஸ்டீஃபன் நினைத்தார்.

ஸ்டீஃபன் தனது கடிகாரத்தைப் பார்த்தார்.

'என்ன கடிகாரம் இப்போதும் பின்னோக்கிச் சுழல்கிறதா?'

விநாடியின் எதிர்த்திசையில் விரைந்து கொண்டிருந்தது.

டாக்டர் ஸ்டீபன் கடிகாரத்தைத் தன் கையிலிருந்து அவிழ்த்து எடுத்தார்.

எலெக்ட்ரானிக்ஸ் கடிகாரம்.

அதன் சாவியைப் பிடித்து வலப்புறமாகத் திருகினார்.

பின்னோக்கிச் சுழன்று கொண்டிருந்த முள் சட்டென்று நின்றது. பிறகு முன்னோக்கி நகர முற்பட்டபோது, கடிகாரத்திலிருந்து, 'டிக்' என்றொரு சத்தம் கேட்டது.

வாட்ச் நின்றுவிட்டது.

டாக்டர் ஸ்டீஃபன் ஆச்சரியகரமான அந்தச் செய்தியை மனத்தில் பாதுகாத்தார்.

சுமார் பதினைந்து நிமிடங்கள் கடந்திருக்கலாம்.

டாக்டர் லூயிஸ் ஆபரேஷன் தியேட்டரிலிருந்து வெளியே வந்தார்.

அவர் எமிலியை அழைத்தார்.

"என்னங்க டாக்டர்?" என்றவாறே அவள் பயத்துடன் எழுந்தாள்.

"சிஸ்டர். இந்தப் பெண்ணுக்கு, அவளோட உடைகளைக் கொடுத்து, உடுத்தின பிறகு வெளியில கூட்டிட்டு வாங்க!" டாக்டர் லூயிஸ், எமிலியிடம் கூறினார்.

நோயாளி அதற்குள் இறந்துவிட்டிருப்பாள் என்று நினைத்தாள் எமிலி. ஆனால், அவளுக்கு உடை அணிவிக்குமாறு டாக்டர் சொன்னதும் எமிலி குழப்பம் அடைந்தாள். ஆபரேஷன் தியேட்டரில் அந்தப் பெண்ணை உயிருடன் பார்த்த பிறகுதான் எமிலியின் மூச்சு சீரானது.

எமிலி ஆபேரஷன் தியேட்டருக்குள் நுழைந்தபோது, அங்கு விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அந்தப் பெண் ஆபரேஷன் டேபிளில் மட்டமல்லாக்கப் படுத்துக் கிடந்தாள்.

மங்கலான நீல நிற வெளிச்சத்தில் முன்பின் தெரியாத அந்தப் பெண் நிர்வாணமாகப் படுத்துக் கிடப்பதைப் பார்த்தபோது எமிலியின் இதயத்துடிப்பின் வேகம் சட்டென்று அதிகரித்தது.

ஒருவேளை டாக்டர் ஒரு பேச்சுக்காகச் சொன்னாரோ?

ஆனால், எமிலியின் சந்தேகத்தை நீக்குவது போல் அந்தப் பெண் எமிலி நெருங்கியதும் டேபிளில் எழுந்து உட்கார்ந்தாள்.

பின்பு எமிலியை நோக்கி நடந்து வந்தாள். இப்படிப் பட்ட ஒரு காட்சியை வாழ்க்கையில் முதல் தடவையாகப் பார்த்தாள் எமிலி. எனினும், அவள் எழுந்து வந்ததில் எமிலி ஓரளவுக்கு ஆறுதல் அடைந்தாள்.

அவள் நெருங்கி வந்தாள்.

''உடம்புக்குப் பரவாயில்லையா?'' என்று கேட்க முற்பட்டாலும் என்ன காரணத்தாலோ, எமிலி அதைக் கேட்கவில்லை.

அவளது உடைகளை எடுத்துக் கொடுத்து அணியச் செய்தபின் அவளை ஆபரேஷன் தியேட்டருக்கு வெளியே அழைத்து வந்தாள் எமிலி.

அந்தப் பெண்ணின் மார்பில் சிறிய கீறல் ஒன்று தென்பட்டது. அந்தக் கீறல் உலர்ந்து போயிருப்பதாகவும் தோன்றியது. மார்புப் பகுதியைப் பிளந்து பிறகு சேர்த்துத் தைத்தாற் போலிருந்தது.

''உங்க பேரு?'' எமிலி கேட்டாள்.

''ரீனா!'' அவள் பதிலளித்தாள்.

''இதுக்கு முன்னால உங்களுக்கு ஹார்ட் ஆபரேஷன் நடந்திருக்கா... இல்லையா?''

"ஹார்ட் ஆபரேஷனா? எனக்கா? நீங்க என்ன கேட்குறீங்க சிஸ்டர்?" அந்தப் பெண் சந்தேகத்துடன் கேட்டாள்.

"ஒண்ணுமில்லை... சும்மாதான் கேட்டேன்." எமிலி மழுப்பினாள்.

அவர்கள் இருவரும் வெளியே வந்தபோது, நோயாளி யுடன் வந்தவாகள் ஆவலுடன் காத்திருந்தனர்.

"டாக்டர், நாங்கள் எவ்வளவு பணம் கட்ட வேண்டும்?" அவர்களில் ஒருவர் டாக்டர் லூயிஸிடம் கேட்டார்.

"நாளைக்குக் காலையில வாங்க. நான் இங்கேதான் இருப்பேன்!" டாக்டர் லூயிஸ் பதிலளித்தார்.

உடன் வந்தவர்கள் நோயாளியை வெளியே அழைத்துச் சென்றனர். சற்று நேரத்தில் அவர்கள் வந்த கார் கிளம்பிச் செல்லும் சத்தம் கேட்டது.

"டாக்டர் ஸ்டீஃபனுக்கு நைட் டியூட்டி இல்லையா? நான் வரட்டுமா?" டாக்டர் லூயிஸ் விடை பெற்றார்.

"சரி, சார்!" ஸ்டீஃபன் விடை கொடுத்தார்.

டாக்டர் லூயிஸின் கார் கிளம்பிச் சென்ற பிறகு எமிலி, டாக்டர் ஸ்டீஃபனிடம் வந்தாள்.

"உங்களுக்கு விஷயம் தெரியுமா டாக்டர்?" எமிலி கேட்டாள்.

"சொல்லுங்க!" ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த ஸ்டீஃபன் கூறினார்.

"அந்தப் பெண்ணின் நெஞ்சில் அறுத்துத் தைத்த அடையாளம் இருந்தது."

"நிஜமாவா!" ஸ்டீஃபன் உட்கார்ந்த இடத்திலிருந்து துள்ளி எழுந்தார்.

''ஆமாம் டாக்டர். ஆபரேஷன் முடிந்து தையல் போட்டது மாதிரியான சரியான அடையாளம் இருந்தது. நான் பார்த்தேன்.''

''ஒருவேளை இதுக்கு முன்னால அப்படி ஏதாவது நடந்திருக்குமோ என்னவோ?''

''அப்படி எதுவும் இல்லையாம். அதையும் நான் கேட்டுட்டேன்.''

''அது உண்மையானால்...'' டாக்டர் ஸ்டீஃபனின் யோசனை, மற்றொரு பாதைக்குத் திரும்பியது.

'பைசாசிக சக்தியுள்ள டாக்டர் லூயிஸ், அந்தப் பெண்ணின் இதயப் பகுதியைத் தன் கைகளாலேயே பிளந்திருக்க வேண்டும். பிறகு நின்றுபோன இதயத்தைச் செயல்பட வைத்து, அதன் பிறகு தைத்திருக்கலாம்.

'ச்சே... ச்சே!' தன் மனம் ஏன் இப்படியெல்லாம் யோசிக்கிறது. எனினும், அவர் மனத்தில் அந்தக் காட்சிதான் திரும்பத் திரும்ப வந்தது.

'டாக்டர் லூயிஸ் அப்படிச் செய்யக்கூடியவர்தான். அவர் ஒரு பிசாசு!'

அந்தப் பெண் வரப்போகிறாள் என்பதைத் தெரிந்து கொண்டுதான் அவர் ஆஸ்பத்திரிக்கு வந்திருக்க வேண்டும்.

அப்படியானால், அப்படிப்பட்ட ஒரு திறமையும் அவரிடம் உள்ளதா?

அப்போது ஸ்டீஃபன் மற்றொன்றையும் நினைவு கூர்ந்தார். கிளம்பும்போது டாக்டர் லூயிஸ் தன்னைப் பார்த்த பார்வை!

'கடவுளே... அப்படி எதுவும் நடக்காமல் இருக்கட்டும்?' டாக்டர் ஸ்டீஃபன் தன் நெஞ்சில் சிலுவை போட்டுக் கொண்டார்.

# 18

'ஒருவேளை எனக்கு மட்டும் அப்படித் தோன்றியிருக் குமோ?' டாக்டர் ஸ்டீஃபன், தான் பார்த்த பயங்கரக் காட்சியை, அப்படியல்ல என்று அவரே ஆறுதல்படுத்திக் கொள்வதற்காக மாற்றி யோசிக்க நினைத்தார்.

'இல்லை... அது நான் என் கண்ணால் கண்ட காட்சி!'

மீண்டும் அந்தக் காட்சியை நினைவுகூர அவர் முயன்றார்.

டாக்டர் லூயிஸ் திரும்பிப் பார்த்தார். ஆனால், அவரது உடம்பு திரும்பவில்லை. தலை மட்டுமே திரும்பியது. அதாவது ஜாடி ஒன்றின் மூடி திரும்புவது மாதிரி, அவர் கழுத்து திரும்பியது.

இப்படிப்பட்ட ஒரு காட்சியை விளக்கும் நாவலை தான் வாசித்திருப்பது அவருக்கு ஞாபகம் வந்தது.

அந்த நாவலில் பெண் குழந்தை ஒருத்தி தன் தலையை இப்படித்தான் திருப்புவாள். சந்தேகமில்லை. அதே மாதிரிதான் டாக்டர் லூயிஸின் தலையும் அப்போது திரும்பியது.

''எமிலி!'' டாக்டர் ஸ்டீஃபன் அழைத்தார். அவள் சட்டென்று திடுக்கிட்டுத் திரும்பினாள். அவளின் இரண்டு கை விரல்களும் தன் கழுத்துச் சங்கிலியில் கிடந்த சிலுவையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தன.

''என்ன... பயந்துட்டீங்களா?'' டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

''ஆமாம் டாக்டர்... நான் ஏகத்துக்கு பயந்து போனது தான் உண்மை!'' அவள் உண்மையை ஒப்புக் கொண்டாள்.

''உண்மையான காரணம்?''

''பெரிய டாக்டர் திரும்பிப் பார்த்தபோது...'' அவள் மீதியைச் சொல்லத் தயங்கினாள்.

''பயப்பட ாமச் சொல்லுங்க!'' ஸ்டீஃபன் தூண்டி விட்டார்.

''அவர் முகம் சட்டுன்னு திரும்பிச்சு... அதுவும் நேருக்கு நேரா!''

''அப்ப நீங்களும் அதை கவனிச்சிருக்கீங்க. என்னோட பிரமை மட்டுமில்லை.''

''உண்மைதான் சார்!''

''நம்ம ரெண்டு பேருக்கும் அது பிரமையாத் தெரிஞ் சிருக்கலாம் இல்லையா?'' டாக்டர் ஸ்டீஃபன் அவளது பயத்தைத் தணிக்க முயன்றார்.

''ஒருவேளை நீங்க சொல்றதும் சரியா இருக்கலாம் டாக்டர்!''

டாக்டர் ஸ்டீஃபன் புன்னகைத்துக் கொண்டார்.

மறுநாள் டியூட்டி முடிந்ததும் டாக்டர் ஸ்டீஃபன், ஃபாதர் இம்மானுவேலுவிடம் போனார்.

வரவேற்பு அறையில் உட்கார்ந்திருந்த ஃபாதர், டாக்டரை அன்புடன் வரவேற்றார். சமையற்கட்டுப்பக்கம் பார்த்து, ''ரெண்டு பேருக்கு டீ வேணும்!'' என்று குரல் கொடுத்துவிட்டு டாக்டருடன் அங்கு அமர்ந்தார்.

''யாராவது இன்னிக்கு வருவாங்கன்னு நெனைச்சேன். அதனாலதான் அரை மணி நேரமா டீ சாப்பிடாம உட்கார்ந்திருக்கேன்!'' ஃபாதர் சொன்னார்.

சற்று நேரத்தில் டீயும் பலகாரங்களும் வந்து சேர்ந்தன.

''ரொம்ப முக்கியமான விஷயத்துக்காக யாராவது வந்தால் மட்டும் என்கிட்ட வந்து சொல்லு. இல்லேன்னா,

கொஞ்சம் காத்திருக்கச் சொல்லு!'' ஃபாதர், சமையற் காரரிடம் கூறினார்.

அவர் அப்படிச் சொன்னதற்கும் ஒரு காரணம் இருந்தது. ஒரு சிலர் பொழுதுபோக்குவதற்காகப் பேசிக் கொண்டிருக்க வருவார்கள். அவர்கள் அவ்வளவு சீக்கிரமாகக் கிளம்ப மாட்டார்கள். அதனால்தான் ஃபாதர் அப்படிச் சொன்னார்.

சமையற்காரர் அங்கிருந்து கிளம்பினார்.

டீ குடித்த பிறகு பாத்திரங்களையெல்லாம் டிரேயில் போட்டு, ஓர் ஓரமாக ஒதுக்கி வைத்தார்.

''நான் உங்க கிட்ட சில முக்கியமான விஷயங்கள் பேச வேண்டியிருக்கு'' என்ற ஃபாதர், மேஜையைத் திறந்து அதற்குள்ளிருந்து பேக் ஒன்றை வெளியே எடுத்தார்.

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் விளம்பரம் பொறிக்கப் பட்ட பேக் அது. அதிலிருந்து நான்கு அல்லது ஐந்து கடிதங்களை எடுத்து டீப்பாயின் மீது போட்டார் ஃபாதர்.

அது வெளிநாட்டுக் கடிதங்கள் என்பது, அதன் வண்ணங் களிலிருந்து தெரிந்தது.

''நமக்குத் தேவையான பல விவரங்கள் இந்தக் கடிதங்களில் உள்ளன.''

''இதெல்லாம்...'' டாக்டர் ஸ்டீஃபன் விசாரித்தார்.

''என் நண்பர்கள் அனுப்பிய கடிதங்கள்தான்... திறந்து வாசிங்க!''

டாக்டர் ஸ்டீஃபன் கவர் ஒன்றைக் கையில் எடுத்தார், பிரித்தார்.

அது ஒரு பெரிய கடிதம்.

அதற்குள் இருந்தவை ஆவலை ஏற்படுத்தும் செய்திகளாக இருந்தன. எனவே, அதை விரைவாக வாசிக்கத் தொடங்கினர்.

அதை வாசிக்கும்போது அவர் முகத்தில் பல்வேறு உணர்வுகள் அலையடித்தன. அந்த அளவுக்கு முக்கியமான விஷயங்கள் அதில் இருந்தன.

டாக்டர் லூயிஸ் ருமேனியாவில் கொஞ்ச நாட்கள் தங்கியிருந்தார். அப்போது அங்கு நடைபெற்ற சில விஷயங்களை அங்குள்ள நண்பர் ஒருவர் எழுதியிருந்தார். அந்தக் கடிதம் சிறிய எழுத்துகளில் அழகாக டைப் செய்யப்பட்டிருந்தது.

அதன் உள்ளடக்கம் இதுதான்.

'டாக்டர் லூயிஸ் ருமேனியாவில் உள்ள மருத்துவக் கல்லூரி ஒன்றின் ஆஸ்பத்திரியில் இதயமாற்று அறுவைச் சிகிச்சையில் மேற்படிப்பில் ஈடுபட்டிருந்தார். ஒரு நாள் இரவில் லூயிஸின் அறையில் ஏதோ ஒரு சத்தம் கேட்டது. பக்கத்து அறையிலிருந்த டாக்டர் என்னமோ ஏதோவென்று ஓடிவந்து பார்த்தபோது டாக்டர் லூயிஸ் அசைவற்றுப் படுத்திருந்தார்.

தேடிவந்த டாக்டர் ராய் வில்சன், டாக்டர் லூயிஸை சோதித்தபோது அவர் இறந்துபோயிருப்பது விளங்கியது.

அப்போது இரவு மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகிவிட்டிருந்தது.

டாக்டர் ராய், உடனேயே மற்றொரு டாக்டரை அழைத்து வந்து டாக்டர் லூயிஸை பரிசோதிக்குமாறு கூறினார்.

டாக்டர் லூயிஸ் இறந்துவிட்டதை அவரும் உறுதி செய்தார்.

உடனேயே அவர்கள் முறைப்படி டாக்டர் லூயிஸின் உடலை மார்ச்சுவரிக்கு எடுத்துச் சென்று பத்திரப்படுத்தினர்.

பொழுது விடிந்த பிறகு டாக்டர் லூயிஸ் இறந்த தகவலை மற்றவர்களிடம் தெரிவித்துவிட்டு, அவரது உடலை அவரது சொந்த நாட்டுக்கு அனுப்பிவைக்கவும் ஏற்பாடுகள் செய்ய முற்பட்டனர். அப்போதுதான் அவர்கள் அந்தக் காட்சியைக் கண்டனர். டாக்டர் லூயிஸ், தனது அறையின் ஜன்னல் கதவைத் திறந்து வைத்தபடி வெளிப்புறத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

முந்தைய இரவில் டாக்டர் லூயிஸின் மரணத்தை உறுதி செய்த டாக்டர்கள் இருவருமேதான் அப்போது அந்தக் காட்சியைக் கண்டவர்கள். அவர்களால் தங்கள் கண்களையே நம்ப முடியவில்லை.

"இது எப்படி சாத்தியம்?" அவர்கள் இருவரும் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர்.

டாக்டர் லூயிஸிடம் இதைப் பற்றி ஏதாவது கேட்க முடியுமா என்ன? அவரைத்தானே அவர்கள் மார்ச்சுவரியில் கொண்டு போய் பத்திரப்படுத்தினார்கள்? எனவே, இதைப் பற்றி வெளிப்படையாகப் பேசவே அவர்கள் பயந்தனர்.

அதனால் அந்தத் தகவலையே அவர்கள் தங்களுக்குள் ரகசியமாக வைத்துக் கொண்டனர்.

இருந்தாலும் அந்த இருவரும் மட்டும் தனியாக இருக்கும்போது இந்த விஷயத்தைக் குறித்துத் தங்களுக்குள் விவாதிப்பது வழக்கம்.

ஒரு கட்டத்தில் இந்தத் தகவலை அவர்கள் தங்களது நம்பிக்கைக்கு உகந்த பாதிரியார் ஒருவரிடம் தெரிவித்தனர்.

உடனே அந்தப் பாதிரியாருக்கு அதைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டது. எனவே, அவர் அது குறித்து விசாரிக்கத் தொடங்கினார்.

மரணத்துக்குப் பிந்தைய வாழ்க்கைகள் குறித்து விளக்கும் பல நூல்களை அவர் படித்தார். ஆனால், அவை எதிலும் இப்படிப்பட்ட வாழ்க்கை குறித்து எதையும் விவரிக்க வில்லை.

மறுபிறவி உண்டு என்று ஆணித்தரமாக வாதிட்ட, உண்மைக் கதைகள் பலவற்றை அவர் தேடித் தேடி வாசித்தார். ஒருபோதும் பார்த்தே இராத ஒரு பெரிய மாளிகைக்குள் முன்பின் அறிமுகமில்லாத சிறு பெண் ஒருத்தி நுழைந்தது மட்டுமின்றி, அந்த வீட்டின் மிகமிகப் பழைமையான ரகசியங்களைக் குறித்துப் பேசியதும் ஒரு கட்டுரையில் இடம்பெற்றிருந்தது.

ஆனால், அதெல்லாம் அபூர்வமான சம்பவங்கள்தான். அப்படிப்பட்ட கதைகள் அல்லது கட்டுரைகளை வாசித் திருப்பதால் அந்தப் பெண்குழந்தை சொன்னதெல்லாம் வெறும் யூகத்தின் அடிப்படையில்தான் என்றும் யதேச்சை யாக அவை உண்மையுடன் பொருந்தி விட்டன என்றும் சிலர் எதிர்வாதம் செய்தனர்.

அப்படியானால், இது மட்டும் எப்படி நிகழ்ந்தது?

டாக்டர் லூயிஸின் உடலிலுள்ள எல்லா உறுப்புகளும் செயலிழந்துவிட்டிருந்தன. மட்டுமின்றி, அதன் பிறகு எந்த விதமான சிகிச்சையும் செய்யப்படாமல் அந்த உடல் மணிக்கணக்கில் மார்ச்சுவரியில் கிடந்திருக்கிறது.

உயிருள்ள ஒரு மனிதரை அவ்வளவு நேரம் மார்ச்சு வரியில் போட்டிருந்தாலே அவர் இறந்துபோய் விடுவார். ஆனால், இங்கு இறந்துபோன ஒரு மனிதர் உயிருடன் எழுந்து வந்திருக்கிறார்.

அந்தப் பாதிரியாரை இந்தப் பிரச்சினைதான் அதிகமாக அலைக்கழித்தது.

கடைசியில் அவர் ஒரு தீர்மானத்துக்கு வந்தார்.

டாக்டர் லூயிஸின் உடலில் ஏதோ ஒரு பைசாசிக சக்தி இருந்திருக்க வேண்டும். அல்லது அது, அந்த மார்ச்சுவரியில் கூட அவரது உடலில் நுழைந்திருக்கலாம்.

அந்தச் சக்தி எது?

இதற்கு முன்பு இதுமாதிரியான சம்பவங்கள் ஏதேனும், எங்காவது நிகழ்ந்திருக்கிறதா?

யாராலும் யூகிக்கக்கூட முடியாத ஒரு பிரச்சினை இது.

இதே மாதிரி விடை கிடைக்காத கேள்விகள் பூமியில் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

இறந்துவிட்டதாகச் சொல்லும்போது அதுவரை அந்த உடலுக்குள் இருந்த ஆத்மா எங்கு போகிறது?

அந்த ஆத்மா உண்மையில் நல்லதா, கெட்டதா.

ஒருவேளை நல்லது, கெட்டது என்று இரு வகைகள் இருக்கக்கூடும்.

அதில் கெட்ட ஆவி ஏதாவது டாக்டர் லூயிஸின் உடலுக்குள் நுழைந்திருக்குமோ?

இப்படியாகத் தீவிர ஆராய்ச்சிக்குப் பிறகு அவர் இறுதியான ஒரு தீர்மானத்துக்கு வந்தார்.

டாக்டர் லூயிஸ் சாத்தானின் ஆலயத்துக்கு அடிக்கடி செல்லும் பக்தனாக இருப்பார்.

பாதிரியாரின் விசாரணையில் டாக்டர் லூயிஸ் தினமும் இரவு நேரத்தில் வசிப்பிடத்திலிருந்து வெளியேறியது விளங்கியது.

அப்படியானால் டாக்டர் லூயிஸ், சாத்தானின் ஓர் உபாசகர் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

அதனால் அவருக்கு சாத்தானின் அருள் கிடைத்திருக் கிறது.

இப்படியாகச் சாத்தான் அவரது உடலில் நுழைந்திருக்கிறது.

அது, அவரது மரணம் நிகழ்ந்த உடனேகூட நடந்திருக்கலாம்.

இறந்துபோன மனிதரை உயிருடன் எழுப்புவது சாத்தானால் முடியாத விஷயம்.

எனவே, டாக்டர் லூயிஸைத் தனது விருப்பப்படி ஆட்டிவைப்பதற்காக சாத்தான் அவரது உடலுக்குள் புகுந்திருக்கலாம்.

இது உண்மையானால், அந்த உடலில் இப்போது செயல்படுவது சாத்தான்தான்.'

இதுதான் அதன் உள்ளடக்கம்.

டாக்டர் ஸ்டீஃபன் அதை முழுசாக வாசிப்பது வரை ஃபாதர் இம்மானுவேல் காத்திருந்தார்.

''இப்படி நடந்திருப்பதற்குத்தான் வாய்ப்பு அதிகம்!'' டாக்டர் ஸ்டீஃபன் கூறினார்.

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. நமது பலவீனமான சந்தர்ப்பங்களை அவன் பயன்படுத்திக்கொள்ள நாம் வாய்ப்பு அளிக்கக்கூடாது!''

அப்போது அதையொட்டிய அறைக்குள் காற்று பலமாக வீசியது.

## 19

மூடிக் கிடந்த பக்கத்து அறைக்குள் காற்று வீசியபோது ஃபாதர் இம்மானுவேல் சந்தேகம் நிரம்பியவராக டாக்டர் ஸ்டீஃபனைப் பார்த்தார்.

அந்தக் காற்றில் அசைவற்றுக் கிடந்த ஃபேனின் இதழ்கள் அசைந்தன. மேஜை விரிப்பு அசைந்தது. மட்டுமின்றி, அந்த அறையை இரண்டாகப் பிரித்திருந்த திரைச்சீலையும் அலைக்கழித்தது.

ஃபாதர் இம்மானுவேல் எழுந்து சுவரில் பதித்திருந்த இயேசு சிலைக்கு முன்பாக மெழுகுவத்தி ஒன்றை ஏற்றி வைத்தார்.

மெழுகுவத்தி சற்றுத் தயங்கி, ஒரு தடவை சோம்பல் முறித்துவிட்டு, சக்தி பெற்றதுபோல் எரியத் தொடங்கியது.

அந்தக் காற்று மெழுகுவத்தியின் ஜுவாலையை பாதிக்கவே இல்லை. சற்று நேரத்துக்குள் அந்த அறைக்குள் எல்லாமே அசைவற்றுப் போயின. சுழன்றுகொண்டிருந்த ஃபேனின் இறக்கைகள்கூட நின்றுவிட்டன.

''கொஞ்சம் மிரட்டிப் பார்த்திருக்கிறான்!'' டாக்டர் ஸ்டீஃபன் சொன்னார்.

''என்ன இருந்தாலும் அது இந்த அறைக்குள் நடக்காது!'' ஃபாதர் தன் கழுத்தில் கிடந்த வெள்ளிச் சிலுவையை விரல்களால் வருடிக்கொண்டிருந்தார்.

''ஓரளவுக்கு நமக்கு விஷயம் விளங்கிவிட்டது. இப்போது நாம் என்ன செய்யலாம்?'' டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

''அவ்வளவு சுலபத்தில் நம்மால் அவனைக் கட்டுப்படுத்த முடியும் என்று நினைக்காதீர்கள்.''

''ஏன்?''

''அவன் குள்ளநரியைவிடப் பெரிய தந்திரசாலி. அவனுக்கு எதிராகச் செயல்படுபவர்களை அவனால் சட்டென்று அடையாளம் கண்டுபிடித்துவிட முடியும். அதற்காக இயற்கையின் சக்திகளைப் பயன்படுத்தும் வல்லமையும் அவனுக்கு இருக்கிறது.

''வேறு என்னதான் செய்வது?''

"அவன் முற்றிலும் எதிர்பாராத வலைக்குள் அவனை விழவைக்க வேண்டும். அதிலிருந்து தப்பிக்க முடியாதபடி சுற்றிலும் பாதுகாப்பு அரண் அமைக்க வேண்டும்."

"அப்படியொரு தாக்குதல் சாத்தியமா?"

"ஏன் சாத்தியமில்லை? உதாரணமாக அவனை இந்த தேவாலயத்துக்குள் வரவழைப்பதற்கான முயற்சிகளை நாம் செய்வதாக வைத்துக் கொள்வோம். அதற்கு முன் அவன் இங்கிருந்து வேறு எந்த ஓர் ஓட்டை வழியாகவும் தப் பிக்காதபடி எல்லாவற்றையும் அடைத்து வைக்க வேண்டும். அவன் உள்ளே நுழைந்த பிறகு, கடைசியாக அந்த வாசலை யும் அடைத்துவிட வேண்டும்."

"தேவாலயத்துக்குள் அவன் நுழைவானா என்பதுதான் எனது சந்தேகம்?" டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

"அப்படி ஒரு நிலை வரும்போது அதற்கான வழியை நான் கண்டுபிடிப்பேன்." ஃபாதர் உறுதியளித்தார்.

இரவு முதிர்வதற்கு முன் ஸ்டீஃபன் அங்கிருந்து கிளம் பினார். இரவு நேரத்தில் வீணாக அவனது சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அதைத் தவிர்ப்பதுதான் அவரது நோக்கம்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு ஃபாதர் இம்மானுவேல், முதலாளி சேவியரின் வீட்டுக்கு வந்தார்.

நீண்டநாள் இடைவெளிக்குப் பிறகு ஃபாதர் அந்த வீட்டுக்கு வருகிறார். கடவுள் பக்தியுள்ள ஒரு குடும்பம் சேவியரினுடையது. மாதா கோயில் தொடர்பான விஷயங் களுக்கு கணக்குவழக்கே இல்லாமல் வாரிக் கொடுப்பவர் சேவியர் முதலாளி.

எந்தக் காலத்திலும் அவர் அப்படித்தான்.

எலெக்ட்ரிக் மணி உட்புறம் ஒலித்ததும் கதவு திறக்கப் பட்டது. காரணம், கேட்டைக் கடந்து ஃபாதர் வருவதை நான்சி கவனித்தாள். அவள்தான் கதவைத் திறந்தவள்.

''கர்த்தருக்கு ஸ்துதி!'' அவள் ஃபாதருக்கு முன்பாகத் தலை குனிந்தாள்.

ஃபாதர் அவளை ஆசீர்வதித்தார்.

''எங்களையெல்லாம் சுத்தமா மறந்துடலைங்கிறது விளங்குது!'' அவள் கூறினாள்.

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லம்மா! அப்பாவும் அம்மாவும் எங்கே போயிருக்காங்கம்மா?'' ஃபாதர் கேட்டார்.

''ஃபாதர் உக்காருங்க. நான் இதோ வந்துடறேன்.'' நான்சி உட்புறம் சென்றாள்.

அரண்மனை போன்ற ஒரு வீடு அது. ஏராளமான அறைகள் கொண்ட இரண்டு மாடிக் கட்டடம். அழகான வரவேற்பு அறை. வீடு முழுக்க விலையுயர்ந்த பொருட்கள். உண்மையான பூக்கள் மலரும் செடிகள், பூச்சட்டிகளில் முளைத்திருந்தன.

அந்தச் செடிகளுக்கு நடுவே சிலைகள் நின்று கொண்டிருந்தன.

அந்த வரவேற்பு அறையே ஒரு பூந்தோட்டம் மாதிரி இருந்தது.

சற்று நேரத்துக்குப் பிறகு நான்சியின் அம்மா, திரேசியா அம்மா அங்கு வந்து ஃபாதருக்கு வணக்கம் சொன்னாள்.

''நீங்க இங்கே வரப்போறீங்கன்னு சொல்லியிருந்தா, நான் கார் அனுப்பியிருப்பேனே?'' திரேசியாம்மா சொன்னாள்.

''அதுக்கெல்லாம் என்ன அவசியம் இருக்கு. நான்தான் நேரா வந்துட்டேனே!'' ஃபாதர் பதிலளித்தார்.

''நான்சி, ஃபாதருக்கு குடிக்கிறதுக்கு ஏதாவது எடுத்துட்டு வா!'' திரேசியாம்மா உரத்த குரலில் கூறினாள்.

அதைக் கேட்டதும் நான்சி, வீட்டுக்குள் ஓடினாள்.

''அன்னிக்கு வரவேற்பு விழாவில் உங்களைப் பார்த்தது. அதுக்குப் பிறகு இன்னிக்குதான் பார்க்கிறேன்.'' திரேசியாம்மா சொன்னார்.

''உங்களை இப்போ தேவாலயத்துலகூட அடிக்கடி பார்க்க முடியலையே?''

''நான் பக்கத்துல இருக்குற சர்ச்சுக்கு காலையில போயிட்டு வருவேன். அவ்வளவு தூரம் வர்றதுக்கு நேரம் கிடைக்கிறதில்லை. எப்பவும் யாராவது ஒரு விருந்தாளி இருந்துட்டே இருப்பாங்க. எல்லாத்துக்கும் நான் ஒருத்தி தானே ஓடியாடி வேலை செய்ய வேண்டியிருக்கு ஃபாதர்?''

''எல்லாம் சரிதான்! எப்படியிருந்தாலும் நீங்க தவறாம சர்ச்சுக்குப் போறதே எனக்கு சந்தோஷம்தான். அடிக்கடி நான்சியையாவது அங்கே அனுப்பி வைக்கலாம் இல்லையா?'' ஃபாதர் கேட்டார்.

அப்போது மாம்பழச்சாறுடன் நான்சி ஃபாதரை நோக்கி வந்தாள்.

அவள் தலைகுனிந்தபடி அவருக்கு முன்பாக வந்து நின்றாள்.

''இவளுக்கு சர்ச்சுக்கு வர்றதே சோம்பலான விஷயம். இருக்கட்டும் ஃபாதர், நாங்க ரெண்டு பேருமா ஒரு நாள் அங்கே வர்றோம்!'' திரேசியாம்மா சொன்னாள்.

''இவளைக் கல்யாணம் பண்ற ஆள் தினமும் சர்ச்சுக்கு வர்றவரா இருந்தா, இவருக்கும் அது பழக்கமாயிருக்கும்.'' ஃபாதர் சிரித்தவாறே கூறினார்.

உடனே நான்சி உட்புறமாக ஓடினாள்.

''கல்யாணமெல்லாம் கிட்டத்தட்ட நிச்சயமானது மாதிரிதான்!'' திரேசியாம்மா சொன்னார்.

''யாரு மாப்பிள்ளை?'' ஃபாதர் ஆர்வத்துடன் கேட்டார்.

''ஆள் பெரிய ஆளுதான். நம்ம ஆஸ்பத்தியோட பெரிய டாக்டர்தான். ஆனா, அவர் சர்ச்சுக்கே போகாத ஒருத்தர். அதனால பொண்ணோட சோம்பலைப் பொருட்படுத்த வேண்டாம்னு அவங்க அப்பா சொல்றார்.''

''இப்படிச் சொன்னா எப்படி? உங்க ரெண்டு பேரோட குடும்பங்களும் கடவுள் பக்தி நிறைஞ்சது. உங்களை மாதிரி ஆளுங்கள்லாம் சர்ச்சுக்கு வந்தால்தான் சாதாரணமானவங் களுக்கும் அதுல எல்லாம் ஒரு பிடிப்பு வரும். உண்மையைச் சொன்னா, நீங்கள்லாம்தான் அவங்களுக்கு ஒரு முன்னோ டியா இருக்கணும்.''

''நீங்க சொல்றதும் சரிதான்!''

''சேவியர் இங்க இல்லையா?'' ஃபாதர் கேட்டார்.

''ஆஸ்பத்திரியில ஒரு புது பிளாக் கட்டுறாங்க. கேன்சர் பிளாக். இன்னிக்குத்தான் அதோட அடிக்கல் நாட்டு விழா.''

''நல்ல விஷயம். ஆஸ்பத்திரி மேலும் மேலும் வளர்றது சந்தோஷமான விஷயம். எல்லாம் கர்த்தரோட அருள்!''

''டாக்டர் லூயிஸ் வந்த பிறகுதான் ஆஸ்பத்திரிக்கு இவ்வளவு பேரும் புகழும். குறிப்பாகச் சொல்லணும்னா மெடிக்கல் காலேஜிலேயே கைவிட்ட கேஸையெல்லாம் இவர் வெற்றிகரமா கையாண்டார்!''

அதைக் கேட்டதும் ஃபாதரின் நெற்றி சுளிவடைந்தது.

'பிசாசுகளால்கூட சில நேரம் சில காரியங்களைச் செய்ய முடியும்.' ஃபாதர் மனத்துள் சொல்லிக் கொண்டார்.

ஆனால், அதை எப்படி திரேசியாம்மாவிடம் சொல்ல முடியும். சொன்னால், அவர் அதை உடனே நம்பி விடுவாரா என்ன? ஃபாதர் திட்டமிட்டே கட்டுக்கதை புனைகிறார் என்றுதானே சொல்வார்கள். எனவே, ஃபாதர், அதற்கு எந்தவிதமான பதிலும் அளிக்காமல் மௌனமாக அமர்ந்திருந்தார்.

முதலாளி சேவியரிடம் இந்த விஷயத்தைச் சொல்ல முடியாது. ஆனால், அவரிடம் சொல்வதற்கான ஒரு வழியை அவர் கண்டுபிடித்திருந்தார். அதைச் செயல்படுத்து வதற்காகத்தான் ஃபாதர் இம்மானுவேல் அங்கு வந்து சேர்ந்திருந்தார்.

''நான்சி திடுமென்று எங்கே போனாள்?'' ஃபாதர் கேட்டார்.

''கல்யாண விஷயம் பேசினதும் அவள் வெட்கத்துல வீட்டுக்குள்ள போயிட்டாள்.''

''கல்யாண வேலையெல்லாம் எந்த அளவுல இருக்கு. உடனடியா நடக்குமா என்ன?''

''உடனடியா நடத்தணும். எவ்வளவோ பரபரப்புகளுக்கு நடுவுல வேண்டாமே. கொஞ்சம் நிதானமா பண்ணலாம்னு பார்க்கிறோம்...''

''அதையெல்லாம் பார்த்தா வேலை நடக்குமா? உங் களுக்கு ஆணும் பெண்ணுமா இருக்கிறது ஒரே குழந்தை. நம்ம அசௌகரியங்களுக்காக ஏன் அதனோட சந்தோ ஷத்தைத் தள்ளிப் போடணும்? சரி... உங்க மனசில யாரை நெனைச்சிருக்கீங்க?''

''டாக்டர் லூயிஸ்தான். வேற யாரு''

''நல்ல செலக்ஷன்தான். நானும் அப்படித்தான் இருக் கும்னு நினைச்சேன். அப்ப, இன்னொரு விஷயம் இந்தக் கல்யாணம் என்னோட தேவாலயத்துலதான் நடக்கணும்.

அதுதான் உங்க ரெண்டு பேருக்கும் ரொம்ப நாளா பழக்கமான, பொதுவான சர்ச்!''

''அதுல சந்தேகமே வேண்டாம். கல்யாணம் நடந்தா, அது அங்கதான். அதை நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.'' திரேசியாம்மா உறுதியளித்தாள்.

''இது உங்களோட திட்டம். இந்தக் காலத்து மனுஷங்களை நம்ப முடியாது. அதிலயும் இளைய தலைமுறையை. அதனால, அவங்களுக்குன்னு ஏதாவது யோசனைகள் இருக்கலாம்.''

''எனக்கு அதைப்பத்தி ஒண்ணும் சொல்ல முடியலை. இதோ... அவரே வந்துட்டார்'' என்ற திரேசியாம்மா உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்தாள்.

சேவியரின் கார், முன்புற போர்ச்சில் வந்து நின்றது. அதிலிருந்து தங்க ஃபிரேமிட்ட மூக்குக்கண்ணாடி வைத்த, வழுக்கைத்தலை மனிதர் ஒருவர் இறங்கினார்.

நல்ல உயரம். அதற்கேற்ற உடம்பு. வட்டமுகம். கனமான மீசை. பழகுவதற்கு இனிமையானவர். உள்ளே நுழைந்தவர் ஃபாதரைப் பார்த்ததும் இரண்டு கைகளையும் கூப்பியபடி அவரை நெருங்கினார்.

''நீங்க வந்து ரொம்ப நேரமாச்சா?'' சேவியர் கேட்டார்.

''இல்லையில்லை... இப்பத்தான் வந்தேன். உங்களையெல்லாம் பார்க்க முடிஞ்சதுல ரொம்ப சந்தோஷம். நீங்க அங்க வரலேன்னுதான், நான் உங்களைத் தேடி இங்கே வந்தேன்.''

''ஒரே பரபரப்புதான். இதெல்லாம் வேண்டியதில்லைன்னு இப்பத் தோணுது!'' என்ற சேவியர் ஃபேனின் கீழ் அமர்ந்தார்.

''இப்படியெல்லாம் சொன்னா எப்படி? உங்களை மாதிரி ஆளுங்க இதையெல்லாம் செய்யலேன்னா, சமூகத்துக்கு

வேற யார்தான் உதவுறது? பொதுவா சிட்டி ஆஸ்பத்திரிக்கு இப்ப நல்ல பேராச்சே!''

''அதனாலதான் நான் இதுலயெல்லாம் போய் தலை கொடுத்தேன்.''

''ஏங்க...'' திரேசியாம்மா, தன் கணவரை அழைத்தார்.

''ம்... நீ ஏதாவது சொல்லப் போறியா திரேசியா?''

''நான் சொல்ல வந்தது நம்ம பொண்ணோட விஷயம். ஃபாதர் சொல்றார்... அதை இன்னும் தள்ளிப்போட வேண்டாம்னு!''

''அதையெல்லாம் நீங்க பேசி ஒரு முடிவு பண்ணுங்க. என்னோட ஒரே வேண்டுகோள் நீங்கள்லாம் முடியும் போது நம்ம தேவாலயத்துக்கு வரணும். வரும்போது மறக்காம டாக்டர் லூயிஸையும் கூட்டிட்டு வாங்க!'' ஃபாதர் சொன்னார்.

''இந்த வாரம் முடியாது ஃபாதர். அடுத்த வாரம் கூட்டிட்டு வர்றேன்!'' சேவியர் கூறினார்.

''நான்சியைக் கூப்பிடுங்க!'' ஃபாதர் அவளைப் பார்க்க விரும்பினார்.

திரேசியா அழைத்ததும் நான்சி வந்து சேர்ந்தாள்.

ஃபாதர் தனது அங்கியின் பைக்குள் கைவிட்டு மாலை ஒன்றை வெளியில் எடுத்தார். அது தங்கமாலை போல் பளபளத்தது.

அதன் சிலுவையில் சிவப்பு நிறக் கற்கள் ஐந்து பதிக்கப் பட்டிருந்தன. அவை விளக்கு வெளிச்சத்தில் ஜொலித்தன.

''இந்த மாலை ஸ்பெஷலா வரவழைக்கப்பட்டது. இத்தாலியிலேர்ந்து என் ஃபிரெண்டான ஃபாதர் ஒருத்தர் அனுப்பிக் கொடுத்தார். இது நம்மகிட்ட இருந்தா, ஆவியும்

பிசாசுகளும் ஒருபோதும் நம்மகிட்ட அண்டாது. இதை இப்பவே உங்க கழுத்துல போட்டுக்கம்மா."

அவளுக்கு அந்த மாலை மிகவும் பிடித்துப் போனது.

அவள் அதை உடனேயே கழுத்தில் போட்டுக் கொண்டாள்.

ஃபாதர் அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கிளம்பினார்.

இரவு ஒன்பது மணியானபோது டாக்டர் லூயிஸ் வந்து சேர்ந்தார்.

# 20

டாக்டர் லூயிஸ் வீட்டுக்கு வந்தால், நான்சி அவரிடம் ஆஸ்பத்திரி தொடர்பான தகவல்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வது வழக்கம்.

அவர்களுக்கு இடையில் சுதந்திரமான நட்பும், நடவடிக் கைகளும் இருந்தனவே தவிர வேறு எந்தவிதமான உறவும் நெருக்கமும் இருக்கவில்லை. இந்த விஷயத்தில் டாக்டர் லூயிஸ் மிகவும் எச்சரிக்கையுடன் இருந்தார். தன்னிட மிருந்து எந்தவிதமான தவறான செயல்களும் அந்த வீட்டுக் குள் நடந்துவிடக்கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

அதற்கும் அவருக்கு சுயநலம் சார்ந்த ஒரு காரணம் இருந்தது.

அந்த வீட்டில் உள்ளவர்கள் ஒருபோதும் தன்னைச் சந்தேகப்படக்கூடாது. துரதிர்ஷ்டவசமாக என்றாவது, யாராவது ஒருவர் ஏதாவது மோசமான ஒரு புகாருடன் வந்தால் அதை முதலாளி சேவியரும், அவர் குடும்பத்தாரும்

நம்பிவிடக்கூடாது. அவரின் உறவினர்களும் நம்பிவிடக் கூடாது.

பொறாமையாலோ, விரோதத்தாலோ புகார் சொல்வதாக அவர்கள் கருதவேண்டும். எனவே, லூயிஸ் கெட்டிக் காரத்தனமாகவும், தந்திரபூர்வமாகவுமே அங்கு நடந்து கொண்டார்.

டாக்டர் லூயிஸ் தவிர்க்க முடியாத, தேவையின் பொருட்டு மட்டுமே அங்கு உள்ளவர்களிடம் பேசுவார். நான்சி மட்டுமே பெரும்பாலும் அவரை நெருங்கிப் பேசுவாள். அவள் கோபித்துக் கொள்ளக்கூடாது என்பதிலும் லூயிஸ் கவனம் எடுத்துக்கொண்டார்.

நான்சியைத் தனக்குத் திருமணம் செய்து வைக்க சேவியர் விரும்புகிறார் என்பது டாக்டர் லூயிஸுக்கும் நன்றாகத் தெரியும். ஆனால், தன்னால் அது முடியாது என்பதும் அவருக்குத் தெளிவாகவே விளங்கியது.

கடவுளின் அருள் தவழும் தேவாலயத்துக்குள் தன்னால் நுழைய முடியாது என்பது மற்றொருவரையும்விட லூயிஸுக்கு மிக நன்றாகவே தெரியும்.

எனவே, இன்று நான்சி நெருங்கி வந்ததும் லூயிஸ் தன்னையும் அறியாமல் பின்வாங்கினார்.

மிகவும் வெப்பமடைந்த ஏதோ ஓர் உலோகம் தன்னை நெருங்குவது போல் அவர் உணர்ந்தார்.

'இதற்கு என்ன காரணம்?' என்று அவர் யோசித்தார்.

தன் உடம்பில் நெருப்புக் கொழுந்துகள் வருடுவது போல்... லூயிஸ் சட்டென்று பின்வாங்கினார்.

அதுவும் ஒரு திடுக்கிடலுடன் பின்னோக்கி நகர்ந்தார்.

நான்சி அதைக் கவனிக்கவும் செய்தாள்.

''என்ன... என்ன ஆச்சு?'' அவள் இயல்பான குரலில கேட்கவும் செய்தாள்.

''என்னமோ சட்டுன்னு ஒரு தலைவலி!'' அவர் சொன்னார்.

''சூடா டீ தரட்டுமா?''

''வேண்டாம்! ஒரு கிளாஸ் பச்சைத் தண்ணி போதும்.''

அவள் தண்ணீர் எடுத்து வருவதற்காக விரைந்தாள்.

லூயிஸுக்கு உதவுவதில் அவருக்கு ஆர்வமும் உற்சாகமும் இருந்தது.

நான்சி தன்னிடமிருந்து அகன்றதும், அதுவரை தாங்க முடியாததாகத் தான் உணர்ந்த வெப்பமும் அகன்று விட்டதை டாக்டர் லூயிஸ் உணர்ந்தார்.

'இதற்கு என்ன காரணம்? ஒருவேளை அது தனக்குத் தோன்றிய பிரமை மட்டுமேவா?' லூயிஸ் இப்படி யோசிக்கும்போதே மறுபடியும் தகிக்கும் வெப்பம் நெருங்குவதாகத் தோன்றியது.

அதற்குள் நான்சி அவரை நெருங்கிவிட்டிருந்தாள். தன் கையிலிருந்த தண்ணீர் கிளாஸை அவரிடம் நீட்டவும் செய்தாள்.

அதை கை நீட்டி வாங்க முற்பட்டார் லூயிஸ். ஆனால், கிளாஸில் நிறைந்துள்ள தண்ணீர் பயங்கரமாகக் கொதிப்ப தாக லூயிஸின் கண்களுக்குத் தெரிந்தது. அதில் ஏதோ விபரீதம் இருப்பதாகத் தெரிந்தது. அவர் சட்டென்று முகம் உயர்த்தி நான்சியைப் பார்த்தார்.

அவள் கழுத்தில் நெருப்பினாலான மாலையொன்று உருகிக் கொதித்துக் கொண்டிருந்தது.

அவளின் மார்பில் அவள் அணிந்திருக்கும் ரோஸ் நிற நைட் கவுனுக்குள் ஒரு சிவப்புப் பளபளப்பு.

லூயிஸால் அந்தப் பக்கமாகத் தன் பார்வையைத் திருப்ப முடியவில்லை. ''தண்ணீர் வேண்டாம்!'' என்று சொல்லி விட்டு, உடனே அவர் தனது அறையை நோக்கி விரைந்தார்.

நான்சிக்கு எதுவும் விளங்கவில்லை. ''என்னமோ... ஏதோ!'' என்று முனகியபடி தண்ணீருடன் வீட்டுக்குள் சென்றாள்.

நேராகத் தனது படுக்கையறைக்குச் சென்ற லூயிஸ், கதவை மூடித் தாழிட்டுவிட்டு உடை மாற்றினார்.

லுங்கியை மட்டும் கட்டிக்கொண்டு அவர் கண்ணாடியைப் பார்த்தார். அப்போது சுவரில் பெரிய பல்லி ஒன்று ஒட்டிக் கொண்டிருப்பது, கண்ணாடியில் தெரிந்தது.

சட்டென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

நான்சியிடம் ஏதோ ஒரு சக்தி புதிதாக இடம் பெற்றிருக்கிறது. அது என்னவென்று கண்டுபிடிக்க வேண்டும். தனது பைசாசிக புத்திக்கு எட்ட முடியாத ஏதோ ஒன்று, நான்சியின் உடலில் இடம்பிடித்திருக்கிறது?

மனிதர்கள் தொடர்பான காரியம் என்றால் அவர் உட்கார்ந்த இடத்திலிருந்தே அவற்றைக் கண்டுபிடித்து விடுவார். தன் மனத்தைப் பரவவிட்டுக் கண்டுபிடிப்பது சுலபமான வழி. ஆனால், நான்சியிடம் அந்த வழிமுறையும் செல்லுபடியாகவில்லை.

இருப்பினும் அவர், தன் மனத்தை நான்சியிடம் அனுப்பி வைக்கத் தீர்மானித்தார். அறைக்குள் எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்தார். இப்போது சிவப்பு நிற விடிவிளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது.

படுக்கையறையில் மற்றவர்கள் நீலம் அல்லது பச்சை நிற பல்புகளை பயன்படுத்தும்போது லூயிஸ் தேர்ந்தெடுத்தது சிவப்பு நிறத்தைத்தான்.

சுவரைப் பார்த்தார். அப்போதும் அந்தப் பல்லி அங்கேயேதான் ஒட்டிக்கொண்டிருந்தது. லூயிஸ் அதை அழைத்தார். அது மிகவும் விரைவுடன் ஊர்ந்து வந்து அவர் நெஞ்சின் மீது தாவியது.

அவர் அதை வருடிவிட்டார். வருடியவாறே அதன் கழுத்தின் பின்புறத்தை விரல் நெருங்கியதும், அதை அப்படியே கீழ்நோக்கி அழுத்தினார்.

'சிக்' என்றொரு சத்தம் அதன் வாயிலிருந்து இறுதியாக வெளிப்பட்டது. அத்துடன் அது அசைவற்றுப் போகவும் செய்தது.

டாக்டர் லூயிஸ் அந்த பல்லியின் உடலுக்குள் புகுந்து கொண்டார். அதன் பிறகு உயிர் பெற்றெழுந்த பல்லி, சுவரில் விரைவாக ஊர்ந்து வென்டிலேட்டரை அடைந்து வீட்டின் வெளிப்புறத்தை அடைந்தது.

நான்சியின் படுக்கையறை அந்தக் கட்டடத்தின் கிழக்குப் புறத்தில் இருந்தது. கிரில் போட்ட அதன் கதவு எப்போதும் திறந்தே கிடப்பது வழக்கம்.

அந்த பங்களாவுக்கு வெளியிலிருந்து அவ்வளவு சுலபத்தில் யாரும் வீட்டுக்குள் நுழைந்துவிடாதபடி, பாதுகாப்பு ஏற்பாடுகள் கச்சிதமாகச் செய்யப்பட்டிருந்தன.

வீட்டுக்குச் சுற்றிலும் வளர்ந்திருந்த கொக்கோ மரங் களில் ஆங்காங்கே ஒளிஉமிழும் பல்புகள் பொருத்தப் பட்டிருந்தன. எந்த விநாடியிலும் சட்டென்று தட்டிவிடும் தொலைவில் விளக்கின் ஸ்விட்சுகள் பொருத்தப்பட் டிருந்தன.

மட்டுமின்றி, செப்புக்கம்பிகளைக் குறுக்கும் நெடுக்கு மாக இழுத்துக் கட்டவும் செய்திருந்தனர்.

தேவைப்படும்போது அந்தச் செப்புக் கம்பிகளில் மின் சாரம் பாய்ச்சுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மின்சாரம் தடைப்படும் நேரங்களில் சட்டென்று செயல்படும் வகையில் ஜெனரேட்டர் வசதியும் உள்ளது.

எனவே, அந்த வீட்டுக்குள் எவரும் எந்த நேரத்திலும் அத்துமீறி நுழைய முடியாது.

பல்லி, அந்தக் கட்டடத்தின் பின்புற மதில் வழியாக நான்சியின் அறையை அடைந்தது.

அங்கும் வென்டிலேட்டர் இருந்தது. ஏர்கண்டிஷன் செய்த அறையானதால், வென்டிலேட்டரை மூடி வைத்திருந்தனர். ஜன்னலின் அருகே சென்றபோது அதுவும் மூடப்பட்டிருந்தது.

ஜன்னலின் கண்ணாடிப் பரப்பில் பதிந்து நின்றபடி பல்லி உட்புறம் பார்த்தது. கட்டிலில் நான்சி மல்லாந்து படுத்திருந்தாள். அவள் மார்பில் போர்வையின் ஒரு பகுதி படிந்திருந்தது.

பல்லி, கண்ணாடியில் தட்டியது. கண்ணாடியை உடைத்துக் கொண்டு பல்லி உட்புறம் நுழைய முயன்றது. நான்சி சட்டென்று திடுக்கிட்டு விழித்தாள்.

சத்தம் கேட்ட திசையில் திரும்பிப் பார்த்தாள். தெளிவற்ற உருவத்துடன் ஏதோ ஒன்று கண்ணாடியில் அடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவள் துள்ளியெழுந்தாள்.

அது என்னவென்று பார்ப்பதற்காக அந்த ஜன்னலை நெருங்கினாள். உடனே பல்லி, அங்கிருந்து கீழ்ப்புறமாகத் தாவி சட்டென்று மறையவும் செய்தது.

பல்லி தனது வழக்கம் போல் அந்த ஜன்னல் கண்ணாடியை உடைத்திருக்கும். ஆனால், நடந்தது முற்றிலும் எதிர்பாராத ஒன்று. நான்சி கட்டிலிலிருந்து எழுந்து வருவாள் என்று அது எதிர்பார்க்கவில்லை.

நான்சி அருகே சென்றபோது, அவள் கழுத்தில் கிடந்த ஜெபமாலையில் இருந்த கல்லின் சிவப்பு நிற ஒளி கண்ணாடியில் பதிந்தது.

பல்லியால் அந்த ஒளியைத் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. எனவே, அது சட்டென்று தாவிக் குதித்து மறைந்தது.

உடனடியாக அது' லூயிஸின் அறையை அடைந்தது.

லூயிஸின் மார்பில் வந்து அமர்ந்தது பல்லி.

சற்று நேரத்துக்குள் லூயிஸ் கண்விழித்தார். அவர் முதலில் செய்த வேலை அந்தப் பல்லியை வென்டிலேட்டர் வழியாக எடுத்து வெளியே எறிந்ததுதான்.

நான்சியிடம் ஏதோ ஓர் ஆபத்து ஒளிந்திருப்பது லூயிஸுக்கு விளங்கியது.

இனம்புரியாத அந்த ஆபத்து தன்னை அழித்துவிடும் என்று அவருக்குத் தோன்றியது. முடிந்தால் அது என்ன வென்று கண்டுபிடித்து அழிக்கவேண்டும் என்று அவர் தீர்மானித்தார்.

அதற்கும் பல்லியின் துணையையே நாடுவதென்று முடிவு செய்தார்.

மறுநாள் அவர் ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பும் போது சிறிய வலைக்கம்பியாலான கூண்டு ஒன்றை வாங்கி வந்தார்.

பறவைக் கூண்டுகள் மற்றும் தகரவிளக்குகள் செய்பவர் களிடம் சொல்லிப் பிரத்தியேகமாக அந்தக் கூண்டைச் செய்து வாங்கியிருந்தார். அதற்குள் பல்பு ஒன்றைப் பொருத்தவும் ஏற்பாடு செய்திருந்தார்.

சுமார் மூன்றடி நீளமும், ஒன்றரையடி அகலமும், உயரமும் உள்ள ஒரு கூண்டு அது. இரவில் அந்தக்

கூண்டை மொட்டை மாடியில் கொண்டுபோய் வைத்தார். அதற்குள் பல்பு ஒன்றை எரிய விட்டார்.

பின்பு நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டுக்கொண்டு கூண்டுக்குச் சற்றுத் தொலைவில் அமர்ந்தார் டாக்டர் லூயிஸ்.

மணி பத்துக்கு மேல் ஆகியது.

மற்ற விளக்குகள் எல்லாம் அணைந்து விட்டன. மொட்டை மாடியில் வைத்திருந்த கூண்டுக்குள் விளக்கு எரிந்தது. சின்னஞ்சிறு பூச்சிகள் அந்தக் கூண்டை நோக்கிப் பறந்து வரத்தொடங்கின. அந்தக் கூண்டை அவரை ஒட்டி வைத்திருந்தார்.

சற்று நேரத்தில் சிறியதும் பெரியதுமான பல்லிகள் அந்தக் கூண்டை நோக்கி வந்தன.

சின்னஞ்சிறிய உயிரினங்களைப் பிடிப்பதற்காக பல்லிகள் கூண்டுக்குள் நுழைந்தன.

ஒருசில நிமிடங்களுக்குள் அந்தக் கூண்டில் பதினைந்து பல்லிகளுக்கு மேல் சேர்ந்துவிட்டன.

டாக்டர் லூயிஸ் சட்டென்று அந்தக் கூண்டின் கதவை மூடினார்.

அவர் இரவு முழுக்க அங்கேயே காத்திருந்தார். காலையில் சுமார் ஏழு மணியளவில் அந்தக் கூண்டுக்குள் இருந்த மிகப்பெரிய பல்லி ஒன்றை எடுத்துக்கொண்டு தனது அறைக்குள் நுழைந்தார்.

கட்டிலில் வாகாகப் படுத்துக் கொண்ட டாக்டர் லூயிஸ், அந்தப் பல்லியைத் தன் மார்பில் பதிய வைத்து, அதன் பின் கழுத்தில் அழுத்தினார்.

சன்னமான சத்தம் ஒன்றை எழுப்பிக்கொண்டு அந்தப் பல்லி அசைவற்றுப் போனது.

டாக்டர் லூயிஸ் அந்த உடம்புக்குள் கூடுவிட்டுக் கூடு பாய்ந்தது.

அந்தப் பெரிய பல்லி இப்போது உயிர்பெற்றுச் சுவரில் ஊர்ந்து நான்சி குளிக்கப் பயன்படுத்தும் குளியல் அறையின் வென்டிலேட்டரை அடைந்தது.

## 21

**வெ**ன்டிலேட்டரை அடைந்த பல்லி, நிதானமாக அந்தக் குளியலறைக்குள் நுழைந்து சுவரில் பத்திரமாக ஒண்டிக் கொண்டது.

உட்புறம் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

நான்சியின் உடல்மீது விசையுடன் ஷவரிலிருந்து விழும் தண்ணீர் விழுந்து தெறித்துக்கொண்டிருந்தது. இளமையும் செழுமையும் வாய்ந்த அவள் உடலில் எங்கும் தேங்காமல் வழிந்தோடியது.

பல்லி அங்கிருந்தவாறே அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தது.

அழகான அவளின் மார்பகங்கள், தொப்பூழ்க்கொடி, தசைப்பற்றான வயிறு, தொடைகள்... என்று பல்லியின் கண்கள் பயணம் செய்தன.

அவளின் இடுப்பில் தங்கநிற அரைஞாண் கொடி யொன்று கிடந்தது. சட்டென்று பார்த்தபோது தங்கத் துக்கும் அவள் உடம்புக்கும் வித்தியாசம் தெரியவில்லை.

பல்லிக்குள் புகுந்திருந்த டாக்டர் லூயிஸ் அந்த உடலைக் கண்ணாரக் கண்டார்.

ஆனால், அந்தப் பல்லியின் நோக்கம் அதுவல்ல, அவள் கழுத்தில் செயினைக் காணவில்லை. குளிக்கும்போது

செயினைக் கழற்றி வைத்திருக்க வேண்டும். முதலில் அந்தச் செயின் எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தால் தான் மேற்கொண்டு அதை எப்படி அழிப்பது என்பதைக் குறித்துத் திட்டமிட முடியும்.

குளியலறைக்குள் அந்த செயின் இல்லையென்பது தெரிந்ததும் பல்லி உடனே அங்கிருந்து வெளியேறியது.

நான்சியின் படுக்கையறைக்கு வந்த பல்லி, அங்கு செயினைத் தேடத் தொடங்கியது.

அவளது டிரஸ்ஸிங் டேபிளின் டிராயரில் செயின் பத்திரமாக இருந்ததை பல்லி கண்டுபிடித்தது.

பல்லி திரும்பி வந்து லூயிஸின் மார்பில் அமர்ந்தது.

அடுத்த விநாடி பல்லி அசைவற்றுப் போனது.

டாக்டர் லூயிஸ் கண் விழித்து எழுந்து முதலில் அந்தப் பல்லியை எடுத்து தொலைவில் வீசி எறிந்தார்.

வழக்கம் போல் ஆஸ்பத்திரிக்குச் சென்ற டாக்டர் லூயிஸின் மனம் முழுக்க அந்த சங்கிலியே நிறைந்திருந்தது.

ஆஸ்பத்திரிக்குள் அவர் எவரிடமும் அதிகமாகப் பேசவில்லை.

மாலை நேரத்தில் அவர் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பிச் செல்லவில்லை.

நான்சியும் அவள் அம்மாவும் சிநேகிதி வீட்டுக் கல்யாணத்துக்குப் போயிருந்தனர்.

வீட்டுவேலைக்காரிகளில் ஒருத்தி மட்டும்தான் அப்போது வீட்டிலிருந்தாள். லூயிஸ் முகம் அலம்பிவிட்டு டைனிங் டேபிளில் வந்து அமர்ந்தார். அவள் சமையற் கட்டில் சமையலில் ஈடுபட்டிருந்தாள்.

டைனிங் டேபிளில் லூயிஸ் உட்கார்ந்ததைப் பார்த்ததும் அவள், அவரிடம் வந்தாள். அவள் பெயர் ரோஸி.

இருபது வயதிருக்கும் அவ்ளுக்கு. மிகவும் அழகானவள் என்று சொல்ல முடியாது. எனினும், தசைப்பிடிப்பான வெளுத்த, இரட்டை நாடி உடம்பு. இறுக்கமான பிளவுஸை விட்டு வெளியேறும் முயற்சியில் திமிறிக் கொண்டு நிற்கும் திரண்ட மார்பகங்கள்.

மடிப்பு மடிப்பாக வயிற்றுப் பகுதியில் அலையடிக்கும் தசைப்பகுதிகள்.

சேலை விளிம்பை வெளிக்காட்டாமல் சன்னமாக மடிந்து தொங்கும் வயிறு...

லூயிஸ் அவளை ஊன்றிப் பார்த்தார்.

அவர் கண்கள், அவள் உடம்பில் ஒரு நத்தை மாதிரி ஊர்ந்து கொண்டிருந்தன.

அந்தக் கண்கள் தன் உடலை உரசுவதாகவே அவளுக்குத் தோன்றியது. அந்த அளவுக்குக் கடுமையாக இருந்தது, அந்தக் கண்களின் பார்வை.

அணுஅணுவாகக் கீழிறங்கிய அந்தப் பார்வையில், ரோஸியின் உடல் குன்றிப்போனது.

''குடிக்கிறதுக்கு ஏதாவது ஜூஸ் வேணும்!'' லூயிஸ் கேட்டார்.

அவள் ஃபிரிஜ்ஜைத் திறந்து பதப்படுத்தி வைக்கப் பட்டிருந்த மாம்பழ ஜூஸை எடுத்து வந்தாள்.

அவர் கொஞ்சம் கொஞ்சமாக கிளாஸிலிருந்து குடித்தார்.

''அவங்கள்லாம் எங்கே?'' லூயிஸ் கேட்டார்.

''கல்யாணத்துக்குப் போயிருக்காங்க!'' அவள் வெட்கத்துடன் பதிலளித்தாள்.

''அவங்க வர்றதுக்கு லேட்டாகுமா?''

''தெரியலை... ஆனா, உங்களுக்குச் சாப்பாடு பரிமாறச் சொல்லியிருக்காங்க.''

"அப்படின்னா, கொஞ்சநேரத்துக்குப் பிறகு என்னோட ரூமுக்கு பிரெட்டும் ஜாமும் கொண்டு வா!"

"சரிங்க!"

லூயிஸ் அங்கிருந்து கிளம்பினார்.

அடுப்பை அணைத்துவிட்டு, பிரெட் ஜாமுடன் அவள் லூயிஸின் அறைக்குச் சென்றாள்.

டாக்டர் லூயிஸ், அவளைத் தனது அறைக்கு வருமாறு சொன்னபோதே அவளுக்கு விஷயம் விளங்கிவிட்டது. இதற்கு முன்னால் அங்கு வேலை செய்த பெண்மணி ஒருத்தி லூயிஸைப் பற்றி அவளிடம் சொல்லியிருந்தாள்.

அவள் சொன்னது வேறு மாதிரியாக. அதாவது லூயிஸ் சமீபகாலம் வரை வெளிநாட்டில் தங்கியிருந்தவர். அங்கு அவர் ஏராளமான வெளிநாட்டுப் பெண்களுடன் பழகியிருக்கிறார். பழகியிருக்கிறார் என்றால் மிகவும் நெருங்கிப் பழகியிருக்கிறார் என்று அர்த்தம்.

அதைக் கேள்விப்பட்டதும் ரோஸிக்கு லூயிஸ் மீது ஒருவிதமான மதிப்பு ஏற்பட்டது. ஏறத்தாழ லூயிஸின் ரசிகையாகவே மாறிவிட்டாள் அவள்.

அப்படிப்பட்ட ஒருவர் சாமானியமானவராக இருக்க முடியாது. அப்படிப்பட்டவர் தன்னை விரும்புகிறார் என்றால்...

மேற்கொண்டு அவளால், அதைப் பற்றி யோசிக்கவே முடியவில்லை.

அவள் லூயிஸின் அறைக்குள் நுழைந்தபோது, அவர் லுங்கிக்கு மாறிவிட்டிருந்தார்.

மேஜை மீது டம்ளர் ஒன்றில் மது நிறைத்து வைக்கப்பட்டிருந்தது. மதுவையும், அதன் போதை குறித்தும் ரோஸிக்கு நன்றாகவே தெரியும்.

விழாக்காலத்தில் அந்த வீட்டில் மதுவை வெளிப் படையாகவே பரிமாறுவது உண்டு. அப்போது, வேலைக் காரர் மற்றும் விருந்தாளிகள் என்ற பாகுபாடெல்லாம் கிடையாது. ரோஸி தன் கையிலிருந்த டிரேயை மேஜை மீது வைத்தாள்.

லூயிஸ் மது நிரம்பிய தம்ளர் ஒன்றை அவளிடம் நீட்டினார்.

''ஐயோ... யாராவது பார்த்துடுவாங்க!'' அவள் மறுத்தாள்.

''அதெல்லாம் தெரியாது. நாத்தம் அடிக்காம இருக் கிறதுக்கு நான் ஒரு வழி சொல்லித் தர்றேன்'' என்ற லூயிஸ், தம்ளரை அவளின் உதடுகளுக்கு அருகே கொண்டு போனார்.

அவள் அதைக் குடித்துத் தீர்த்தாள்.

அது உடனேயே செயல்படத் தொடங்கியது.

டாக்டர் லூயிஸ் அவள் தோளில் கை வைத்தார். அடுத்த தாக அவர் விரல்கள் அவளின் பிளவுஸ் பட்டன்களில் செயல்பட்டன.

மிக விரைவிலேயே அவள் உடையற்றவள் ஆனாள்.

அதன் பிறகு அவர், அவளை வாரி எடுத்துக் கட்டிலில் படுக்க வைத்தார். லூயிஸின் கை விரல்கள் அவள் உடம் பில் எங்கெல்லாமோ ஊர்ந்தன. மார்பில்... வயிற்றில்...

அவள் மெய்சிலிர்த்துக் கிடந்தாள்.

அவளுக்குள் அவர் புதிய ஆவேசம் ஒன்றையே நிறைந்தார்.

அது அவளின் ரத்தக்குழாய்களின் வழியாக மிக விரைவாகப் பயணித்தது. எனவே, அவளையும் மீறி அவள் சில சத்தங்களை எழுப்பினாள். எல்லாம் முடிந்த பிறகு

டாக்டர் லூயிஸ் அவளிடம் ஐந்நூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தார். அதையும் பெற்ற பிறகு அவளது மகிழ்ச்சி இரண்டு மடங்கானது.

''நீ போகலாம்!'' அவர் சொன்னார்.

அவள் அந்த அறையிலிருந்து மிகுந்த தயக்கத்துடன் வெளியேறினாள். டாக்டர் லூயிஸும் உடனே அங்கிருந்து கிளம்பினார்.

அன்று அவர் மருத்துவமனையிலிருந்து திரும்பி வந்த போது இரவு மணி பத்து ஆகியிருந்தது.

அப்போது அந்த வீட்டிலிருந்தவர்கள் எல்லோரும் உறங்கி விட்டிருந்தனர்.

வேலைக்காரிதான் கதவைத் திறந்து விட்டாள்.

''அவங்க எல்லோரும் தூங்கிட்டாங்க சார்!'' அவள் கூறினாள்.

''அப்படின்னா சௌகரியம்தான்.. இல்லையா?'' அவர், அவளைப் பார்த்தபடி கேட்டார்.

அவள் வெட்கத்துடன் தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

''என்னோட அறைக்கு வந்தால், நான் ஒரு பொருள் தர்றேன்!'' அவளிடம் சொன்னார்.

அன்றைய காலையில் நிகழ்ந்த அனுபவமே அவளைப் புளகாங்கிதப்படுத்தியிருந்தது. அவள் அதைப் பற்றி நினைவு கூர்ந்த போதுதான் அவர் மறுபடியும் அவளை அழைக்கிறார்.

தனது படுக்கையறைக்குள் படுக்கையை விரித்தபிறகு அவள் லூயிஸின் அறையை அடைந்தாள்.

அவர், அவளைக் கட்டியணைத்தபடி வரவேற்றார்.

"நான் உனக்காகக் கொண்டு வந்திருக்கிற பரிசு இது!" என்றவர், தனது சூட்கேஸிலிருந்து தங்கச் சங்கிலி ஒன்றை எடுத்து அவளின் கழுத்தில் போட்டார்.

அந்தச் செயல் அவளை உணர்ச்சிவசப்படச் செய்தது. அவள் இப்படியொரு பரிசை எதிர்பார்க்கவில்லை என்று விளங்கியது.

"உனக்குப் பிடிச்சிருக்கா?" அவர், அவளின் கன்னத்தை வருடியபடி கேட்டார்.

"ம்..." அவள் பதிலளித்தாள்.

"நான் ஒரு உதவி கேட்டா செய்வியா?" அவர் கேட்டார்.

"ம்... சொல்லுங்க!"

"நான்சியின் கழுத்தில் தங்கசங்கிலி ஒண்ணு இருக்குது பாரு... அதை நீ ஜாக்கிரதையா எடுக்கணும்..."

"அப்புறம்..."

"என்கிட்ட தரவேண்டாம். அதை உன்னோட வீட்டுக்கு எடுத்துட்டுப் போயிடு. அதை அழிச்சிடு!"

"அது எதுக்கு?" அவள், லூயிஸின் முகத்தைப் பார்த்தாள்.

"அந்தச் சங்கிலியில டாலர் மாதிரி ஏதோ ஒண்ணு இருக்கு. அதுல ஏதோ வசிய மந்திரம் செஞ்சிருக்காங்க. மேற்கொண்டு என்கிட்ட கேள்வி எதையும் கேட்கக் கூடாது!" லூயிஸ் கூறினார்.

ரோஸியைப் பொறுத்தவரை, லூயிஸ் என்ன சொன்னாலும் அதைச் செய்ய அவள் தயாராக இருந்தாள். காரணம் என்னவென்றால், அந்த அளவுக்கு டாக்டர் அவள் மனதைக் கவர்ந்துவிட்டிருந்தார்.

''அநேகமா அந்தச் சங்கிலி நான்சியோட டிரஸ்ஸிங் டேபிள் மீதுதான் இருக்கும்.''

''அதை எடுத்து வந்து உங்க கிட்டத் தரட்டுமா?''

''வேண்டாம்... வேண்டாம்! நீ கொண்டு போனால் போதும்.''

''சரி... நான் போகட்டுமா?''

''இந்த மாதிரி உடனே கிளம்பிட்டா எப்படி?'' என்ற லூயிஸ் அவளைக் கட்டிலில் படுக்க வைத்தார்...

மறுநாள் காலையில் நான்சி குளிப்பதற்காகச் சென்ற வேளையில் ரோஸி, துடைப்பத்துடன் அவளது அறைக்குள் சென்றாள்.

அறையைச் சுத்தம் செய்தாள். அவ்வப்போது டிரஸ்ஸிங் டேபிளை கவனித்தாள்.

சத்தம் எழுப்பாமல் டிரஸ்ஸிங் டேபிளின் டிராயரைத் திறந்தாள்...

அதோ கிடக்கிறது சங்கிலி...

அதில் சிலுவை வடிவம் பளபளத்தது.

அதை பத்திரமாக இடுப்புப் பகுதியில் முடிந்து கொண்டு அவசர அவசரமாக அந்த அறையிலிருந்து வெளியேறினாள்.

## 22

ரோஸி சங்கிலியுடன் சமையற்கட்டுக்கு வந்தாள்.

''நீ என்ன ரோஸி... என்னமோ மாதிரி இருக்குறே?'' நான்சியின் அம்மா திரேசியாம்மா கேட்டாள்.

''ஒரே தலைவலி... மண்டையே பிளக்கிற மாதிரி இருக்கு.''

''நம்ம டாக்டர் வீட்டுலதானே இருக்கார்... ஓடிப் போய்த் தகவல் சொல்லி மாத்திரை வாங்கிப் போட்டுக்க!''

ரோஸி நேராக லூயிஸின் அறைக்குச் சென்றாள். அவரது அறைக் கதவு உட்புறமாகத் தாழிடப்பட்டிருந்தது.

டாக்டர் சொன்ன வேலை முடிந்து விட்டது என்பதை அவரிடம் தெரிவிப்பதும் அவளது நோக்கம். அவள் கதவைத் தட்டினாள்.

கதவைத் திறந்தார் லூயிஸ்.

எதிரில் ரோஸி நின்றுகொண்டிருந்தாள்.

அவளது இடுப்புப் பகுதியிலிருந்து ஒரு பளபளப்புத் தென்பட்டது. அங்கிருந்து நெருப்புக் கதிர்கள் பாய்ந்து வருவதாக அவருக்குத் தோன்றியது. அவர் கண்களைப் பொத்தியவாறே பின்னுக்கு நகர்ந்தார்.

''நான் சொன்னபடி செய். உடனே அதை எடுத்துட்டுப் போய்த் தொலைச்சுடு. சீக்கிரம்...''

''நீங்க அதைப் பார்க்க வேணாமா?''

''வேணாம்... முதல்ல நீ கிளம்பு!''

''நான் எழுதிக்கொடுத்த மாத்திரையை வாங்குறதுக்காக, நீ கடைக்குப் போறதா எஜமானியம்மா கிட்டச் சொல் லிட்டுக் கிளம்பு!''

ரோஸி, அப்படியே செய்தாள். ஆனால், அதைத் தொலைக்காமல் பத்திரமாக எடுத்து வைத்தாள்.

குளித்துவிட்டு வந்த நான்சி, ஃபாதர் இம்மானுவேல் தந்த சங்கிலியைத் தேடினாள். காணவில்லை. மறுபடியும் குளியலறைக்குச் சென்று தேடினாள். காணவில்லை. அதன் பிறகு அந்தச் சங்கிலி அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக அவளுக்குத் தோன்றாததால் அந்த விநாடியிலேயே தனது தேடுதலை விட்டுவிட்டாள்.

அந்தச் சங்கிலி அங்கிருந்து வெளியேறிவிட்டது என்பதை அறிந்த லூயிஸ் ஆறுதல் அடைந்தார்.

அதன் பிறகு வழக்கம் போல் டாக்டர் லூயிஸ் ஆஸ்பத்திரிக்கு வந்தார். அவரது நடவடிக்கைகளில் எந்த விதமான மாற்றமும் தென்படவில்லை.

இதையெல்லாம் கவனித்த டாக்டர் ஸ்டீஃபனுக்கு ஏமாற்றமாக இருந்தது. சிலுவை போட்ட அந்தச் சங்கிலி வேலை செய்யவில்லை என்று ஸ்டீஃபன் தீர்மானித்தார்.

இந்தத் தகவலை உடனடியாக ஃபாதர் இம்மானுவேலிடம் தெரியப்படுத்த விரும்பினார்.

அன்று மாலை நேரத்தில் டியூட்டி முடிந்ததும் டாக்டர் ஸ்டீஃபன் தனது காரை எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

தகவலைக் கேள்விப்பட்ட ஃபாதர் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார். நடந்தது என்னவென்று அவருக்கு விளங்கவில்லை. எனினும், தான் ஜபித்துக் கொடுத்த சங்கிலி செயல்படவில்லை என்பதை அவரால் நம்பமுடியவில்லை.

''சங்கிலி வேலை செய்யாமலிருக்க வாய்ப்பு இல்லை. அந்தச் சங்கிலி இருக்குற இடத்துல உண்மையில லூயிஸால் நிம்மதியா இருக்க முடியாது! இதுல ஏதோ குழப்பம் இருக்கே!''

''எனக்கும் இதுல ஒரே குழப்பமா இருக்கு ஃபாதர்.'' டாக்டர் ஸ்டீஃபன் கூறினார்.

''எதுக்கும் முதல்ல நான்சிகிட்ட விசாரிக்கிறேன். நமக்கும் தகவல் தெரியணுமே!'' ஃபாதர் கூறினார்.

''ஆமாம்... அதுதான் சரி!''

''ஸ்மிதாங்கிற பொண்ணைப் பத்தி நாம நிறையத் தெரிஞ்சுக்கணும்னு சொன்னோம். அவளைப் பத்தின

தகவல்கள் ஒருத்தருக்குத் தெரிஞ்சிருக்கு. அவர் இன்னும் கொஞ்ச நேரத்துல இங்கே வரப்போறார்.''

''அவர் என்ன சொல்றார் ஃபாதர்?''

''அதை நேரடியா அவர் வாயாலயே கேட்டுத் தெரிஞ்சுக்கலாமே!''

அதன்பிறகு அவர்கள் டாக்டர் லூயிஸைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். அவர்களால் உறுதியான ஒரு முடிவுக்கு வரவோ, மேற்கொண்டு என்ன செய்யலாம் என்ற தீர்மானத்துக்கு வரவோ முடியவில்லை.

சுமார் இருபது நிமிடங்களுக்குப் பிறகு ரிட்டயரான பள்ளிக்கூட வாத்தியாரான பவுலோஸ் வந்து சேர்ந்தார். அவர், ஸ்மிதாவின் பக்கத்து வீட்டுக்காரர்.

ஃபாதர், டாக்டர் ஸ்டீஃபனுக்கு பவுலோஸை அறிமுகம் செய்து வைத்தார். அறுபது வயதான அவர் தற்போது ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கிறார்.

அவர் பள்ளிக்கூடத்தில் பணிபுரியும்போதே ஹோமியோ பதி மருத்துவர் ஆகவும் செயல்பட்டவர். அதன் மூலம் அவருக்கு ஓரளவு வருமானமும் வந்து கொண்டிருந்தது.

சமீப காலமாக அந்த வருமானமும் குறையத் தொடங்கி யிருக்கிறது.

எனினும், அந்த விஷயத்தில் அவருக்கு வருத்தம் எதுவும் இல்லை. ஆனால், தனது திறமையை மற்றவர்கள் மதிப்ப தில்லையே என்ற ஆதங்கம் இருக்கவே செய்கிறது.

அதற்குக் காரணம் பதினெட்டு வயதான இளம்பெண் ஒருத்தி.

அவள் எந்தவிதமான வைத்திய முறையையும் படிக்க வில்லை. ஆனால், அவள் நோய் இன்னதென்று எந்த விதமான சோதனைகளும் இன்றியே கண்டுபிடிக்கிறாள். அவளது சிகிச்சைக்கு மருந்தும் தேவைப்படுவதில்லை.

அதிகமாக அவளிடம் வருபவர்கள், ஆவி பிடித்தவர்கள், பேய் பிடித்தவர்கள்தான். அவள் கை வைத்தால் எப்படிப் பட்ட பிசாசும் ஓடிவிடுகிறது.

இப்படியொரு சக்தி அவளுக்கு எங்கிருந்து கிடைத்தது என்று எவருக்குமே விளங்கவில்லை.

சிட்டி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த பிறகுதான் அவள் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாள் என்றுதான் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் சொல்கிறார்கள்.

''நானும் அங்கே வந்து அந்தப் பொண்ணைப் பார்த் திருக்கேன்!'' டாக்டர் ஸ்டீஃபன் சொன்னார்.

''அவகிட்ட ஏதோ ஒரு சக்தி இருக்கு. அதுல எந்தவித மான சந்தேகமும் கிடையாது!''

''உண்மைதான்!'' ஸ்டீஃபன் கூறினார்.

''அது தெய்வீக சக்தியா இருக்குறதுக்கு வாய்ப்பு இல்லை... ஒருவேளை பைசாசிக சக்தியா இருக்குமோ?'' பவுலோஸ் கேட்டார்.

''இருக்கலாம்!'' ஃபாதர் கூறினார்.

ஃபாதர் இம்மானுவேல் தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்தார்.

நான்சியிடம் தான் கொடுத்த சங்கிலி காணாமற் போயிருக்க வேண்டும். அத்துடன் ஸ்மிதாவின் சக்திக்கான ஊற்றுக்கண் எதுவென்றும் கண்டுபிடிக்க வேண்டியிருக் கிறது.

ஃபாதர் எழுந்து உட்புறம் சென்றார்.

அவர் அங்கிருந்த மேரி மாதா மற்றும் குழந்தை இயேசுவின் உருவத்தையும் ஊன்றிப் பார்த்தார்.

அந்தப் பளிங்குச் சிலையின் மீது ஜெபமாலை ஒன்று கிடக்கிறது. அந்த மாதா கோயிலைக் கட்டியபோது அங்கு

பணிபுரிந்த வெளிநாட்டுக்காரரான ஃபாதர் ஒருவர்தான் அந்த மாலையை அதற்குப் போட்டுவிட்டவர் என்றும் இம்மானுவேல் கேள்விப்பட்டிருந்தார்.

பளபளப்பான முத்துக்களால் கோக்கப்பட்ட மாலை அது.

ஃபாதர் அந்த உருவத்தை நெருங்கி அந்த மாலையை எடுத்தார். பின்பு ஒரு தீர்மானத்துக்கு வந்தவராக அவர் திரும்பவும் நடுக்கூடத்துக்கு வந்தார்.

''இந்த மாலை ஏது ஃபாதர்?'' டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

ஃபாதர் விளக்கினார். பிறகு, ''இந்த மாலையைக் கொண்டு போங்கள்!'' என்றவர், சுத்தமான துவாலை ஒன்றில் அதைப் பொதித்தார்.

அதை என்ன செய்வதென்று தெரியாமல் டாக்டர் ஸ்டீஃபனும் பவுலோஸும், ஃபாதர் இம்மானுவேலையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஃபாதர், அந்தப் பொதியை பவுலோஸிடம் கொடுத்தார்.

''இதை எப்படியாவது ஸ்மிதாவின் கையில் கொடுத்து விடுங்கள்... அல்லது முடிந்தால் அவள் கழுத்தில் போட்டு விடுங்கள். கழுத்தில் போடுவதுதான் மிகவும் நல்ல விஷயம்.'' ஃபாதர் கூறினார்.

''அதுக்கென்ன... இது சுலபத்துல நம்மளால செய்ய முடிஞ்ச வேலைதான்.'' பவுலோஸ் கூறினார்.

''இது மட்டும் நடந்துவிட்டால் ஓரளவுக்கு நாம் வெற்றி பெற்றுவிட்டதாகத்தான் அர்த்தம்!'' ஃபாதர் கூறினார்.

அவர் சொன்னதன் பொருள் பவுலோஸுக்கு விளங்க வில்லை.

''அப்படியானால், நானும் மிஸ்டர் பவுலோஸுடன் கிளம்பட்டுமா ஃபாதர்?'' டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

''நல்ல வேலைதான். நானும் அதைத்தான் உங்களிடம் சொல்ல நினைத்தேன்.'' ஃபாதர் கூறினார்.

''நீங்கள் எப்போது ஊருக்குக் கிளம்புகிறீர்கள்?'' டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

''சாயந்திரத்தில் கிளம்புவேன்!''

''இன்னிக்கு எனக்கு ஆஃப்தான். நான் அதுக்குள்ள வீட்டுக்குப் போயிட்டு வர்றேன்'' என்ற டாக்டர் ஸ்டீஃபன் மற்ற இருவரிடம் விடை பெற்றுக் கிளம்பினார்.

எவ்வளவுதான் யோசித்தும் பவுலோஸுக்கு இதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்று விளங்கவில்லை. இருந்தாலும், இதில் ஏதோ ஒரு ரகசியம் இருப்பதாக மட்டும் அவருக்கு விளங்கியது.

சுமார் நான்கு மணியானபோது டாக்டர் ஸ்டீஃபன் வந்தார். அவர் தனது ஃபியட் காரை ஓட்டி வந்திருந்தார்.

ஃபாதர் அவர்களை ஆசீர்வதித்து வழியனுப்பினார்.

டாக்டர் ஸ்டீஃபனும், பவுலோஸும் காரில் கிளம்பினர்.

பயணத்தின்போது அவர்கள் பரஸ்பரம் ஸ்மிதாவைப் பற்றியே பேசிக்கொண்டனர். பவுலோஸ் அப்போதும் ஒருவிதமான குழப்பத்தில்தான் இருந்தார். 'ஸ்மிதாவின் இந்த வல்லமைகளுக்கெல்லாம் காரணம் அவளிடம் உள்ள திவ்வியமான சக்திதானோ?' என்பதே அது.

இரவு மணி எட்டு ஆனது.

பவுலோஸின் வீட்டை அடைந்ததும் சற்று ஓய்வு எடுத்தார் டாக்டர் ஸ்டீஃபன்.

பின்பு இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்ட இருவரும் சுமார் ஒன்பது மணியளவில் ஸ்மிதாவின் வீட்டுக்கு கிளம்பினர்.

அப்போது பவுலோஸின் மனைவி கேட்டாள். ''இந்த நேரத்துலயா அங்க போறீங்க?''

''ஏன்... போனால் என்ன?'' பவுலோஸ் திருப்பிக் கேட்டார்.

''ஒண்ணுமில்லை. இருந்தாலும் அடுத்தவங்க இதை ஒரு தொல்லையா நினைக்கக்கூடாதே. இருங்க... ஜேம்ஸை அனுப்பி அந்தப் பொண்ணு தூங்கிடுச்சா, இல்லையான்னு பார்த்துட்டு வரச்சொல்றேன்.''

''சரி!''

பவுலோஸின் மனைவி, மகன் ஜேம்ஸிடம் தகவல் சொல்லி அனுப்பினாள்.

ஜேம்ஸ், ஸ்மிதாவின் வீட்டுக்குச் சென்றான்.

அப்போது அங்கு மனிதர்கள் கூட்டமாகக் கூடிநிற்பதை கவனித்தான் ஜேம்ஸ்.

## 23

**ஸ்**மிதாவின் வீட்டின் உட்புறத்தில் அப்போதும் ஆட்கள் கூட்டமாக இருப்பதைப் பார்த்த ஜேம்ஸ் குட்டிக்கு, உட்புறமாகச் செல்வதற்கு ஒரு சிறிய இடைவெளி கிடைத்தது.

அவன் கேட்டைக் கடந்து உள்ளே நுழைந்தான்.

அப்போது பெண்மணி ஒருத்தி அசைவற்றுக் கிடந்தாள். ஏறத்தாழ அவள் இறந்துவிட்டதாகவே ஜேம்ஸ்குட்டிக்குத் தோன்றியது.

ஸ்மிதா அவளைப் பரிசோதித்துக் கொண்டிருந்தாள். ஒரு டாக்டர் என்ற தோரணையுடன் அவள் நோயாளியைப் பரிசோதித்தாள். அதன் பிறகு அவளை திறந்துகிடக்கும் ஓர் அறைக்குள் கொண்டுபோய் படுக்க வைக்குமாறு ஸ்மிதா கூறினாள்.

உடனே நான்கு பேர் அந்தப் பெண்மணியைச் சுமந்து கொண்டு அந்த அறைக்குள் நுழைந்தனர்.

அந்த அறைக்குள் லைட் எரியவில்லை. இருட்டாக இருந்ததால் ஜேம்ஸ்குட்டியால் எதையும் பார்க்க முடியவில்லை.

சற்று நேரத்தில் அவளைச் சுமந்து சென்ற நால்வரும் அங்கிருந்து திரும்பிவந்தனர்.

அதன் பிறகு ஸ்மிதா அந்த அறைக்குள் சென்றாள்.

கதவை மூடினாள்.

எல்லோரும் ஆர்வத்துடன் மூடிய கதவையே பார்த்துக் கொண்டிருந்தனர். சுமார் பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு ஸ்மிதாவும், அந்தப் பெண்மணியும் அந்த அறையிலிருந்து வெளியே வந்தனர். நோயாளியின் முகத்தில் அப்போது எந்தவிதமான சோர்வும் தென்படவில்லை. மட்டுமின்றி திடகாத்திரசாலி போல் காட்சியளிக்கவும் செய்தாள்.

"வாங்க... நாம கிளம்பலாம்!" அது வரை நோயாளியாக இருந்தவள், அவளுடன் வந்தவர்களிடம் கூறினாள்.

அதைக் கவனித்ததும் அங்கிருந்த எல்லோரும் அப்படியே அசைவற்றுப் போயினர்.

சற்று நேரத்துக்குள் அவரும், அவளுடன் வந்தவர்களும் ஒரு காரில் ஏறிப் புறப்பட்டனர்.

ஜேம்ஸ்குட்டி வாசலிலேயே நின்றிருந்தான்.

அப்போது அந்த வீட்டுக்குள்ளிருந்து ஒரு மனிதர் இறங்கி வந்தார்.

"ஏங்க... அந்த அம்மாவுக்கு என்னங்க ஆச்சு?" ஜேம்ஸ் குட்டி கேட்டான்.

"என்னன்னு சொல்ல முடியலை. இங்கே வரும்போது ஒரு பிணம் மாதிரிக் கிடந்தாங்க. இப்ப அவங்களாகவே நடந்து போறதைப் பார்த்தே இல்லையா?" அவர் மூக்கில் விரல் வைத்தபடி பேசினார்.

அந்தச் சம்பவத்தை ஜேம்ஸ்குட்டி தனது வீட்டுக்குள் வந்து தெரிவித்தான்.

உடனே பவுலோஸ் சார் சுவரில் தொங்கிக் கொண் டிருக்கும் இயேசு கிறிஸ்துவின் படத்தைப் பார்த்தார்.

"யோசிச்சுப் பார்க்குறேன்... இதுவரைக்கும் எப்படி நடந்த பொண்ணு! இப்போ அற்புதமான சக்திகள் அவளுக்குக் கிடைச்சிருக்கு. படிச்சுப் பட்டம் வாங்கின டாக்டர்கள் கூட அவகிட்ட நோயாளியா வர்றாங்க!" பவுலோஸ் எவரிடம் என்றில்லாமல் பேசினார்.

"நாம நாளைக்குக் காலையில அந்தப் பொண்ணைப் பார்த்து ஃபாதர் தந்த மாலையை, பரிசளிக்கலாம்!" டாக்டர் ஸ்டீஃபன் சொன்னார்.

இரவு பன்னிரண்டு மணி வரை இருவரும் ஸ்மிதாவைக் குறித்தே பேசிக் கொண்டிருந்தனர். அதன் பிறகே அவர்கள் படுத்து உறங்கினர்.

பவுலோஸ் வழக்கம் போல் விடியற்காலையில் எழுந்தார். அது அவரது வழக்கம். அதன் பிறகு அன்றாடக்

கடமைகளை முடித்தபிறகு, அவர் டாக்டர் ஸ்டீஃபனை எழுப்பினார்.

இருவரும் சிற்றுண்டி சாப்பிட உட்கார்ந்தபோது மணி எட்டு ஆகியிருந்தது.

ஸ்மிதாவின் வீட்டைப் பார்த்தால், அங்கு ஆட்கள் கூட்டம் சேரத் தொடங்கியிருந்தனர்.

ஜேம்ஸ்குட்டியை, ஸ்மிதாவின் வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

சற்று நேரத்தில் திரும்பி வந்த ஜேம்ஸ்குட்டி, நோயாளிகளுக்கு கார்டு சிஸ்டத்தை நடைமுறைப் படுத்தியிருப்பதாகத் தெரிவித்தான்.

''ஓகோ... அப்படியா... சரி, நான் போய் கார்டு வாங்கி வருகிறேன்!'' என்று பவுலோஸ் கிளம்பினார்.

சுமார் அரை மணி நேரத்துக்குப் பிறகு வரிசை எண் போட்ட கார்டுடன் பவுலோஸ் திரும்பி வந்தார்.

டாக்டர் ஸ்டீஃபன் அந்த கார்டை வாங்கிப் பார்த்தார். அதில் இரவு 8.30 மணி, பவுலோஸ் அண்டு கம்பெனி என்று எழுதி கீழே ஒட்டப்பட்டிருந்தது.

அந்தக் கையொப்பத்தை டாக்டர் ஸ்டீஃபன் ஊன்றிப் பார்த்தார். காரணம், அப்படியொரு கையொப்பத்தை அவர் அந்த இடத்தில் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

எனவே, தனது சந்தேகத்தை அவர் பவுலோஸிடம் தெரிவித்தார்.

''என்ன சொல்கிறீர்கள் டாக்டர் ஸ்டீஃபன்? இது டாக்டர் லூயிஸின் கையொப்பமா? அப்படியிருக்க வழியில்லையே? ஒருவேளை உங்களுக்கு அப்படித் தோன்றியிருக்கலாம்!'' பவுலோஸ் விளக்கினார்.

"இல்லை பவுலோஸ் சார், எனக்கு நன்றாகத் தெரியும்... இது டாக்டர் லூயிஸின் கையொப்பம்தான்."

"ஒருவேளை டாக்டர் லூயிஸின் கையெழுத்தைப் போலவே, ஸ்மிதாவும் கையெழுத்துப் போடலாம். அதனால், டாக்டர் லூயிஸின் சாயல், இந்தக் கையெழுத்தில் தெரியலாம்."

"நிச்சயமாக அப்படி இல்லை. இதில் ஏதோ ஒரு ரகசியம் இருக்கிறது. நான் இந்த கார்டை என் கைவசம் வைத்துக் கொள்ளலாமா?"

"தாராளமாக வைத்துக் கொள்ளுங்கள்!" பவுலோஸ் கூறினார்.

"உள்ளே போகும்போது இந்த கார்டை அவர்களிடம் கொடுக்க வேண்டுமே!" ஜேம்ஸ்குட்டி சொன்னான்.

"அதற்கென்ன... காட்டி விட்டுத் திரும்ப வாங்கிக் கொண்டால் போகிறது!"

"இன்றைய பகல்பொழுது வீணாகி விட்டதே!" என்று டாக்டர் ஸ்டீஃபன் கவலைப்பட்டார். மட்டுமின்றி, அவர் விடுமுறை எடுத்துக் கொள்வதாக ஆஸ்பத்திரிக்குத் தகவலும் சொல்லவில்லை.

பகல்பொழுது முழுவதும் ஸ்மிதாவின் வீட்டுக்கு வந்து கொண்டிருந்த ஆட்களையே பார்த்துக் கொண்டிருந்தார் டாக்டர்.

பல்வேறுதரப்பட்ட ஆட்கள் அங்கு வந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் ஆவி பிடித்தவர்கள்தான். அவர்கள் எல்லோருமே தங்களது உபாதை தீர்ந்து மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றனர்.

மாலை நேரம் கடந்தது.

டாக்டர் ஸ்டீஃபன் அப்போதுதான் தன்னிடமுள்ள மாலையைக் குறித்து யோசித்தார்.

''அதை எப்படி ஸ்மிதாவின் கழுத்தில் போடுவது?'' பின்பு பவுலோஸிடம் இதைக் குறித்துப் பேசினார்.

கடைசியில், 'ஸ்மிதாவிடம் பேசிக்கொண்டிருக்கும் போது அவளுக்கு ஒரு பரிசளிப்பு என்ற முறையில் அதை, அவள் கழுத்தில் போட்டு விடுவது' என்று தீர்மானித்தனர்.

ஸ்மிதாவின் வீட்டில் பார்வையாளர்களது கூட்டம் குறைந்து கொண்டே வந்தது.

மணி எட்டரை.

இருவரும் எழுந்தனர்.

பவுலோஸ், மாலை பத்திரமாக இருப்பதை உறுதி செய்த பிறகு டாக்டருடன் ஸ்மிதாவின் வீட்டை நோக்கி நடந்தார்.

வெளிப்புற கேட் திறந்து கிடந்தது.

இருவரும் வராந்தாவில் போய் போட்டிருந்த நாற்காலி களில் அமர்ந்தனர். அப்போது நடுவயதுப் பெண்மணி ஒருவர் அங்கு வந்தாள்.

''ஸ்மிதா தியானம் செய்கிறார். கொஞ்ச நேரத்தில் வந்து விடுவார்!'' அங்கு அமர்ந்திருந்தவர்களைப் பார்த்துக் கூறினாள்.

சற்று நேரம் கழித்து ஸ்மிதா வெளியே வந்தாள்.

பவுலோஸும் டாக்டர் ஸ்டீஃபனும் அவள் வந்ததும் தங்களது இருக்கைகளிலிருந்து எழுந்திருக்கவில்லை.

''என்ன வேண்டும் உங்களுக்கு?'' அவளது கேள்வியில் கோபமிருந்தது.

''உங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறோம்!'' பவுலோஸ் கூறினார்.

''நீங்கள் வந்திருப்பதை நான் பூஜையறையிலேயே உணர்ந்தேன்.''

இதைக் கேட்டதும் டாக்டரும் பவுலோஸும் பரஸ்பரம் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''மட்டுமின்றி, நீங்கள் வந்திருப்பது என்னைச் சோதித்துப் பார்ப்பதற்காக என்பதும் விளங்கியது. அது எனக்குப் பிடிக்காத விஷயம்!'' அவள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்திருக்க முயன்றாள்.

''இப்படி எழுந்தால் எப்படி? நாங்கள் சில விஷயங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்!'' டாக்டர் ஸ்டீஃபன் கூறினார்.

''ம்... கேளுங்கள்!'' என்ற ஸ்மிதா மறுபடியும் தனது நாற்காலியில் அமர்ந்தாள்.

''முறைப்படி மருத்துவப் பட்டப்படிப்பு படிக்காத நீங்கள், நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பது தண்டனைக்கு உரிய குற்றமில்லையா?'' ஸ்டீஃபன் கேட்டார்.

''இதற்கு நான் ஏற்கெனவே உங்களிடம் பதில் சொல்லி விட்டேன். சரி... நான் படிக்கவில்லையென்று உங்களிடம் சொன்னவர் யார்? சரி... இது தொடர்பாக நீங்கள் என்ன கேள்வி வேண்டுமானாலும் கேளுங்கள்.... நான் பதில் சொல்கிறேன் ''

''மருத்துவத் துறையின் தந்தை யார்?'' ஸ்டீஃபன் கேட்டார்.

''ஹிப்போகிரட்டஸ் என்ற கிரேக்கத் தத்துவ ஞானி'' ஸ்மிதா பதிலளித்தாள்.

''எய்ட்ஸ் நோய்க்கு அந்தப் பெயர் ஏற்பட்ட காரணம்?''

''அக்வெயர்டு இம்யூன் டெஃபிஷியன்ஸி சிண்ட்ரோம் என்பதன் சுருக்கம்தான் எய்ட்ஸ் (AIDS).''

''இது பற்றிய முதல் ரிப்போர்ட் எப்போது வெளியானது?''

"1981-ல்!"

மேற்கொண்டு ஸ்மிதாவை எப்படி மடக்குவது என்று டாக்டர் ஸ்டீஃபன் யோசித்தார். மருத்துவத் துறையின் நவீனமான செய்திகளைக்கூட எந்தவிதமான தயக்கமும் இன்றி 'டக்' கென்று சொல்கிறாள்.

ஸ்டீஃபன் வியப்பு அடைந்தார்.

"எய்ட்ஸ் நோய்க்குக் காரணம் அணுக்களா, வைரஸ்களா?"

"வைரஸ்கள்!"

"வைரஸின் பெயர்?"

"ஹெச்.ஐ.வி."

டாக்டர் ஸ்டீஃபன் திடுக்கிட்டார். மேற்கொண்டு என்ன கேட்பது என்று தெரியாமல் தவித்தார்.

அப்போது அங்கு அதிசயம் ஒன்று நிகழ்ந்தது.

## 24

"அசிடோதைமிடின் என்ற ஒரேயொரு மருந்து மட்டுமே எய்ட்ஸ் நோயாளிகளின் வாழ்க்கையை நீடிக்க வைக்கிறது!"

அது டாக்டர் ஸ்டீஃபன் கேட்க நினைத்த கேள்விக்கான பதில். அவள் அதையும் புரிந்து வைத்திருக்கிறாள்.

"ஆனால், அந்த மருந்து எலும்புகளுக்குள் உள்ள மஜ்ஜை களை பாதிக்கும்." அவள் கூறினாள். அதுவும் அடுத்ததாக அவர் கேட்க நினைத்த கேள்விக்கான பதில்தான்.

'என்னவோர் அறிவு! இதையெல்லாம் அவளின் மூளைக்குள் புகுந்து கொண்டது எவ்வாறு?'' டாக்டர் ஸ்டீஃபன் ஆச்சரியப்பட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் கொண்டு வந்திருக்கிற மாலையை வெளியே எடுக்கப் பவுலோஸ் தயங்கினார்.

அந்த மாலையை வெளியே எடுத்து அவள் கழுத்தில் போடுவதற்கு அவருக்குத் தைரியம் ஏற்படவில்லை. ஸ்மிதாவின் கண்களில் அந்த அளவுக்கு ஏதோ ஒரு சக்தி இருந்தது.

''நாம் புறப்படலாம்!'' பவுலோஸ், டாக்டர் ஸ்டீஃபனிடம் சொன்னார்.

ஸ்டீஃபன், பவுலோஸின் மடியைப் பார்த்தார்.

''மேற்கொண்டு நீங்கள் ஏதாவது கேட்க வேண்டி உள்ளதா?'' அவள் கேட்டாள்.

அவர்கள் இருவரும் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர். ஆனால், அவர்கள் -

''நாங்கள் உங்களுக்குப் பரிசு ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறோம். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.'' பவுலோஸ் ஒருவழியாகச் சொன்னார்.

''நீங்கள் கொண்டு வந்திருப்பது ஒரு மாலைதானே? அந்தப் பரிசு எனக்கு வேண்டாம். அதனால் அதை இந்த வீட்டில் உள்ள வேறு யாரிடமாவது கொடுத்துவிட்டுப் போங்கள்!''

அதைக் கேட்டதும் பவுலோஸின் உடல் குன்றியது. டாக்டர் ஸ்டீஃபனாலும் எதையும் செய்ய முடியவில்லை. இருவரும் அங்கிருந்து வெளியே வந்தனர்.

''இந்த முயற்சியும் தோல்வியடைந்துவிட்டது. மேற்கொண்டு நாம் என்ன செய்வது?'' டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

''நாம் மாலை எடுத்து வந்திருப்பதை அவள் எப்படியோ தெரிந்து கொண்டதுதான் பிரச்சினை! இந்த நிலைமையில் நாம் இந்த மாலையைப் போட்டு விடாமல் வந்ததுதான் நல்லது. ஒருவேளை அந்த முயற்சியில் நாம் தோல்வி யடைந்திருந்தால் என்ன நடந்திருக்குமோ?''

''உடனே ஃபாதரைச் சந்தித்து, தகவல் சொல்கிறேன்.'' டாக்டர் ஸ்டீஃபன் கிளம்பத் தயாரானார்.

''இந்த ராத்திரியிலயா?''

''ஆமாம்... போகாமல் வேறுவழியில்லை. நான் ஆஸ்பத்திரிக்குப் போகாவிட்டால், டாக்டர் லூயிஸ் சந்தேகப்படுவார். அதன்பிறகு என்னைத் தீவிரமாகக் கண் காணிக்க ஆரம்பிப்பார். அதனால் நான் ஆஸ்பத்திரிக்குப் போவதுதான் நல்லது!'' ஸ்டீஃபன் கூறினார்.

பவுலோஸுக்கும் அதுதான் சரி என்று தோன்றியது! ''ஒன்று செய்யுங்கள்... ராத்திரி நேரமில்லையா? இதோ இந்த மாலையையும் உங்கள் டேஷ்போர்டில் வையுங்கள். ஒரு பாதுகாப்பாக இருக்கட்டும்!''

மணி சுமார் பதினொன்று இருக்கும்.

ஸ்டீஃபன் காரை ஸ்டார்ட் செய்தார்.

நிலா இல்லாத இரவு அது. கனத்த அந்தகாரம் எங்கும் பரவியிருந்தது.

ஸ்டீஃபனது கார் முன்னோக்கி விரைந்து கொண் டிருந்தது. சுமார் இருபது கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்திருக்கலாம் டாக்டர் ஸ்டீஃபன்.

சற்றுத் தொலைவில் யாரோ ரோட்டில் நின்று கொண் டிருப்பதாகத் தோன்றியது. ஸ்டீஃபன் காரின் வேகத்தைக் குறைக்காமல் டிரைவிங்கில் கவனமாக இருந்தார். மிகவும் நெருங்கியபோதுதான் அந்த உருவம் சரியாக நடுரோட்டில் நிற்பது விளங்கியது.

கார் நெருங்கும்போது அந்த உருவம் பாதையிலிருந்து விலகலாம் என்று நினைத்த ஸ்டீஃபனுக்கு ஏமாற்றமாக இருந்தது.

டாக்டர் ஸ்டீஃபன் உடனே பிரேககில் காலை அழுத்தினார்.

''ஐயோ! அவர் தன்னையும் மீறிக் கூவினார். வெண்ணெயில் வழுக்கியது மாதிரி கார் வேகம் குறையாமல் முன்புறமாக விரைந்தது.

டாக்டரின் உடல் குப்பென்று வியர்த்தது.

காரை ரோட்டின் ஓரமாக நிறுத்த முயன்றார். ஆனால், கார் அப்போது அவரது கட்டுப்பாட்டில் இல்லையென்று தோன்றியது.

வாழ்க்கையில் முதன்முறையாக இப்படியொரு விபத்து நிகழ்ந்திருக்கிறது. மனித உயிரின் மீது வண்டி ஏறியிருக்கிறது!

கடைசியில் ஒரு வகையாக கியரை மாற்றி, இரண்டாவது கியருக்கு வந்து, ஆக்ஸிலேட்டரிலிருந்து காலை எடுத்தார்.

வண்டி வேகம் குறைந்து அசைவற்று நின்றது.

''கடவுளே... தனக்கு முன்பாக ரோட்டில் நின்றிருந்த அதே பெண், இதோ எதிரில் நிற்கிறாள். நல்லவேளையாக அவளுக்கு எந்தவிதமான ஆபத்தும் நேரவில்லை.'' டாக்டர் ஸ்டீஃபன் ஆறுதல் அடைந்தார்.

''நான், வண்டியில மாட்டி அடிபட்டிருப்பேன்னு நெனைச்சீங்க... அப்படித்தானே டாக்டர்?'' அந்தப் பெண் சிரித்தவாறு கேட்டாள்.

''நீ யார்? உனக்கு எப்படி என்னைத் தெரியும்?'' ஸ்டீஃபன் வியப்பு அடைந்தவராகக் கேட்டார்.

"எனக்கு உங்களை நல்லாவே தெரியும். நான் நோயாளியா உங்க ஆஸ்பத்திரியில கொஞ்ச நாள் தங்கி யிருந்தேன்."

"எங்கே?"

"சிட்டி ஆஸ்பத்திரியில... என் பேர் வனஜா!"

"சரி... இப்ப உனக்கு என்ன வேணும்? எதுக்காக நடு ரோட்டுல நிக்குறே?"

"நான், எங்க அம்மா வீட்டுக்குப் போகணும்."

"அது எங்கே இருக்கு?"

"பக்கத்துலதான்... நீங்க போற வழியிலயே இருக்கு."

அதன் பிறகு டாக்டர் ஸ்டீஃபனுக்கு அவள் மீது எந்த விதமான சந்தேகமும் ஏற்படவில்லை. வெளித்தோற்றத்தில் அவளிடம் சந்தேகப்படும்படியாக எதுவும் தென்பட வில்லை.

"ம்... ஏறிக்கங்க!" டாக்டர் ஸ்டீஃபன் கூறினார். பிறகு காரின் கதவை அவள் பக்கமாகத் திறந்துவிட்டார்.

"பிரேக்கிலதான் கொஞ்சம் பிரச்சினை. பரவாயில்லை.... ஏறிக்கங்க!"

வனஜா, டாக்டரின் வார்த்தைகளைப் பொருட்படுத்திய தாகத் தோன்றவில்லை. அவள் பயப்பட்டதாகத் தெரிய வில்லை. கார் பற்றிய விஷயத்தில் அவளுக்கு அனுபவம் குறைவாக இருக்கும் என்று டாக்டர் நினைத்தார்.

கார் ஸ்டார்ட் ஆகி முன்னோக்கி நகர்ந்தது. வண்டி கிளம்பிய சற்று தூரத்துக்குள் எதிரில் ஏதோ ஒரு வண்டி சீறிப்பாய்ந்து வருவது அவருக்குத் தெரிந்தது. அவரின் கால் வழக்கம்போல் பிரேக்கில் அழுத்தியது.

கார் சட்டென்று ஒரு குலுக்கலுடன் நின்றது.

''என்ன... பிரேக் பிடிக்கிறதே!'' டாக்டர் ஸ்டீஃபன் ஆச்சரியப்பட்டார்.

''ஒருவேளை உங்களுக்கு அப்படித் தோன்றியிருக்கும்!'' அவள் கூறினாள்.

''இல்லை. கொஞ்சம் நேரத்துக்கு முன்னால் பிரேக் வேலை செய்யவில்லை!''

''ஒருவேளை பிரேக் ஸ்டக் ஆகி இருக்கலாம். இப்போது சரியாகி இருக்கும்!'' வனஜா, அனுபவசாலி மாதிரி பேசினாள்.

''கார் மெக்கானிசம் பத்தி உங்களுக்குத் தெரியுமா என்ன?'' டாக்டர் கேட்டார்.

''ஓரளவுக்கு. அப்பா கிட்ட கார் இருந்துச்சு. அவர் ஒரு மெக்கானிக்கும்கூட. அவர் வேலை செய்யும்போது நான் ஒரு சில சந்தர்ப்பங்கள்ல அவருக்கு உதவியிருக்கேன்!''

''ஓகோ...'' டாக்டர் அவளது பேச்சை சாதாரணமாகக் கேட்டுக் கொண்டார்.

அவள் காரில் ஏறிய விநாடியிலிருந்து சாம்பிராணி மற்றும் கற்பூரத்தின் வாசனை காருக்குள் எழும்பியதை டாக்டர் ஸ்டீஃபன் கவனித்தார். ஒருவேளை தனக்கு மட்டும் அப்படித் தோன்றுகிறதோ என்றும் அவர் சந்தேகம் கொண்டார். அப்படி இல்லை... காருக்குள் சாம்பிராணி மற்றும் கற்பூரத்தின் வாசனை தெளிவாகவே வீசுகிறது. மட்டுமின்றி, கூடவே இலஞ்சிப் பூவின் மணமும் தட்டுப் படுகிறது.

''வனஜா, எங்கே போகணும்னு சொன்னீங்க?'' டாக்டர் ஸ்டீஃபன் திரும்பவும் கேட்டார்.

''சிட்டி ஆஸ்பத்திரிக்குப் பக்கத்துலதான்!'' அவள் பதிலளித்தாள்.

''அதை முன்பே சொல்லியிருக்கலாமே?''

''எப்படியிருந்தாலும் நீங்கள் அந்த வழியாகத்தானே போகிறீர்கள்... வழியில் உங்களிடம் சொல்லி இறங்கி விடலாம் என்று நினைத்தேன்.

அப்போது கார்மீது எதுவோ ஒன்று வந்து விழும் சத்தம் கேட்டது.

மேற்புற மரங்களிலிருந்து சுள்ளிகள் ஏதாவது விழுந் திருக்கலாம் என்று டாக்டர் தனக்குத்தானே ஆறுதல் கூறிக் கொண்டார்.

''காருக்கு மேலே எதுவோ விழுந்த மாதிரி சத்தம் கேட்டதே!'' வனஜா கேட்டாள்.

''மரச்சுள்ளியாக இருக்கும்!''

''இல்லை. விழுந்த பொருள் எதுவாக இருந்தாலும், அது விழுந்த இடத்திலிருந்து அசைவதுபோல் தெரிகிறது. அநேக மாக அது ஒரு பல்லியாக இருக்குமென்று நினைக்கிறேன்.''

''பல்லி என்று எப்படி உங்களுக்குத் தெரிந்தது!''

''மனசில் தட்டுப்பட்டது.''

அப்போது காரின் முன்புறக் கண்ணாடியின் மேற்புறத்தில் பல்லியின் தலை தெரிந்தது. அது மெதுவாகக் கீழ் நோக்கி இறங்க முயற்சி செய்தது.

டாக்டர் ஸ்டீஃபன் அதைக் கவனிக்கவில்லை. அவரது பார்வை சாலையின் முன்புறத்தில் பதிந்திருந்தது.

திடுமென்று இடப்புற ஹெட்லைட் அணைந்தது.

வலப்புற ஹெட்லைட் வெளிச்சம் மட்டும் ரோட்டில் விழுந்து கொண்டிருந்தது.

டாக்டர் ஸ்டீஃபன் டிம் ஸ்விட்சைப் போட்டார். அவை, செயலற்றுப் போயிருந்தன.

ரோட்டில் இருட்டு கனமாக அப்பிக் கிடந்தது.

# 25

"கடவுளே! டாக்டர் ஸ்டீஃபன் தன்னையும் மீறி அலறினார். இதற்கு முன்னால் இது போல் நடந்த சம்பவம் சட்டென்று அவர் மனத்துள் கடந்து வந்தது.

ஸ்டீஃபன் தன் வலக்காலை பிரேக்கில் வைத்து அழுத்தினார்.

ஒருவித விசில் சத்தத்துடன் கார் சட்டென்று நின்றது.

"என்ன... என்ன ஆச்சு?" வனஜா கேட்டாள்.

"லைட் போயிடுச்சு!"

"இன்னொரு லைட் எரியுதே!" அவள் சொன்னாள்.

"அதுவும் போய் விட்டால்..."

"அதற்கென்ன... நான் உங்களுடன் இருக்கிறேனே..." அவள் சிரித்தவாறே பேசினாள்.

"உன் கிட்ட மந்திர சக்தி ஏதாவது இருக்கா என்ன?" டாக்டர் ஸ்டீஃபன் கேலிக்குரலில் கேட்டார்.

"இப்பவே நீங்க பார்க்கலையா?"

"இதெல்லாம் சாதாரணமா எதிர்பார்க்கக்கூடிய சம்பவம் தானே?"

அதன்பிறகு வனஜா எதுவும் பேசவில்லை. அவள் முகத்தில் பல்வேறு விதமான உணர்வுகள் தோன்றின.

அவளது நடவடிக்கைகள் எல்லாம் தோல்வியடைவதாக அவளின் முகம் எடுத்துக்காட்டியது. கூடவே ஏதோ ஒரு நிம்மதியற்ற தன்மையும் தெரிந்தது.

"வனஜா சரியாக எந்த இடத்தில் இறங்க வேண்டும்?" டாக்டர் ஸ்டீஃபன் திரும்பவும் அவளிடம் கேட்டார்.

''இன்றைக்கு இனிமேல் நான் வீட்டுக்குப் போக முடியாது. வண்டி போக முடியாத பாதையில் எனது வீட்டுக்கு நெடுந்தூரம் நடக்க வேண்டும்.''

''பிசாசு என்றால் பயமா?''

''பயப்படாமல் இருக்க முடியுமா என்ன?''

''அப்புறம் எப்படி இருட்டு நேரத்துல ரோட்டுல நிற்க முடிஞ்சது?''

''அது சந்தர்ப்பச் சூழ்நிலை...''

''அப்ப ராத்திரியில என்ன செய்யுறது?''

''பொழுது விடியற வரைக்கும் எங்கேயாவது உட்கார்ந்து பொழுது போக்கணும். அதுக்கு ஏற்றமாதிரி நான் ஒரு இடத்தைப் பார்த்து வெச்சிருக்கேன்.''

''அது எந்த இடம்?''

''கார் நிற்கும்போது சொல்றேன்.''

டாக்டர் ஸ்டீஃபனுக்கு விஷயம் விளங்கியது. அவள் அந்த இரவைத் தனது வீட்டில் செலவழிக்க விரும்புகிறாள். சரி... வேண்டுமானால் தங்கிக்கொள்ளட்டும். அதில் என்ன இருக்கிறது?

இரவு நேரத்தில் சொந்த வீட்டுக்குப் போகமுடியாத ஒரு பெண்ணுக்கு அபயம் கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது?

மட்டுமின்றி, அவள் தான் பணிபுரியும் ஆஸ்பத்திரியில் நோயாளியாக இருந்திருக்கிறாள். எனவே, அவளுக்கு ஆஸ்பத்திரியின் சுற்றுப்புறம் ஓரளவுக்குப் பழக்கமாகி யிருக்கும். பாதுகாப்பாக இருக்கும் என்று அவள் நினைக்க லாம்.

கார், ஸ்டீஃபனது வீட்டை அடைந்தது.

•

போர்ச்சில் காரை நிறுத்திவிட்டு டாக்டர் ஸ்டீஃபன் காரிலிருந்து இறங்கினார். தொடர்ந்து வனஜாவும் இறங்கினாள்.

அவர் கதவைத் திறந்தபோது, அவருக்குப் பின்னால் அவளும் வீட்டுக்குள் நுழைந்தாள்.

''இங்க நான் தனியாகத்தான் இருக்கேன்!'' டாக்டர் சொன்னார்.

''இப்போ நானும் இருக்கிறேனே...'' அவள் சிரித்தவாறே சொன்னாள்.

என்னவொரு சுதந்திரத்துடன் அவள் சிரிக்கிறாள்.

வாழ்க்கையில் முதல் தடவையாகச் சந்தித்து அறிமுக மான ஒருத்தி இந்த அளவுக்கு நெருங்கிப் பழகுவாளா? ஒருவேளை இது அவளது இயல்பாக இருக்கலாம்.

''மாத்துத் துணி வேணுமா?'' டாக்டர் கேட்டார்.

''ஒரேயொரு ஷர்ட் மட்டும் இருந்தால் போதும் எனக்கு!''

'பரவாயில்லையே!' என்று மனத்துள் நினைத்துக் கொண்டவராக, அவளுக்கு ஷர்ட் ஒன்றை எடுத்துக் கொடுத்தார்.

அவள் சற்று ஒதுங்கிச் சென்று அதை அணிந்து வந்தாள்.

அதை மட்டுமே அணிந்து வந்தாள்.

எனினும், எந்தவொரு தயக்கமும் இல்லாமல் அவள் அவருக்கு முன்னால் வந்து நின்றாள்.

ஒரு டாக்டர் என்ற முறையில் எவ்வளவோ பெண்களின் உடையற்ற உடம்பைப் பார்த்திருக்கிற டாக்டருக்கு அவள் வந்து நின்றபோது அதில் விகல்பம் எதுவும் தெரியவில்லை. எனினும், அவளின் உடலமைப்பை, டாக்டர் ஒரு கணம் பார்க்கவே செய்தார்.

''என்ன பார்க்குறீங்க?'' அவள் கேட்டாள்.

''ஒண்ணுமில்லை... இப்படிக்கூட-வா பொண்ணுங்க இருப்பாங்கன்னு யோசிச்சுப் பார்த்தேன்.''

''அப்படியா?''

''ம்...'' அவள் கண்களில் தாகம்.

கடிகாரம் பன்னிரண்டு தடவை மணியடித்தது.

ஸ்டீஃபன் சட்டென்று கடிகாரத்தைப் பார்த்தார்.

அதோ... அந்தப் பல்லி!

கடிகாரத்தின் வட்டப் பரப்பளவுக்குப் பெரிதாக!

கீழே ஆறு என்ற எண்ணில் தலையும் பன்னிரண்டில் அதன் வால் பகுதியும் சரியாகப் பொருந்தியிருந்தன.

அந்த அளவுக்குப் பெரியது.

சட்டென்று பார்த்தால் மணி ஆறு ஆகியிருப்பதாகவே தோன்றும்.

இந்தப் பல்லி எதற்காக இங்கு வந்திருக்கிறது?

எட்டு அங்குல விட்டத்தில் அந்தப் பல்லி உறுதியாக ஒட்டிப் பிடித்திருந்தது.

இந்தப் பல்லிதான் சற்று நேரத்துக்கு முன்னால் காரில் இருந்ததா? என்ன காரணத்தாலோ இப்படிப்பட்ட பல்லியைப் பார்க்கும்போதெல்லாம் டாக்டர் லூயிஸ் தான், டாக்டர் ஸ்டீஃபனின் மனதில் எழுந்தார்.

அவனுக்கு, இந்த உயிருடன் ஏதோ ஒரு தொடர்பு இருக்கிறது.

இரவு நேரத்தில் அதிகமாக உலாவும் ஓர் உயிர் என்பதால்தான், அவன் இதைப் பயன்படுத்துகிறானோ என்னவோ!

எவரும் சந்தேகப்பட மாட்டார்களே.

இப்படிப்பட்ட உருவத்தில் கணவன்-மனைவி படுத்து உறங்கும் படுக்கையறைக்குள்கூட அவனால் சுலபமாக நுழைய முடியுமே!

மற்ற ஏதாவது உயிரினங்களாக இருந்தால் அடித்துக் கொல்ல முற்படுவார்கள். பல்லியை மட்டும் நாம் எதுவும் செய்வதில்லையே!

டாக்டர் ஸ்டீஃபன் கவனிக்கிறார் என்பதை உணர்ந்ததைப் போல் அந்தப் பல்லி சட்டென்று மேற்புறமாக நகர்ந்தது. இப்போது அதன் தலை கடிகாரத்தின் மையத்திலும், வால்பகுதி கடிகாரத்தின் மேற்பகுதியிலும் இருந்தது.

இப்போது பார்த்தால் சட்டென்று பல்லி, கண்ணுக்குத் தெரியாதது போல் கடிகாரத்துடன் ஒட்டிப் படுத்திருந்தது.

''என்ன பார்க்குறீங்க?'' வனஜா கேட்டாள்.

''ஒண்ணுமில்லை... மணி பன்னிரண்டு ஆகிடுச்சே!''

''ஆமாம் நாம தூங்க வேண்டாமா... இல்லை படுக்க வேண்டாமா?''

''ஆமாம் தூங்கணும்... நாளைக்குக் காலையில் எனக்கு டியூட்டி இருக்கு!'' என்ற ஸ்டீஃபன் தனது ஷூக்களின் லேஸ்களை அவிழ்க்கத் தொடங்கினார்.

வனஜா கடிகாரத்தைப் பார்த்தாள்.

பல்லியின் கண்கள்...

அதிலிருந்து தெளிவற்ற ஒளி ஒன்று ஊசியளவு பருமனுடன் வனஜாவின் உடலில் பாய்ந்து கொண்டிருந்தது.

பல்லியின் கட்டுப்பாட்டில்தான் அவள் செயல்படுகிறாள் என்பதை உணர்த்துவது போலிருந்தது அவளது நிலை. டாக்டர் ஸ்டீஃபன் உடை மாற்றிவிட்டு லுங்கி ஒன்றை உடுத்திக்கொண்டு, பாத்ரூமுக்குச் சென்றார்.

அப்போதும் வனஜா குறித்த சன்னமான சந்தேகம் டாக்டர் ஸ்டீஃபனிடமிருந்து அகன்றிருக்கவில்லை. அமானுஷ்யமான ஏதோ ஒரு சக்தி அவளிடம் இருப்பதாக அவருக்குத் தோன்றியது.

''அந்த அறைக்குள்ள கட்டில் இருக்கு. போய்ப் படுத்துக்கங்க!'' அவர், அவளிடம் சொன்னார்.

தயங்கினாலும், டாக்டரின் சொல்லுக்கு அவள் கீழ்ப் படியவே செய்தாள்.

அந்த அறையின் கதவை உட்புறமாகத் தாழிட முடியும். ஆனால், அதன் தாழ்ப்பாளைப் போடும் சத்தம் அவருக்குக் கேட்கவில்லை.

சற்று நேரத்துக்குள் ஸ்டீஃபன் தனது படுக்கையறைக்குள் நுழைந்து கதவை மூடினார். மீண்டும் ஒரு தடவை பார்த்து, தாழ்ப்பாள் போட்டிருப்பதைப் உறுதி செய்த பிறகு அவர் கட்டிலில் ஏறிப் படுத்தார்.

வனஜா தூங்கவில்லை. அவள் கட்டிலில் உட்கார்ந் திருந்தாள்.

''உனக்கு என்ன ஆச்சு?'' அவளுக்கு ஒரு குரல் கேட்டது.

அவள் திரும்பிப் பார்த்தபோது அந்தப் பல்லி கட்டிலை ஒட்டியிருந்த சுவரில் பதிந்திருந்தது.

''இல்லை... என்னால முடியலை... என்னால எதையும் செய்ய முடியாது.'' அவள் நிம்மதி இழந்தவளாக பதிலளித் தாள்.

''நீ எதுக்குப் பயப்படுறே?'' அந்தப் பல்லியின் தலை அசைந்தது.

''அந்த மாலை...'' அவள் பயத்துடன் பேசினாள்.

''அவ்வளவுதானா விஷயம்? அது காருக்குள் அல்லவா இருக்கிறது. அதனால்தான் அதை அப்போதே அழிக்கச்

சொல்லியிருந்தேன். அந்த காரை உன்னால் புரட்டிப் போட முடியவில்லை. இனி அது தேவையில்லை. அவனைச் சரிப்படுத்தினால் போதும்!'' பல்லி அவளை வற்புறுத்தியது.

அவள் அப்போதும் தயங்கினாள்.

''எழுந்திரு... நான் சொன்னபடி செய்யாவிட்டால், நான் உன்னை...'' அந்தப் பல்லி சட்டென்று அவள் முகத்தின் மீது பாய்ந்தது.

அவள், ''ஐயோ!'' என்று அலறினாள். அவள் உடம்பு பயத்தால் நடுங்கத் தொடங்கியது.

''உனக்குள் எனது சக்தி உள்ளது. அது இருக்கும் வரை அவனால் உன்னை எதுவும் செய்யமுடியாது. எனவே, நீ அவனுடன் உறவு கொள். அப்படிச் செய்தால் அவன் எனது கட்டுப்பாட்டுக்கு வந்து விடுவான்.''

டாக்டர் லூயிஸுக்குள் அடங்கியிருந்த பைசாசிக சக்தியின் நோக்கம் அதுவாகத்தான் இருந்தது.

எவ்வளவோ முயற்சி செய்தும் அவனால், ஸ்டீஃபனை எதுவும் செய்ய முடியவில்லை.

வனஜாவும், ஸ்மிதா மாதிரியானவள்தான். டாக்டர் ஸ்டீஃபன் கார் விபத்தில் சிக்கி ஆஸ்பத்திரியில் படுத்திருந்த போதுதான் வனஜா, அங்கு சிகிச்சைக்கு வந்திருந்தாள்.

அவளின் உடம்பிலுள்ள ரத்தத்தில் சிவப்பு அணுக்கள் விரைவாக அழிந்து கொண்டிருந்தன. வெளியே வேறு எங்கெல்லாமோ, எவ்வளவோ சிகிச்சைகள் செய்தும் அவளது நோய் குணமடையவில்லை.

கடைசியாக அவளை சிட்டி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்திருந்தனர்.

தனது பைசாசிக சக்தியைப் பரப்ப, தக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தார் லூயிஸ்.

டாக்டர் லூயிஸ் தன் ரத்தத்தை அவள் உடம்பில் செலுத்தினார். அத்துடன் அவளது நோய் அகன்றது.

அதனால் வனஜாவும் பைசாசிகத் தன்மையில் ஸ்மிதா மாதிரியானாள்.

ஆனால், வனஜா தனது சக்திகளை வேறொருவகையில் பயன்படுத்தினாள். அவள், டாக்டர் லூயிஸுக்கு ஒரு ஏஜெண்டு மாதிரி செயல்பட்டாள். அவள் மூலமாக டாக்டர் லூயிஸுக்கு ஏராளமான இளம்பெண்கள் அறிமுக மாயினர். அப்படித்தான் அவளுக்கு டாக்டர் ஸ்டீஃபனை சமாளிக்கும் வேலை கிடைத்தது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி உடலுறவு கொண்டு, டாக்டர் ஸ்டீஃபனை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதுதான் லூயிஸின் லட்சியம்.

"ம்... சீக்கிரம் போ!" பல்லி, தனது தலையால் அவள் கண்களில் மோதியது.

அவள் தன்னையும் மீறி அலறினாள்!

## 26

பைசாசிகப் படைப்பாக மாறிவிட்டிருந்த அந்த உயிரில் அடங்கியிருக்கும் சக்தி எவருடையது என்று வனஜாவுக்குத் தெளிவாகத் தெரியும்.

அவன், அவளை பல முறை பயன்படுத்தியிருக்கிறான். அவளது வெட்கத்தின் திரையை நீக்கியவன் அவன்தான். அவன் நினைத்தால், தன்னை அழித்துவிடவும் முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக, தன்னுள் பைசாசிக சக்தி யொன்று செயல்பட்டுக் கொண்டிருப்பதைத் தெரிந்து கொண்ட ஒரே நபரும் டாக்டர் லூயிஸ்தான்.

உண்மைதான்!

அதனால் அவனது கட்டளைக்குத் தலை வணங்குவது தவிர வேறு வழியில்லை.

''எவ்வளவு நேரமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன் கிளம்பு என்று... ம்... சீக்கிரம் ஆகட்டும்!'' அந்தப் பல்லி அவள் காதருகே வந்து பேசியது.

''நான் போகிறேன்... என்னை விடுங்கள்!''

''பேசிக்கொண்டிருக்காதே... நேரம் இல்லை... உடனே கிளம்பு!''

வனஜா எழுந்தாள்.

அவள் கதவை நெருங்கினாள்.

டாக்டர் ஸ்டீஃபன் படுத்திருக்கும் அறை வாசலை நெருங்கினாள். அப்போது அந்தப் பல்லி, கதவின் கீழ்ப்புற இடைவெளி வழியாக அந்த அறைக்குள் நுழைவதை கவனித்தாள்.

அதன் கண்கள் இரண்டும் சிவப்பு நிற முத்துகள் மாதிரி பளபளத்தன.

அறையின் உட்புறம் வந்த பல்லி கதவின் தாழ்ப்பாளை நோக்கி உயர்ந்தது.

பிறகு தனது வாலால் சத்தம் எழுப்பாமல் தாழ்ப்பாளை, விடுவித்தது.

இப்போது கதவு திறந்து கொண்டு சற்று உள்வாங்கி நின்றது.

வனஜா அந்தக் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு அறைக்குள் நுழைந்தாள்.

அறை ஒரே இருட்டாக இருந்தது.

எனினும், அந்தப் பல்லியின் கண்களிலிருந்து கிளம்பிய தெளிவற்ற வெளிச்சம் அந்த அறைக்குள் பரவியிருந்தது.

அது சிவப்பு நிற வெளிச்சம்.

அந்த வெளிச்சம் இல்லாவிட்டாலும் வனஜாவால் அந்த அறைக்குள் இருப்பவற்றைத் தெளிவாகப் பார்க்க முடியும். டாக்டர் லூயிஸின் ரத்தத்தால் அந்த வல்லமையை ஏற்கெனவே பெற்றிருந்தாள் வனஜா.

அவள், டாக்டர் ஸ்டீஃபன் படுத்திருக்கும் கட்டிலில் போய் அமர்ந்தாள்.

ஸ்டீஃபன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்.

வனஜாவின் வலக்கை அவரின் மார்பில் பதிந்தது. நிதானமாக அந்தக் கை கீழ்ப்புறமாக இறங்கியது.

மெதுவாக... மிக மெதுவாக...

ஸ்டீஃபனின் தொப்பூழ்க்கொடியை நெருங்கியதும், அவளின் கை விரல் நகங்கள் அப்படியே நின்று உட்புறமாக அமிழத் தொடங்கின.

டாக்டர் ஸ்டீஃபன் திடுக்கிட்டு எழுந்தார்,

அவரைக் கட்டிலிலிருந்து எழுந்திருக்காமல் செய்ய அவள் முயன்றாள்.

அப்போது வனஜாவின் வலு அசாத்தியமானதாக இருந்தது. தன் உடம்பில் பதிந்திருப்பது ஏதோ ஒரு பைசாசிக சக்தி என்பது டாக்டர் ஸ்டீஃபனுக்கு விளங்கியது.

ஸ்டீஃபன் தன் உடலின் மொத்தச் சக்திகளையும் ஒன்று திரட்டி, வனஜாவை விசையுடன் பின்னுக்குத் தள்ளினார். அவள் மல்லாக்கச் சரியத் தொடங்கும்போது அவர் கட்டிலிலிருந்து துள்ளி எழுந்தார்.

காரின் சாவி, அப்போது தரையில் விழும் சத்தம் கேட்டது. அதை தலைமாட்டில் வைத்திருந்தார் ஸ்டீஃபன். ஃபாதர் இம்மானுவேல் தந்த மாலை அப்போதும் காரின்

டேஷ்போர்டில்தான் இருந்தது. உடனே அவர் மூளை, உடலுறுப்புகளுக்கு மின்னல் வேகத்தில் கட்டளைகள் இட்டன. டாக்டர் ஸ்டீஃபன் தனது கார் சாவியுடன் வீட்டுக்கு வெளியே ஓடிவந்தார்.

கீழே விழுந்த வனஜா சுதாரித்து எழுந்து, அவரைப் பிடிக்க முற்படுவதற்குள் ஸ்டீஃபன் தனது காரை அடைந்து விட்டிருநதார்.

வனஜா, அவரை நோக்கிப் பாய்ந்தாள்.

ஸ்டீஃபன் அதற்குள் காரின் கதவைத் திறந்து டேஷ் போர்டிலிருந்த மாலையை அவசர அவசரமாக வெளியே எடுத்தார்.

வனஜா ஒரு பிசாசு மாதிரி ஓடிவந்து கொண்டிருந்தாள்.

ஆகாயத்தில் அங்கிங்காகத் தென்பட்ட நட்சத்திரங்களின் மங்கலான வெளிச்சத்தில் ஸ்டீஃபனின் கையிலிருந்த மாலையின் சிலுவையில் உள்ள கற்கள் பளபளத்தன.

அதைப் பார்த்ததும் வனஜா நன் கண்களைப் பொத்திக் கொண்டாள்.

டாக்டர் ஸ்டீஃபன் நேரத்தைப் பாழாக்கவில்லை. அவர், தன் கையிலிருந்த மாலையை அவளின் கழுத்தை நோக்கி எறிந்தார். ஆனால், அது சரியாக அவள் கழுத்தில் விழ வில்லை.

எக்குத்தப்பாக அவளின் இரு காதுகளின் மடல்களில் மடிந்து விழுந்த மாலையின் சிலுவை, அவளின் கழுத்துப் பகுதியில் நின்று ஆடிக்கொண்டிருந்தது.

அவள் உரத்த குரலில் அலறினாள்.

பின்பு துடிதுடிப்பது போல் அவள் தரையில் விழுந்தாள்.

விழுந்த அதிர்ச்சியில் அந்த மாலை அவள் காதுகளி லிருந்து நழுவி விழுந்தது. பாய்ந்து சென்ற ஸ்டீஃபன் சட்டென்று அதைக் கையில் எடுத்தார்.

''என்னைக் காப்பாற்றுங்கள்... நான் இனி இங்கு வரமாட்டேன்... ஓடிவிடுகிறேன்!'' என்றவாறு வனஜா வெளிப்புற கேட்டை நோக்கி ஓடினாள்.

ஸ்டீஃபன் அங்கேயே நின்றிருந்தார்.

கேட்டைத் தாண்டியவள் சற்று நேரத்தில் இருளில் மறைந்தாள்.

ஸ்டீபன் காரைப் பத்திரமாக மூடிவிட்டு வீட்டுக்குள் சென்றார். கதவுகளை கவனமாக மூடித் தாழிட்டுவிட்டுத் தனது படுக்கை அறையை அடைந்தார்.

அப்போது கடிகாரம் பதினோரு தடவை அடித்தது. அதை கவனித்த ஸ்டீஃபன் ஆச்சரியம் அடைந்தார்.

உண்மைதான்... கடிகாரம் ஒரு மணி நேரம் பின்னோக்கி விரைந்திருந்தது.

வனஜா வந்தபிறகுதான் இப்படியொரு மாற்றம் ஏற்பட் டுள்ளது.

ஸ்டீஃபனுக்கு இது தொடர்பான காரியங்கள் பிடிபடுவது போலும், பிடிபடாத மாதிரியும் தோன்றியது.

மறுநாள் ஸ்டீஃபன் வழக்கம்போல் ஆஸ்பத்திரிக்குச் சென்றார்.

''சார், நான் உங்களைத்தான் எதிர்பார்த்துட்டிருக்கேன்!'' எமிலி சொன்னாள்.

''ஏதாவது விசேஷம் உண்டா?'' ஸ்டீஃபன் கேட்டார்.

''இருக்கு சார்... அதான் தேடினேன்.''

''அப்ப சொல்லுங்க?''

''இந்த இடத்து வேலையை விட்டுடலாம்னு தோணுது!''

''ஏன்... நர்ஸ் வேலைல அலுப்புத் தட்டிருச்சா?''

''வேலையில வெறுப்பு கிடையாது.''

''அப்புறம்?''

''பெரிய டாக்டரை நினைச்சா பயமா இருக்கு.''

''ஓகோ... அதுதான் விஷயமா?''

''ஆமாம் சார்... உங்க கிட்டச் சொல்லிவிட்டுக் கிளம்பலாம்னு நெனைச்சேன். அதான் காத்திருக்கிறேன்.''

''அந்த அளவுக்கு என்ன நடந்துச்சு?''

''இந்த ரெண்டு நாளா அவரோட தொல்லையை என்னால தாங்க முடியலை!''

''இதெல்லாம் பகல்லயா... ராத்திரியிலயா?''

''எல்லாம் ராத்திரி ரெண்டு மணிக்கு மேலதான்!''

''எந்த இடத்துல?''

''இங்கேயேதான்! அதோ அந்த அறைக்குள்ள நுழைஞ்சுட்டு என்னைக் கூப்பிட்டார்!'' ஓய்வு அறையைச் சுட்டிக் காட்டியபடி அவள் சொன்னாள்.

''அப்புறம் எப்படித் தப்பிச்சீங்க எமிலி?''

''எனக்கு உடம்பு சரியில்லைன்னு சொல்லித்தான்!'' சிரித்தபடியே பேசினாள்.

''பரவாயில்லை... நல்ல ஐடியாதான்!''

''இன்னிக்கும் அவர் வரலாம்.''

''எப்படி இருந்தாலும் இதுவரைக்கும் தப்பிச்சாச்சு இல்லையா... சந்தோஷம். நான் ஒரு மாலை தர்றேன். அதைக் கழுத்துல போட்டுக்கங்க. அதுக்குப் பிறகு அவர் உங்ககிட்ட வரமாட்டார்.''

''என்ன சொல்றீங்க டாக்டர்? அவர் பிசாசா என்ன?''

''ஒரு சிலரை அப்படியும் நினைச்சுக்கலாம்.''

''எனக்குப் புரியலையே சார்!''

''அப்படீன்னா, நான் ஒரு விஷயம் சொல்றேன். ஆட்சேபனை இல்லேன்னா, என்னோட குவார்ட்டர்ஸில தங்கிக்கலாம்.''

''அதுல எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. அக்காலை நீங்க விரும்பினதும் எனக்குத் தெரியும். ஆனாலும், ஆளுங்க கண்டபடி எதையாவது பேசுவாங்களே!''

''இப்ப நான் எது சொன்னாலும் எமிலிக்குப் புரியாது. அப்படி இல்லேன்னா, உங்க வீட்டுக்குப் போயிடுங்க. என்னால இவ்வளவுதான் சொல்ல முடியும். என்கிட்ட மேற்கொண்டு எதையும் கேட்கக் கூடாது!''

''நீங்க சொல்றதை நான் ஒப்புக்கிறேன். இதனால வர்ற கெட்ட பேரை நீங்கதான் சமாளிக்கணும். நான் ஒரு ஆக்டிங் நர்ஸ், நீங்க ஒரு டாக்டர்.''

''எது வந்தாலும் நான் ஏத்துக்கிறேன். சரி... டாக்டர் நிம்மி வந்திருக்காங்களா?'' டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

''வந்திருக்கிறாங்க... நாலாவது வார்டுல டியூட்டி பார்க்குறாங்க.''

''அவங்க வேலை பார்க்க வேண்டியது ரெண்டாவது வார்டுதானா?''

''பெரிய டாக்டரோட உத்தரவு!''

''அப்படின்னா டாக்டர் நிம்மியைக் கொஞ்சம் கூட்டிட்டு வர முடியுமா?''

எமிலி அங்கிருந்து கிளம்பி, டாக்டர் நிம்மியுடன் வந்து சேர்ந்தாள்.

''சமீபமா நீங்க லீவுல இருக்கிற மாதிரித் தோணுது!'' டாக்டர் நிம்மி சிரித்தபடி கேட்டார்.

''தவிர்க்கமுடியாத சில வேலைகள். வேற என்ன செய்யறது டாக்டர்?''

''கூப்பிட்டீங்களே... என்ன விஷயம் மிஸ்டர் ஸ்டீஃபன்?''

''செப்டம்பர் மாசம் பன்னிரண்டாம் தேதியிலிருந்து, அக்டோபர் பத்தாம் தேதிக்குள்ள வனஜாங்கிற பேஷண்ட் இங்க அட்மிட் ஆகி இருந்தாங்களா?'' டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

''ஆமா, இருந்தாங்க. வித்தியாசமான நோய் பிடிச்ச பெண். அவள் குணமடைஞ்சு போயிட்டாளே...''

'அப்படியானால், அவள் சொன்னது சரிதான்!' டாக்டர் ஸ்டீஃபன் நினைத்தார்.

''ஏன் கேட்டீங்க டாக்டர்?'' நிம்மி விசாரித்தார்.

''ஒண்ணுமில்லை... அந்தப் பெண்ணோட விலாசம் எனக்குத் தேவை!''

''அதுக்கு என்ன... தர்றேனே!'' என்ற டாக்டர் நிம்மி அங்கிருந்து கிளம்பினார்.

ரெக்கார்டு ரூமுக்குச் சென்ற டாக்டர் நிம்மி, செப்டம்பர் மாத ரிஜிஸ்டரைத் தேர்ந்து எடுத்து, அதன் தாள்களைப் புரட்டினார்.

ஒவ்வொரு பெயராகத் தேடினார்.

வனஜா மேத்யூ. அப்பா: மேத்யூ வர்கிஸ். வீட்டுப்பெயர், மற்றும் விலாசம் தெளிவாக எழுதப்பட்டிருந்தது.

டாக்டர் ஸ்டீஃபன் அதை மற்றொரு காகிதத்தில் குறித்துக் கொண்டார்.

''எதுக்கு இது?'' டாக்டர் நிம்மி கேட்டார்.

''நாளைக்கு விவரமாச் சொல்றேன்...'' ஸ்டீஃபன் ரிஜிஸ்டரை மூடிவிட்டு எழுந்தார்.

அன்றைய மாலை நேரத்தில் டாக்டர் ஸ்டீஃபன் டியூட்டி முடிந்ததும் வனஜாவின் வீட்டை நோக்கி வண்டியைச் செலுத்தினார்.

## 27

வழி விசாரித்தபோது, கார் வீட்டின் வாசல்வரை செல்லும் என்பது தெரிந்தது. அப்படியானால், முந்தைய நாள் இரவில் வனஜா சொன்னது பொய்யென்று விளங்கியது.

உண்மையைச் சொல்லியிருந்தால், இரவில் அவளை, அவளது வீட்டில் கொண்டு போய் விட்டிருப்போம் என்று அவள் நினைத்திருக்கலாம்.

குறிப்பிட்ட அந்த வீட்டை நெருங்கியபோது, அதன் வராந்தாவில் கொஞ்சம் பேர் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

அமைதி நிறைந்த சோகச் சூழ்நிலையையே டாக்டர் ஸ்டீஃபன் சந்திக்க நேர்ந்தது.

அவர் காரை நிறுத்திவிட்டு, கேட்டை கடந்தபோது நடு வயது மனிதர் ஒருவர் வீட்டிலிருந்து வந்து கொண்டிருந்தார்.

"நீங்க யாருன்னு தெரியலையே?" நட்பு நிறைந்த குரலில் அவர் கேட்டார்.

"சிட்டி ஆஸ்பத்திரியில வேலை பார்க்கிற டாக்டர். என் பெயர் ஸ்டீஃபன்."

"வாங்க.. நாம இப்படி உட்காருவோம்!" அவர், டாக்டரை அழைத்துச் சென்றார்.

இருவரும் மர நிழலில் அமர்ந்தனர்.

அங்கிருந்து பார்த்தபோது வனஜாவின் படத்தில், மாலை ஒன்று போடப்பட்டிருந்தது.

''ஏன் எல்லோரும் சோகமா இருக்கிறாங்க?'' டாக்டர் விசாரித்தார்.

''வனஜா, இன்னிக்கு காலையில இறந்துட்டா. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வர முடியாமப் போச்சு!''

''இன்னிக்கு காலையிலையா?'' டாக்டர் திரும்பவும் கேட்டார்.

''ஆமாம்... காலையில ஏழு மணிக்கு அவ வழக்கமா எழுந்திருப்பாள். இன்னிக்கு காலையில அவள் கண் விழிக்கலை. எழுப்பப் போனபோது இறந்துகிடந்தாள். அவளோட நோய் அப்படிப்பட்டதாச்சே...'' அவர் துயரத்துடன் பேசினார்.

மேற்கொண்டு அவரிடம் கேள்விகள் எதையும் கேட்க வேண்டாம் என்று நினைத்த ஸ்டீஃபன் அங்கிருந்து எழுந்தார்.

''டாக்டர், நீங்க எதுக்காக வந்தீங்கன்னு சொல்லவே இல்லையே?'' நடுவயது மனிதர் கேட்டார்.

''வனஜாவோட நோய் பத்தி எனக்குத் தெரியும். நான் ஒரு விபத்துக்காக சிகிச்சையில இருந்தபோதுதான் அவங்க சிட்டி ஆஸ்பத்திரியில அட்மிட் ஆகியிருந்தாங்க. இப்போ அந்த நோய்க்கு மருந்து ஒண்ணு வந்திருக்கு. அதைச் சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்!'' டாக்டர் ஸ்டீஃபன் சமாளித்தார்.

''இனிமேல் என்ன மருந்து கிடைச்சு என்ன பிரயோஜனம் சார்?'' நடுவயது மனிதர் கண்ணை மூடியபடி கேட்டார்.

''வனஜாவை எங்கே அடக்கம் பண்ணியிருக்காங்க?''

''எங்களோட செமித்தேரியில...''

''உங்க பாதிரியார் யாரு?''

''ஃபாதர் இம்மானுவேல்.''

''அவர்தானா? அவரை எனக்கு நல்லாத் தெரியும். நான் வரட்டுமா?'' டாக்டர் ஸ்டீஃபன் அவரிடமிருந்து விடை பெற்றார்.

டாக்டர் ஸ்டீஃபனது கார் வந்து நின்ற இடம், அவர் வழக்கமாக வரும் தேவாலயம்தான். முந்தைய நாள் இரவில் தனக்கு நேர்ந்த அனுபவத்துக்கும் இந்த மரணத்துக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருப்பதாக ஸ்டீஃபனுக்குத் தோன்றியது.

''வனஜாவை அவன்தான் கொன்றிருக்க வேண்டும்!''

அவள் உயிருடன் இருந்தால், அவனுக்கு ஏதாவது ஆபத்து ஏற்படலாம் என்று அவன் சந்தேகப்பட்டிருக்க லாம். அப்படியானால், இந்த மரணத்தின் பின்னணியில் ஏதோ ஒரு மர்மம் ஒளிந்திருக்கிறது என்று திடமாக நம்பினார் டாக்டர் ஸ்டீஃபன்.

ஃபாதர் இம்மானுவேல் எங்கோ வெளியே செல்லும் தீவிரத்தில் இருந்தார். டாக்டர் ஸ்டீஃபனது காரை பார்த்ததும், தன் கையிலிருந்த பிரீஃப்கேஸை அப்படியே மேஜை மீது வைத்தார்.

காரிலிருந்து இறங்கிய ஸ்டீஃபன் கேட்டார். ''ஃபாதர் எங்கேயோ அவசரமாக கிளம்புறாப்பல இருக்கே!''

''பிஷப்போட வீடுவரைக்கும் அத்தியாவசியமா போய்ட்டு வர வேண்டியிருக்கு!''

''அப்ப, கார்ல ஏறுங்க... போகலாம்!'' என்ற ஸ்டீஃபன் கார் கதவைத் திறந்தார்.

''அதுவும் நல்லதுக்குத்தான். நாளைக்கு காலையில முக்கியமான ஒரு சடங்கு இருக்கு.'' காரில் ஏறும்போது ஃபாதர் கூறினார்.

காரின் வேகம் அதிகரித்தது.

முதலில் ஃபாதரின் வேலை முடியட்டும். எவ்வளவு சீக்கிரம் போய்விட்டுத் திரும்பமுடிகிறதோ அவ்வளவுக்கு நல்லது. அதன் பிறகுதான் ஃபாதரிடம் வனஜாவைப் பற்றிப் பேசவேண்டும் என்று நினைத்திருந்தார் டாக்டர் ஸ்டீஃபன்.

''முக்கியமான செய்தி ஏதாவது?'' ஃபாதர், டாக்டரிடம் கேட்டார்.

''இருக்கு ஃபாதர்... எல்லாத்தையும் திரும்பி வந்து பேசிக்கலாம்.

''அதுவும் சரிதான்... நிம்மதியா உக்கார்ந்து பேசலாம்!'' என்ற ஃபாதர், 'புதிய ஏற்பாடு' புத்தகத்தின் கையடக்கப் பதிப்பு ஒன்றை எடுத்து வைத்து வாசிக்கத் தொடங்கினார்.

பிஷப் ஹவுஸில் சுமார் அரை மணி நேரத்துக்கு மேல் ஃபாதருக்கு வேலை இருந்தது. அவர் திரும்பி வரும்போது கையில் நிறைய பிரார்த்தனைப் புத்தகங்கள் இருந்தன.

அவர்கள் திரும்ப ஃபாதரது இருப்பிடத்தை அடையும்போது மணி எட்டரை ஆகியிருந்தது.

''உங்களுக்கு அவசரமான வேலை ஏதாவது இருக்கா டாக்டர்?''

''அப்படியெல்லாம் எதுவும் இல்லை. இன்னிக்குத் தாமதமானாலும் பரவாயில்லை.''

''அப்படின்னா, முதல்ல சாப்பாட்டு வேலையை முடிச்சுடலாம்.''

''சரி, ஃபாதர்.''

சமையல்காரரிடம் பரிமாறுமாறு கூறினார் ஃபாதர்.

சாப்பாட்டுக்குப் பிறகு அவர்கள் வழக்கமாக உட்கார்ந்து பேசும் ஹாலில் வந்து அமர்ந்தனர்.

''இப்பச் சொல்லுங்க டாக்டர்... என்ன சேதி?''

ஸ்டீஃபன், வனஜா தொடர்பான தகவல்களை ஒன்று விடாமல் தெளிவாகவும் நிதானமாகவும் சொன்னார்.

ஃபாதர் இம்மானுவேல் கவனமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டார்.

ஸ்டீஃபன் சொல்லி முடித்தபோது ஃபாதர், தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்திருப்பது விளங்கியது.

''இந்த செமித்தேரியிலதான் அவளை அடக்கம் பண்ணி யிருக்கு. என்னோட சந்தேகம் என்னன்னா, இதுவும் அவனோட ஒரு வித்தையாக இருக்கும்.'' ஸ்டீஃபன் தனது சந்தேகத்தை வெளியிட்டார்.

''எனக்கு விளங்கலை!'' ஃபாதர் குறுக்கிட்டார்.

''வனஜா, ஆஸ்பத்திரியிலேயே இறந்துபோயிருக்கணும். அதுக்குப் பிறகு அவள் நடமாடினது அவனோட ரத்தத்தால தான். அதாவது அவள் நடமாடுகிற மாதிரி...''

''அப்படியானால் அவனது நோக்கம், அவனைப் போன்றவர்களை நிறைய உருவாக்கிக் கட்சி சேர்ப்பது தானா?'' ஃபாதரின் நெற்றி சுளிவடைந்தது.

''அது, அவனுக்கு ரொம்பவும் பிரயோஜனமான விஷயம். இந்த மாதிரியானவங்களோட உதவியால், தன் எதிரிகளோட நடவடிக்கைகளைக் கண்காணிக்கலாம். அவங்களையே பயன்படுத்தி, எதிரிகளைத் தொலைக்கவும் செய்யலாமே. சுருக்கமாகச் சொன்னா, அவனோட கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடக்கிற அடிமைகளை உருவாக்குறது.''

ஃபாதர், டாக்டர் ஸ்டீஃபனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள்னு அவள் என் கிட்டச் சொன்னாள். ஆனால், அவளோட வீட்டைப் பார்த்ததுக்குப் பிறகுதான் அவள் சொன்னது பொய்னு தெரிஞ்சது!''

''அது சரிதான். மேத்யூ ஓரளவு வசதியானவர்தான். பணக்காரர்னு தாராளமா சொல்லலாம். நீங்க இரக்கப் படணும்கிறதுக்காக ஒருவேளை அப்படிச் சொல்லியிருக்க லாம்.

அப்போது கடிகாரம் மணி ஒன்பது என்பதைக் காட்ட ஒன்பது முறை மணியடித்தது.

''இப்ப உங்க தீர்மானம் என்ன?'' ஃபாதர் கேட்டார்.

''அவளது கல்லறையைத் திறந்து, அந்த உடம்பைப் பார்த்தாகணும். அவள் இப்பவும் அந்தப் பைசாசிகமான வடிவத்திலேயே அதுக்குள்ள கிடப்பாள்ங்கிறது என்னோட நம்பிக்கை!''

ஃபாதர் இம்மானுவேல் யோசனையில் ஆழ்ந்தார். கல்லறையைத் திறப்பது தண்டனைக்கு உரிய குற்றம். ஒருவேளை, அது தவிர்க்க முடியாதது என்றால், அதை போலீஸின் உதவியுடன் செய்ய வேண்டியதுதான். அதற்கென்று சில நடைமுறைகள் உள்ளன.

மட்டுமின்றி, இன்றைக்கு அடக்கம் செய்த ஒரு கல்லறையைத் திறந்தால், சராசரி மனிதர்களுக்கே ஏதாவது சந்தேகம் ஏற்படும்.

திருட்டுக் குற்றம்கூட சுமத்தப்படலாம். அதுவும் ஒரு இளம்பெண்ணின் உடலும்கூட.

அதே நேரம் அவளுக்குள் உண்மையிலேயே பைசாசிக சக்தி புகுந்திருந்தால், குறிப்பாக இரவு நேரத்தில் அது கல்லறையிலிருந்து வெளியேறி நடமாடத் தொடங்கினால், அதன் விளைவு மிகவும் பயங்கரமாக இருக்கும்.

''ஃபாதர் நீங்க எதைப் பத்தி யோசிக்கிறீங்கன்னு எனக்கு விளங்குது. முதல் விஷயம் இதை நாம மத்தவங்ககிட்டச் சொன்னா, யாருமே நம்ப மாட்டாங்க. எனவே, நாம இதை ரகசியமா நடத்துறதுதான் நல்லது.''

''ஒப்புக்கிறேன். அதுக்கு நாம என்ன பண்றதுன்னுதான் யோசிக்கிறேன்.'' ஃபாதர் கூறினார்.

''எப்படியிருந்தாலும் அவளை அடக்கம் பண்ணினதும் நல்லதுக்குத்தான். இல்லேன்னா, நான் நெனைச்ச காரியம் நடக்காது!''

''சரி, இப்ப நாம என்ன செய்யலாம்?'' ஃபாதர் கேட்டார்.

''ரொம்ப சிம்பிள். அந்தக் கல்லறையைத் திறந்து அவளோட உடம்புல ஒரு ஜபமாலையை வைக்கிறோம்... அவ்வளவுதான்.''

''இறந்துபோன உடம்புல ஒரு ஜபமாலை போடுறது வழக்கம்தான். அதை, அவளுக்கும் போட்டிருக்கோம்.'' ஃபாதர் சொன்னார்.

''அது ஜபிக்கப்பட்ட மாலையா?'' ஸ்டீஃபன் கேட்டார்.

ஃபாதருக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அந்த மாலை ஜபிக்கப்பட்டதா, இல்லையா என்பது ஞாபகம் வரவில்லை.

''சரி... உங்க யோசனைப்படியே செய்வோம். எப்படிப் பார்த்தாலும் நல்லதுதானே? வாங்க!'' ஃபாதர் எழுந்தார்.

வானில் நிலவு இல்லாத இரவு அது.

ஆகாயத்தில் நட்சத்திரங்கள் மட்டும் ஒளிர்ந்து கொண்டிருந்தன. அவற்றின் மங்கலான வெளிச்சம், அந்தப் பகுதியில் தெளிவற்ற சூழலை ஏற்படுத்தியிருந்தது.

கல்லறையின் கேட்டை நெருங்கினர் அவர்கள்.

ஆங்காங்கே எழும்பி நிற்கும் கல்லறைகள் தென்பட்டன. அவற்றின் ஊடாகத் தனிமைப்பட்டு நிற்கும் சில சிலுவை அடையாளங்களும் இருந்தன.

ஃபாதர் தனது பாக்கெட்டிலிருந்து சாவியை எடுத்து கேட்டைத் திறந்தார்.

தாழ்ப்பாளை விலக்கும்போது கரகரவென்ற சத்தம் கேட்டது.

உள்ளே நுழைந்ததும் புதிதாகத் தென்பட்ட வனஜாவின் கல்லறையை நோக்கி நடந்தனர். ஃபாதர்தான் முன்னால் நடந்தார்.

கல்லறையை நெருங்கினர்.

மிஸ் வனஜா மேத்யூ.

பிறப்பு: 13.8.1968

இறப்பு: 13.8.1989

டார்ச் லைட்டின் உதவியால் அந்தத் தேதிகளை டாக்டர் ஸ்டீஃபன் வாசித்தார்.

கல்லறையின் மேற்புறம் போட்டிருந்த ஸ்லாபின் ஓரங்களில் சிமெண்ட் போடப்பட்'டிருந்தது. அது அப்போதும் ஈரமாகவே இருந்தது.

டாக்டர் ஸ்டீஃபன் மெதுவாக அந்த ஸ்லாபை நகர்த்தினார். அது நகர்ந்தது.

அதன் பிறகு ஃபாதரும், ஸ்டீஃபனும் சேர்ந்து இரும்பு வளையங்களைப் பிடித்து உயர்த்தினர். உட்புறம் இருட்டாக இருந்தது.

லைட் வெளிச்சத்தை உட்புறம் பாய்ச்சினர்.

உட்புறத்தைப் பார்த்த இருவரும் திடுக்கிட்டுப் பின்வாங்கினர்.

# 28

அந்தக் கல்லறைக்குள் அவர்கள் எதைப் பார்த்தனர்.

உட்புறமிருந்த சவப்பெட்டியின் மூடி அசைந்தது.

அதன் ஓரங்களில் அடிக்கப்பட்டிருந்த ஆணிகள் மேற்புறமாக எழும்பின.

குறுக்கே கட்டப்பட்டிருந்த கயிறுகள் உடைபட்டன.

ஃபாதர் இம்மானுவேலும் டாக்டர் ஸ்டீஃபனும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

என்ன செய்வது என்று தெரியாமல் இருவரும் ஒரு கணம் தயங்கினர்.

அடுத்த நிமிடத்தில் -

திடுமென்று சவப்பெட்டியின் மேல்மூடி மேற்புறமாக உயர்ந்து வந்தது. அதற்கு அடுத்ததாக அவர்கள் கண்டது பயங்கரமான ஒரு காட்சியாக இருந்தது.

வனஜா எழுந்து வந்தாள்!

அவள் அந்தக் கல்லறைக்குள் நின்றபடி அங்கிருந்த இருவரையும் பைசாசிகமாகப் பார்த்தாள்.

ஃபாதர், டாக்டர் ஸ்டீஃபனைப் பார்த்தார்.

சற்று நேரத்துக்குள் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த ஸ்டீஃபனுக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. தனது பேண்ட் பேக்கட்டிலிருந்த ஜபமாலையை எடுத்துச் சட்டென்று வனஜாவின் கழுத்தில் போட்டார்.

மாலை விழுந்ததும் வனஜாவிடமிருந்து பயங்கரமான அலறல் ஒன்று எழுந்தது.

அவள் சட்டென்று மட்டமல்லாக்கப் பெட்டிக் குள்ளேயே விழுந்தாள்.

அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவளது உடலின் நிறம் நீலமாக மாறியது. இறுதியில் அந்த உடல் அசைவற்றுப் போனது.

ஸ்டீஃபன் போட்ட ஜபமாலை அவளது உடம்பில் கிடந்து பளபளத்தது.

''இனிமேல் அவள் எழுந்திருக்க முடியாது!'' ஃபாதர் கூறினார்.

சவப்பெட்டியின் மூடியை மேலிருந்து உட்புறம் குறி பார்த்துப் போட்டார். அது, துல்லியமாகச் சவப்பெட்டியை மூடவும் செய்தது.

''இனி ஸ்லாபையும் மூடிவிட்டால் போதும்!'' ஃபாதர் சொன்னார்.

ஸ்லாபை சரியாகப் பொருத்திய பிறகு ஈர சிமெண்ட்டை எடுத்துப் பூசி விட்டார்.

''அப்படியானால், இனி... அவன் அவளைத் தேடுவான்!'' ஃபாதர் மந்திரிப்பது போல் பேசினார்.

''உண்மைதான்!'' அப்போதுதான் அப்படியொரு வாய்ப்பு இருப்பது டாக்டர் ஸ்டீஃபனுக்கு விளங்கியது.

வரவிருந்த ஓர் ஆபத்தைத் தவிர்த்ததிலும், ஆவியாக அலைய இருந்தவளை அதிலிருந்து காப்பாற்றியதும் அவர்கள் இருவருக்கும் ஓரளவுக்கு ஆறுதல் அளித்தது.

''அவன் விரைவிலேயே விஷயத்தைப் புரிந்து கொள்வான்!'' ஃபாதரின் இருப்பிடத்துக்கு வந்த பிறகு ஸ்டீஃபன் கூறினார்.

''தேடி வரட்டும்... பார்த்துக் கொள்ளலாம்!'' ஃபாதர் தெரிவித்தார்.

மணி பதினொன்றுக்கு மேல் ஆகியிருந்தது.

''நான் கிளம்புறேன் ஃபாதர். எனது குவார்ட்டர்ஸில் எமிலி தங்கியிருக்கிறாள்.'' ஸ்டீஃபன் கூறினார்.

''நல்லவேளை செய்தீர்கள். இல்லாவிட்டால், அவன் எமிலிக்கும் ஆபத்தை ஏற்படுத்தி இருப்பான்!''

ஸ்டீஃபன் காரில் ஏறி அமர்ந்து, ஸ்டார்ட் செய்தார்.

கார் தேவாலயப் பகுதியைத் தாண்டியதும் ரோட்டில் நின்றிருந்த உருவம் ஒன்று மெதுவாக முன்னால் நகரத் தொடங்கியது.

அந்த உருவம் டாக்டர் லூயிஸினுடையது.

அவரும் தனது காரில்தான் வந்திருந்தார். காரை இருட்டின் மறைவில் நிறுத்திவிட்டுக் காத்திருக்க வேண்டும். ஸ்டீஃபனது கார் கண்ணிலிருந்து மறைந்ததும் அவர் மெதுவாக தேவாலய எல்லைக்குள் நுழைந்தார்.

ஃபாதர் இம்மானுவேல் அப்போதுதான் விளக்குகளை அணைத்திருந்தார். ஒரு நல்ல காரியத்தை நிறைவேற்றக் கருணை புரிந்த கடவுளுக்கு நன்றி சொல்லிவிட்டு, சிலுவை போட்டபடி கட்டிலில் படுத்தார்.

லூயிஸ், ஃபாதரது அறை வாசலில் வந்து நின்றார். காதுகளை கூர்மையாக்கி கவனித்தார். ஃபாதரின் சீரான மூச்சுச் சத்தம் கேட்டது.

அவ்வளவு சீக்கிரத்தில் ஃபாதர் எழுந்திருக்க மாட்டார் என்று லூயிஸுக்குத் தோன்றியது. இந்த நள்ளிரவுக்கு மேல் இனி அவர் எழுந்து வெளியே வரமாட்டார்.

செமித்தேரியிலிருந்து ஃபாதரும், ஸ்டீஃபனும் வருவதை லூயிஸ் கவனித்தார்.

ஒருவேளை அங்கு ஏதாவது நடந்திருக்குமோவென்று லூயிஸுக்குச் சந்தேகம் ஏற்படாமல் இல்லை. எது, எப்படி

யிருந்தாலும் அங்கு நடந்திருப்பதைத் தெரிந்து கொள்ள லூயிஸ் விரும்பினார்.

அவர், கல்லறையின் கேட்டை நெருங்கினார்.

அது, தாழிட்டுப் பூட்டப்பட்டிருந்தது.

அவர் தாழ்ப்பாளைப் பிடித்து இழுத்தார். ஒரு பூவைக் கொய்வது போல் அது, அவர் கையுடன் பெயர்ந்து வந்தது.

லூயிஸ் கேட்டை கடந்தார்.

வனஜாவின் கல்லறையை நெருங்கினார்.

அவர், தன் சொந்த வடிவத்தில் அங்கு வருவதற்கு ஒரு காரணம் இருந்தது. அவர் வனஜாவின் ஆவிக்கு முன்பாகத் தன் சொந்த வடிவத்துடன் தென்பட விரும்பினார்.

ஒருவேளை வனஜா கல்லறைக்கு வெளியில் இருந்தால், வேறொரு வடிவத்தில் அவள் லூயிஸைப் பார்த்தால் சந்தேகப்படலாம். எனவே, அவர் தன் சொந்த வடிவத்தில் அங்கு வந்திருந்தார்.

அவர், வனஜாவின் கல்லறைக்கு முன்னால் வந்து நின்றார்.

சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக வனஜாவின் பெயரைச் சொல்லி அழைத்தார்.

பதில் குரல் எழும்பவில்லை.

அவருக்குச் சந்தேகம் தோன்றியது.

"ஏன் அவள் பதில் குரல் கொடுக்கவில்லை? ஒருவேளை அவள் கல்லறைக்குள் இல்லையா?"

அந்தக் கல்லறையின் மீதிருந்த ஸ்லாபை அவர் பரிசோதித்தார். உடனே லூயிஸின் உதடுகளில் இளக்காரமான ஒரு புன்னகையாக வெளிவந்தது.

அவர், ஆகாயத்தைப் பார்த்தபடி தன் இடக்கையில் ஒரு சைகை காட்டினார். உடனே, அங்கு ஒரு பனிமூட்டம் கவிந்தது.

தான் செய்யும் செயலை மற்றவர்கள் பார்க்காமல் இருப்பதற்காகவே அவர் அப்படிச் செய்தார்.

டாக்டர் லூயிஸ் தன் இடக்கையால் ஸ்லாபின் ஒரு வளையத்தைப் பிடித்து மிகவும் சாதாரணமாக உயர்த்தினார்.

அதன்பிறகு கவிழ்ந்து படுத்து சவப்பெட்டியின் மூடியைப் பிடித்து உயர்த்தினார்.

அந்த விநாடியிலேயே அவர், கை அந்த மூடியை விரைவாகக் கையிலிருந்து நழுவவிட்டது.

வனஜாவின் உடலில் கிடந்த சிலுவையின் ஒளி, அவர் முகத்தில் பதிந்ததுதான் காரணம். அதை, அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

குரூரம் நிரம்பிய கண்களுடன் அவர் சுற்றுமுற்றும் பார்த்தார். பிறகு அலட்சியமாக இடக்கையை நீட்டி ஸ்லாபை மூடினார்.

அவர் கேட்டை நோக்கி நடக்கும்போது பனி மூட்டம் அவரைப் பின்தொடர்ந்தது. அவர் தன் கையை வீசிக் காட்டியபோது பனிமூட்டம் சட்டென்று மறையவும் செய்தது.

காரில் ஏறி அமர்ந்த டாக்டர் லூயிஸ், உடனே காரை ஸ்டார்ட் செய்து அங்கிருந்து கிளம்பினார்.

அவர் நேராகத் தனது இருப்பிடத்தை நோக்கிச் செல்லவில்லை. மாறாக ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்றார். காரின் வெளிச்சம் நெருங்குவதை கவனித்த வாட்ச்மேன் வாசு, அதற்குள் இருப்பவர் டாக்டர் லூயிஸ் என்பதை அறிந்ததும், சல்யூட் அடித்து, கேட்டைத் திறந்து விட்டார்.

காரை போர்ச்சில் நிறுத்தியபிறகு டாக்டர் லூயிஸ் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தார்.

கடிகாரம் பன்னிரண்டு மணி அடித்தது. அவர், கடிகாரத்தை நோக்கித் தன் விரலைச் சுட்டிக் காட்டினார்.

பின்னோக்கிச் சுழலத் தொடங்கிய கடிகார முள்ளைச் சரிசெய்வதற்காகவே அவர் அப்படியொரு சைகையைச் செய்தார்.

தனது பாக்கெட்டில் கையை விட்டு சாவிக்கொத்தை வெளியே எடுத்தார். ஆபரேஷன் தியேட்டரின் சாவியைக் கையில் எடுத்துக் கொண்டு விரைந்தார்.

ஆபரேஷன் அறையைக் கடந்து உள்ளே சென்றவர் தனது ரகசிய அறைக்குள் நுழைந்து கதவை உட்புறமாகத் தாழிட்டார்.

தன்னைப் பற்றிய ரகசியங்களை வேறு எவராவது தெரிந்து கொண்டிருப்பார்களோ என்பதை முதலில் அறிய வேண்டும்.

அறைக்குள் எந்த விதமான மாற்றமும் தென்படவில்லை. எல்லாம் அப்படியப்படியே இருப்பது போலவே தோன்றியது.

பீரோவின் பின்னாலிருந்த படத்தைப் பார்த்தார். முகத்தில் ஆரம்பத்தில் சந்தேகம் தோன்றினாலும் இங்கு வேறு எவரும் வருவதற்கு வழியில்லையே! என்று சுயமாகவே ஆறுதல் அடைந்தார்.

அங்கு சந்தேகப்படத்தக்க எதுவும் தென்படவில்லை. அவர் திருப்தியுடன் அங்கிருந்து வெளியேறினார். அந்த அறையின் கதவை வெளியிலிருந்து மூடும்போது சட்டென்று அவர் மூளைக்குள் ஒரு மின்னல் வெட்டு.

'பீரோ இடம் மாறியிருக்கிறதா என்ன?'

மீண்டும் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தார்.

கவனத்துடன் பார்த்தார்.

படத்தைத் தூக்கிப் பார்த்தார்.

அவர் கண்களில் சந்தேகம்.

பீரோவை, வலக் கையால் தள்ளிப் பார்த்தார். அது பெருத்த சத்தத்துடன் குப்புற விழுந்தது.

சுவரின் பிளவில் டாக்டரின் எலும்புக்கூடு குவிந்து கிடப்பதை அவர் கவனித்தார்.

தனது வெற்றிக்கு அடிப்படையான அந்தப் புத்தகத்தைத் தேடினார். அது மாயமாக மறைந்து விட்டிருந்தது.

'யாரோ, தனது ரகசியங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்! அது வேறு யாருமல்ல... டாக்டர் ஸ்டீஃபன்தான்' என்று அவர் தீர்மானித்தார்.

டாக்டர் லூயிஸின் முகத்தில் குரூரம் பளிச்சிட்டது. அவரின் கண்கள் பைசாசிகமாகப் பளபளத்தன.

'இருக்கட்டும்... பார்த்துக் கொள்ளலாம்.' அவர் கோபத்துடன் அந்த அறையை மூடிப் பூட்டினார். ஆபரேஷன் அறையைக் கடந்து வெளியேறினார்.

''டாக்டர் ஸ்டீஃபன் எங்கே?'' டாக்டர் லூயிஸ் வெளியே வந்து வாட்ச்மேன் வாசுவிடம் கேட்டார்.

''இன்னிக்கு அவர் வரலை?''

''எமிலி டியூட்டிக்கு வரலையா?''

''இல்லை சார்!''

''ம்!'' டாக்டர் லூயிஸ் வெளியேறினார்.

மணி ஒன்று.

கடிகாரத்தில் மணி ஒன்று அடிக்கும் சத்தம் கேட்டு எமிலி திடுக்கிட்டு விழித்தாள்.

கடிகாரத்தின் 'டிக்...டிக்...டிக்...' சத்தம் மட்டும் இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு கேட்டது.

அப்போது யாரோ ஜன்னலைத் தட்டும் சத்தம் கேட்டது.

அவள் பார்வையை அந்தப் பக்கமாகத் திருப்பினாள்.

ஜன்னல் கதவு மெதுவாக அசைந்து கொண்டிருந்தது.

எமிலி, எழுந்து அறை விளக்கின் ஸ்விட்சைப் போட்டாள்.

அறைக்குள் வெளிச்சம் பரவியது.

கடிகாரத்தை கவனித்தவள் மறுகணம் ஜன்னலைப் பார்த்தாள்.

ஜன்னலின் தாழ்ப்பாள் அசைவது சட்டென்று நின்றது. பக்கத்து அறையில் டாக்டர் ஸ்டீஃபன் தூங்கிக் கொண் டிருக்கிறார்.

அவரைக் கூப்பிடலாமா!

ராத்திரி ஒரு மணிக்கு அவரை எழுப்பினால் அவர் என்ன நினைப்பார்?

மற்றொரு சிந்தனையும் அவளுக்குள் எழுந்தது. இதுவரை நடந்தது எல்லாம் ஒருவேளை யதேச்சையாகவும் இருக்க லாம்.

லைட்டை ஆஃப் செய்துவிட்டு அவள் மறுபடியும் படுத்துக் கொண்டாள்.

யாரோ நெருக்கத்தில் மூச்சுவிடும் சத்தம் கேட்டு அவள் கண்களைத் திறந்தாள்.

இருளில் இரண்டு கைகள் தட்டுப் பட்டன.

அந்தக் கைகள் அவளை நோக்கி நீண்டு வந்தன.

# 29

அந்தக் கைகளுக்குப் பின்னால் அவள் ஒரு முகம் கண்டாள். சிவந்த ஒரு முகம்!

அந்த 'முகம் டாக்டர் லூயிஸினுடையது. உடனே, எமிலி உரத்த குரலில் அலறினாள்.

அவளது அலறல் சத்தம் அந்தப் பிராந்தியத்தையே நடுங்கச் செய்தது. டாக்டர் ஸ்டீஃபன் படுக்கையிலிருந்து துள்ளியெழுந்தார்.

"யாரது?" ஸ்டீஃபன் உரத்த குரலில் கேட்டார். பதில் எதுவும் கிடைக்கவில்லை.

அந்த அலறல் எமிலியினுடையதுதான் என்பதில் அவருக்குச் சந்தேகம் ஏற்படவில்லை. நேராக அவளது அறைக்கு விரைந்தார்.

உட்புறம் தாழிட்டிருந்த கதவை உதைத்துத் திறந்தார். அறைக்குள் நுழைந்ததும் விளக்கு ஸ்விட்சைத் தட்டினார்.

எமிலி, கட்டிலில் படுத்துக் கிடந்தாள். அவள் உடம்பி லிருந்த இரவு உடை அலங்கோலமாகக் கிழிக்கப்பட் டிருந்தது.

"என்ன நடந்தது?" ஸ்டீஃபன் கேட்டார்.

அவள் ஜன்னல் பக்கமாகக் கையைச் சுட்டிக் காட்டினாள். ஸ்டீஃபன் அந்தப் பக்கமாகப் பார்த்தார். ஜன்னல் திறந்து கிடந்தது.

அவள், அநாவசியமாக பயப்பட்டிருக்கலாம் என்று ஸ்டீஃபன் நினைத்தார். எனவே, அந்த ஜன்னலை இழுத்துச் சாத்தி, உட்புறம் கொக்கிகளைப் போட்டார்.

சில்லென்ற தண்ணீரை அவள் முகத்தில் தெளித்தபோது, அவள் எழுந்திருக்க முயன்றாள். ஸ்டீஃபன் அவளைப் பிடித்து எழுப்பி, கட்டிலில் உட்கார வைத்தார்.

சற்று நேரம் அமைதியாக இருந்த எமிலி, நடந்த சம்பவத்தை விவரித்தாள்.

''ஒருவேளை பிரமையா இருக்கப் போகுது!'' டாக்டர் ஸ்டீஃபன் சொன்னார்.

''இல்லை... அந்த முகத்தை நான் தெளிவாகப் பார்த்தேன். ஒரு பிசாசோட முகம்!'' எனக்கு இங்கே தனியா படுக்க பயமா இருக்கு!'' அவள் பரிதாபமான குரலில் கூறினாள்.

''சரி... அப்படியானா எழுந்து என்னோட ரூமில வந்து படுத்துக்கங்க!'' ஸ்டீஃபன் சொன்னார்.

உடனே அவள் பெட்ஷீட் மற்றும் தலையணைகளை சுருட்டி எடுத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினாள்.

ஸ்டீஃபனது அறையில் அப்போதும் விளக்கு ஒளி சிந்திக் கெண்டிருந்தது.

''நான், உங்க கட்டில்ல படுத்துக்கலாமா?'' எமிலி கேட்டாள்.

''பயத்துனாலயா?'' ஸ்டீஃபன் திருப்பிக் கேட்டார்.

''ஆமாம் .. இல்லேன்னா நான் செத்துப்போயிடுவேன்!''

அப்போது அவள் முகம் ஒரு குழந்தையினது போலிருந்தது. ஸ்டீஃபன் அதற்கு ஒப்புக்கொண்டார். லைட்டை அணைத்துவிட்டு அவரும் படுத்தார்.

சற்று நேரத்துக்குப் பிறகு அவளின் வலக்கை ஸ்டீஃபனின் மார்பில் வந்து படிந்தது. அவள் ஏகத்துக்கும்

பயந்திருப்பது அந்தக் கையின் நடுக்கத்திலிருந்து அவருக்கு விளங்கியது.

சற்று நேரத்துக்குப் பிறகு அவளின் வலக்கால் மூட்டு அவரின் கால் மீது சரிந்தது.

ஸ்டீஃபன், அவள் முதுகை வருடி ஆறுதல்படுத்தியவாறு படுத்தார்.

அதன் பிறகு அவள் நிம்மதியாகப் படுத்து உறங்கினாள். அவள் மனத்தில் பாதுகாப்பு உணர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும்.

பொழுது விடிந்தது.

முதலில் கண் விழித்தவள் எமிலிதான்.

தான் படுத்திருக்கும் நிலையை கவனித்த அவளுக்கு வெட்கம் ஏற்பட்டது. சட்டென்று கை, கால்களை விலக்கிக் கொண்டு எழுந்தாள்.

ஃபிரிஜ்ஜிலிருந்து பால் எடுத்து சமையலறைக்குச் சென்று காபி போட்டாள்.

காபி தம்ளரை ஸ்டீஃபனிடம் கொடுத்தபோது, எமிலியின் முகம் வெட்கத்தால் சிவந்திருந்தது.

''நேத்து ராத்திரி என்னையும் ஏகத்துக்கு பயப்படுத்திட்டீங்களே எமிலி?'' காபியைப் பருகியவாறு ஸ்டீஃபன் கேட்டார்.

எமிலி, சட்டென்று சமையல்கட்டை நோக்கி விரைந்தாள்.

டாக்டர் ஸ்டீஃபன் அன்று விடுமுறை எடுத்தார்.

எமிலியை அழைத்துக் கொண்டு அவர், ஃபாதர் இம்மானுவேலிடம் சென்றார்.

நடந்ததையெல்லாம் அவரிடம் விவரித்தனர்.

அவர்கள் சொல்வதையெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்ட ஃபாதர், கைகளைப் பின்புறம் கட்டியபடி அறைக்குள் உலாவினார்.

''எப்படி இருந்தாலும் ஸ்டீஃபன், எமிலியை உங்க வீட்டுக்குக் கொண்டு போனதே தெய்வாதீனம்னுதான் சொல்வேன். வெறும் ஒரு மிரட்டலோட காரியம் முடிஞ் சிருச்சு. இல்லேன்னா, நாம எமிலியையும் அவனுக்குப் பறிகொடுத்திருப்போம்.''

''உண்மைதான் ஃபாதர்!''

''இந்தச் சந்தர்ப்பத்தை நாம கோட்டைவிட்டிருந்தா, எமிலியையும் தன் வலைக்குள்ள விழவெச்சு, நமக்கு எதிரா நடந்துக்கத் தூண்டி விட்டிருப்பான்.''

ஃபாதர் சொன்னதன் பொருள் ஸ்டீஃபனுக்கு விளங் கியது. டாக்டர் லூயிஸ், எமிலியுடன் தொடர்பு கொண்டு, ரத்தப் பரிமாற்றம் நிகழ்த்திருந்தால், அதன் பிறகு அவள் எஜமானனது கட்டளைப்படி நடக்கும் ஓர் அடிமையாகி இருப்பாள்!

நல்லவேளையாக அப்படிப்பட்ட விபத்து ஒன்றைத் தடுத்துவிட்டோம்.

''இந்தச் சூழ்நிலையில் அவனை இப்படியே விட்டு வைப்பதுகூட ஆபத்துதான் இல்லையா ஃபாதர்? எந்த நேரத்தில் எந்த இளம்பெண்ணை அவன் பிசாசாக மாற்றுவான் என்று எவரால் சொல்ல முடியும்?''

''உண்மைதான்! இனிமேல் அவனுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளை இழந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருப்பான். சேவியர் மகளிடமும் நாம் எச்சரிக்க வேண்டும்!'' என்ற ஃபாதர் அங்கிருந்த பீரோவைத் திறந்து புத்தகம் ஒன்றை வெளியே எடுத்தார்.

முந்தைய நாள், தபால் மூலமாக இத்தாலியிலிருந்து வந்த புத்தகம் அது. தீய ஆவிகள் மற்றும் பைசாசிக சக்திகளைக் குறித்து விளக்கும் புத்தகம் அது.

"நேற்று இரவில் நான் இதை முழுவதுமாக வாசித்தேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான விஷயங்களை நான் அடிக்கோடிட்டு வைத்திருக்கிறேன்." ஃபாதர் விளக்கினார்.

டாக்டர் ஸ்டீஃபன் அந்தப் புத்தகத்தை வாங்கிப் புரட்டிப் பார்த்தார். அதன் சாராம்சம் இதுதான். 'பைசாசிக சக்திகளை அழிப்பதற்கு முன்பாக அவற்றுடன் நெருங்கிய தொடர்புள்ள பிற மனிதர்களைச் செயலிழக்க வைக்க வேண்டும்.

இல்லையென்றால், மூல சக்தியை நாம் வேட்டையாடும் போது, அது தங்களின் ஆதரவாளர்களின் உடம்புக்குள் புகுந்துவிடும். இது, மாறி மாறித் தொடரும். எனவேதான், முதலில் அவர்களின் ஆதரவாளர்களைச் செயலிழக்க வைப்பது அத்தியாவசியமான காரியம்.'

"இதன்படி பார்த்தால் தற்சமயம் நாம் ஸ்மிதாவைக் கட்டுப்படுத்த வேண்டும். இப்போதைய நிலையில், நமக்குத் தெரிந்து டாக்டர் லூயிஸுடன் தொடர்பு வைத்துள்ள ஒரே நபர் அவள் மட்டும்தான்." ஃபாதர் கூறினார்.

அவர் சொல்வதும் சரிதான் என்று டாக்டர் ஸ்டீஃபனுக்கும் தோன்றியது.

அவளைத்தான் முதலில் சமாளித்திருக்க வேண்டும். இரண்டு தடவை அதற்காக முயற்சி செய்தும், தோல்வியே ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் தானோ, பவுலோஸ் சாரோ அவளது வீட்டுக்குச் சென்றால் அவள் கண்டிப்பாகச் சந்தேகப் படுவாள்.

டாக்டர் ஸ்டீஃபன், எமிலியைப் பார்த்தார் ஃபாதரும் அவளையே கவனித்துக் கொண்டிருந்தார்.

"எனக்கொரு யோசனை!" ஸ்டீஃபன் ஃபாதரிடம் கேட்டார்.

"சொல்லுங்கள்."

"எமிலியை, அவளிடம் அனுப்பி வைப்போம் எமிலி எப்படியாவது ஸ்மிதாவின் கழுத்தில் அந்த மாலையைப் போடட்டும். இந்த விஷயத்தில் எமிலியால் நமக்கு உதவ முடியும் ஃபாதர்!"

"நான் உங்களுக்கு என்ன உதவி செய்ய வேண்டும் டாக்டர்?" எமிலி கேட்டாள்.

"அது ஒரு கதை... நான் சொல்கிறேன்!" என்ற ஸ்டீஃபன், ஸ்மிதாவின் கதையை எமிலியிடம் விவரித்தார்.

பைசாசிகத் தன்மை நிறைந்த அவளை, எப்படி வேண்டு மானாலும் தான் சந்திக்கத் தயார் என்று எமிலி உறுதி யளித்தாள்.

"அப்படியானா, இன்னிக்கு சாயந்திரமே நாம கிளம்ப லாம்!" ஸ்டீஃபன் கூறினார்.

ஃபாதர் எழுந்து உட்புறம் போனார். திரும்பி வரும் போது அவர் கையில் புதிய ஜபமாலை ஒன்று இருந்தது.

"இந்தாங்க... இதை வெச்சுக்கங்க! இயேசு கிறிஸ்துவின் சிலையில் நீண்டகாலமாகக் கிடந்தது இந்த மாலை. எமிலி, இதை எப்படியாவது ஸ்மிதாவின் கழுத்தில் நீ போட்டுவிட வேண்டும். ஒரு பரிசு என்பது போல் போட்டாலும் போதும். அதன்பிறகு எல்லாம் கடவுள் விட்ட வழியில் நடக்கட்டும்!" ஃபாதர் கூறினார்.

எமிலி அந்த மாலையை வாங்கி, அங்கேயே தன் கழுத்தில் போட்டுக் கொண்டாள். அதைக் கவனித்த இருவரும் அதில் திருப்தி அடைந்தனர்.

டாக்டர் லூயிஸ் என்ற பிசாசின் அம்சம் அவளில் புக வில்லை என்பதற்கு அது ஓர் அடையாளமாகவும் இருந்தது.

மதியச் சாப்பாடு தயாராகிவிட்டதாகச் சமையல்காரர் வந்து தெரிவித்தார்.

மூன்று பேரும் சாப்பிட உட்கார்ந்தனர். அதன் பிறகு எமிலியும், ஸ்டீஃபனும் ஃபாதரிடம் விடைபெற்றுக் கிளம்பினர்.

மாலை நேரத்தில் அவர்கள் இருவரும் பவுலோஸ் சாரின் வீட்டை அடைந்தனர். நடுவழியில் காருக்கு ஒரு சிறு ரிப்பேர் ஏற்பட்டது. எனவே, பயணத்தில் இரண்டு மணி நேரம் தாமதமானது.

பவுலோஸின் வீட்டை அடைந்தபோதுதான், அந்தத் தாமதம்கூட ஒருவகையில் நல்லதற்குத்தான் என்று தோன்றியது. அன்றைக்குப் பார்த்து, ஐந்து மணிக்குப் பிறகே அவள் பார்வையாளர்களை அனுமதித்தாள்.

மணி ஆறு.

எமிலி, ஸ்மிதாவின் வீட்டை நோக்கி நடந்தாள். கேட் மூடியிருந்தது. உட்புறம் சென்றபோது, அனுமதிச்சீட்டு இருக்கிறதா என்று கேட்டனர்.

தாங்கள் சிநேகிதிகள் என்று எமிலி ஒரு பொய்யைச் சொன்னாள். எனவே, அந்த மனிதர் அவளை வீட்டுக்குள் செல்ல அனுமதித்தார்.

எமிலி, ஸ்மிதாவின் முன்பாகச் சென்று நின்றாள்.

"எங்கேருந்து வர்றீங்க நீங்க?" ஸ்மிதா கேட்டாள்.

அதற்கு பதிலளிக்காமல் எமிலி தன் முந்தானையை விலக்கினாள். அவள் கழுத்தில் சிலுவையுடன் தென்பட்ட மாலை ஸ்மிதாவை இடி தாக்கிய நாகம் போல் தாக்கியது. அவள் தன் இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டாள்.

இந்தத் தருணத்தைச் சரியாகப் பயன்படுத்திய எமிலி, தன் கழுத்திலிருந்த மாலையைக் கழற்றிச் சட்டென்று ஸ்மிதாவின் கழுத்தில் போட்டு விட்டாள்.

''ஐயோ!'' அதி பயங்கரமான அலறல் ஒன்று அவளிடமிருந்து உயர்ந்தது.

அதைக் கேட்டு பயந்த எமிலி, அங்கிருந்து வெளியேறி ஓடினாள்.

## 30

**அ**ங்கிருந்து எழுந்த பயங்கரமான அலறலைக் கேட்டு, அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் எல்லோரும் ஸ்மிதாவின் வீட்டில் குவிந்தனர்.

அங்கே அவர்கள் கண்டது என்ன?

கையையும் காலையும் தரையில் போட்டு அடித்துக் கொண்டிருந்தாள் ஸ்மிதா. அந்த மாலை அவள் உடம்புக்குள் ஆழ்ந்து இறங்குவது போல் துடிதுடித்தாள்.

''என்னைக் காப்பாத்துங்க!'' அவள் திரும்பவும் அலறினாள்.

அங்கு குழுமி இருந்தவர்களுக்கு ஸ்மிதா சொன்னதன் பொருள் எதுவும் விளங்கவில்லை.

''உடனே பவுலோஸ் சாரை கூப்பிடுங்கள்!'' யாரோ ஒருவர் கூறினார். உடனே ஸ்மிதாவின் அப்பா, அந்தப் பகுதியில் இருக்கும் ஒரே டாக்டரான பவுலோஸ் சாரை நெருங்கினார்.

''சார், இங்கே இருக்காரா?'' என்ற கேள்வியைக் கேட்டு டாக்டர் ஸ்டீஃபன் வெளியே வந்தார்.

''என்ன ஆச்சுங்க?'' ஸ்டீஃபன் அவரிடம் கேட்டார்.

''பவுலோஸ் சாரை கூப்பிடுங்க. என் மகளுக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டிருக்கு!'' அவர் பரபரத்தார்.

'அங்கு என்ன நடந்திருக்கிறது?' என்பதை அறியும் ஆவலுடன் பவுலோஸும் டாக்டர் ஸ்டீஃபனும் காத்திருந்தனர். எனவே, அவர்கள் இருவரும் ஸ்மிதாவின் அப்பாவுடன் கிளம்பினர்.

ஸ்மிதா தரையில் கிடந்து துடிதுடித்துக் கொண்டிருந்தாள். அவர்கள் அவளை நெருங்குவதற்குள் அவள் உடம்பு அசைவற்றுப் போனது.

பவுலோஸ், அவள் முகத்தில் தண்ணீர் தெளித்தார். டாக்டர் ஸ்டீஃபன் அவளின் நாடியைப் பரிசோதித்தார்.

''பரவாயில்லை... அவளது நோய் நீங்கி விட்டிருக்கிறது!'' ஸ்டீஃபன் கூறினார்.

சிலுவையுள்ள மாலை, விழுந்ததும் அவளுக்குள் இருந்த பைசாசிக சக்தி, என்றென்றைக்குமாக விடைபெற்று விட்டதை ஸ்டீஃபன் உணர்ந்தார்.

அதே நேரம், அவளது பழைய நோய் அவளை மறுபடியும் பிடிக்க வாய்ப்பு உள்ளதையும் டாக்டர் ஸ்டீஃபன் புரிந்துகொண்டார்.

சுமார் அரை மணி நேரத்துக்குப் பிறகு ஸ்மிதா சுய நினைவு பெற்றார்.

''ஸ்மிதா!'' டாக்டர் ஸ்டீஃபன் அழைத்தார்.

''என்ன சார்?''

''நான் ஒன்று கேட்கலாமா? மருத்துவத்தின் தந்தை யார்?'' ஸ்டீஃபன் தனது பழைய கேள்வியையே திரும்பவும் கேட்டார்.

''எனக்குத் தெரியாது சார்!'' அவள் வியப்புடன் டாக்டரைப் பார்த்தாள்.

''உங்க உடம்புக்கு ஏதாவது வந்தா நேரா சிட்டி ஆஸ்பத்திரிக்கு வாங்க. நான் அங்கேதான் இருப்பேன்!'' ஸ்மிதாவின் அப்பாவிடம், ஸ்டீஃபன் கூறினார்.

ஸ்மிதா, டாக்டர் ஸ்டீஃபனையும் பவுலோஸையும் மாறி மாறிப் பார்த்தார்.

''மிஸ். ஸ்மிதா, இந்த மாலை இனிமேல் உங்கள் கழுத்திலேயே கிடக்கட்டும். உங்களுக்கு இது நல்ல ஆறுதல் அளிக்கும்!''

''சரி, சார்.. '' அதற்குள் ஸ்மிதா முற்றிலும் தனது பழைய நிலைக்குத் திரும்பிவிட்டிருந்தாள்.

''சரி, நாங்கள் கிளம்புறோம்!''

பவுலோஸும் டாக்டர் ஸ்டீஃபனும் அங்கிருந்து வெளியேறினர்.

பவுலோஸின் வீட்டை அடைந்த பிறகு, ஸ்டீஃபன் சொன்னார். ''சார், நாங்கள் உடனே கிளம்ப வேண்டும்!''

நடந்த சம்பவத்தை உடனே ஃபாதரிடம் தெரிவிக்க வேண்டுமென்று ஸ்டீஃபன் விரும்பினார். இந்த வெற்றியின் அடிப்படையில் டாக்டர் லூயிஸை எதிர்த்து வெல்வதற்கான வழி கிடைத்துவிட்டதாகவும் அவர் நினைத்தார்.

ஸ்டீஃபனும், எமிலியும் ஃபாதர் இம்மானுவேலின் இருப்பிடத்தை அடைந்தபோது இரவு மணி பத்து ஆகியிருந்தது. தகவல் கேள்விப்பட்டதும் ஃபாதர் இம்மானுவேல் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அவர் உடனே கடவுளுக்கு நன்றி தெரிவித்தார்.

''இனிமேல் அந்த சாத்தானை நாம் தைரியமாக எதிர்த்துப் போராடலாம்!'' டாக்டர் ஸ்டீஃபன் சொன்னார்.

''அதற்கான முக்கிய ஆயுதம் ஒன்றை நான் கண்டு பிடித்து விட்டேன். ஆனால், அதை எப்படிப் பயன்படுத்து வது என்றுதான் எனக்குத் தெரியவில்லை.'' ஃபாதர் கூறினார்.

''முதலில் விஷயத்தைச் சொல்லுங்கள் ஃபாதர். அது எப்படிப்பட்ட ஆபத்தான வேலையாக இருந்தாலும் நான் செய்து முடிக்கிறேன்!'' ஸ்டீஃபன் உறுதியளித்தார்.

ஃபாதர் உடனே தேவாலயத்துக்கு விரைந்தார்.

அன்றைய பிரார்த்தனைக்கு சமர்ப்பித்த 'அப்பம்' ஒன்றின் ஒரு பகுதியை எடுத்து வந்தார்.

சருகு போன்ற காகிதத்தில் பொதியப்பட்டு, சிவப்பு நிற வெல்வெட் துவாலையால் மூடப்பட்டிருந்தது அந்தப் புனிதமான பொருள்.

ஆசீர்வதிக்கப்பட்ட அந்த அப்பம் கிறிஸ்துவின் உடம்பைப் போல் புனிதமானது.

''எனக்குத் தெரிந்து அவனை அழிப்பதற்கு இதைவிடப் பெரிய ஆயுதம் எதுவுமில்லை. அந்த அளவுக்கு மகத்துவம் வாய்ந்தது இது!'' ஃபாதர் கூறினார்.

''இதை என்ன செய்வது ஃபாதர்?'' டாக்டர் ஸ்டீஃபன் கேட்டார்.

அதை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று அவருக்கு எதுவும் புலப்படவில்லை. வெள்ளைக் காகிதத் தால் தயாரிக்கப்பட்ட ஒரு வட்டம் மாதிரி இருந்தது அது. கையால் பிட்டு எடுக்கக்கூடிய அளவில் மாவினால் செய்யப்பட்டதும்கூட.

''இந்தப் பொருளை எப்படியாவது அவன் உடம்புக்குள் செலுத்த வேண்டும். அது ஒன்றுமட்டும்தான் நமக்குள்ள ஒரே வழி. அதைத் தவிர வேறு எந்தவிதமான புற நடவடிக் கைகளும் அவனைப் பாதிக்காது.''

டாக்டர் ஸ்டீஃபன் மிகுந்த பக்தியுடன் அதை ஃபாதரிட மிருந்து பெற்றுக்கொண்டார். பின்பு தனது பிரீஃப்கேஸுக் குள் மிகவும் பாதுகாப்பாக எடுத்து வைத்தார்.

"நாம் கிளம்பலாமா?" ஸ்டீஃபன், எமிலியைப் பார்த்துக் கேட்டார்.

"எல்லாம் வெற்றி அடையட்டும்!" ஃபாதர் ஆசீர்வதித் தார்.

டாக்டர் ஸ்டீஃபனது கார் கிளம்பியது. கார் ஓட்டிய ஸ்டீஃபனின் சிந்தையை முழுக்க முழுக்க ஆக்கிரமித் திருந்தது ஃபாதர் சொன்ன விஷயங்கள்தான்.

இதை எப்படி டாக்டர் லூயிஸுக்குக் கொடுப்பது? தண்ணீரில் கலந்து கொடுக்க முடியாது. மீறிக்கொடுத்தால் தெரிந்துவிடும். மதுவில் கலந்தால் தெரியாது. ஆனால், அந்த மனிதனுடன் உட்கார்ந்து மது அருந்தும் வாய்ப்பு கிடைக் காது.

எவ்வளவுதான் யோசித்தும் எந்த ஒரு வழியும் புலப்பட வில்லை.

குவார்ட்டர்ஸை அடைந்ததும் இருவரும் காரில் இருந்து இறங்கினர்.

"எமிலி, இன்றைக்கு நீ தனியாகப் படுக்க வேண்டும். அவன் வந்தால் உடனே நீ அலறிக் குரல் கொடுக்க வேண்டும். கதவை உட்புறம் தாழிடாமல் வெறுமனே மூடி வைத்தால் போதும். அதன் பிறகு நடக்க வேண்டியதை நான் பார்த்துக் கொள்கிறேன்!" ஒரு தீர்மானத்துக்கு வந்த ஸ்டீஃபன் தெரிவித்தார்.

கடிகாரம் பன்னிரண்டு தடவை மணியோசை எழுப் பியது.

தன்னையும் மீறிக் கண்ணயர்ந்த எமிலி, சட்டென்று திடுக்கிட்டுக் கண் விழித்தாள். எழுந்திருக்க முயன்றாள்.

அப்போது தன் உடலில் உடை எதுவும் இல்லை என்பதையும், யாரோ தன் மீது படர முற்படுவதையும் உணர்ந்தாள். அவ்வளவுதான்...

"ஐயோ... காப்பாற்றுங்கள்!" என்று மிகவும் உரத்த குரலில் அலறினாள் எமிலி.

அதை எதிர்பார்த்துக் கிடந்த ஸ்டீஃபன் துள்ளியெழுந்து, அவள் படுத்திருக்கும் அறைக்கு விரைந்தார்.

அப்போது எமிலி, தனது ஒட்டுமொத்தச் சக்தியையும் ஒன்றுதிரட்டி, லூயிஸை ஒதுக்கித் தள்ளிவிட்டு வாசலை நோக்கி விரைந்தாள். அந்தப் பரபரப்பில் அவள் மோதி நின்றது டாக்டர் ஸ்டீஃபனின் உடல் மீதுதான்.

இரவுவிளக்கின் வெளிச்சத்தில் நிர்வாணமான லூயிஸை ஸ்டீஃபன் கவனித்தார். லூயிஸ் அங்கிருந்த பெட்ஷீட்டுடன் ஜன்னல் வழியாக வெளியே குதித்தார்.

சற்றும் யோசிக்காமல் ஸ்டீஃபனும் அந்த உருவத்தைப் பின்தொடர்ந்தார்.

முன்னால் சென்ற உருவம் ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தது.

டாக்டர் ஸ்டீஃபனும் அதே வேகத்தில் விடாமல் தொடர்ந்தார்.

லூயிஸ் வாயு வேகத்தில் ஆபரேஷன் தியேட்டரை அடைந்தார். டாக்டர் ஸ்டீஃபனும் மிக நெருக்கத்தில் லூயிஸுக்குப் பின்னால் இருந்தார்.

எனினும், மின்னல் வேகத்தில் தனது ரகசிய அறைக்குள் நுழைந்து, கதவை உட்புறமாக மூடித் தாழிட்டார்.

டாக்டர் ஸ்டீஃபன் யோசிக்கவோ, தாமதிக்கவோ இல்லாமல், தன் தோளால் இடித்துக் கதவைப் பெயர்த்தார்.

அதற்குள் லூயிஸ் உடைமாற்றி விட்டிருந்தார்.

''உன்னைத்தான் நான் எதிர்பார்த்துட்டிருக்கேன்!'' லூயிஸ் தனக்கு முன்னால் இருந்த பெட்டியில் கை வைத்தபடி சொன்னார்.

''நானும்தான்!' ஸ்டீஃபன் அவருடன் மோதத் தயாரானார்.

லூயிஸ் கை வைத்திருந்த பெட்டியிலிருந்து பெரிய பல்லி ஒன்றை எடுத்து டாக்டர் ஸ்டீஃபன் மீது எறிந்தார்.

அது சரியாக ஸ்டீஃபனின் பனியன் போடாத மார்பில் வந்து விழுந்தது. விழுந்த அந்த விநாடியிலேயே அது, ஸ்டீஃபனின் மார்பை கீறிப் பிளக்கத் தொடங்கியது.

லூயிஸ் உரத்த குரலில் வாய்விட்டுச் சிரித்தார்.

விகாரமான அந்தச் சிரிப்பு அறைக்குள் கர்ண கடூரமாக எதிரொலித்தது.

லூயிஸ் அதிக இடைவெளியின்றி மற்றொரு பல்லியை எடுத்து ஸ்டீஃபனை நோக்கி எறிந்தார்.

அது ஸ்டீஃபனின் நெற்றியில் வந்து பசைபோல் ஒட்டிக் கொண்டு, அவரின் கண் பகுதியில் தலையால் இடிக்கத் தொடங்கியது.

ஸ்டீஃபன் அதையெல்லாம் பொருட்படுத்தாமல், தனது பாக்கெட்டிலிருந்து ரிவால்வரை வெளியே எடுத்தார். லூயிஸைக் குறிபார்த்து டிரிக்கரை இழுத்தார்.

தோட்டா, துப்பாக்கியிலிருந்து சீறிப் பாய்ந்தது.

பாய்ந்து வந்த தோட்டாவை லூயிஸ் தன் வலக்கையால் தடுத்துப் பிடித்தார். பிறகு அதை வாயில் போட்டு மென்று வெற்றிலை எச்சிலைப் போல் கீழே துப்பினார். அதன்பிறகு லூயிஸ் ஒரு பைத்தியக்காரனைப் போல் சிரித்தார்.

தோட்டாக்கள்கூட துளைக்கமுடியாத லூயிஸின் நிலை, ஸ்டீஃபனை மலைக்க வைத்தது.

லூாயிஸ், பைசாசிக சக்தியை ஆவாகனம் செய்த பல்லி களை இடைவிடாமல் ஸ்டீஃபன் மீது எறிந்து கொண்டே இருந்தார். ஸ்டீஃபன் அவற்றைத் தன் உடம்பிலிருந்து இடக்கையால் எடுத்து எறிய முயற்சி செய்தார். ஆனால், அவை, உடும்பு போல் அவர் உடம்பில் ஒட்டிப் பிடித் திருந்தன. எவ்வளவு முயன்றும் அவற்றை உடம்பிலிருந்து பிரித்தெடுக்க முடியவில்லை.

பல்லிகள் அடுத்தடுத்து மூக்கு, கன்னம், தோள் என்று மாறி மாறி விழுந்து கொண்டே இருந்தன. ஸ்டீஃபன் என்ன செய்வது என்று புரியாமல் தவித்தபோது, சட்டென்று ஃபாதர் இம்மானுவேல் கொடுத்த பரிசுத்த அப்பம் ஞாபகம் வந்தது.

அதை இந்தச் சத்தர்ப்பத்தில் பயன்படுத்த முடியுமா? முயற்சி செய்து பார்க்கலாம்.

வலக்கையால் பாக்கெட்டிலிருந்து அப்பப் பொதியை எடுத்தார். அவசர அவசரமாய் பிரித்தார்.

அப்பத்தைக் கையில் எடுத்தார்.

ரிவால்வரிலிருந்து தோட்டா ஒன்றை எடுத்து அதை அந்தப் புனித அப்பத்தில் ஒன்றாக அழுத்தித் தேய்த்தார். மேஜை மீதிருந்த கண்ணாடி தம்ளரில் ஏதோ ஒரு திரவம் இருந்தது. பின்பு தோட்டாவை அதில் மூழ்கவைத்து எடுத்தார்.

துப்பாக்கியில் தோட்டாவைப் பொருத்தினார்.

லூாயிஸ், பல்லியைப் பிடித்து ஸ்டீஃபன் மீது எறிவதற் காகப் பெட்டிக்குள் கையை விட்டுத் தேடிக்கொண் டிருந்தார்.

ஸ்டீஃபன், லூாயிஸைக் குறிபார்த்துத் துப்பாக்கியால் சுட்டார்.

அடுத்தடுத்து தோட்டாக்கள் சீறிப் பாய்ந்தன. லூயிஸின் மார்பில் வரிசையாக அவை பாய்ந்தன.

''ஐயோ...'' லூயிஸின் அலறல் அந்தக் கட்டடத்தையே நடுங்க வைத்தன.

நெருப்பில் தவறி விழுந்த பாம்பு மாதிரி லூயிஸின் உடல் துடித்தது. ஒரு சில விநாடிகளுக்குள் லூயிஸின் உடல் தரையில் மட்டமல்லாக்க விழுந்தது. அப்போதும் அந்த உடல் காக்காவலிப்பு வந்தவனைப் போல் உயிருடன் போராடியது. ஒன்று அல்லது இரண்டு நிமிடங்களுக்குள் அந்த உடல் அசைவற்றுப் போனது.

லூயிஸின் உடலிலிருந்து சன்னமான புகை உயரத் தொடங்கியது.

அதைத் தொடர்ந்து ஆச்சரியத்துக்கு உரிய வகையில் ஸ்டீஃபனின் உடலில் ஒட்டியிருந்த பல்லிகள், உயிரிழந்தவை போல் ஒவ்வொன்றாக உதிரத் தொடங்கின.

லூயிஸின் உடலிலிருந்து மேலெழும்பிய புகை அடர் நீல நிறத்துக்கு மாறியது.

டாக்டர் லூயிஸின் உடல் படிப்படியாகக் காற்றில் கரையத்தொடங்கியது.

பயங்கரமான அந்தக் கடைசிக்கட்டத்தை ஸ்டீஃபன் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தபோது, எமிலி தனது வழக்கமான உடையில் அவரை நோக்கி ஓடிவந்தாள்.

ஸ்டீஃபனையும், அந்த அறைக்குள் கிடக்கும் லூயிஸின் உடையையும் அவள் மாறி மாறிப் பார்த்தாள்.

ஆம்... லூயிஸின் உடல் ஒன்றுமில்லாமலாகி, அவர் அணிந்திருந்த உடை மட்டுமே அங்கு மீதமாகக் கிடந்தது.

லூயிஸ் இந்த உலகத்திலிருந்தே கரைந்து மறைந்து போனது அவளுக்கு விளங்காதபோதிலும் லூயிஸின் கொட்டம் அடங்கி விட்டது என்று புரிந்துகொண்டாள்.

அவள் சட்டென்று ஸ்டீஃபனின் மார்பில் சாய்ந்தாள்.

ஸ்டீஃபனின் கைகள், அவளுக்கு ஆறுதல் சொல்வது போல், மென்மையாக அவளைத் தழுவின.

இப்படியாக பயங்கர மனிதனாக விளங்கிய லூயிஸின் கதை இந்தக் கட்டத்துடன் முற்றுப் பெற்றது.

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in